கவனியுங்கள் கொஞ்சம்!!

சோதி சோதபரம் தனை

1

Vedanta Baskaran

FIRST PART.

வேதாந்த பாஸ்கரன்

முதற்பாகம்.

482
2:18

By

Sri Karunaiyananthar

First Edition.

1918

All Rights Reserved.

PRICE ONE RUPEE.

3

சொற் பொருளியல் தமிழ்

வேதாந்த பாஸ்கர்

முகவுரை

E-MAIL

சாலப்பேணல் காருண்ய நிலையம் சேர்ந்த
பிரமஸ்ரீ
ஸ்ரீ சு. ஜீவரத்தின அய்யங்கார்
அவர்களால்

(இந்நூல் பதிவுரிமைக்கு மாத்திரம்)

முகவுரை

சென்னை திருவல்லிக்கேணி
ஸ்ரீமத் அத்வைத அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது.

1915.

சர்வஸ்வ சுவாதீனம்] [ஸர்வ உரிமை பதிவு

5
9-MAY1918

நூலினுட்பிரிவு.

அத்.	விஷயம்.	பக்கம்.	அத்.	விஷயம்.	பக்கம்.
1	முகவுரை	1	19	அன்பு	73
2	பாயிரம்	6	20	மனோவாயு	85
3	கடவுளிலக்கணம்	10	21	மனம்	89
4	ஆசிரியரிலக்கணம்	12	22	சிவகாருண்யம்	101
5	சீடரிலக்கணம்	18	23	துறவு	106
6	சரியை	27	24	விந்துசெயம்	124
7	கிரியை	28	25	சத்துவாதிமுக்குணம்	138
8	யோகம்	,,	26	ஆத்மஞானநிஷ்டை	139
9	ஞானம்	29	27	ஞானவிவசாயம்	148
10	அஷ்டாங்கயோகம்	30	28	பெண்ஞானம்	151
11	பிராணயாமயோகம்	38	29	மூலாதாரம்	158
12	காயகற்பசாதனை	53	30	சுவாதிஷ்டானம்	161
13	தசநாடிகள்	61	31	மணிபூரகம்	162
14	தசவாயுக்கள்	62	32	அநாகதம்	,,
15	சரவிலக்கணம்	64	33	விசுத்தி	163
16	வாரசரநிர்ணயம்	66	34	ஆக்ஞை	164
17	சரத்தைமாற்றும் வகை	68	35	பிரம்மரந்திரம்	165
18	சரலாபரஷ்டம்	72			

இரங்கோன், தப்பிக்கான் வாசியும், இந்நூலாசிரியரின்

மாணவர்களிலொருவருமாகிய

க. சு. குழந்தைச்சாமிபிள்ளை அவர்களியற்றியது.

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தக்கசா தனசு தட்டய மேயோர்
சடமெடுத் ததுவென வயங்கும்
பக்குவ மெனும்பைங் கூழ்க்கு வேதாந்த
பாஸ்கரன் எனுமழை பொழிந்த
கக்குறை தவிர்க்கும் அற்புத முகிலே
கருணையா னந்தகண் மணியே
சற்குண நிதியே சிற்பர வடிவே
சமரச ஞானதே சிகனே.

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.

இந்நூலை அச்சியற்றும்படி தனுபகாரம் புரிந்தவர்கள் பெயர், ஊர், முதலியன.

மகா-ா-ா-ஸ்ரீ.	அ. அருணசலமுதலியார் அவர்கள்,	கீழ்வேளூர்.	20
,,	சு. விருத்தாசலம் பிள்ளை அவர்கள்,	கோடிமங்கலம்.	20
,,	ரா. சா. வீரப்பபிள்ளை அவர்கள்,	திருமதிக்குன்னம்.	25
,,	K. சுப்பையா முதலியாரவர்கள்,	குருக்கத்தி.	10
,,	அ. சுப்பையா பிள்ளை அவர்கள்,	புலிவலம்.	10
,,	எ.ராம.அ. எல்லப்பசெட்டியார் அவர்கள்,	புலிவலம்.	11
,,	செ. இராமையாபிள்ளை அவர்கள்,	புலிவலம்.	10
,,	S. V. S. அண்ணாமலை வயித்தியரவர்கள்,	விஜயபுரம்.	10
,,	S. இராமசாமி பிள்ளை, அவர்கள்,	பட்டமங்கலம்.	5
,,	S. பிச்சு முதலியார், அவர்கள்,	கீழ்வேளூர்.	5
,,	சி. சுப்பிரமண்யபிள்ளை, அவர்கள்,	நாகப்பட்டணம்.	5
,,	மு. அ. முஹம்மது உசேன்சாயபவர்கள்,	கீழ்வேளூர்.	4
,,	சொக்கப்பா முதலியார், அவர்கள்,	கூத்தூர்.	3
,,	ப. உ. செய்யதலி சாயபு அவர்கள்,	கூத்தூர்.	3
,,	ஒ. கா. செய்குதாவூது சாகிபு, அவர்கள்,	கூத்தூர்.	3

கையொப்பக்காரர்கள்.

,,	க. மு. உவன்நூறான் சாஹிபு,	ஆழியூர். 2
,,	வா. தா. ஹமீதுசுல்தான் ரூவுத்தர்,	ஆழியூர். 2
,,	து. சிவசுப்பிரமணிய பிள்ளை,	கீழ்வேளூர். 2
,,	மு. மதாறுசாரூவுத்தர்,	கீழ்வேளூர். 2
,,	முருகைய பிள்ளை. வலையற்கடை,	விஜயபுரம். 2
,,	ப. வைத்திலிங்கம்பிள்ளை,	கீழ்வேளூர். 2
,,	சு. ரா. முத்தைய செட்டியார்,	கீழ்வேளூர். 2
,,	விசுவலிங்கம்பிள்ளை,	திருமதிக்குன்னம். 2
,,	சோமசுந்தர முதலியார்,	கூத்தூர். 2
,,	சு. சிதம்பரவயித்தியர்,	கீழ்வேளூர், 2
,,	மு. கெயினுமுஹம்மது சாஹிபு,	ஆழியூர். 1
,,	அ. சதாசிவ முதலியார்,	திருக்கண்ணன்குடி. 1
,,	சோ. சுப்பராய முதலியார்,	திருக்கண்ணன்குடி. 1
,,	வீ. கோவிந்தசாமி செட்டியார்,	ஆழியூர். 1
,,	நி. சின்னசாமி அய்யங்கார்,	திருக்கண்ணன்குடி. 1
,,	மாணிக்கம் பிள்ளை,	பட்டமங்கலம். 1
,,	கா.மு. செய்யதுமுஹம்மது தாவூதுசாஹிபு,	ஆழியூர். 1
,,	சி. மீனுட்சிசுந்தரம் பிள்ளை,	கோடிமங்கலம். 1
,,	கிருஷ்ணபிள்ளை,	திருமதிக்குன்னம். 1
,,	சேவுபிள்ளை,	புலிவலம். 1
,,	ரா. சுப்பிரமணிய பிள்ளை,	கீழ்வேளூர். 1
,,	மா. கோதண்டராம பிள்ளை,	கீழ்வேளூர். 1

7 7

சோதி சொருபமே துணை.

முகவுரை.

நெடிய கடல்சூழ்ந்த இந்நிலவுலகின்கண் "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான் இயாதினும் அரிதரிதுகாண்" என்னுந் தாயுமானப் பெருமான் அமுத வாக்கியத்திற்கிலக்காக விளங்கும் அளவிறந்த ஆன்ம கோடிகளுட் கிடைத்தற்கரிதாகிய இம்மானிட யாக்கையே ஒப்பிகந்து சால வுஞ்சிறந்தது.

அத்தகைய அருமையான இத்தச்சரீரம் அவரவர்கட்குக் கிடைக்கப் பெற்றிருந்தும், ஓர் வீரன், பகைவர்கள் சரீரத்தைத் துணிப்பதற்காகத் தன் கையில் தூங்கிய வாளாயுதத்தால் தன்னுடலைத் துணித்துக்கொள்ள முயல்வதைப்போல், அநித்தியமான சடஞுத் திரவியங்களைப் பெரும்பாலும் கருதுகிறார்களேயன்றி;

சிவஞான வள்ளல்.

உலகெருப்பைக் கடந்தொழியா ஞானவுதி மடுப்பேனே!
இலகுகும்பத் துயர்நீங்கி யெக்காட்டுறவி யாவேனே!
நிலகமறையின் பொருளிதெனத் தேற்றுங்குரவற் காண்பேனே!
கலகவுடலப் பிணிதணந்து கடவுள்தனியான் காண்பேனே!

என்னுங் கருத்திற்கு நிகராக, நான் யார்? நான் உலகத்திற் பிறக்கவேண்டிய காரணமென்ன? எனக்கு இத்தச் சரீரம் எதற்காகக் கிடைத்தது? இத்தத்துக்க சம்சாரசாகரம் வந்ததேன்? இராட்டினத்தின் சுழல்போல் நீங்காத ஜனனமரணங்கள் வரவேண்டியது யாது காரணம்? அவற்றைத் தவிர்ப்பதற்கு என்னவுபாயஞ் செய்யவேண்டும்? ஞானசிரியரை எவ்வாறு காம்

ஆடைவது' என இடையருத ஆத்மவிசாரக் தலைப்பட்டு, தனக்கு அந்தியமான புறக்கருமங்களைத் தனைந்து, தனது எதார்த்த சொரூபத்தை அனவரதமும் நோக்காமல் நோக்கி, சித்தியனைத்த சைதன்ய விதேக கைவல்யத்தை நாம் எப்போது சேர்வோமெனக் கருதுபவர்கள்; கோடியில் ஒருவராவது, இக்காலத்தில் இருக்கின்றார்களெனக் காணுவது, மிகவும் அருமையாக இருக்கின்றது.

சிவஞான வள்ளல்.

மருவிய வுடல்வெறுப்பும் வையக வெறுப்பும்வந்தால்
இருவினை யொப்புமல நெய்திடும் எப்துங்காலே
கருமல பாசமுண்டாம் பாகத்தாற் கடிதிற்சேரும்
திருவருட் சத்திபாதஞ் செறிந்திடுங் குருவுமன்றே.

மேற்கூறிய இருவினையொப்பு மலபரிபாக சத்தினிபாதம் முண்டாகும்படி, எல்லாம் வல்ல சித்தர்களாகிய சுப்பிரமணியர், அகஸ்தியர், திருமூலர், சட்டமுனி, நந்தீசர், உரோமர், போகர், திருவள்ளுவர் முதலிய நவகோடிசித்தர் குழாங்களும், மாணிக்கவாசகர், பட்டினத்தடிகள், சிவஞானவள்ளல், தாயுமானவர், குணங்குடி மஸ்தான்சாகிபு, தற்கரைப் பீர்முகம்மதுசாகிபு, வடலூர் இராமலிங்க வள்ளல், துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், சாந்தலிங்க சுவாமிகள், குமாரதேவர் முதலிய பேரின்ப மஹான்களும், ஜீவகாருண்யம் பாலித்து, லோகோபகாரமாக, ஏனையோர்களும் சாயுச்யபதவி அடையும்பொருட்டு, மொழிக்குமொழி இத்திக்கும் மதுரமொழுகிய அழகிய அநேக திருப்பாசுரத் தொகுதிகளைத், திருவாய்மலர்ந்தருளி வெளியிட்டிருக்கின்றார்கள்.

அத்தகைய சிறந்த சாஸ்திரங்களை வாங்கி வாசிப்பவர்களோ, இக்காலத்தில், மிக அருமையாகச் சிலர்களே காணப்படுகிறார்கள்: அங்ஙனம் வாங்கி வாசிப்பினும், எம்போலியர்கட்கு, அந்நூற்களின் ஆழ்ந்த கருத்துகள் செவ்வனே விளங்குவதில்லை. அக்குறையை நீக்கக்கருதி, இக்காலத்தில் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களை வசனரூபமாக வெளியிட்டிருப்பவர்களோ; அவர்களால் எழுதிய சாஸ்திரங்களைப் பார்ப்போர், பிற

ருதலியின்றித் தெரிந்துகொள்ளாத விதமாயும்; நிகண்டு, அக ராதி முதலிய இலக்கிய நூற்களைத் தேடிப்பார்த்துணரும் வித மாயும், தான் கற்ற கல்விப் பாண்டித்துவத்தைப் பிறருக்குத் தெரிவிக்கக் கருதியோ? அல்லது அவர்கட்கியற்கையாயுள்ள தமிழ்ப் பாஷாலட்சணமோ? கற்கண்டு என்னும் பதத்திற்கு, கன்னற்கட்டி எனவும்; நேற்று என்பதற்கு, நெருங்கல் எனவும்; தாமரை என்பதற்கு; இண்டை, குசேசயம், சதபத்திரி, சூது, பற்பம் எனவும்; பொன் என்பதற்கு, அரி, அத்தம், இரணியம், தேசிகம், ஆடகம் எனவும்; எஞ்ஞான்று, நிற்புழி, வந்துழி, அண்மை, சேய்மை, இவைபோன்ற கர்னகடோரமான பதப்பிரயோ கங்களைச் சாஸ்திரமுழுவதும் சமமாரியாக உபயோகித்து வரை ந்து வெளியிட்டிருக்கின்றார்கள். அத்தனைய நூற்கள், மிகுந்த இலக்கிய, இலக்கணப் பயிற்சியுள்ளவர்கட்கன்றிச், சாமான்யர் கட்கு நன்குவிளங்குவது அசாத்தியம்.

இதுகாரணத்தை யுத்தேசித்துப், பெரும்பாலும் கடின சந்திகளும், கடினமான வாக்கியங்களும் வராமல் சாமான்ய கல்வியறிவுடைய ஆண்பெண் இருபாலரும் எளிதிலுணருமாறு வசனரூபமாக ஓர் சாஸ்திரம் எழுதி வெளியிடவேண்டும் என் னும் அவாவானது சிறிது காலத்திற்குமுன் எனக்கேற்பட்டிருந் ததனாலும்,

பிரபுலிங்கலீலை.

கன்றிய வைரிகள் காதங் காதையும்,
வன்றுயர் மதனோய் வளர்க்கு மாற்றமும்,
புன்றொழி லினர்வதும் பொழுத போக்கலும்,

என்று சொல்லாநின்ற யுத்த சரித்திரங்களும், மதனோ மங்களும், கட்டுக்கதை (Novels) களும், இக்காலத்தில் எளிய தமிழ் நடையிலேயே எழுதப்பெற்றிருப்பதால், அவ்வித நூற் களை வாங்கி வாசிப்பவரும், வெள்ளிடை மலைபோல் வண்ணரும் படி, இனிய செந்தமிழ் நடையில், ஓர் வேதாந்த நூலைத் தாங்கள் எழுதி வெளியிடத்தான் வேண்டுமெனப் பல அன்பர்கள் சதா என்னைக் கேட்டுக்கொண்டு வந்ததனாலும்; அன்பர்கள் வாக்கி

முகவுரை.

யத்தை மறுக்கமுடியாதகனலும், என் சிற்றறிவிற்கெட்டிய வளவில் "அவசாக்கோலம் அள்ளித்தெளி" என்னும் பழமொழி போல் வெகு துரிதத்தில் இந்நூலை எழுதி, பக்குவர்களின் மன மாயையென்னும் அந்தகாரத்தை நீக்குவதனால், இந்நூலுக்கு "வேதாந்த பாஸ்கரன்" என்னும் நாமகரணஞ்சூடி ஒருவாறு வெளியிடத் துணிந்தேன்.

இந்நூலிற் கூறப்பட்ட கருத்துக்கள் சர்வ சமயங்கட்கும் சகல ஞானகமங்களின் கருத்துகட்கும் முற்றிலும் பொருத்த மாகவேயிருக்கும்; சிற்சில கருத்துக்கள் சில ஆகமபுராண இதி காசங்கட்கு முரணுகக் காணப்படின் அஃதே பெரியோர்கள் கருத்தாதலால் யானும் அவ்வாறு வெளியிடலானேன்.

பல சாஸ்திரங்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்த பெரி யோர்களாகிய கல்விமான்கள்,

கைவல்ய நவநீதம்.

பொய்யை மெய்யென்ற மூடர் புண்ணியரென்று
புராணங் கூப்பிடுமானால்
மெய்யை மெய்யென்ற ஞானிக்குக் குற்றங்கள்
விதித்த சாத்திரமுண்டோ?

மஹாராஜாதுரவு.

பொய்யை மெய்யன்றறிந்து போதமின் மையாலே
மெய்யைப்பொய் யென்றெண்ணி மெலிந்தேயுழல்வ ருலகர்
பொய்யைப் பொய்யென்றறிந்த போதகுருவி னருளின்
மெய்யை மெய்யென்றறிந்தே மெலிவதீர்வ ருயர்ந்தோர்.

என்னும் அமிர்த வாசகங்களை யுணர்ந்து ஒப்புக்கொண்டிருப் பார்கள் ஆதலால், அங்ஙனமே எனது வாசகத்தையும் மிகை யெனக் கருதமாட்டார்க ளென்பதற்கு, யாதோர் பிரமேயமு மில்லை.

இந்நூலை, இதனினும் மிக்க தெளிவாயும், கன்றும் எழுதலா மென்பது கல்விமான்களின் அபிப்பிராயமாயினும், அஃதென் சிற்றறிவிற்கியலாமையால்,

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானு மதுவாகப் பாவித்துத்—தானுந்தன்
பொல்லாச் தெகைவிரித் தாடினாற் போலுமே
கல்லார்தான் கற்ற கவி.

சோதி சொரூபமே துணை.

வேதாந்த பாஸ்கரன்.

பாயிரம்.

பிரணவ சொரூப வணக்கம்.

வெண்பா.

வேதமறை நாலுணரா மெய்ப்பொருளா மெய்ஞ்ஞான
பாதமறை வேதாந்த பாஸ்கரனைப்—பூதலமே
லார்த்தருளு மாறதையு வன்னியென வெண்ணிக்கள்
பார்த்தருளுஞ் சோதிசொரூ பம்.

இதுவுமது.

முத்திதரு மத்துவித மோகமில்லா நாலுணரப்
பத்திதரும் வேதாந்த பாஸ்கரனை—வித்தகமாய்ச்
சாதப் பிரணவமேற் சாற்றிடவெற் காருதவி
சாதப் பிரணவமே தான்.

மஹான்கள் பொதுவணக்கம்.

தாண்டற் கரியபவ சாகரத்தைப் போன்பார்
தாண்டற் பலரிகொடு தாண்டியசி—ராண்டகைசேர்
சித்தாடி யார்குழுபொற் சேவடியை யாவலுறப்
பத்தியுடன் புத்தியுள்வைப் பாம்.

பிரதம குருப்பிரா வணக்கம்.

அறுசீர்க்கழி நெடிலடி விருத்தம்.

கத்துதிரைச் சலநிதி சூழ் புடவியிடைப் பலதவங்கள்
கருதி யாற்றிப்
பத்தியுட னடியேனைப் புத்திரனு கப்பயந்து
பலநூல் போதித்
தத்துவித வித்தையெனக் கறிவித்தக் ரிலேயிற்ரு
னழுந்தி மாத
வத்திரஞ்சேர் அப்பூர்ணு மானெனுமெய்ஞ் ஞானிபதம்
வணங்கி வாழ்வாம்.

மனுகுருவணக்கம்.

வெண்பா.

அத்துவித வித்தாம் அவரையா கந்தகுரு
பத்திவழு வாமனிதம் பாவித்தான்—முத்தமிழுஞ்
சித்திகளு மெய்த்தவமுஞ் சேர்ந்துமை வாழ்வித்கு
மெத்திறத்து மோர்பயமு மில்.

சிறப்புப்பாயிரம்.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

பத்திமிகு முத்திபெற நீணந்து வாடும்
பக்குவர்க ளெனும்பைங்கூழ் செழிப்புற் றோங்கத்
தத்துவமெய்ஞ் ஞானேப தேச மாரி
ததியறித்து பொழியவந்த கருணை மேகம்
எத்தலமும் புகழ்செயுங்கீழ் வேளூர் வாழும்
எழில்முஹம்ம திபுராஹீம் இயற்கை காம
ரூத்தமிழ்க்கு வித்வகிரோன் மணியென் றுன்னூர்
மொழிகருணை யாகந்தப் பெயர்பெற் றோனே.

அவையடக்கம்.

நத்தையிடை முத்துதித்தால் நல்லரச ரெள்ளாமற்
சித்தமகிழ்ந் தேமுடியிற் சேர்ப்பதுபோற்—சத்துகடா
னென்றமிழை யெஞ்ஞான்று மெள்ளுவரோ புன்றமிழென்
றின்றமிழென் றன்புறுவா ரே.

இந்நூற்கு வேதாந்தபாஸ்கான் என்னும் பெயர் வந்ததற்குக் காரணமிசைத்தல்.

போதாந்த காரமிலார் புத்தியை மறைத்திருக்கும்
தீதாந்த காரமெலாந் தீர்ப்பதனுல்—வேதாந்த
பாஸ்கரனென் றின்னூற்குப் பான்மையபி தானமுற்ற
தாஸ்கியிது பக்குவருக் காம்.

இந்நூற்பெருமை யிசைத்தல்.

எத்தாலு மித்தாலுக் கீடல்ல வென்றுரைப்பார்
பன்னூறு நன்குணர்ந்த பாவலர்க—ளன்னூலாம்
வேதாந்த பாஸ்கரனை மிக்குணர்ந்தால் வேறில்லை
நாதாந்தம் வேதமொரு நால்.

என்னும் வெண்பாவிற் லிலக்கணமாகவும், காவேரி முதலிய நதிகட்கு முன்னே சிறிய வாய்க்கால்களும் ஓடிக்கொண்டிருப் பதுபோலவும் இந்நூலைச் சமர்ப்பிக்கலானேன்.

இந்நூலிற் பிரயோகிக்கப்பெற்ற வாக்கியங்கள் தமிழ்ப் பாஷா லட்சணப்போக்கின் உருவழகுக்கு விகற்பமாயிருப்பின் அவற்றையும், அங்காங்கு காணப்பெறும் பிழைகளையும், அவற் றின் திருத்தங்களையும் கற்றறிந்த விவேகிகள் தயைபுரிந்து எமக்கறிவிப்பாராயின் மகிழ்வோடேற்று மறுபதிப்பில் திருத்தி யச்சிடப்படும்.

இந்நூலை அச்சிடுவதற்கு வேண்டிய முயற்சிகள் செய்த கோடிமங்கலம். சு. விருத்தாசலம்பிள்ளை அவர்கட்கும், திருச்சி டில்ட்ரிக்ட் கோர்ட் பிரஞ்சஸ்சர்வர் கிருஷ்ணசாமி நாயுடு அவர் கட்கும், மதுரை S. I. ரெயில்வே கண்ராக்ட் மேஸ்திரியார் குரு நாதம்பிள்ளை அவர்கட்கும், புலிவலம் எ. ராம. அ. எல்லப்ப செட்டியாரவர்கட்கும், ரெ. இராமையா பிள்ளையவர்கட்கும், ஆழியூர். வா. நா. ஹமீது சுல்தான் சுலுத்தர் அவர்கட்கும், திருமதிக்குன்னம், ஜெ. கலியபெருமாள் நாயுடு அவர்கட்கும், கிழ்வேளூர். மு. இராஜகோபால நாயுடு அவர்கட்கும், K. இராம சாமிப் படையாச்சி அவர்கட்கும், இந்நூலைப் பற்றிய விளம்பரங் களைப் பல பத்திரிகை வாயிலாய் வெளியிட்ட திருமதிக்குன்னம் ரா. சா. வீரப்பபிள்ளை யவர்கட்கும், முசற்குளம். மா. வ. கடராச பிள்ளையவர்கட்கும், இந்நூலை எழுதும்போது இடைக்கிடையே யாம் சொல்வதை எழுதிக்கொடுத்த புலிவலம் தி. மு. ராம. கனுக்கோடியாபிள்ளை அவர்கட்கும், கிழ்வேளூர் K. கலியபெரு மாள் பிள்ளை அவர்கட்கும் மறவாத நன்றியுடையவனாக விருக் கின்றேன்.

இந்நூலை வாசிக்கும் அன்பர்கள் அன்னப்பட்சியானது பாலிற் கலந்தநீரைப் பிரித்துவிட்டுப் பாலைமாத்திரம் பருகுவது போலவும், பூவோடுசேர்ந்த வாழைநாரையும் அங்கீகரிப்பதுபோ லவும், அத்துவிதச் செல்வர்களாகிய மஹான்களின் எண்ணிறைந்த திருப்பாடல்களுக் கிடையே எனது புன்மொழியும் செறிந்தி ருப்பதால், அந்த விசேஷத்திற்காகவாவது இந்நூலை அங்கீகரித் துக், குற்றத்தை நீக்கிக் குணத்தைக் கைக்கொள்வார்களெனப் பிரார்த்திக்கின்றனன்.

கிழ்வேளூர்,
பிங்களஞ் தை மீ. } கருணையானந்தன்.

இந்நூற்பயனிந்தன்மைத்தென்மே.

மாயை யிருளில் வழிதெரியா மற்றிகைத்தாற்
றாயவொளி காட்டியதா தோற்றிவிக்கு—நேயமுடன
பார்த்தவர்க்கு வேதாந்த பாஸ்கரனைப் பாரார்க்கோர்
மாத்திரையும் ஞானமுண்டா மா.

இந்நூல் ஜனன மரணங்களைத் தவிர்க்குமெனல்.

பிறப்பகற்று மத்துவிதப் பேரின்ப நல்கு
மிறப்பகற்றும் வேந்தருங்கண் டேத்துஞ்—சிறப்புவிதிச்
சாந்தமுறும் வேதாந்த பாஸ்கரனைத் தான்பார்த்துக்
கூர்ந்துளத்தே தேர்ந்தறிவார்க் கு.

இந்நூலைக் கற்றுணர்ந்து அதன்படி நடப்பவர்க் கூழினீங்கெனல்.

பொய்ம்மையறுங் காமத்தைப் போக்குவிக்கு மெய்ஞ்ஞான
மெய்ம்மைவரு நல்லறிவு மேற்கொள்ளுந்—தெய்வமறை
வேதமெலாம் போற்றுமிந்த வேதாந்த பாஸ்கரனை
யோதிநடப் பார்க்கினியே துழ்.

இந்நூலை மனவொருமையுடன் வாசித்து அதன்படி நடப்பவர்கள் முன்
யோகம்பயின்று, விட்டதுறையை முடிக்கவந்தவர்களேயன்றிச்
சாதாரண மனிதரன்றெனல்.

கைக்குளின்பந் தாரபொய்யாங் காமமுறு கத்தைவிட்டு
மெய்க்குளின்பந் தாரவிந்நூல் வேதாந்தத்—திற்கருத்தை
வாதித்தி டாதகற்றி வாசிப்போர் யோகமுனஞ்
சாதித்து விட்டவர்க டான்.

பல சாஸ்திரங்களை ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவர்களும் இந்நூலை வாசிப்பதால் ஞானவைராக்ய மேன்மேலு முடையவர்களாவரெனல்.

பாரறுற் கற்றவரும் பார்த்துணரில் ஞானமகா
விரவயி ரார்க்கியத்தை மேற்கொண்டு—காருணிய
வித்தாய் விளங்குமிந்த வேதாந்த பாஸ்கரனைச்
சத்தாய் விளங்கிடுவர் தான்.

இந்நூலைக் கருதாதவர்கள் பிரயோசனமடைய மாட்டாரெனல்.

பூதலத்தா ரோதுகின்ற புன்னெறியாஞ் சாத்திரங்கள்
வாதமிட்டுத் தர்க்கித்து வாய்விறு—வோதுவிக்கும்
வேதியர்கள் காகனுமும் வேதாந்த பாஸ்கரனை
யோதுவதால் மோனம்வரு மோர்.

இத்தால் பலதால்கட்கும் ஒப்பற்ற மாணிக்கக் கிரீடமாமென்ல்.

சாற்றரிய மோனதிலே சாதித்தார் சொல்லியபன்
னூற்றலிலேமேல் ரத்தினத்தா னுட்பமுமு—வாற்றியிக
வைத்தமுடி வேதாரத்த பாஸ்கரனி மானிலத்தி
லொத்தவொரு தானுமுள தோ.

இத்தால் அந்நூனிகட்கும் ஆத்மநூன்மடைந்த மேய்ந்நூனிகட்கு சமர்ப்பித்ததன்று; நாளீ எப்பொழுது அந்துவ்தமடைவேன் என்று சதா ஆத்மவிசாரம் செய்யப்பட்ட பரிபக்குவர்க காமென்ல்.

அங்கணைத்தே ரூற்றெளியா தாதலினுல் ஞானமிலார்க்
கிங்குரைத்த தன்றிந்நூ லேதமறப்—பங்கயஞ்சேர்
தெண்ணீரிற் கென்னபயன் சில்லமதால் ஞானியர்க்கென்
றெண்ணியான் செய்ததுவு மில்.

இதுவுமது.

நிம்பங்கா யாக நினைப்பா ரபக்குவர்கள்
சம்பமும் விஷக் தவிர்ப்பிக்க—கம்பியிலை
பக்களிலே செல்லுமதி பக்குவர்க்கு முக்கனியுஞ்
சர்க்கரையு மாருமிந்நூ லுன்.

நூலாசிரியர் அநுக்கிரகித்த பேருலகுகைம்மாறு வேண்டுன் வியாஜ்ஜ நிந்தல்.

கைத்தலத்து நெல்லிபெனக் கண்டிடுவான் பக்குவர்க்குப்
பத்திதரும் வேதாந்த பாஸ்கரனி—பொத்துரைக்கக்
கைம்மாறு காணேன்மெய்க் கல்வியரு டேசிகர்க்கு
மைவானுக் காருதவு வார்.

நூலாசிரியர் காலம்தேசம்.

உலகுதனில் சகனுண்டோ ராயிரத்தெண் ணூற்றுமுப்பத்
தொன்பா னுக
விலகியபிங் கலவாண்டிற் சிம்மரவி மீனமன
திரக்கங் கொண்டு
பலகலியுக் துருவியுளஞ் சனியாமம் பக்குவர்க்குப்
பகர்ந்தா னெனி
லலகில்புகழ் வேதாந்த பாஸ்கரமெய்த் தலதாலி
பவனி மீதே.

சோதி சொரூபமே துணை.

வேதாந்த பாஸ்கரன்.

கடவுளிலக்கணம்.

முதலாவது அத்தியாயம்.

பலவளஞ்செறிந்த நிலமகடமக்கு இலக்கியவுடை யாம் அலைகடலானது எகமாயிருந்தும் பற்பல வென்று பொருள் தோன்றும்படி இந்து மஹா சமுத்திரம், அராபிக்கடல், வங்காளக் குடாக் கடல் முதலிய பல பெயரிட்டு வழங்கப்பெறு கின்றது. பொன்னுலகமானது ஒரே உலோகமாயிருந்தும் கம்மாளர் கள் கைத்தொழிலினல் காப்பு, தண்டை, கொலுசு, பாடக முதலிய நானவித நாமரூபங்களமைந்த ஆபரணமாக விளங்கு கின்றது. மண் ஒரே தன்மையாக இருந்தும் குயவர்கள் தொழி லால் பானை, சட்டி, குடம், தொட்டி முதலான பல பெயரிட்டு வழங்குகின்றது. அதுபோல் முழுமுதற் கடவுளானவர் ஒருவரா யிருந்தும் சமயபேதத்தால் முஹம்மதியர்கள் அல்லா எனவும், சைவர்கள் பரமசிவன் எனவும், வைஷ்ணவர்கள் நாராயணன் எனவும், கிறிஸ்தவர்கள் இயேசுகிறிஸ்து எனவும் இன்னும் எண் ணிறந்த சமயகோடிகள் தம்தம் சமயத்திற் கிசைந்த வெவ்வேறு நாமங்களிட்டு வழங்கப் பெறுகின்றார் ஆயினும் கடவுள் ஒருவரே யன்றிப் பலரல்ல.

சிவவாக்கியர்.

எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ?
அங்குமிங்கு மாயிரண்டு மூர்த்தி யொன்றலோ?
இங்குமங்கு மாய்நிறைந்த வெமூர்த்தி ரண்டென
வக்கவார்ச் சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே.

கதவு, நிலை, சன்னல் முதலியவைகளை ஓர் தச்சுவேலைக்கா ரனிருந்து செய்திருப்பானெயன்றி, அவைகள் தானுகவே அந்தந்த

சூபங்களோ யமைத்திருக்கமாட்டாது. அதுபோல் யாணமுதல் எறும்பீறுக * எழுவகைத் தோற்றத்திலுண்டான § என்பத்து நான்குலட்சம் ஜீவராசிகளையும், கடல், மலை முதலியவைகளையும் † சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் கடவுளென்னும் ஓர் தேவதச்சனிருந்து செய்திருக்கவேண்டுமேயன்றி, அவைகள் இயற்கையாகவே அமைந்திருக்கமாட்டாது.

கடவுள் சர்வ ‡ சராசரப் பொருள்களிலும் அங்கு இங்கு என்று சுட்டிச் சொல்லாதவிதமாய் எங்கும்; பூவில் வாசமும், எள்ளில் எண்ணெயும், பாலில் நெய்யும், உடலில் உயிரும், ஆகாயத்தில் வாயுவும், மண்ணில் ஜலமும், தாய்வயிற்றில் சிசுவும், நீரில் உப்பும் எப்படி அபேதமாய்க் காணப்படுகிறதோ அப்படியே (சர்வேந்தரியாமியாகியவராதலால்) நிர்விகற்பமாய் வியாபித்திருக்கின்றார்.

ஒரு நகரத்தைநோக்கிப் பிராணிகள் பலதிசைகளிலிருந்து பல பாதைவழியாக வந்தாலும் முடிவில் அவர்கள் எல்லோரும் ஒரே பட்டினத்தை அடைகின்றார்கள். காவேரி முதலிய நதிகள் அநேக பிரிவாய்ப் பற்பலதிசையை நோக்கிச்சென்றாலும் அவையனைத்தும் முடிவில் சமுத்திரத்தையே சேர்கின்றன. ஒரு மனிதனை வெவ்வேறு முறைமையால்; தந்தையென்றும், மாமனென்றும், மைத்துனனென்றும், அண்ணனென்றும், தம்பியென்றும் பலபேர் பலவிதமான பெயரிட்டழைத்தாலும் அவையெல்லாம் அம்மனிதன் ஒருவனையே குறிக்கப்படுகின்றன. அதுபோல் இவ்வுலகத்திலுள்ள சமய

---

* எழுவகைத் தோற்றம், தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம். § 84 நாறுயிரம் ஜீவராசிகளாவன; தேவர் (மலையிக்கத்தகன்) பதினான்கு இலட்சம், மக்கள் ஒன்பது இலட்சம், விலங்கு பத்து இலட்சம் புள், பத்து இலட்சம் ஊர்வன பதினெரு இலட்சம் நீர்வாழ்வன பத்து இலட்சம், தாவரம் இருபது இலட்சம். † சிருட்டி-படைத்தல், திதி-காத்தல், சங்காரம்-அழித்தல், திரோபவம்-மறைத்தல் அநுக்கிரகம்-அருளல். ‡ சரம்-இயங்குவது. அசரம் - இயக்கமின்றி நிற்பது, சரம், அசரம்; என்பது: சராசரமென்றுயிற்று.

கோடிகள் கம்தெய்வம் எம்தெய்வம் என்று அதேவேலையாகப் பிரசங்கமேடைகளிலும், தெருக்களிலும், சத்துபொருகளிலும் நின்றுகொண்டு பேரோலமிட்டு வாதம்புரிந்த தத்தம் சமயத்தால் விதிவிலக்கும்படி வெவ்வேறு கடவுளாகப்பாவித்து வணக்கினாலும், அவ்வணக்கமெல்லாம் ஒரே கடவுளேச்சார்ந்த வணக்கமேயன்றிப் பலவணக்கமாகாது.

திருமந்திரம்.

சத்துக் கழுதைகள் போலுங் கலதிகள்
சத்த சிவனெங்குந் தோய்வற்று நிற்கின்றுன்
குற்றந் தெரியாதார் குணங்கொண்டு கோதாட்டார்
பித்தேறி சாலும் பிறக்கிறப் பாரே.

காயமாலையர்.

சாதிகுலம் பிறப்பிறப்புப் பார்தமுற்றி யருவருவத் தன்மை காமம்
எதமின்றி யெப்பொருட்கு மெல்லிடத்தும் பிரிவறதின் றியக்களு செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதலிழ நிறைவான துரிய வாழ்வைத்
தீதில்பர மாம்பொருளைத் திருவருளே தினைவாகச் சிர்தை செய்வாம்.

ஆசிரியர்லக்கணம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஆசிரியர்களில் மதாச்சாரியர்கள், காரியக்குருக்கள், காரணக்குருக்கள் என மூன்றுவகையுண்டு. அவர்களில்,

மதாச்சாரியர்கள்:— தனக்கு வரும்படிக்குண்டான அநுகூலனங்களேச் சிடர்கள் அநுசரிக்கும்படி கட்டளேயிட்டு மீனன பற்பல கருமங்களே அவசியம் செய்துதான் தீரவேண்டுமென்று போதிப்பார்கள். அப்படி நடந்துகொள்வதால், மரணமானபின் இந்திரலோகம், பிரமலோகம் முதலியவைகள் கிடைக்குமென்றும், தேவமகளிர்களாகிய அரம்பையர்களுடன் சுகித்துப் பல கோடி வருடங்களேயும் ஒருநாளாகக் கழிக்கும் தேவவருடங்களாற் சதாகாலமும் சுவர்க்காதிபோகத்துடன் வாழலாமென்றும் ஆசைவார்த்தை சொல்லித், தனக்குவேண்டிய பொருளேப் பகற் கொள்ளைக்காரர்கள்போல் அபகரித்துத், தான் கெட்டுப்போவதுமன்றித் தன்னேப் பின்பற்றியவர்களேயும் கெடுத்து, அவர்க

ளாற் புகழப்பட்டு வாழ்வார்கள். அப்படிக்கொத்த ஆசிரியர்கள் வேடதாரிகளாவார்கள்.

துகேலோபாக்கியானம்.

ஒல்குபெரு ஞானியர்போற் பேசுவா ரவருண்மை வேடம் போலப்
பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ் செய்வார்தம் பக்க மேகி
நீங்குவென் மெழிப்பாரிற் கிலமேலாம் பிரமத்தி கிலமே யென்பார்
எங்கிவர்கள் தாங்கெடுவ தன்றிமற்றே ரையுங்கெடுக்கு மெண்ணம் பூண்
[டோர்.

காரியக்குருக்கள்:—ஆரம்பத்திற் சகல பற்றும் அற்றவர் போற் பேசி நட்புமுற்றியபின் தம்பி! நீ நல்ல பிள்ளையாயிருக்கின்றாய்! இந்தத் தொழிலை உனக்குத் தான் காட்டிவைக்க வேண்டுமென்று பரிந்துசொல்லி முக்கோணம், நாற்கோணம், அறுகோணம் இவைகளைக் கிறி, அகில் நசி, மசி, சிவயவசி இதுபோன்ற அட்சரங்களை அடைத்து அதை அவன் கையில் கொடுத்து இதைப் பத்திரமாய் வைத்துக்கொள்? பிறருக்குக் காட்டாதே? இதனல் சர்வதொழில்களும் சித்தியாகும்; ஆனல் தட்சணை கொடுக்காவிட்டால் சித்திக்காது எனக்கூறிப் பணம் பறிப்பார்கள். மனிதரிடத்திற் பேசும்போது இவர், அவர் என்று சொல்வதற்கு பதிலாய் இது, அது என்று பேசிக் கொள்வார்கள். இதுமட்டுமல்ல பலவித ஜாலமெல்லாம் செய்வார்கள்.

துகேலோபாக்கியானம்.

பொன்முதல் பொருளிடத்து மிச்சையற்றுர் போற்றுறவு
பூண்டு பின்னர்
வன்மைசெறி மனத்தபக்கு வர்க்குபதே சமுகலித்தி
வருவ தெல்லாம்
நன்மைதரு மூன்ஞேரெண் காருமுழுப் பள்ளையென
நயந்தோ ராயன்
புன்மையறப் பற்றியலீ துடனழித்தா னென்றகதை
போலு மாதோ.
மிக்கவழி வுடையாரைப் போன்றுமுடற் பற்றனைத்தும்
விடுத்தர் போன்றும்
தக்கவழக் கிடத்திஞயர் நினைவினையீ நினைவினையாச்
சமையச் சொற்றும்

தொக்கபடர்க் கைப்பெயர்முன் னிலைப்பெயராக் கிடவுரைத்துஞ்
சூழ்வ தெல்லாம்
பக்குவமின் மடவோரை மயக்கியவர் கைப்பொருளைப்
பறித்த தன்றே?

காரணக் குருக்கள்:— இவ்வுலகத்திற் காணப்பெற்றவை யெல்லாம் அழியப்பெற்றவை என்றும், தான் வேறு கடவுள் வேறுய்ப் பாவித்து வழிபடுந்தவமானது கைகூடாதென்றும், தனது யதார்த்த சொரூபத்தையே ஈசனாப் பாவிக்கவேண்டு மென்றும் நிராசையாய் உபதேசிப்பார்கள்.

சற்சிடர்களுக்கு உபதேசஞ் செய்யத்தகுந்த ஞானசிரியர் மாசில்லாத மனமுடையவராயிருக்கவேண்டும். மனம் களங்க ரகிதமாகாதவரையில் அவரால் போதிக்கப்படும் உபதேசத் தால் ஞானோற்பமாவது துர்லபம்.

வனத்திற் சஞ்சரிக்காநின்ற புழுவைக் குளவியானது எடுத் துவந்து தனது பஞ்சரத்திலடைத்து அந்தப்புழுவைத் தனது ரூபத்தை யடையும்படிச் செய்வதுபோலவும், ஆமையானது கரைக்குப் புறம்பாக முட்டையிட்டுத் தான் நீரிற்குள்ளிருந்து கொண்டே முட்டைகளை நினைந்துகொண்டிருக்க, முட்டையா னது ஆமையினது வடிவத்தையடைவதுபோலவும், கோழியா னது முட்டையிட்டு அவைகளைத் தன் வயிற்றோடு அணைத் துக்கொண்டிருக்க வெப்பமதிகரித்துக் குஞ்சுகளாவதுபோல வும், ஜலத்தில் சஞ்சரிக்காநின்ற மச்சங்கள், தன் கருவைத் தண்ணீரிற் பிச்சிவிட்டு, அவை தன் வடிவத்தை யடையவேண் டுமெனக் கண்களாற் கூர்மையாகப் பார்த்தவுடன் அவை மீன்குஞ்சுகளாக மாறுவதுபோலவும், ஈசிக்காந்தமானது சமீ பத்திலிருக்கும் இரும்புத்துண்டுகளைத் தன்னிடம் வரவழைத் துக்கொள்வதுபோலவும், தன்னை அடுத்துத் தொண்டுபுரிந்த மாணவன்மீது சற்குருமூர்த்தியானவர் கிருபாகோக்கம்பாலித்து; மானத, மாயன, பரிச தீட்சைகள் செய்து தன்னுடைய அருட் சக்தியிற் சிறிது உதவி "சுடர்விளக்காயினுந் தூண்டுகோல்வேண் டும்." என்பதற்கிணங்கச் சீடனிடத்துள்ள இயற்கையான சக்

நியைத் தூண்டி உபகாரஞ்செய்யவேண்டும். அப்படிச் செய்பவரே சிறந்த கனிந்த ஞானகுரியர்.

சிவதாலவிள்ளல்.

வெத்துவ மசிசி வோக மத்துமி சிவோய மத்தி
நவத்துதி வாக்கி யத்தை கலையற சீடற் கோதி
யவற்றுறு பொருளைத் தேற்றி யாங்கவன் கிலேசம் போக்கிப்
பவத்துயர் கழித்தான் றன்னைப் பரமவா சிரிய னென்ப.

ஞானகுரியர் சிடனிடத்தில் எவ்விதப் பிரயோசனத்தையும் கருதாமல் நிராசையாய்ப் போதிக்கவேண்டும். சிடனுடைய உடல், பொருள், ஆவி மூன்றும் ஆசிரியருக்குச் சொந்தமாயினும் அவற்றுற் செய்யப்படுந் தொழிலைச் சிடனுடைய மனதைச் சோதிக்கும்பொருட்டு (அவசியமானால்) செய்யவேண்டுமேயன்றிச் சொந்தப் பிரயோஜனத்திற்காக நடத்தப்படாது. புகழுக்காகவோ! பணத்திற்காகவோ! உபதேசிக்காமற் கிருபாகோக்கம் ஒன்றினாலேயே உபதேசிக்கவேண்டும்.

சுருதியின் முடிவைத் தெற்றெனவணர்ந்து மனமாசு நீங்கிக் காமக்குரோதாதிகளை வென்று நிர்ச்சலனமாயிருப்பவர் எவரோ? அவரே! தன்னையும், தலைவனுகிய கடவுளையும் நன்கறிந்தவர். அவரே மாணாகனுக்குப் பரமகருணைநிதியாகிய கடவுளின் சொரூபத்தைக் காட்டவல்லவர். மேற்கூறிவந்த குணங்குறிகள் ஆசிரியரிடத்தில் உளவாயின், அவரால் சிடனுக்கு யாதோர் அபாயகாரமுமில்லை. அவ்வாறில்லாத ஆசிரியரிடம் உபதேசம் பெறுவதில் தன்மையுண்டாகாவிட்டாலும், தீமையுண்டாவது கிண்ணம்.

திருமந்திரம்.

குருடர்க்குக் கோல்காட்டிச் செல்லுங் குருடர்
மூளும் பழங்குழி வீழ்வரா முன்பின்
குருடரும் வீழ்வரா முன்பின் னறவே
குருடரும் வீழ்வர் குருடரோ டாயே.

ஆகையால் சகல ஆசைகளையும் அகத்திலடக்கிக்கொண்டு புறத்திற் பற்றற்றவர்போல் நடிக்கும் ஆசாடபூதிகளாகிய வேஷ

தாரிகள், பேதைச்சனங்களை மயக்கும்பொருட்டு படாடோப மாய், சாமியார், மஸ்தான் என்று வாய்ப்பறையடித்துக்கொண்டு தண்டு கமண்டலதாரியாய் ஊர்ஊராய்த் திரிந்து எளியவர்கள் பாவமெல்லாங் கைக்கொள்பவர்களிடத்தில் திட்சைபெறக்கூடா தென்பது இதன்மூலமாய் வெள்ளிடைமலைபோல் விளங்குகின்ற தல்லவா?

நாலாவடி.

மண்டலத்திற் குருக்களென்று பேரும் பெற்று
மகத்தான தூளிதமு மணிந்து கொண்டு
குண்டலங்கள் செவியிலிட்டுக் குல்லாச் சாத்திக்
கோகரணங் கெஜகாண மிரண்டுங் கற்றுத்
தெண்டிரையிற் பலவிதமாய்ப் பொய்கள் சொல்லிச்
சீடருக்கு முபதேசத் தெரியச் சொல்வார்
ஒன்றுமில்லை யவர்கள்கையில் வித்தை யாச்சு
உள்ளவர்த்த மானமிதை யுரைசெய் வேலே.

உற்றுநின்ற சாஸ்திரத்தைப் பார்த்துப் பார்த்து
ஊணுகிடை யாமலுச்சான் புறட்டிப் பேசிப்
பத்தரென்றுங் குருக்களென்றும் வகுத்துச் சொல்வார்
பாகரியம் தருவமென்று பணம் பறிப்பார்
வித்துகின்ற வீடல்காவூர் வேருங் காவூர்
விளக்குபரச் தலங்குகின்ற வீடுங் காவூர்
சத்தவமும் தருவமென்று உலகஞ் சுற்றி
எளியோர்கள் பாவமெல்லா மினிக்கொள் வாரே.

நாலாமதியுள்ளான்.

வாசியி லேநினம் வாழ்ந்தோமென் றேசொல்லி
யையகத் தோரை மயக்கித் நியக்கியே
தேசியி லேறும் வகையறி யாமலே
சீடர்க் குபதேசம் செய்பவன் பேயன் (கானடா)

பாலிலே தண்ணீரைக்கலந்து அன்னப்பட்சியின் முன்னே வைத்தால் நீரைப் பிரித்துவிட்டு பாலைமாத்திரம் பருகிவிடும். அதுபோற் சற்சிடனிடத்தில் சிற்சில குற்றங்கள் காணப்படி னும், அவைகளைத் தனது கருணையால் விலக்கிக், குணத்தைப் பாராட்டி, சற்குருமூர்த்தியானவர் கிடைத்தற்கரிய தத்துவோ பதேசஞ் செய்யவேண்டும்.

திருமந்திரம்.

கழுத்த விரும்பே கனகம தானுல்
மறித்திரும் பாகா வகையது போலத்
குறித்தவப் போதே குருவருள் பெற்றுள்
மறித்துப் பிறவியில் வந்தனு காலே.

பொன்னரிக்குங் கம்மியன் கம்மாளர்களிட்டத்திலுள்ள பொன்கலந்த மண்ணைவாங்கித் தனக்குப் பிரயோஜனமான பொன்னைமட்டிலும் அரித்துக்கொள்ளுவான். அதுபோல் சற்சிடனனவன் காலவேறுபாட்டால அஞ்ஞானிகளுடன் கலந்து வாழ்ந்தாலும் அவனை அந்தக்கூட்டத்திலிருந்து விலக்கி அருமையான சகசநிஷ்டையை ஞானுசிரியர் உபதேசிக்கவேண்டும்.

விஷந்தின்டியவனை மந்திரசக்தியாலும், ஔடதப் பிரயோகத்தாலுந் தெளிவிப்பார்கள். அதுபோல் பிறவித்துன்பமென்னும் சுழலில் அகப்பட்ட ஈன் மானவனை மெய்கண்ட தேவதனர்கள் சிந்தனையாலும் திருநோக்கத்தாலும் அஸ்தமஸ்தக சையோகத்தாலும் தனது திருவடிப் பரிசத்தினுலும் மெய்ஞ்ஞானியாக்கிவிடுவார்.

ஒழிவொடுக்கம்.

பரிசித்துஞ் சிந்தித்தும் பார்த்தும் மலமாயைக்
கருமத்தை யெல்லாக் கழற்றிச்—சரிதாதி
வாதனையாம் போத மயக்கத்தை வாக்காலே
போதைசெய்து போக்கிவிடப் போம்.

இத்தப் பூமியினிடத்தில் ஒருவனுடைய வியாதியை நிச்சயம்பண்ணி, இத்தனைகாலைக்குப் பிறகு தான் இவனுக்கு ஔடதங்கொடுக்கவேண்டுமென்று வைத்தியர்களால் நியமிக்கப்பெறும் ஔவ்வோர் அசாத்தியமான வியாதியுடையவனுக்குப் பினிசம்பவித்த அந்த நிமிஷமே * பூபதிமுதலிய அரிய ஔட

* பூபதி செந்தூரத்தின் முறை. பதங்கவெள்ளை, லோகவெள்ளை, காந்தவெள்ளை, நாகவெள்ளை, செம்புவெள்ளை, வகைக்கு களஞ்சு 2, இவைகளை ஒருசாமம் காமக்பால்லிட்டரைக்கவும். அதன்பின் வயிரம், பவளம், முத்து, புஷ்பராகம், மரகதம், மாணிக்கம் வகைக்கு களஞ்சு ½, கெந்தகம் களஞ்சு 4, முப்பு களஞ்சு 4, இரசம் களஞ்சு 8, தாளகம்,

தங்களைக் கொடுத்து அவனுயிரை உடனே திருப்ப முயல்வார்கள். அதுபோல் சாதன சதுட்டயமே ஓர் வடிவெடுத்து வந்ததுபோன்ற தீவிரதர பக்குவனுக்கு ஒரான்டேனுஞ் சோதனை புரிந்து அதன்மேல் ஞானுசிரியர் அதிகாரம் பண்ணவேண்டுமென்று சாஸ்திரங்கள் முறையிட்டிருப்பினும் ஒவ்வோர் அதி தீவிரதாபக்குவனுக்கு அந்தச்சணமே அல்லமதேவர் அக்கமாதேவிக்கு உபதேசஞ்செய்ததுபோல் உபதேசிக்கவேண்டும்.

பாதாதிகேசபரியந்தம் அக்கினி பற்றிக்கொண்டவனுக்கு மடுவில் விழுந்து மூழ்குலன்றி கொஞ்சகாலத்திற் பிரவேசித்தால் அந்த அக்கினியின் வெப்பந்தணியாது. அதுபோல் பிரபஞ்ச மாயையென்னும் கொடிய வேங்கைக்குப்பயந்து சரணகதியடைந்த சிடனுக்கு, அவனே விழுங்கி மேலிடப்பெற்ற அகண்டாகார ஞானதெறியைச் சற்குருவானவர் உடனே அதுக்ரகம் செய்யவேண்டும்.

சீடரிலக்கணம்.

மூன்றவது அத்தியாயம்.

சீடன், மாணுக்கன், என்பன ஒரு பொருட்கிளவி.

மாணுக்கர்கள்: உத்தமமாணுக்கர், மத்திமமாணுக்கர், அதம மாணுக்கர் என மூவகைப்படும்.

மனுசிலை, வெள்ளைப்பாஷாணம், துத்தம், துரிசு, நவச்சாரம், சீனுக்காரம், வீரம், பூரம் வகைக்கு களஞ்சு 1, இவைகளைப் பொற்றலைக்கையான் சாற்றுல் 1 சாமம் அரைத்து அழுரியில் சுருக்குக்கொடுத்து எடுத்து பழச்சாற்றுல் 1 சாமம் அரைத்து வில்லைசெய்து ரவியில் காயவைத்தெடுத்துப் புதுக்கலசத்திற்குள் வைத்து வலுவாய் மூடி 7 சேலை மண் வலுவாய்ச்செய்து 50 எருவில் புடம்போடப் புகையாமற்கட்டி ஈரும், புடம் ஆறினபின் எடுத்துப்பார்க்கச் செந்தூரம் அருணோதயம் போல் விளங்கிருக்கும். செந்தூரத்தின் எடைக்குப்பாதி சாதிலிங்கஞ் சேர்த்து முலைப்பால் விட்டரைத்து வீரல்னீளம் கம்பிபோல் செய்து உலர்த்திவைத்துக்கொண்டு குருபதத்தை வணங்கி அனுப்பானத்தில் அரிசி எடை கொடுத்தால் இறந்தவனுக்கும் தாது உண்டாகும் என்பர் ஆன்றோர்.

உத்தமமாணாக்கன்:—இவனே முதன்மாணாக்கன்; இவன் அன்னப்பட்சியையும், பசுவையும்; நிகர்த்தவன். அன்னப்பட்சியானது பாலுடன்கலந்த நீரைப் பிரித்துவிட்டுப் பாலேமாத்திரம் பருகுமாப்போல் ஆசிரியரிடத்திலுள்ள நற்குண நற்செய்கை, தீர்குண தீச்செய்கைகளில் தீக்குண தீச்செய்கைகளைப்பற்றி இகழாமல், நற்குண நற்செய்கைகளுக்காகமட்டும் புகழ்வான். பசுவானது அதிகமான புல்லுள்ளவிடத்தைக் கண்டால் வயிறு நிரம்ப மேய்ந்து, பின்பு ஓரிடத்தில் படுத்துக்கொண்டு சிறிதுசிறிதாக வாயில் வருவித்து மென்றுதின்று ஜீரணப்படுத்துவதைப்போல், ஞானசிரியரிடத்திற் கேட்ட உபதேசத்தை ஓர் ஏகாந்தமான விடத்திலிருந்து சிந்தித்து நிஷ்டைகூடுவான்.

மத்திமமாணாக்கன்.—இவனே இடைமாணாக்கன் இவன் உழுகிற நிலத்துக்குச் சமானமானவன். உழுநிலமானது உழவர் வருந்திப் பயிர்செய்யும் முயற்சிக்குத்தக்கவாறு விளைவைத் தருவதுபோல் ஞானசிரியர் சீடன் சமீபத்திலிருந்துகொண்டு எவ்வளவுக்கு இசைந்துபேசி ஆத்மவிசாரமுண்டாக்குகின்றாரோ? அவ்வளவுக்கு (நிர்ப்பந்தத்திற்காக) சிறிதுசிறிது அநுஷ்டிப்பான்.

அதமமாணாக்கன்.—இவனே கடைமாணாக்கன்; இவன் பன்னுடையையும், வெள்ளாட்டையும், எருமையையும், பலதுவாரமுள்ள இல்லிக்குடத்தையும், உண்ணியையும்: மரத்துண்டையும், சரீரத்தையும் நிகர்த்தவன்.

பன்னுடையானது நெய், தேன் முதலியவைகளை வடிக்கட்டுதற்பொருட்டுத் தன்மேல் வார்க்கும் போது மதுரமான சாரத்தைக் கீழே ஒழுகவிட்டுச் சாரமற்ற கசட்டையே தன்னிடத்தில் தங்கச்செய்யும். அதுபோல், ஆசிரியர் திருவாயிலிருந்துவந்த உசிதமான சம்பாஷணையை மறந்து விட்டு அநுசிதமான சம்பாஷணையையே! சிந்தித்துக்கொண்டிருப்பான். வெள்ளாடானது, ஒரு செடியிலேயே தன் வயிறு நிரம்பும்படி - தழை நிரம்பியிருக்கப் பெற்றும் அதனை வயிறுநிரம்ப மேயாமல் "கன்றுமனத்துடனே தழை தின்றுற்போல்" என்னுந் தாயுமானவர் வாக்கியம்போன்று பல செடிகளிலுஞ்சென்று சிறிது சிறிது தின்று வயிறு நிரம்பா

மல் அலீயும். அதுபோல் தான் இரண்டறக்கலத்தலாகிய பிரம்ம ஞானம் அடைவதற்குண்டான தவறுதிகள் ஒரே ஆசிரியரிடத்திற் காணப்பெற்றாலும் அவரிடத்திற் சிற்சில விஷயங்களைக் கேட்டுமாத்திரத்திலேயே அவரிடத்தை நீங்கிப் பல ஆசிரியர்களிடத்திலும் அலைந்து உண்மையை அறியாமல் மயங்கித்திரிவான். எருமையான்று தெளிந்த நீரைக் கலக்கி அதன் பின்னரே பருகுவது போன்று, ஞானுசிரியர் இதயத்தை மகிழும்படிச் செய்து: அவராலுபதேசிக்கப்படும் ஞானுமிர்தத்தைத் தெளிவுபெறவுண்ணுது அவர்சித்தத்தைத் தனது விபரீத வினுவாற் கலக்கிச் செவிவாயினுலுண்பான். பலதுவாரங்களையுடைய இல்லிக்குடமானது, தன்னுள் வார்க்கும் நீரைப் புறத்தில் ஒழுகவிட்டு நிரம்பாமலிருப்பதுபோன்று, ஆசிரியர் இரவும் பகலுமாக ஞானுமிருதத்தைப் பல திருட்டார்த்த தாட்டார்த்தங்களைக் கொண்டு பலகாற் புகட்டினும், புகட்டும் அக்கணத்திற்றானே அந்த வாக்யாமிருதத்தை மறந்துவிடுவான். உண்ணியானது, பசுவின் முலைக்காம்பின் பால் வரும் துவாரத்திற்கடித்து பரிசுத்தமும் மதுரமும் பொருந்திய அந்தப்பாலை யுண்ணுவகை தெரியாமல், அசுத்தமாயும், துர்க்கந்தமாயு மிருக்கின்ற அப்பசுவின் இரத்தத்தைப் பருகி ஆனந்தமடைவதுபோல், ஆசிரியர் வாக்கியத்தின் ஞானுமிர்தஞ் சுரந்து பெருகிவராநின்ற அர்த்தத்திலூன்றிச் சுகாநந்தம்பெருமல், அனர்த்தத்தையே பொருளாகக் கொள்வான். மரத்தண்டானது, பல மனிதர்கள்கூடித் தண்ணீரிற் பூமி மட்டத்திற்கு அழுத்தினுலும், அவர்கள் கையைவிட்டவுடன் கனவேகமாய்க் கிளம்பி நீர்மட்டத்திற்கு வந்துவிடுவதுபோல், ஆசிரியர் மாணாக்கன் அறிவைப் பற்பல சாஸ்திர உவமான உபமேயங்களினுதவைக்கொண்டு ஞானுனந்த சமுத்திரத்தில் முழுக்கச்செய்யினும் அவர் போதனை நீங்கிய அக்கணத்திற்றானே விடய இச்சையாற் பகிர்முகத் தாராய்ச்சியிற் சிக்கி வருந்துவான். சரீரமானது, பலவிதமான சுகந்தப்பொடி, சந்தன முதலிய களபங்களினுதிகவாற் பரிமளிக்கச்செய்து, தில்பமான வாசனைநீரில் ஸ்நானஞ் செய்து, பரிசுத்தப்படுத்தி வைக்கப்பெற்றாலும்; மீண்டும் வேர்வையாதிகளால் துர்க்கந்தம் வீசுதல்போன்று ஆசிரியர் பிடன்

மனத்தை ஞானேந்திரத்தாற் பலதடவைகளிலுஞ் சுத்தப்படுத்தி வைத்தாலும் மீண்டும் மும்மலாதிகளின் விடய ஆர்க்கர்த்தத்திற் பொருந்தி வருந்துவான்.

ஒழிவிலொடுக்கம்.

மூலையுண்ணி நீருண்ணு மோட்டெருமை மூடர்
சலமின்றிச் சந்துரைப்பார் தர்க்கர்—பலதாரை
வட்டிலே போலுமவர் மாயோக வாசகத்தைக்
கிட்டினாகங் கிடீர்.

நன்னூல்.

அன்ன மாவே மண்ணெடு ளிளியே
இல்லிக் குடமா டெருமை நெய்யரி
அன்னர் தலையிடை கடைமா ணுக்கர்.

சரற்காலத்து மூங்கிலைக்கண்டு குதூகலித்து நடனமாடும் பசிய கலாபத்தையுடைய மயிலைப்போலவும் நியாகங்கொடுக்கும் செல்வவந்தர்களை ஆராய்ந்து தேடுங் கலிவாணர்களைப்போலவும் நாயகனைச் சிந்தித்துக்கொண்டிருக்குங் குலமகள் போலவும், சூரியனைக்கண்டு இதழ்கள் விரியாநின்ற சரோருகம் போலவும், சந்திரனைக்கண்டு மடலவிழும் நீலோற்பலம் போலவும், தனது குருமூர்த்தியை இடைவிடாமற் சிந்தித்து தரிசித்தமாத்திரத்தில் ஆநந்தபாஷ்பம் சொரிந்து ஆநந்த நிர்த்தனம் செய்பவனே சற்சிடன்.

நான் யார்? எனக்கு ஆசான் யார்? நீங்காத ஜனனமரணங்கள் எனக்கு வந்தது யாதுகாரணத்தால்? நான் எப்போது ஆத்மலாபம் அடைவேன்? என்று தனக்குட்டானே ஆத்மவிசாரத்தையடைந்து, தேனைத்தேடித் திரியும் வண்டினங்களைப்போல் தனது சற்குருமூர்த்தியைப் பலவிடங்களிலும் தேடியலைபவனே சற்சிடன்.

சிவஞானவள்ளல்.

மண்ணுக்கரையாமிவ்வுடம்பை மாற்றவேண்டினமலைகள்
மொண்ணைப்பொதும்பிற்றவை மூதுரனித்தலிடத்தோறும்
உண்ணைக்குருவித்தேகெனைத் தேடிவாடியுயிர்ப்பெறித்து
கண்ணிலருளியொழியாளுய்க் கலங்கிமலக்கிக்கதினனே.

ஒவ்வோர் மனிதரும் அரசன் சமூகத்திலும், இயமன் முன்னிலையிலும் மீறுமல் அடங்கிவிடுவார். அதுபோல், ஞானசிரியர் திருவாக்குக்கு எதிர் வாக்கின்றிப் பாகன்கீழ் யானை அடங்கி அவனிட்டவேலையைச் செய்துமுடிப்பதுபோற் குருமூர்த்தியின் மனோபீஷ்டத்திற்கிணங்கி அடங்கி நடப்பவனே சற்சீடன்.

இரவெல்லாம் சமீபத்திலிருந்து குருபரனது உபயதிருவடித்தாமரைகளே வருடிக்கொண்டிருந்து பகலெல்லாம் சுற்றேவல் புரிந்து; மனம், வாக்கு, காயமென்னும் திரிகரணசுத்தியாக அன்புடன் பணிசெய்பவனே நன்மாணவன்.

சிவஞானவள்ளல்.

குருவாக்கமுதமெனக் கொண்டுவந்தசீடன்
குருவாக்கையன்றி மற்றைக்கொள்ளான்—குருவாக்கால்
உய்க்தோமென்றிந்த வுலகறியப்பன்மூறையும்
சொற்தோமென்றுடித் தொழும்.

ஓற்றுமையில் உடலுக்கு உயிரைப்போலவும், பாதுகாத்தலிற் கண்ணுக்கு இமையைப்போலவும், கடையில் ஊசியும் நூலும்போலவும், சர்ப்பத்தைப் பிடியென்று சொன்னமாத்திரத்திற் பிடிக்கவும், புலியைக் கட்டித்தழுவென்றவுடன் அங்ஙனஞ்செய்யவும், நெருப்பை எடுக்கச்சொன்னால் அவ்வாறு எடுக்கவும், மதகரியின் முன்னே நில்லென்றால் அஞ்சாமல் நிற்கவும், இவனது சித்தம் மஹா! திடச்சித்தமென்று கண்டோர் வியக்துசொல்லும்படியான பரிபக்குவனுக்கு சற்குருமூர்த்தியானவர் ஆத்மஞான நிஷ்டையை உபதேசிப்பார்.

தாயுமானார்.

வஞ்சவேல்கொடு மார்பிலெறியினும்
மிஞ்சவேதழல் மீட்டியெரிக்கினும்
கஞ்சிஞாழல் காகம்மலியினும்
அஞ்சிடாதிவர் ஆனந்தமாவரே.

ஆசிரியர் மாணவனுடைய பரிபாக பக்குவத்தைப் பரிசோதிக்க எண்ணிச் சீடன் பயப்படும்படியாகத் தன்னுலாவது பிறரைக்கொண்டாவது கேவலமான தொழில்களைச் செய்யும்படி

சிவலக்கணம்.

உடற்சார்பு செய்தும், காருண்யமில்லாதவர்போன்று கல் முதலியவைகளால் எறிந்தும், இழிவான சொற்களால் வைதும், மானக் குறைவு தோன்றும்படிச் செய்தாலும்; அவ்வபயத்திலும் குருபத்தி வழுவாமற் பணிபுரிபவனுக்கே சிற்சுகோதயப் பிரம்ம நிஷ்டையை உபதேசிப்பார்.

சிவநேற்பிரகாசம்.

தேசிகரு மாணவர்கள் செய்தியுணர்ந் திடவே
சிறியோரைப் பெரியோர்செய் தொழிலதனிற் செறித்தும்
எளிதாம் பெரியோரை யினமாந் தொழிற்கே
யிசைத்தும்அடித் தும்வைதும் இவ்வாறு செயவும்
கூசியிடா நிட்டபணி செய்துகுரு பத்தி
குறைவிலராய் நம்பினராய்த் தூரோகமென்ப தின்றி
மாசிலராய் மனம்வாக்காற் காயத்தாற் குருவின்
வாக்கியம்பா லனஞ்செயும் மதிமானு மாமே.

அருட்பிரகாசம்.

குருபர னுக்கவன் செஞ்சகம் போலனு கூலத்தனுய்க்
கரசர ணுதியி னேவல்செய் தேதினங் கட்டிமைபோல்
உரிய மனமுதல் யாவையும் காத்தண்மை யாயொருதற்
பரமிவ னேயெனக் காண்பான்சற் சிடன் பகர்திடினே.

தேசிகன் பாற்பற் பலதிக் குணங்கள் செறியினும்
பாசப் பிராந்திக் கிவைதோற் றியவிறை பாலிலையென்
றுசுது பத்தியி னேர்ச்தெவ் விதத்து மவனருளாற்
தேசங் குலவ வளர்ப்போன் சற்சிடன் செறிந்திடினே.

நெருப்பில் நடந்தவர்களும், நீர், நிழலில்லாத கொடிய பாலவனத்திற் செல்பவர்களும், குளிர்ந்த ஜலத்தைத் தேடியலைவார்கள். அதுபோற் சற்சிடனுனவன் உலகவியாபாரமாகிய வெப்பத்தைச் சகித்தற் கியலாது, குருமூர்த்தியாகிய கருணைத் தேவ விருட்சத்தின் நிருவடி நீழலைத் தேடிக்கண்டு வணங்கிப் புகழவேண்டும்.

சிவஞானவள்ளல்.

கண்டான் குருவைக் கண்ணுறக் கதறிவீழ்ந்தான் கமலமிசை
அண்டா வரனே! கெடுமாலே! அயனே! என்று னகமகிழ்ந்தான்
தொண்டா லியலும் பணிசெய்யத் துணிந்தான் பணிந்தான் மும்முறையே
புண்டால் நிறைத்த பிரானுங் காவாயென்னப் பாடினனே.

அஸ்தினபுரியில் இராச்சியபரிபாலனம் புரிந்த திருதராஷ்டிர மஹாராஜனது நூறு புத்திரர்களாகிய கௌரவர்கட்கும், பாண்டுமஹாராஜன் புத்திரர்களாகிய பஞ்சவர்கட்கும், துரோணாசிரியர் வில்வித்தை கற்பித்து வந்தார். அவ்வித்தையைக் கற்றுக்கொள்ள அநேகர் ஆர்வங்கொண்டார்கள். அவர்களில் வேடஜாதியில் தலைமையுண்ட ஓர் சிற்றரசனது செல்வக்குமாரனாகிய ஏகலைவன் என்பவனும் கற்றுக்கொள்ள எண்ணி, துரோணரையடுத்து, அதைத் தனக்குக் கற்றுக்கொடுக்கும்படி வணங்கிக் கேட்டுக்கொண்டான். அவனுக்குக் கற்றுக்கொடுப்பது முறையன்றெனக் கருதி, தனக்கு அவகாசமில்லையென்று துரோணர் சொன்னார். அதனால் ஏகலைவன் மனச்சோர்வடையாமல் அவருக்குச் சாஷ்டாங்கதண்டஞ் சமர்ப்பித்து, அவரது உபய திருவடிகளைத் தன் நேத்திரங்களில் ஒத்திக்கொண்ட பின்னர் விடைபெற்றுத், தனது ஏகாந்தஸ்தானத்திற்குச் சென்று, அங்கோர் சிலம்பக்கூடம் நிறுமித்து, அதில் துரோணரைப்போன்ற விக்கிரகம் ஒன்று ஸ்தாபித்து, தினந்தோறும் அதை வணங்கி, வில்லைக் கையிற்பிடித்து ஆசிரியர் தனக்குக் கற்பிப்பதுபோல் மானசமாகப் பாவனைசெய்து வந்தான்.

இவ்விதமனமிருக்க; ஒருகால அர்ச்சுனன் தனது வேட்டை நாயுடன் காட்டுக்குச் சென்றான். அந்நாய் அங்கும் இங்கும் ஓடித்திரிந்து, முடிவில் ஏகலைவன் சிலம்பக்கூடத்திற் புகுந்து, துரோணவிக்கிரகத்தை அசுத்தப்படுத்திவிட்டது. அவ்வளர்ந்த ஏகலைவன் சினங்கொண்டு தர் அஸ்திரத்தை அந்த நாயின் மேற் பிரயோகித்தான். அந்த ஒரே அம்பு நாயின் சரீரமெங்கும் ஊடுருவிச் சல்லடைக்கண்போலாக்கி, முடிவில் அதன் வாயின் வழியாய் வெளிவந்தது. அவ்வருத்தத்தைச் சகிக்காமல், அந்த நாய் அர்ச்சுனன் சமூகத்தை யடைந்தது. அதைக்கண்ட அர்ச்சுனன், தன் நாய்படும் அவஸ்தைக்காக வருந்தியதுமன்றி, ஒரே அம்பு உடலெங்கும் பாயும் வித்தையை, நமக்கன்றிப் பிறர்க்குப் போதிப்பதில்லையென்று கூறியிருந்த நமதாசிரியர், நம்மைவஞ்சித்து மற்றொருவருக்கும் கற்றுக்கொடுத்திருக்கிறார் என்பது,

இந்த நாயின் மூலமாய் விளங்குகின்றதல்லவா? ஆயினும் இத னுண்மையை முற்றிலுங் கவனிப்போம் எனக்கருதித், தனது நாயுடன், ஏகலவன் இருப்பிடத்தை நாடிச்சென்றான். அர்ச்சு னன் வரவை ஏகலவன் கண்டு, எதிர்சென்று வணங்கி, ஓர் ஆச னத்தில் அமர்த்தி, நடந்தவைகளை மிகுந்த பணிவுடன் ஆதியோ டந்தமாய்ச் சொன்னான். அதைக் கேட்டுப்போய் அருச்சுனன் துரோணருக்கு அறிவித்தான். உடனே துரோணர், ஏகலவனிட த்திற்கு வந்தார். அவர் வரவைக்கண்டு ஏகலவன் அடங்கா மகிழ்ச்சிகொண்டு, எதிர்சென்று பன்முறை வணங்கி, ஓர் சிறந்த ஆசனத்திலிருத்திக் கைகட்டி, வாய்புதைத்து நின்றான். துரோ ணர் ஏகலவனை நோக்கி, நீ! எவ்விதமாய் இவ்வித்தையைக் கற்றுக்கொண்டாய்? என வினவினார். அவரிடத்திலும் ஆதியோ டந்தமாய்ச் சவிஸ்தாரமாகச் சொல்லிக், குருதட்சணையும் சமர் ப்பிக்க விரும்புகிறேன்? தேவரீர் விருப்பம் எவ்வாறென்று விண் ணப்பித்து நின்றான்.

துரோணர் அர்ச்சுனனது நாண்டுதலின்பேரில், அவனது வலதுகைப் பெருவிரலைத் தட்சணையாகக் கேட்டார்; ஏகலவன் முன்பின் ஆலோசிக்காமல், அவ்வாறே கொடுத்து வணங்கினான்.

ஆகையால் முத்தியைக்கருதி ஞானசிரியரை அடையவிரும் பும் பக்குவிகளாகிய மாணவர்கள், ஏகலவன் பக்தியைத் தத் தம் மனதிற் பசுமரத்தாணியைப்போற் பதிய வைக்கவேண்டும்.

தலைப்பாசுரத்தோடை.

தந்தைக்குதவுந் தனிமகன்போல, வீந்தைக்களத்தின் மேதகவெய்தியும்
தலைவனைவிழையுந் தலைமகன்புரையக், கலைவலாசானைக் கண்டுகளிதிறந்தும்
உருவவிட்டகலா வெண்ணிழலொப்பக் குருவைபடுத்துக் குற்றேவல்செய்தும்,
பரமனைவழிபடுமே பத்தன்மானக் குரவனைமனத்திற் கொண்டுதுதித்தும்,
கார்பெயச்செழிக்குங் கழனிகடுப்ப ஏர்பெறுமவன்சொல் யினிதமைத்தும்,
அரசற்கிறையிடு மவன்குடியினையப் பரசுபுரற்பதம் பைம்பொன்கொடுத்
மன்னுநன்மாணவன் என்ன வகுத்தன ரியல்புணர்ந்தோரே. [தும்

விராகமம்.

அடுத்தநின் றன்மை யான்மா வாகுமென் றறிந்து கல்லோர்
நடித்திடுஞ் சமய வாத கற்றவஞ் செபந்தி யானம்
படிற்றுல கியற்கை யாவும் பாசநி லைக்கா மென்றே
விடுத்தருட் குரவன் பாத மேவிமெய்ப் பணிசெய் வாரே.

சிவஞானவள்ளல்.

காசிவாஞ்சியங் காளத்தி கழுக்குன்றங் காஞ்சி
மாசிலாருறை பருப்பதங் கோகன மறைக்கா
டேசிலாதுறை மூர்த்திதத் தெரிசன மெல்லாக்
தேசென்றிருச் சேவையை நிகர்க்குமோ செப்பில்.

நன்னூல்.

அழலினீங்கான் அணுகான்அஞ்சி நிழலினீங்கான் நிறைந்தநெஞ்சமோடு
எத்திறத்தாசா னுவக்குமத்திறம் அறத்தின்றியாப் படர்ச்சிவழிபாடே.

ஆசாரியனிடத்திற் பத்தி விசுவாசமும், தாழ்மையும், சிட னுக்கு இல்லாவிடின்; அந்தச் சிடனுக்கு ஞானேதயமாவது துர் லபம். ஓர் எழுத்தாகினும், ஓர் சொல்லாகினுங் தனக்கு உபதே சித்தவரைச் சற்குருவாகப் பாவித்துத் திகிகரண சுத்தியாக வணங்கித், தன்னையேன்ற ஒத்தாசைகளுஞ் செய்து வழிபட வேண்டும். அவர் நீங்கியகாலத்தினும், மனத்தில் மானதமாகச் சிந்திக்கவேண்டும். அங்ஙனமின்றி, அவர் மனது நோகும்படி நடந்துகொண்டால், வேறெந்தக் குருவினாலும் அதுக்ரகிக்கப் பெறுமல் பிறவித்துன்பத்தில் வருந்துவான்.

திருமந்திரம்.

ஒருமுத் தொருபொரு ளுணரக் கூறிய
திருமுத் தாளரைச் சென்னியச் செப்பினேர்
யிருடைச் சுணங்களுப்ப் பிறந்தங் கோருகம்
பாரிடைக் கிருமியாய்ப் படிவர் மண்ணிலே.

மந்திர மோரெழுத் துரைத்த மாதவர்
சிந்தையில் சொற்கிடத் தீமைகள் செய்தவர்
துக்கிய சுணங்களுப்ப் பிறந்து நாறுரு
வங்கிடும் புலையராய் மாய்வர் மண்ணிலே.

ஆண்டா னடியவர் யார்க்கும் வீரோதிகள்
ஆண்டா னடியவ ரையமேற் றுண்பவர்
ஆண்டா னடியாரை வேண்டா தபேசினேர்
தாக்தாம் வீழ்வது தாழ்வா ராகமே.

சரியை.

நான்காவது அத்தியாயம்.

ஞானமென்னும் வீட்டிற்கு, சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்று முதன்மையான படிகள் உண்டு. அப்படிகள் ஒவ்வொன்றிற்கும் உட்படிகள் நான்குபடிகள் வீதம் உண்டு. அவை பின்வருமாறு:—

சரியை:—சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் என நான்குபடிகள்.

சரியையிற் சரியை:—கோவில், பள்ளிவாசல் முதலியவற்றிற்குத் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், (விதானம்) மேற்கட்டி கட்டுதல், தோரணம் நாட்டுதல், தூபமிடுதல், கந்தவனம் வைத்தல், பூக்கொய்தல், மாலை தொடுத்தல், (மக்கா, மதீனா,) காசி, இராமேச்சுரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரைசெய்தல், நதிகளில் மூழ்குதல், ஆலயப்பிரதக்ஷணஞ்செய்தல், தோத்திரம் பாடல், புல்லுச் செதுக்குதல், திருக்குளமுதலியவை சுத்திசெய்தல், பசுக்காத்தல் முதலியன.

சரியையிற் கிரியை:—சந்திரசேகரர் முதல் இலிங்கோற்பவர் ஈறுகவுள்ள இருபத்தைந்து மூர்த்தங்களுள் ஒன்றையாகிலும், விநாயகக்கடவுள், முருகக்கடவுள் என்னும் ஆவரணமூர்த்திகளில் ஒன்றையாகிலும் வழிபடுதலாம்.

சரியையில் யோகம்:—இருதயத்தில் ஒரு சொரூப பாவனையைத் தியானஞ்செய்தல்.

சரியையில் ஞானம்:—அந்தத் தியானபாவனையின் முதிர்ச்சியினுல் ஓர் அனுபவவுணர்வு நிகழ்தல்.

சரிதையை வேதாகமங்களிற் கூறிய விதிப்படி ஒருவன் தவறுமற் செய்தாலும், அவன் செய்வதிற் பல *சங்கற்ப மனதடையவனுஞ் சரிதையை ஒருங்கே முறைப்படி புரிந்தவனுகமாட்டான். தனக்குக் கிடைத்ததை மனேநிருப்தியாகச் செய்து கடவுளுக்கு அர்ப்பணம் எவன் பண்ணினனே? அவனே, அச் சரிதைக் குடையவனுவான்.

---

* சங்கற்பம் - விருப்பம்.

கிரியை.

ஐந்தாவது அத்தியாயம்.

கிரியை:—கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம் என நான்கு படிகள்.

கிரியையிற் சரியை:—பூசைக்கு வேண்டப்படும் உபகரணங் களைச் செய்துகொள்ளல்.

கிரியையிற் கிரியை:—* சித்சத்தி, † பராசத்தி, ‡ இச்சாசத்தி, §ஞானசத்தி, ¶கிரியாசத்தி என்னும் பஞ்சசத்திகள் மூன்னிலையிற் சிவலிங்கவடிவிற் செய்யும்பூசனை.

கிரியையில் யோகம்:—அகத்தினிடத்தே, பூசை, ஓமம், தியா னம் என்னும் மூன்றற்கும் மூவிடம் வகுத்துக்கொண்டு செய்யும் அத்தரியாகம்.

கிரியையில் ஞானம்:—அந்த அத்தரியாக உறைப்பின்கண் நிகழும் ஓர் அநுபவவுணர்வு.

கிரியையை விதிப்படி செய்கின்றவன் தான் பூசிப்பதிற் குறைவு நிறைவு வருங்கால் இதாகிதமாகிய சித்தத்தை யுடையவனலனும், கிடைத்தமட்டும் பூசித்துத் திருப்தியடைந்து அப்பூசையி னிடத்திற் காமிய மனதுடையவனலனும், கிரியா மார்க்கத்தை முற்றுந்தெரிந்து பிறருக்கு உபதேசிக்கத்தக்கவனலனும், அவன் அக்கிரியைக்குப் பாத்திரவானகமாட்டான். எவன் நிட்காமிய மனத்துடன் ஆராதனை பண்ணுகிறானோ? அவனே! அக்கிரியா பூசையிற் சிறந்தவனுவான்.

யோகம்.

ஆறவது அத்தியாயம்.

யோகம்:—யோகத்திற் சரியை, யோகத்திற் கிரியை, யோகத் தில் யோகம், யோகத்தில் ஞானம் என நான்குபடிகள்.

யோகத்திற் சரியை:—இயமம், நியமம், ஆதனம், பிராண யாமம் என்பன.

---

* சித்சத்தி, உயிர்க்கொளியாக நிற்பது. † பராசத்தி, பிராணன் முத லிய வாயுக்களாக நிற்பது. ‡ இச்சாசத்தி, பஞ்பூதமாக நிற்பது. § ஞான சத்தி, பஞ்சேந்திரிய வுணர்ச்சியாக நிற்பது. ¶ கிரியாசத்தி, இதரவினை கட்குத்துணையாகநிற்பது.

யோகத்திற் கிரியை:—பிரத்தியாகாரம், தாரணை என்பன.
யோகத்தில் யோகம்:—தியானம்.
யோகத்தில் ஞானம்:—சமாதி.

அஷ்டாங்கயோக விதிப்படி துறவறத்தைப் பொருந்தி, சரீரத்தை மெலிந்து வாடச்செய்து, கற்பகாலம் தியானநிட்டையைப்புரிகின்ற யோகீஸ்வரனும், அவன் யோகமுடிந்தவனுகான். எவன் தனது தியானசமாதியில் வைத்திருக்கிற சித்தம் வேறுபட்டவியாமற் பரிசுத்தம்பொருந்தி, அவ்விடத்திற் பொருந்தியதே! *சாட்சாத்காரமென்று உண்மையாகக் கருதுகின்றனை அவனே பரமயோகியென்னும் கடவுள் தன்மையுடையவனுவான்.

ஞானம்.

ஏழாவது அத்தியாயம்.

ஞானம்:—ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என நான்குபடிகள்.

ஞானத்திற் சரியை:—ஆசிரியரிடம் உபதேசங்கேட்குதல்.

ஞானத்திற் கிரியை:—அங்ஙனங் கேட்டதைச் சிந்தித்தல்.

ஞானத்தில் யோகம்:—அவ்வுபதேசத்தை ஐயத்திரிபறத்தெளிதல்.

ஞானத்தில் ஞானம்:—தெளிந்தபின் நிஷ்டைகூடல்.

சகலமும் பிரம்மமயமாகச் சுருதி, குரு ¶சுவானுபவத்தால் நோக்குகின்ற ஆத்மஞானி, பிராரத்துவ வசத்தில் அணுவளவும் பேதமில்லாமற் சுயஞ்‡சைதன்யமாகப் பிரகாசிக்கின்ற மனதுடன் விளங்குவாராகில், அவரே மேலான பரமஞானியாகும்.

மேற்கூறிவந்த யோகத்திற் சரியையாகிய இயமம், நியமம், ஆசனம், பிராணுயாமம் என்னும் நான்கின் விபரமும், யோகத்திற் கிரியையாகிய பிரத்தியாகாரம், தாரணை என்னும் இரண்டின் விபரமும், யோகத்தில் யோகமாகிய தியானத்தின் விபரமும், யோகத்தில் ஞானமாகிய சமாதியின் விபரமும், பின்வரும் அஷ்டாங்கயோக அத்தியாயத்திற் பார்த்துணர்க.

---

* சாட்சாத்காரம், பரிவீசரணுகிட் செல்லாஞ் சர்ட்சியாயிருக்கின்ற சுயம்புவாயிருப்பது. ¶சுவானுபவம், சொந்த அனுபவம். ‡சைதன்யம், சர்வேந்தரியாமியாகிய கடவுள்.

அஷ்டாங்கயோகம்.

எட்டாவது அத்தியாயம்.

அஷ்டாங்கயோகம்:-இஃது எட்டுவிதயோகம்: அதனாலேயே அதற்கு அஷ்டாங்கயோகம் என்று சொல்லப்படுகிறது. அவை இயமம், நியமம், ஆதனம், பிராணுயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பனவாம்.

இயமம்:-எவ்வுயிரையும் கொல்லாதிருத்தல், சத்தியம் தவறுமல் உண்மைபேசுதல், பிறர்பொருளைக்கவராதிருத்தல், பிறர்மனை வியரையும் பொதுமகளிரையும் விரும்பாதிருத்தல், சகலவுயிர்கள்மீதும் கருணைபாலித்தல், வஞ்சகமில்லாதிருத்தல், பொறுமையுடைத்தாயிருத்தல், துன்பம் வந்தகாலத்திலும் மனங்கலங்காதிருத்தல், அற்ப ஆகாரம்புசித்தல், சுசிகரமோடிருத்தல், என்னும் பத்துமாம்.

திருமந்திரம்.

கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குண
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத் திடையில்லின் றாமே.

நியமம்:—தவம்புரிதல், மனமுவந்திருத்தல், கடவுளுண்டென்னும் விசுவாசம் வைத்தல், பாவத்திற்குப் பயந்து சம்பாதித்த பொருளைச் சற்பாத்திரமாயுள்ளவர்கட்குக் கொடுத்தல், தன்னில் உயர்ந்தோரைக் கண்டால் வழிபடுதல், உயிர்கட்கு உறுதிபயக்கும் உண்மையான தத்துவநூற்களைக் கேட்டல், குலம், செல்வம், அதிகாரமுதலியவைகளினாற் செருக்கடையாமல் அடங்கியொழுகுதல், தக்கது இன்னதென்றும் தகாதது இன்னதென்றும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்துவிதக் கிருத்தியங்களாம்.

திருமந்திரம்.

தூய்மை யருளுண் சுருக்கம் பொறை செம்மை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
கேமியீ ரைந்து நியமத்த ஞமே.

ஆதனம்: — சித்தாசனம், சிங்காசனம், சுவத்திகாசனம், செளவியாசனம், சூலாசனம், சுகாசனம், சருவதோபத்திராசனம், கோமுகாசனம், கருடாசனம், மயூராசனம், மச்சேந்திராசனம், மற்சாசனம், முற்கராசனம், மண்டூகாசனம், மிருகாசனம், நாகாசனம், குக்குடாசனம், குஞ்சராசனம், கூர்மாசனம், காஷ்டாசனம், கிரவுஞ்சாசனம், கடகாசனம், காமதகனாசனம், யோனியாசனம், வியாக்கிராசனம், வகிகாசனம், வத்திராசனம், வாசவாசனம், வீராசனம், வராகாசனம், பரியங்காசனம், பதுமாசனம், பதாசனம், பச்சிமத்தானாசனம், திரிபதாசனம், அத்தனாசனம், அயிம்மாசனம், அர்த்தாசனம் என முப்பத்தெட்டாசன பேதங்கள். இவ்வாசனங்கள், வசிட்டர், மச்சேந்திரர் முதலிய மகான்களால் எண்பத்துநான்கு ஆசனபேதங்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. அவைகளே எழுதப்புகுந்தாற் சாஸ்திரம் அதிக விரிவாகிவிடுமென் றெண்ணிச் சில யுக்தமான ஆசனங்களின் விபரத்தைமட்டிலும் இதன்கீழ் எழுதலாயிற்று.

இக்காலத்தில் யோகிகள் அநுஷ்டானத்திற் கொண்டுவரப்பட்ட சிறந்த ஆசனங்கள் ஒன்பதுவகை. அவை சுவத்திகம். கோமுகம், பதுமம், வீரம், கேசரி, பத்திரம், முத்தம், மயூரம், சுகம் என்னும் ஆசனங்களாம். அவை பின்வருமாறு:—

சுவத்திகாசனம்: — தொடைக்கும் முழங்காளுக்கும் மத்தியில் இரண்டுபாதங்களையும் செலுத்திச் சரீரத்தை நிமிர்ந்திருக்கவைத்து இருமாப்புற்றிருத்தல்.

கோமுகாசனம்:—ஆசனபக்கத்தில் இரண்டுகாலில் பரட்டையும் மாறவைத்து இரண்டு காற்பெருவிரலையும் கையினும் பிடித்துக்கொண்டிருத்தல். இவ்வாசனம்மூலபந்தத்தால் அபான சித்தியைத் தருவதுடன் பகந்தரமென்னும் குதநோயையும் தவிர்க்கும். இது, கோமுகம்போன்றிருப்பதாற் கோமுகாசனமெனக் கூறப்படுகின்றது.

பதுமாசனம்:—வலது பாதத்தை இடது தொடையின்மீதும், இடதுபாதத்தை வலது தொடையின்மீதும் வைத்து இரண்டு பாதங்களையும் ஆகாயத்தைப்பார்க்கும்படி வைத்திருப்பது.

வீராசனம்:—வலதுபாதத்தை இடதுதொடையிலும் இடது பாதத்தை வலதுதொடையிலும் வைத்து இருமாப்புற்றிருத்தல்.

சிம்மாசனம்:—பரடுகளிரண்டையும் பீசத்தின் கீழ்ப்பாகத்திலுள்ள சரம்பின் இருபக்கங்களிலும் சேர்க்கவேண்டும். அஃதாவது வலப்புறத்தில் இடதுகாற் பரட்டையும் இடப்புறத்தில் வலதுகாற் பரட்டையும் சேர்த்து நாசிதுனியை நோக்கி முழந்தாளிற் கைகளை நீட்டியிருத்தல்.

பத்திராசனம்:—பீசத்தின்கீழ் ஆசனப்பக்கத்தில் இருகாற் பரட்டையும் வைத்து இருகாலையும் இருகரத்தாலிறுகப் பிடித்து அசையாது முழந்தாளிற் கைகளைநீட்டி யிருமாந்திருத்தல்.

முத்தாசனம்:—இடக்காற்பரட்டினுல் சிவனியை அழுத்தி வலக்காற் பரட்டை இடக்காற்பரட்டின்கீழ் உந்தவிருத்தல்.

மயூராசனம்:—முழங்கையிரண்டும் உந்திப்புறத்தில் அழுந்தப் புவியிற் கையைபூன்றிக் காலைநீட்டித் தலைநிமிர்ந்திருத்தல்.

சுகாசனம்:—சுகமுந் திடமும் எவ்வாறிருக்கின் எய்துமோ அவ்வாறு இருத்தல்.

நிருமத்திரம், பதுமாசனம்.

நர னைப்பத மூருவின் மேலேறிட்
டார வலித்தன் மேல்வைத் தழகுறச்
சீர்திகழ் கைக ளதனைத்தன் மேல்வைக்கப்
பார்திகழ் பத்மா சனமென லாகுமே.

பத்திராசனம்.

தரிசில் வலக்காலைத் தோன்றமேல் வைத்து
அரிய முழந்தாளி லங்கை களைநீட்டி
உருகி யிடமுடற் செவ்வே யிருத்திப்
பரிசு பெறுமது பத்திரா சனமே.

சிங்காசனம்.

பாத முழந்தாளிற் பாணி களைநீட்டி
ஆதர வோடும்வா யங்காற் தழகுறக்
கோதில் செனக் கொடிமூக்கி லேயுறச்
சீர்திகழ் சிங்கா தனமென லாமே.

மேற்சொல்லிவந்த உசிதமான சுவாதனங்களாற் பற்பலவியாதிகள் வராமல் தடுக்கப்படுகின்றது. இதற்காகவே; ஆசனங்களே அவசியமென்று முன்னோர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பிராணயாமம்:—இஃது பிராணவாயுவை பூரக, கும்பக, இரேசகஞ்செய்தல்; இதன் விபரம் பிராணயாமயோக அத்தியாயத்தில் பார்த்து கண்குணர்க. அதற்கு உதாரணம்.

திருமந்திரம்.

வளியினை வாங்கி வயத்தி லடக்கிற்
பளிங்கொத்துக் காயம் பழுக்கினும் பிஞ்சாம்
தெளியக் குருவின் றிருவருள் பெற்றால்
வளியினும் வேட்டு வளியனு மாமே.

ஏற்றி யிறக்கி யிருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்குங் குறியது மாமே.

பிரத்தியாகாரம்:—உபாதியை நீக்கி உள்நோக்கல்.

திருமந்திரம்.

நாபிக்குங் கீழே பன்னிரண் டங்குலந்
தாபிக்கும் மந்திரந் தன்னை யறிகிலர்
தாபிக்கும் மந்திரந் தன்னை யறிந்தபின்
கூவிக்கொண் டீசன் குடிபுகுந் தானே.

மூலத் திருவிரல் மேலுக்கு மூன்றின்ற
பாலித்தயோனிக் கிருவிரற் கீழ்நின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே.

நாசிக் கதோமுகம் பன்னிரண் டங்குலம்
நீசித்தம் வைத்து நினையவும் வல்லீரேல்
மாசித்தி மாயோகம் வந்து தலைப்பெய்தும்
தேகத்துக் கென்றுஞ் சிதைவில்லை யாகுமே.

மூலத் துவாரத்தை முக்கா லிட்டிரு
மேலத் துவாரத்தின் மேல்மனம் வைத்திரு
வேலொத்த கண்ணே வெளியில் விழித்திரு
காலத்தை வெல்லுங் கருத்திது தானே.

தாரணை:—கண்டம், இதயம், நெற்றி, கபாலம், நாபி இவை களொன்றிற் சதா சிந்தை வைத்திருத்தல்.

நிருமந்திரம்.

கோளு மனத்தைக் குறிக்கொண்டு கீழ்க்காட்டி
ரோளுத்தண் டோடே வெளியுறத் தானேக்கிச்
சாளுக்கண் கோளாச் செவியென் றிருப்பார்க்கு
வாளு ளடைக்கும் வழியது வாமே.

தியானம்:—பஞ்சேந்திரியங்களை அடக்கி யோகஞ்செய்தல்.

ஏன மிரண்டும் நாசிமேல் வைத்திட்
டுயர்விழா வாயுவை யுள்ளே யடக்கித்
தூயரு ரோடியே தூங்கவல் லார்க்குப்
பயனிது காயம் பயமில்லைத் தானே.

ஈடலித்த நாபிக்கு நால்விரல் மேலே
மடலித்த வானிக் கிருவிர லுள்ளே
கடலித் திருந்து கருதவல் லார்கள்
சடலித் தலைவனைத் தாமறிந் தாரே.

சமாதி:—இந்திரிய முதலிய தத்துவச் சேட்டைகட்கு ஏது வாகிய யாக்கையுள் நின்று, அவற்றோடு கூடினும் அவற்றிற் பற் றின்றியிருக்கும் ஆன்மாவாகிய தன்னைத்தான் காணுதல்.

சமாதிசெய் வார்க்குத் தரும்பல் யோகம்
சமாதிகள் வேண்டா மிறையுட னேகிற்
சமாதிதா னில்லைத் தானவ னுமிற்
சமாதியி லெட்டெட்டுச் சித்தியு மெய்துமே.

மேற்சொல்லிவந்த சரியை, கிரியை, யோகம் என்னும் மூன்றும், ஞானமென்னும் வீட்டிற்கு உதவியான படிகளென்று முன்னமே சொல்லியிருக்கின்றோம். அல்லவா?

ஒவ்வோர் படியாகப் படிகளைக்கடந்து வீட்டிற்குள் பிரவே சித்தாலன்றி வீட்டுக்குள்ளிருக்கும் பொருளைக் காணமுடியாது. படிகளில் ஏறிய மாத்திரத்தினாலேயே வீட்டுக்குள்ளிருக்கும் பொருளைக் கண்டு கொண்டதாகப் பாவிக்கிறவனுக்கு யாது பிர யோசனமுண்டாகும். அதுபோற் சிலர் சரியை, கிரியைகளைத் தன் ஆயுள் வரையிலும் புரிந்துகொண்டிருப்பதனாலேயே சாயுச் யம் அடைந்துவிடலாமென அபிப்பிராயப்படுகிறார்கள். அவர்

கள் அவ்வாறு பகற்கனவுகண்டு மனப்பால் குடித்துக்கொண் டிருக்க, ஞானிமார்கள் பின்வருமாறு கூறியிருக்கின்றார்கள்.

பிரமகீதை.

சரிதையாதி யொருமூன்றுஞ் சவபானங்கள் பயனில்லே
அரியும்பிரம ராளுலும் அறிதற்கரிய தாரணங்கள்
உரையுமில்லே முடிவறியா வொன்றுய்கின்ற தனிஞானப்
பொருளாயிருளும் வெளியுமிலாப் போதமருளிக் களியென்றன்.

சிவஞானதீபம்.

சாத்திரம்புத் தகம்பூசை சமயமதந் தருக்கம்
தந்திரமந் திரயோகந் தவிரதஞ் லேம்
ஏத்தரிய பாவனையெண் சித்திகளே முதலாம்
எப்பயனும் முத்திலிலக் கெனவொருசொல் லதனல்
தீர்த்தவன்மெய்த் தேசிகனும் அவனருளால் அகலாச்
சித்தமல மறுத்துலகிற் றீமைகன்மை செயினும்
வாய்த்தகதி ரவன்செயல்போல் இசைத்திசையா தொழுகும்
வண்மையரே மெய்ஞ்ஞான வண்மைநிலே யினரே.

பிரபுலிங்கலீலே.

உரைசெயிற் பரம ஞானம் ஒன்றுமே முத்திக் கேது
சரியைகற் கிரியை யோகந் தாமொரு மூன்றும் ஞானம்
மருவுதற் கேது வென்று மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவ ரன்றே.

பிறப்பொரு கோடி பிறந்து பிறந்து
புறக்கரு மங்கள் புரிந்திடி னும்பொய்
மறப்புறும் ஆணவ வல்லிரு ளின்றிச்
சிறப்புறு முத்தி செறிந்திடு வாரோ.

மரிப்பொ டெழிப்பு மறிக்குது மென்று
கருத்தை வெளிக்கரு மத்தில் விடுத்து
விரிக்குதல் செய்யை விடுத்தெரி கின்ற
சொருப்பை யவிப்ப தினைப்பதை யொக்கும்.

தாயுமானவர்.

பத்திமெறி நிலைநின்று ஞானகண்ட மூமிப்
பரப்பைவலு மரிகவர்ந்தும்
பரவையிடை மூழ்கியும் கதிகளிடை மூழ்கியும்
பதிதாக மின்றியெழுநா

மத்தியிடை நின்றுமுதிர் சருகுபுனல் வாயுவினே
வன்பசி தனக்கடைத்தும்
மௌனத் திருத்துமுயர் மலைதுழைவு புக்கியும்
மன்னுதச காடிமுற்றும்
சுத்திசெய் தும்மூல ப்ராணனே டங்கியைச்
சோமவட் டத்தடைத்தும்
சொல்லரிய அமுதுண்டும் அற்பவுடல் கற்பங்கள்
தோறும்கிலே கிற்கலீறு
சித்திசெய் தும்ஞான மலதுகதி கூடுமோ
சித்தாந்த முத்திமுதலே
செகிரி விளங்கவரு தட்சணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே.

ஓர் சிறிய குழந்தையானது, மண் முதலியவைகளைத் தின்று, அதனால் மார்த்தம்முதலான வியாதிகள் சம்பவிக்க, அதையுணர்ந்த தாயானவள் மனமிரங்கி இஞ்சிச்சாறு, வேப்பஞ்சாறு முதலிய ஔஷதப் பிரயோகஞ்செய்ய எத்தனிக்கையில், அம்மருந்தின் அருமையை அறியாத அக்குழந்தை பயந்து வெளியில் ஓடிப் போக மாதாவானவள் வாழைப்பழம் முதலிய தின்பண்டங்களைக் காட்டி, என் கண்ணே?! என் செல்வமே?! இங்கே ஓடிவா? மிட்டாய் தருகிறேன்! கடலை தருகிறேன்! என்று குழந்தையை எமாற்றிக் கூப்பிட்டுப் பிடித்து மருந்தைப் புகட்டுவாள். அதுபோல் அறிவில்லாத சிறிய மதலைப்பிள்ளையை நிகர்த்த இப்பிரபஞ்சத்தார் மாயாரூபமாகிய இவ்வநித்தியப் பிரபஞ்சத்தையே சத மென நம்பியிருப்பவர்களாதலால் அவர்களுக்கு வண்டிச்சக்கரம் போல் மாறிமாறி வரும் பிறவிநோய்க்கிரங்கி மகான்களானவர்கள் ஞானபோதகமென்னும் மருந்தைச் செவியென்னும் வாயின்வழியே புகட்ட எண்ணினால்,

தணிகைமணி.

நஞ்சுண்ணு மாப்போலும் நாத னருள்பெறவென்
நெஞ்சேநீ புண்ணுப் நினைப்பதேன்—அஞ்சாதே!

என்னும் வாக்கியம்போல் ஞானமானது வேப்பங்காயிலும் கசப்பாக அவர்களுக்குத் தோன்றுகின்றது. நாக்குப்பூச்சியை தூண்

டிலிற்போட்டு பெரிய மீன்களைப் பிடிக்க எத்தனிப்பதுபோல் வாழைப்பழம் மிட்டாய்போன்று தித்திப்பதாகிய இவ்வுலக வியாபாரத்தையுஞ் செய்துகொண்டு அத்துடன் இன்னின்ன கருமங்களையுஞ் செய்துவா எனச்சொல்லியது எதற்காகவென்றால் ஞானமென்னும் மருந்தைத் தந்திரமாகப் புகட்டுவதற்கேயன்றி வால்தவத்தில் யாகாதி கருமங்களைச் செய்வதற்கல்லவென்னுங் கருத்தையடக்கி,

கைவல்ய நவநீதம்.

தினமும் மண்ணுகர் பின்னோய்க் கொல்லியே தீம்பண்ட மெதிர்காட்டிக்
கனம குந்துகள் ஒழித்துவைத் தழைக்கின்ற கருணையாய் தாய்போல
மனைய றங்கள்செய் மகங்கள்செய் ரன்றென்று மலர்த்தவா சகஞ்சொல்லு
நினைவு வேறுகாண் சுவர்க்கா மினைத்த நிர்ணயத் தெரியாரே. எனவும்,

சிவஞானவள்ளல்.

ஆல யத்தொழு அறத்தலை நிறப்புகல் லருச்சனை புரியென்றே
ஓல மிட்டுநான் மறையெலா முரைப்பது வுலகரைக் குறித்தன்றே
மூல காரண பரம்பர சூக்கமாய் முழுதையுங் காணென்னுச்
சில மூற்றிய அறிஞரைக் குறித்துரை செய்ததம் மறையன்றே.

எனவுங்கூறுகின்றது.

"வண்ணுனிடத்தில் வஸ்திரத்தைப் போட்டுவிட்டுக் கோக்குப் பின்னே ஓடியலைந்தான்" என்ற பழமொழிபோல் ஒருவன் தன் வீட்டிற்குள் அலமாரி பீரோவ் முதலிய எவ்விடங்களிலாவது ஓர் வஸ்துவை வைத்து மறந்துவிட்டு அப்பொருளை வயல், வாய்க்கால் முதலிய விடங்களில் தேடியும் காணப்பெறாமல் யோசித்துப்பார்த்து மறதி நீங்கி நினைப்பு வந்தவுடன் தான் வைத்த விடத்திலிருந்து எடுத்துக்கொள்வதுபோல் ஞானமென்னும்பொருளைப் பிரபஞ்சமாயையென்னும் இராக்காலத்திற்றோட எண்ணினால் அறிவென்னுந் தீபத்தைக் கொளுத்திப் பிரகாசிக்கச்செய்து மறதியென்னும் இருளை நீக்கிப்பாராமல், இருட்டிலே பொருளைத் தேடுவதுபோன்ற பல புறக்கருமங்களைப் புரிவதனால் ¶சாயுச்யபதம் எங்ஙனம் கிடைக்கும்.

¶ சாயுச்ய பதமாவது,—ஞானனத்தில் அறிதப்படுவது. அஃது, சாலோகம், சாமீபம், சாரூபம், சாயுச்யம் என்னப்படும். அவையாவது: மூப்பத்தாறு தத்துவங்களையும் நியதிகளையும் சரியை; அவற்றை ஈன்

கைவல்ய நவநீதம்.

மனைக்குள் வைத்தபண் டங்களே மறந்தவன் வருடநு றழுதாலும்
தினைத் தனைர்ச்சபின் கிட்டுமப் படியிச்ச தின்மல வான்மாவும்
அரர்த்த மானதன் மறதியைக் கெடுக்குந்தன் அறிவினுற் பாராமற்
கனத்த கர்மங்கள் நூறுகள் செய்யினுங் காணுமோ காணுதே.

பிராணயாம யோகம்.

ஒன்பதாவது அத்தியாயம்.

பிராணனைத் தன் வசப்படுத்தியாள்வதனால், சுவாசபக்தனத் திற்குப் பிராணயாமம் என வழங்கப்படுகின்றது; இது பூரகம், கும்பகம், இரேசகம் என மூன்றுவகை.

பூரகம்:— வெளியிலுள்ள வாயுவை நாசித்துவாரத்தின் வழி யாகத் தன் உடலுக்குள் 16 * மாத்திரை நேரம் வரையில் சீர அசைவின்றி இழுத்துவாங்குவது.

கும்பகம்:— உள்ளுக்கிழுத்த வாயுவை வெளியில் விடாமல் 64-மாத்திரைநேரம் நிறுத்திவைப்பது.

இரேசகம்:—கும்பித்த (உள்ளுக்கிழுத்து நிறுத்திய) வாயுவை 32-மாத்திரைநேரம் மெல்லமெல்ல வெளியில் விடுவது.

கறித்து நீங்கிய தன்னே அருனாலறித்து அவற்றின் முடிவில் நிற்பது சா லோகபதம். ஆங்கு தனக்கறிவித்த அவ்வருளைத் தெரிசித்து அதன்பின், அருள்வேறென்றும் தான்வேறென்றும் பகுத்துநோக்காமல் தற்போதத் தை அடக்குவது கிரியை; அந்த அருள் வடிவாயிருப்பது சாமீபபதம். அவ் விதமிருந்து கிஞ்சித்நேனும் தற்போதம் வாராதபடி ஒழிப்பது யோகம்; அவ் விடத்தில் மனோன்மணியே தான் என்றிருப்பது சாரூபபதம். அத்தமனோ ன்மணி நீக்கத்தில் உண்டாகும் பேரானந்தத்தைப் பெறுவது ஞானம்; அந்த ஆனந்தத்தில் அதிதப்பட்டுப் பிரகாயோ நிற்பது சாயுச்யபதம்.

* மாத்திரையென்பது. ஒருவர் நித்திரைசெய்யும்போது சுவாச மானது எவ்வளவுநேரம் இயல்லையாய்ச்சென்று நிரும்புகிறதோ? அதுவே பிராணயாமமாத்திரை. இதைக் கண்ணிமைப்பொழுதென்றும் கைக்கொ டிப்பொழுதென்றுஞ் சொல்லிக்கொள்வதுண்டு.

அகஸ்தியர்.

என்னவேரேசகமுப்பத்திரண்டு இயலானபூரகமோபதினாறும்
உன்னவேகும்பமறுபத்துநாலு உயர்த்துகின்றபிராணயங்குருசொற்கேட்டு.

திருமந்திரம்.

எறுதல் பூரக மீரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பக மறுபத்து நாலதி
னூறுதல் முப்பத்தி ரண்டதி ரேசகம்
மாறுத லொன்றின்கண் வஞ்சக மாமே.

வாமத்தி னீரெட்டு மாத்திரை பூரித்தே
யேமுற்ற முப்பத்தி ரண்டு மிரேசித்துக்
காமுற்ற பிங்கலைக் கண்ணுக வில்விரண்
டோமத்தா லெட்டெட்டுக் கும்பிக்க வண்மையே.

ஔவைக்குறள்.

இரேசக முப்பத் திரண்டது மாத்திரை, பூரகம் பத்தாறு புகும்.

கும்பகம் நாலோ டறுபது மாத்திரை, தம்பித் திடுவது தான்.

மேற்கூறிய மாத்திரை அளவின்படி அப்பியாச ஆரம்பத்திற் செய்வது அருமை. ஆதலாற் சதாவேனும்பிலும் காலவரையின்றி, இருக்கும்போதும், நடக்கும்போதும், எனைய சமயங்களிலும் (உண்ணும்போதும் அநுபோக காலத்திலுங்கூட) வாயுவை மெல்லமெல்ல அப்பியாசிக்கவேண்டும். அங்ஙனமின்றித் தொனியுண்டாகும்படிச் சிறிச்சிறி இழுத்துக் கடினமாக ஏற்றினால் வாயுவானது என்றும் வசப்படாது. சிங்கம், புலி, யானை முதலிய துஷ்டவிலங்கினங்களைப் பிடித்து எப்படி காளடைவிற் கொஞ்சங்கொஞ்சமாய் வசப்படுத்துகிறார்களோ? அப்படியே சுவாசத்தையும் சிறுகச்சிறுகச் செலுத்தி வசப்படுத்தவேண்டும். அங்ஙனமின்றி விரைவாகப் பூரித்தால் சிங்கம், புலி முதலியவற்றைப்போல் அப்பியாசியைக் கொல்ல எத்தனிக்கும். யுக்தமாகப் பூரிக்குஞ் சுவாசமானது சிறிய துவாரத்தையுடைய சுழிமுனைவழியாகச்சென்று மூளையைக் கடந்து பிரம்மகபாலத்தைத் தாக்கிப் பிடரிவழியாக முதுகுப்புறத்திலிறங்கி எழுபத்திராயிரம் நாடிகளிலும் சென்று மூலாதாரத்தையடைந்து ஈரற்குலையின்வழியாகத் திருகித்திருகிச்

சென்று, வெளியேறுமல் தசநாடிகளே அவைகளிருக்குமிடத்தை விட்டு அலையும்படிச் செய்வதால் அந்த நாடிகள் வெளிக்கிளம்பிச் சர்ப்பத்தைப்போற் சிறிக்கொண்டு ஓங்காரத்துடன் 25-வது அத்தியாயத்திற் கூறியிருக்கின்றபடி மணி, சமுத்திரம், மேகம், மத்தளம், பேரிகை, சங்கு, கைத்தாளம், வீணை, சிலம்பு, வண்டு முதலிய பத்துவித நாத கீதங்களுங் கேட்கும்படிச் செய்யும்.

விஞ்ஞானதீபம்.

சிறுகச் சிறுக மேல்வாசல் செலுத்தப் பழுத்துச் சூடேறி
உருவி மூலத் தனைத்தாண்டி உனது பிடரி வழியிறங்கி
மருவி மூலந் தனிற்சேர்த்து மாறிக் குலையின் வழியாசத்
திருகித் திருகி யிவ்விதமுட் டிரும்பும் வெளியிற் திரும்பாதே.

பொருத்தமான அப்பியாசத்தால், சர்வரோகங்களும் நாசமாகும். பொருத்தமின்றிய அப்பியாசத்தாற் சகல பிணிகளுஞ் சம்பவிக்கா நிற்கும்.

மிருகங்களே நன்றுப்ப் பழக்கியபின்னரே அதைத் தன் இஷ்டம்போல் 'கோலாடக் குரங்காடும்' என்பதற்கிணங்க ஆட்டிவைக்கின்றன். அதுபோல் அப்பியாசியானவன் வெகுகாலம் சுவாசத்துடன் நன்றுப்ப் பழகியபின்னரே முன்சொல்லியிருக்கிற மாத்திரையளவின்படி அப்பியாசிக்க முயலவேண்டும்.

சூரியோதயத்திற்கு முன்னதாகலே ஐந்து நாழிகைவரையிலும், நண்பகலிலும், சாயங்காலத்திலும் அப்பியாசஞ்செய்துவருவதால் சரீரத்திலுள்ள சர்வரோகங்களும் நிவர்த்தியாகின்றது. ஆனுற் கற்பசாதனையுடன் பழகிவரவேண்டும்; இன்றேல் சரீரத்தை வருத்தும். இதன் முழுவிபரம் காயகற்பசாதனை அத்தியாயத்திற் பார்த்துணர்க.

திருமந்திரம்.

அஞ்சனம் போன்றுட லேயது மத்தியில்
வஞ்சக வாத மறுமத்தி யானத்தில்
செஞ்சொ லசலையிற் செய்திடிற் பித்தமும்
நஞ்சறச் சொன்னேம் நரைநிலை நாசமே.

பிராணவாயுவானது நம்மிடத்திலுள்ள சாதாரணமான சுவாசந்தானே? இதனுலேயா அதுகூலமுண்டாகப்போகின்றது?என்று

ஏன்னி அதை அலட்சியம் செய்யப்படாது. ஒருவனுக்குச் சகல பற்றுதலினும் மேலான பற்றுதலையுடைய இந்தச் சரீரமானது எந்தப்பொருள் நீங்கினும் பிரயோசனமற்றபிணமாகின்றது? சுவாசமென்னும் அரும்பெரும்பொருள் நீங்கினதினாலல்லவா? என்பதைக் கொஞ்சகோரம் ஆழ்ந்த யோசனையுடன் யூகித்துணர வேண்டும்.

விஞ்ஞானதீபம்.

இடகலையும் பின்கலையும் வெறுங்காற் றென்று
எண்ணுதே நான்குசத்தி மிதற்குள் ளாச்சு.

இவ்வித மகத்துவம் வாய்ந்த யோகிகளால் அப்பியாசிக்கப்படுகின்ற பிராணயாமம்:—உத்தமப்பிராணயாமம், மத்திமப்பிராணயாமம், அதம (மந்த) ப்பிராணயாமம் என மூவகைப்படும். அவற்றில், உத்தமப்பிராணயாமத்தால் சுவாசமானது பிரம்மரந்திரத்திற்குச் செல்லும். மத்திமப்பிராணயாமத்தாற் சரீரத்தில் நடுக்கம் (கம்பலை) உண்டாகும். அதம (மந்த)ப் பிராணயாமத்தால் வியர்வையுண்டாகும். அந்த வியர்வையை உடனே தைலத்தைத் தேய்ப்பதுபோல் சரீரத்தில் நன்றாய்த் தேய்க்கவேண்டும். அதனால் உடம்புக்குத் திடத்தன்மையும், இலகுத்தன்மையுமுண்டாகும். உத்தமப்பிராணயாமம் 36 மாத்திரைநேரம். மத்திமப்பிராணயாமம் 24 மாத்திரைநேரம். அதம (மந்த)ப் பிராணயாமம் 12 மாத்திரைநேரம் என்றறிக.

பிரதமத்தில் வியர்வையும், இரண்டாவது நடுக்கமும், மூன்றாவது தவனித்தத்தும் சரீரத்திலுண்டாகும். மிகுந்த அப்பியாசத்தாற் சரீரத்தை உயரக் கிளப்பச் செய்யினுஞ்செய்யும்.

பிராணயாம யோகத்தில், மாத்திரையென்னுங் கால அளவைக் கணக்கெடுக்கும் விதம்:—

சுமார் இரண்டுநாழிகைநேரம் அப்பியாசஞ்செய்வதில், மனமானது எவ்வளவுநேரம் ஏகாக்ர சித்தமாயிருந்ததோ, அவ்வளவு நேரந்தான் பிராணயாம மாத்திரையாகும். ஆனால், மாத்திரை அளவை ஒரு உத்தேசமாய் இவ்வளவு நேரந்தான் அனுஷ்டித்தி

ருப்போம் என்று முடிவில் நிதானிக்கவேண்டுமேயன்றி, அப்பியாசத்தின்போது சிந்திக்கப்படாது. அங்ஙனஞ்சிந்திக்கின், மனமானது பகிர்முகத்திற் சென்றுவிடும். அதனால், அப்பியாச பங்கமுண்டாகும். அப்பியாசிகள் இந்த வசனத்தை எல்லா வசனத்திற்கும் முதன்மையாகக் கருதவேண்டும்.

பன்னிரண்டரைச் சுவாசங்கொண்ட பிராணுயாமம் பன்னிரண்டினுற் பிரத்தியாகாரமும், பிரத்தியாகாரம் பன்னிரண்டினுல் தாரணையும், தாரணை பன்னிரண்டினுல் தியானமும், தியானம் பன்னிரண்டினுற் சமாதியும் ஆகின்றது.

கொழுப்பும், கோழையும் (சுபம்) அதிகமாயுள்ள சரீரகன் பிராணுயாமம் அப்பியாசத்திற்கு முன்னதாகவே * தௌதி §பஸ்தி முதலிய தொழில்களைச் செய்துகொண்டு அதன் பின்னரே அப்பியாசந் தொடங்கவேண்டும்.

கோடுதோர், கடைக்காண்டம்.

கோனப்பா சூரியன்மு னுதிக்கு முன்னே
கெட்டியாய்ப் படுக்கைவிட்டுத் தடாகஞ் சென்று
வானப்பா பூரித்துக் கும்பி ரேசி
மலமெல்லாம் வரையறவே யுட்சா டிக்கும்
வேனப்பா வல்லாமல் வேளோர் சேதி
மேற்குமுகப் பிறவிவட்ட மிட்டி ருத்து
கோளப்பா கும்பித்து ரேசித் தேதான்
கோடுமுச்சா டனங்கொண்டு மலத்தைப் போக்கே.

---

* தௌதி என்பவை:—ஜலதௌதி, குன்சரதௌதி, வஸ்திரதௌதி, பவனதௌதி என நான்குவகை. அவை முறையே; நீரினலும், நூற்கயிற்றினலும், வஸ்திரத்தினலும், வாயுவினலும் குடலிலுள்ள பக்குவப்பட்டதும், பக்குவப்படாததும், இனகினதும், இறுகினதுமான மலங்களை வெளியேற்றிச் சுத்தம் செய்வது. § பஸ்தி என்பவை:—ஜலபஸ்தி, வாயுபஸ்தியென இருபாற்று. இவற்றில் ஜலபஸ்தி, அபானத்துவாரத்தால் ஜலத்தை உடலுக்குள்ளிழுத்து, நாபிமுதல் இருதயம்வரையிற் செலுத்தி, வயிறு முழுவதையுஞ் சலத்தால் நிரப்பிச் சுழற்றி, மலங்களை வெளியேற்றிக் குடலைச் சலவைசெய்த வஸ்திரம்போற் சுத்தப்படுத்துவது.

அபானத்துவாரத்தால் வாயுவை உடலுக்குள்ளிழுத்துக், குடலைச் சுத்திசெய்வது வாயுபஸ்தி. இவற்றின் இரகசியம் பலவுள, அவற்றைக் குருமுகத்தாற் கேட்டுணர்க.

போக்கடா வெள்ளத்தா லாகிருஷ்ணஞ் செய்து
புத்தர்சு கற்றடியின் பிறத்தி வாங்கி
தேக்கடா ஜலத்தாலே வுச்சா டித்துத்
திடமாகத் தற்சனேயா லிரேச கஞ்செய்
வாக்கடா மலசுத்தி யான பின்பு
வாய்கழுவிக் கால்கழுவிச் சுத்த மாக்கி
நாக்கடா தந்தமுத லூத்தை வாங்கி
நலமாகக் கையாலே யன்பால் வேண்டே.

பிராணயாமம், யோகிகளுக்கே உரித்தானதென்றும், இல்லறவாசிகட்கு உரித்தன்றென்றுங் கருதவொண்ணாது. அஃது பிராணனை இரட்சிக்கப்படும் அரும்பொருளாதலால், ஒவ்வொரு மக்கட்கும் இன்றியமையாதது. பிராணயாமத்தை அப்பியாசிப்பதால் இல்லறவாசிகட்குப் பாபவிமோசனமும், ரோக நிவர்த்தியும்; யோகிகட்கு யோகசித்தியும், தெரிசனஞானமும் உண்டாகும். பிராணயாமத்தை அப்பியாசிக்கும்போது, இல்லறவாசிகளும் ஏகாந்தமான விடத்திலிருந்தே தொடங்கவேண்டும். அதன்பின் எழுந்து (அவசியமானால்) ஜன சமூகத்திற் கலக்கவேண்டும். அங்ஙனம் செய்துவருங்காலத்தில் "நண்டுருவதும் சிற்சில சமயத்தில் அட்சரமாகிவிடுவதுபோல்" சிரகல்தர்களும் அப்பியாசமுதிர்ச்சியால் யோகீஸ்வரர்களாகிறார்கள். எவ்விதமெனில், விடாமல் யுக்தமான பிராணயாமத்தை ஆறுமாதம், அல்லது ஒருவருடம் வரையில் ஏகாக்ர சித்தமுடையவராக அப்பியாசித்துவந்தால், ஆனந்த சுகோதயமுண்டாகும்.

பகவத்கீதை.

இப்பரிசி லெப்பொழுது மென்னினை கிற்பார்க்
கப்படியொ ராண்டொறு நின்களை வுன்னே
கைப்பதுவன் யானெனியல் கைப்பட வீருந்தோர்
பொய்ப்பிறவி யானவை மறுத்தடைதல் பூணர்.

அப்பியாசஞ்செய்து வருங்காலங்களில், இராசத, தாமத குணோதயத்தாலும், பூர்வப்பிரிவினலும், இஃது என்னயோகம்? இத்தயோகப் பழக்கத்தினல் ஞானோதயமாகுமா? எனப் பற்பல விதமாக எண்ணிச் சலிப்பு உண்டாகினும் உண்டாகும். அக்கா

லத்திலும், வைராக்யங்கொண்டு, யோக, ஞான சாஸ்திரங்களின் ஆதாரவினலும், சாதுசங்கப் பழக்கத்தின் உதவியினலும், "மந்திக் குரூஓயொத்தேனில்லே" என்னும் ஆன்ரோர்வாக்கியம்போற், குரங் குப்பிடிபோன்று விடாமற் பழகிவாவேண்டும். ஆரம்பத்திற் சிறிது கடினமாகத் தோன்றினலும், பழகப்பழக ஆனந்தமுண் டாகும்.

விந்ஞானதீபம்.

வாங்குவாய் சுடக்கையிலே யடிக்கொன் ரூக
வாய்வதனே யுள்ளிழுத்து வழக்க மாக்கு
எங்குவாய் யோகமிது தானே வென்று
எண்ணுதே ஆதிமீ தெவர்க்குர் தானே.

சர்க்கஸ்வித்தைக்காரர்கள் யானையைத் தூக்கவும், கற்களைத் தூள்தூளாய்த் தகர்க்கவும், கயிற்றின்மேல் நடக்கவும், அக்கயிற் றில் துவிச்சக்கர (சைக்கிள்) வண்டியை நடத்தவும், இன்னும் அநேக ஆச்சரியகரமான வினேதங்களைச் செய்யவும் வன்மை பெற்றிருப்பதை நாம் எத்தனேயோமுறை பார்த்தும் கேட்டுமி ருக்கின்ரோம். அவர்கள் அப்பியாசகாலத்தின் ஆரம்பத்தில்; கஷ் டகஷ்டங்களைப் பொருட்பண்ணுமல், மேன்மேலும் விடாமுயற்சி செய்ததினுலல்லவா? இப்போது அத்தகைய வன்மை யடைந்தி ருக்கின்ரூர்கள். அதுபோலவே, நமக்கும் அப்பியாச ஆரம்பத் தில் கொஞ்சம் கஷ்ட நஷ்டங்களேற்படினும் ஆலசியஞ் செய்யா மல் விடாமுயற்சி செய்யவேண்டும்.

திருக்குறள்.

தெய்வத்தா லாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

முயற்சி திருவினே யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

முயற்சியின்றிச் சோம்பேறிகளா யிருப்பவர்கட்கு எந்தக் காரியமுங் கைகூடாது. பாடுபட்டால் தானே? பலனடையலாம். வேலே செய்தால்லவா? கூலிபெறலாம். "உழகிறநாளில் ஊருக்

குப்போய்விட்டு அறுக்கிறநாளில் அரிவாளெடுத்துவந்தானும்" என்கிற முதுமொழிக்கிணங்க, வாய்ஞானம் பேசிவிட்டுக் "கலியாணச்சந் தடியில் தாலிகட்ட மறந்துவிட்டதுபோல்" மனத்தையடக்கிப் பிராணயாம அப்பியாசத்தைச் செய்யாமல், கிடந்திபோன இரசம் சிதறியோடுவதுபோல் மனத்தை அலையவிட்டவருக்கு யாது பிரயோசனமுண்டாகும்.

பட்டினத்துப்பிள்ளை.

கையொன்று செய்ய விழியொன்று காடக் கருத்தொன் றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புவிமே சமழு
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்பு மியான்
செய்கின்ற பூசையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே.

இதைவிட்டு ஒருவர் கமக்குத் தூக்கிக் கையில் கொடுப்பா ரென்று எண்ணிப் பல பெயர்களிடத்திலும் அலைந்து திரிவது, பெரும்பாலும் நன்மையைத் தரத்தக்கதல்ல.

விந்நாளதிபம்.

அங்கமதா வெளியதனே வாயா னுண்ணு
அடங்கவென்றுல் நாசியினு ளுள்ளே வாங்கு
பங்கமொன்று செய்யாமல் நெடுநாள் நீயும்
பழகிவரி லதுவுனக்குப் பலித மாகும்
இங்கனநீ டவாம லெவரா லேனு
மெய்தமென்று தொண்டுசெய்தா லிசைப்பார் யாவர்
தங்கன்தங்க ளறிவாலே யுற்று நோக்கித்
தனையுணர்வார்க் கிதுவிட்டுந் தப்பா தன்றே.

சுப்பிரமணியர் நாமம்.

கொன்னடா வாயொன்றே முத்தி யாகும்
கொடியதொரு நற்றவமுஞ் சித்தி யில்லை.

பல மனிதர்களாலும் இலகுவாக விவசாயஞ்செய்யாகின்ற சாமான்ய நெற்பயிருக்கு, நெல்மணிகளைக் காணுமலே ஐந்து, ஆறுமாதம்வரையிற் பொறுமையோடு முயற்சிசெய்கின்றார்கள். அங்ஙனமிருக்க, எவராலுஞ் செய்வதற்கரிய யோக, ஞானமென்னும் மோட்சப்பயிரை விரைவேற்றக் கருதி அப்பியாசஞ்செய்ப

வர்கள். அந்த நிமிஷத்திலேயே பிரயோசனங் கிடைக்கவில்லை யென்று நினைத்து, குருமூர்த்தி சொன்ன உண்மை நிலையையும் அசட்டை செய்யலாமா?

ஒரு நாள் தச்சனுக்கும், அவன் கருவிகட்கும் சண்டையுண் டாயிற்று. அவன், தன் கருவிகளைப்பார்த்து, அரம்பமே! நீ நன் றுய் அறுக்கவில்லை; வாய்ச்சியே! நீ நன்றுய்ச் செதுக்கவில்லை; இழைப்புளியே! நீ நன்றுய் இழைக்கவில்லை; துறப்பணமே! நீ நன் றுய்த் துளைக்கவில்லை என்று ஒவ்வொன்றையுங் கடிரமாக நிந்தித் துவைதான். அந்த நிந்தனையைப் பொறுக்கமாட்டாமல் ஆயுதங் களெல்லாம் ஒன்றுசேர்ந்து தைரியங்கொண்டு, தச்சனைநோக்கி, அடே? மூடா! உன்வேலை உனக்கு நன்றுய்த் தெரியுமானல், நாங் களும் எங்கள் வேலையைச் செவ்வையாய்ச் செய்வோம்; குற்றம் உன்னிடத்திலேயே யல்லாமல் எங்களிடத்திற் கிஞ்சித்துமில்லை யென்றன.

அதுபோல் அவரவர்கட்குக் குருசொன்ன மார்க்கத்தைச் சிரத்தையுடன் அப்பியாசித்துப் பார்க்காமல், குருவானவர் சரி யான "முத்திநெறிப்படி உபதேசிக்கவில்லையென்று அவதூறு சொல்வதிற் பயனென்றுமில்லை.

திருமந்திரம்.

சத்தியார் கோயி லிடவலஞ் சாதித்தால்
மத்தியா னத்திலே வாக்கெங் கேட்கலாம்
நித்தித்த கூத்துஞ் செனனம் வெளிப்படும்
சத்தியஞ் சொன்னேம் சதாசிவ மாணையே.

உரோமர்.

மேலென்ன விருக்கையிலு ளடக்கும் போதும்
வேறரையால் சமதனை விடாம லேற்ற
நாலென்ன எட்டென்ன வல்லா மொன்று
நலமான அஷ்டாங்கம் அப்யா சித்துக்
காலென்ன பிராணய முன்னே செய்யிற்
கணக்காகப் பூரகமாக் கும்பம் நாலு
கோலென்ன ரேசகந்தான் என்று மூன்று
குறையாமற் சரபீசக் கூட்டித் தீரே.

பிராணயாமயோகம்.

போகர்.

போச்சென்று விடுகாதே மூலந் தன்னைப்
போகையிலு மிருக்கையிலு மனத்தை யூணு
பூச்சென்ற பிறசத்தங் கேளாப் பக்கம்
புறத்திருந்து லட்சியத்தைப் பூட்டி வாங்கு
மாச்சென்று வாசியைநீ தவறுரூட் டாதே
மனந்தன்னே மூலத்தில் மருவிச் சேர்க்கும்
வேச்சென்று கடினம்போல் முன்னே காணும்
விடுகாதே மாச்சலாய் விரைந்து வுன்னே.

உன்னியே பழகுமட்டுங் கடிசாய்க் காணும்
உட்புகுந்து பார்த்துவந்தா லுறுதி கூடும்
வன்னியே தலங்குமட்டு மனஞ்ச லிக்கும்
மாசற்ற வொளிவுகண்டால் மகிழ்ச்சி யாகும்
பின்னியே பின்கலேயி னிடையிற் கூடும்
பேரான சுழினேதன்னில் கெட்டிட் டேறும்
நன்னியே நமன்வெருண்டு அப்பாற் போவான்
நாலெல்லாங் கடிதையுமாய் நாட்ட மாமே.

நாட்டமாய் ஒருவாக மூலம் பாரு
நலமான வாசிகொண்டு வூதி யூதி
ஊட்டமாய்ச் சாக்கிரத்தில் நின்று நின்று
உத்தமனே நந்திகண்டால் வாதங் காணும்
தூட்டமாய் வெறும்பேச்சாம் வார்த்தை சொன்னற்
சுடுகாட்டுப் பிணமான சொல்லுக் கொக்கும்
பூட்டுவாய் மூலத்தில் ஒளிகாண் மட்டும்
பொற்கொடிபோற் சுழிமுனையுந் திறந்து போமே.

சுழிமுனையே திறந்தாக்கால் மனமொடுங்கும்
சுழியிலே அகப்பட்ட துரும்பு போலாம்
வழிமுனையே ஆதார மேற லாகும்
மகத்தான சித்தியது எட்டு மாடும்
கழிமுனையாஞ் சுழியுள்ளே யழித்தி டாது
கணக்கோடே வாசியென்ற குதிரை யேற
இழிமுனையி லிறக்காலங் கொன்று மில்லை
ஏறுவது கடினமெத்த வித்தற்தோ டேமே.

அகஸ்தியர்.

ஆச்சப்பா இந்தமுறை பதினெண் பேரும்
அயன்மாலு மரனெடு தேவ ரெல்லாம்
மூச்சப்பா தெய்வமென்று அறியச் சொன்னார்
முனியோர்கள் ரிஷியோர்க ளிப்படியே சொன்னார்.

சுவாசமானது குறைவுபடாமற் பூரணமாயிருப்பதற்காகவே யோகாப்பியாசிகள்; பிறருடன் பேசுதல், கடினவேலை, கோபம், அதிக நித்திரை, ஸ்திரீ சங்கமம், மனிதசஞ்சார முதலியவைகளை நீத்திருக்கின்றார்கள்.

நாலவெட்டி.

மழைகன மடையும் ரவிபனி காற்று மனிதர்சஞ் சாரமு மாய்கைப்
பிழையகன் றிடவுஞ் சோம்பலுக் கூக்கம் பிதற்றலுங் கோபமா காதே.

சுவாச அப்பியாசம் முதிர்ச்சியடைந்தபின்னர்; மூன் அங்க யோக அத்தியாயத்தில் ஆசனபேதம் 38ல் சொல்லியிருக்கிறபடி, பதுமாசனமிட்டு, * சின்முத்திரையுடன் வடக்குமுகமாயிருந்து, தேற்றாங்கொட்டையின் சந்தனத்தினால் தெளிந்த நிர்மலமான சலத்தைப்போற், பிரபஞ்சவாழ்க்கையினின்றுந் தெளிந்த மனதைப் பிரபஞ்சத்தைப் பார்த்துக்கொண்டிருந்தும் மனத்திற்குப் பற்றுத அகக்கண்ணோடு புருவமத்தியாகிய சிதாகாயத்திற் பிறழாமல் நிறுத்திச், சரீரத்தை அசைவற இருத்தி, இடை, கண்டம், தலை, கண் ஆகிய நான்கையும் சேர்வடையாமல் நிறுத்தி, சந்திர, சூரியகலைகளின் வழியேசென்று திரும்புகிற சுவாசத்தை, மூன் சொல்லியிருக்கிற மாத்திரையளவின்படி பூரக, கும்பக, இரேசகஞ்செய்து, நடுநாடியாகிய சுழிமுனையிற் செலுத்தி ஓப்புவமையற்ற அம்சகாயத்திரி மந்திரத்தைச் செபியாமல் செபிக்க வேண்டும்.

---

* சின்முத்திரை:—பெருவிரலின் அங்குலக்கோடென்னும் இரேகையில் ஆட்காட்டி நுனிவிரலை வைத்து இதர மூன்றுவிரல்களையும் ஆகாயத்தைப் பார்க்கும்படி நீட்டி இரண்டு கைகளையும் இரண்டு முழந்தாளின்மேல் வைத்து நிஷ்டை செய்வது. இதைப் பதுமாசனமிட்ட படங்களில் அநேக மாய்க் காணலாம்.

பிராணயாமயோகம்.

1. அம்சகாயத்திரி மந்திரம்.

ஓம் புவஹா ஹம்ஸஸ் ஸோஹம் ஓம் புவஹா ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் சுவாஹா ஹம்ஸஸ் ஸோஹம் ஓம் மஹஹா ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் ஜஹா ஹம்ஸஸ் ஸோஹம் ஓம் ஸத்யம் ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் தத்ஸ விதுர்வரேணியம் ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் பர்கோ தேவஸ்யதிமஹீ ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் தியோயோஹா பிரசோதயாத் ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் பரோரஜஸி ஸாவதோம் ஹம்ஸஸ் ஸோஹம்
ஓம் ஆபோஜ்யோதி ரஸோம்ருதம் ப்ரஹ்ம
பூர்புவஸ்வரோம் ஹம்ஸஸ் ஸோஹம்.

2. காயத்திரி மந்திரம்.

ஓம் பூர்வஸ்வ மஹாஜன தமஸத்தியம்
ஓம் தத்ஸ விதுர்வரேணியம்
பர்கோ தேவஸ்ய திமஹி தியோயோஹா ப்ரசோதயாத்
ஓம் ஆபோஜ்யோதி ரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ்வரோம்.

3. காயத்திரி தியானம்.

முக்தாவித்ரும ஹேமநீலதவளச் சாயைர்முகை ஸ்த்ரீக்ஷணை
யுக்தாமிந்துநி பத்தரத்நமகுடாம் தத்வார்த்த வர்ணத்மிகாம்
காயத்ரீம் வரதாபயாம் குசகசப்ராக்ஷ பாலங்கதாம்
சங்கம்சக்ர மதாரவிந்தயுகளம் ஹஸ்தைர்வஹந்திம் பஜே.

மேற்கூறிய மூன்று காயத்திரிகளே வெளியிற் சொல்லக் கூடாதென்பதும், அதிக ரஹஸியமென்பதும் அக்ஷரர்கள் கருத்தாயினும், அங்ஙனம் இவளிப் படையாய்ச் சொல்லக் கூடாதேயன்றி, சாஸ்திரங்களில் எழுதலாம் என்பது ஆன்றோர் துணிபு. இதுபற்றியே விஸ்வாமித்திரமஹரிஷி இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்னும் சதுர்மறையில், முதன்மறையாகிய இருக்குவேதத்தில் தோத்தரித்துள்ளார்.

முன்சொல்லியிருக்கின்ற 1-வது அம்சகாயத்திரி மந்திரத்துடன் ஒருமொழியாகிய பிரணவ மஹாமந்திரத்தை உச்சரிக்காமலுச்சரித்து; பிராணவாயுவை நிறுத்தி; அதன்படியே மனதும், மனத்துடன் பஞ்சேந்திரியங்களும், அவற்றின் சேஷ்டைகளும் நிற்க, பிரபஞ்சமென்பதே தோன்றுமல் சமாதியிலிருந்து,

ஆறுதாரகமலங்களைக் கடந்து, நெற்றியின் மேற்பட்டிருக்கும் சகஸ்ரதளமாகிய பிரம்மரந்திரத்திற் பிரகாசித்துக்கொண்டிரா நின்ற, சுயம்புவடிவாகிய பிரம்மசைதன்ய சொரூபத்தைத் தரி சித்து நித்தியானந்தமடைய முயலவேண்டும்.

சரீரத்தையும், இடைக் கண்டம், தலை, கண் இவைகளையும் அசையாமல் நிறுத்தவேண்டுமென்று முன் சொன்னதற்குப் பிர மாணம்.

பிரபுலிங்கலீலை.

தறிபோ லுடல நேரிருத்து தயங்கு மருங்கு லிருகாடி
நெறிபோய் மீழும் வளியதனை நிறுவி நடுநா டியிற்செலுத்தி
அறிவோர் சிறிதுஞ் சலியாமல் *அன்னப் பெயர்மக் திரமாறிக்
குறிபோ யிருந்த வொருகுறியைக் குறித்துக் கொண்டங் கிருந்தனரால்.

பகவற்கீதை.

தலையுங் கழுத்து முடம்புமிவை செவ்வே தளரா தேயிருக்கு
நிலையி லிருந்து கண்களோத்தன் மூக்கு நுனிமே லேகிறுத்தி
அலையுங் கடல்போற் காமமுமெய்ப் பயமுந் தன்னை விட்டகல
உலைய மனமுன் னடங்கவெனை யுணர்ந்தே யிருக்கு மதுயோகம்.

ஞானிகள் நிலைமை.

அத்தனுமெய்ஞ் ஞானியரு முரைத்த வாறே
ஆகமுடி யிடையசையாத் தறிபோ லாக்கிப்
பத்திரங்கோ முகம்வீரம் பதுமத் தோடு
பசுங்குலவு மாதனத்திற் படிந்தே கார்ந்த
முத்திரைசாம் பவியான நோக்க தாகி
முயல்கருத்து நடுநிலையி லிருத்தி நாளு
மித்தகைய சிவயோகத் திருப்பார் ஞானி
மினியவர்க்குப் பிறவியுமுண் டென்ன லாமோ.

அழுதசாரம்.

செவ்வே யுடலுங் கழுத்துஞ் சிறமுமுற
வெவ்வா தனத்தே யிருந்தெவர்க்கு—கைவந்தால்
வாத முதலெனுய் சலியா மதியுடையோர்
ஆதன மென்ப தது.

---

* அன்னம், என்பது தமிழ்மொழி; *அம்ஸம் என்பது சம்ஸ்கிருத மொழி; ஆதலால், அன்னப்பெயர் மந்திரம், அம்சகாயத்ரி மந்திரமென் றுயிற்று. இஃதே மேற்கூறிய 1-வது அம்சகாயத்ரி மந்திரம்.

பிராணயாமயோகம்.

பிரமசித்தை.

தக்ஞா னத்தைத் தான்பெறற் பொருட்டுத் தனியிடந் தனையடைந் திய
துக்கமே வாமற் சுகாசனத் திருந்து தோள்தலை கழுத்துடம் பிவைநே
ரொக்குமா றிருத்திப் பூதிகொண் டிந்த வுடம்பையுத் தூளனம் பண்ணி
மிக்கவாய் வருமிக் கியங்களே யெல்லாம் வீடயமே லெழாவகை மீட்டு.

யோகாப்பியாசிகள் இரேசக, பூரகஞ் செய்துவருங்காலங்க
ளில், சரீரத்தில் உஷ்ணமதிகரித்தால், அடியிற்கண்டிருக்கிற விப
ரப்படி தலை முழுகிக்கொள்வதுடன், மூதண்டக்ஷாயமும் பருகி
வரவேண்டியது.

தலைழுகதும் விதி.

கஸ்தூரிமஞ்சன்,	பஞ்சகற்பம்.
வெள்ளிளகு,	
கடுக்காய்த்தோல்,	
நெல்லிமுள்ளி,	இவை வகைக்குப் பலம் கால் ($\frac{1}{4}$)
வேப்பம்பருப்பு,	

இவைகளை மேற்கண்டபடி நிறுத்தெடுத்து, முதலுள் இரவி
லேயே அமுரியிலாவது, அல்லது பசும்பாலிலாவது ஊறப்
போட்டு; மறுநாள் பசும்பால் விட்டரைத்து; சுமார் காற்படிபா
லிற் கலக்கிக் கொதிக்க வைத்துச் சேறுபதத்தில் இறக்கிச், சரீர
மெங்குந்தேய்த்து, 2-மணிநேரம் வைத்திருந்து வெந்நீரில் ஸ்நா
னம் பண்ணவேண்டும். போசனத்தில் நெய், பால் முதலியவை
களை அவசியஞ் சேர்த்துக்கொள்ளவேண்டும். அதனற் சுபாலம்
இருக்கும், குளிர்ச்சியுண்டாம்.

திருமத்திரம்.

அனக ணன்னுத லாயோ ரதிசயக்
களவு காயங் கலந்தவிர் நீரிலே
மிளகு நெல்லியு மஞ்சளும் வேம்பிடி
லினகு மேனி யிருகுல் சுபாலமே.

சடடமுனி கற்பவிதி.

தானென்ற தலைமுழுக வரிசை கேளு
சாதகமாய் மிளகோடு கடுக்காய் மஞ்சள்
வேனென்ற வேப்பரிசி நெல்லி முள்ளி
மிருத சமபாகம் நிறுத்துக் கொண்டு

கோனென்ற ஆவின்பால் விட்டு ஆட்டிக்
குமரவே முழுவெரப் பட்சர் தோறும்
னனென்ற நெய்வார்த்து வாரர் தோறு
முத்தமனே பசும்பயர்க்காய்ப் பாகம் பண்ணே.

நந்தீசர் ஞானம்.

சார்ந்துபார் தலைமுழுக விபரங் கேளு
தப்பாது செல்லியொடு மிளகு மஞ்சள்
கூர்ந்துபார் வேப்பரிசி கடுக்கா யோடு
குறையாம லமுரியிலே குளிரப் போட்டு
ஆர்ந்துபா ராவின்பால் விட்ட நாத்து
அப்படனே அக்கினியில் வைத்து வாங்கித்
தேர்ந்துபார் சிரசநிலே சீராய்த் தேய்த்துத்
திறமாகச் சுடுவெக்கீர் முழுகு வாயே.

முழுவெர மண்டலத்தில் தேகங் கல்லாம்
முக்கியமாய் வாதபித்தம் நிலையில் நிற்கும்
கழுவெர ஆவின்நெய் கூட்டி வாரீ
சமலமெனக் கண்குளிரும் விர்து கட்டும்.

மூதண்டகஷாயம்.

அறுகம்வேர் பலம் ஒன்று, மிளகு நூற்றெட்டு, சீரகம் களஞ் சுமூன்று: இம்மூன்றையும் சிதைத்து, மூன்றுபடி ஆற்றுச்சலத்தி லிட்டு அடுப்பேற்றி, முக்காற்படியாக வற்றவைத்து, அதில் ஒரு *வெருகடிப் பிரமாணம் பசுவெண்ணெய் போட்டு இளஞ்சூடா யிருக்கும்போதே குடித்துவிடவேண்டியது.

நந்தீசர் ஞானம்.

அறைகிறேன் அறுகம்வேர் பலந்தா னொன்று
அப்படனே மிளகுதான் நூற்றெட் டாகும்
பறைகிறேன் சீரகந்தான் முக்க ழஞ்சு
பாங்காக மூன்றுமொன்றாய் சதுக்கி யிட்டு
நிறைகிறேன் மூன்றுபடி வெள்ள நீரில்
நேராக முக்காலாய்க் குறுக்கிப் பின்பு
குறைகிறேன் வெருகடிதான் வெண்ணெ யிட்டுக்
கூசாமற் குடித்துவிடு குணமுண் டாமே.

* வெருகடி:—பூனையின் பாதக்குறி.

உண்டான குணமதுதான் சொல்லக் கேளு
உவ்வணத்தின் கார்த்தலெல்லா மோடிப் போகும்
பண்டான மேகமது பறந்து போகும்
பாரப்பா கண்குளிருங் கிரேகம் பொன்னும்
தண்டான தேகமது இறுகிக் காணும்
சொல்லாத ஆனந்தம் துலக்க மாகும்
தண்டான உத்தியிலே தாது நிற்குந்
தப்பாது இந்தமுறை சார்த்து பாரே.

காயகற்பசாதனை.

பத்தாவது அத்தியாயம்.

சகல பற்றுக்களையுந் தவிர்த்து, திருவருளைச் சிந்தித்து, கிடைத்தற் கரிதாகிய மெய்ஞ்ஞான நிலையைச், சொல்லாமற் சொல்லிக் காட்டிய குருமூர்த்தியின் உபயதிருவடித் தாமரைகளைச் * சகுணமாகவும், § நிர்க்குணமாகவும், மனோவாக்குக் காயமென்னுந் திரிகரண சுத்தியுடன் வணங்கி, ஓர் ஏகாந்தமான விடத்தில், ஏகாக்ரசித்தனைகப் பதுமாசனமிட்டுச், சின்முத்திரையிற் பொருந்தி, இடகலையில் வருஞ்சுவாசத்தை, இரேசக, பூரகஞ்செய்து, குருமுகத்தாற் கேட்டறிந்த ஒப்பற்ற, மும்மூலகற்பசாதனையை அநுஷ்டித்து ¶ தசநாடிகளின் மர்மத்தை அறியவேண்டும். ஆனால் கற்பசாதனை செய்வதற்கு ஆரம்பிக்கு முன்னதாக,

சுப்பிரமண்யர் ஞானம்.

நாட்டடா நாற்கோண முன்னே யிட்டு
கலமான வட்டமிட் டறுகோண மிட்டுப்
பூட்டடா முக்கோணம் அதுமே லிட்டுப்
புகழான பிறைவட்ட மேலே போட்டு
மாட்டடா என்தாயாள் முகத்தான் வைத்து
மதிக்கவே ஆறெழுத்தை யதிலே சாத்தி
வாட்டடா கற்பமதை மனதில் வைத்து
வாகுதனைப் பூசைசெய்து வணங்கிக் கொள்ளே.

---

* சகுணம்:—ஜடரூபம், அல்லது ஸ்தூலம். § நிர்க்குணம்:-ஆத்மரூபம், அல்லது சூக்குமம். ¶ தசநாடி:—இதன்விபரம், பின்வரும் 11-வது, அத்தியாயத்தைப் பார்த்துணர்க.

என்னுஞ் செய்யுளின்படி செய்துகொண்டு, அதன்பின் கற்ப சாதனைக்கு ஆரம்பித்தால், மகான்களது சாபநிவர்த்தியாகும்; ஆறுதார வீடுகளும் பிரகாசிக்கும்; யாதொரு விக்கினமும் நேரிடாது. இன்றேற், சாதனபுரிவது மிக அருமையாகும்.

இந்த மும்மூலகற்பத்தைச் சூரியகலையில் உதயாதி மூன்றே முக்கால் காழிகைவரையிலும் உபயோகித்து, அதன்பின், இடகலையில், இரேசகபூரகஞ்செய்து, கருங்குருவையரிசி படி அரைக்கால், பாசிப்பயறு படி அரைக்கால், இவைகளே வெண்மையான பசுமாட்டின் பாலிற் கலந்து பொங்கல் செய்து, தினம் ஒருவேளை அரைவயிறு போசனம், உப்பில்லாமல் சாப்பிடவேண்டியது. இராக்காலத்தில் மிளகுப்பொடியிட்டுக் காய்ச்சிய பசும்பால் சாப்பிட்டுத், தண்ணீயறிந்த நித்திரையுடன் கொஞ்சநேரந் தூங்கவேண்டும். அங்ஙனமின்றித் தண்ணீ மறந்து தூங்கினும், தனிமித் பெண்போல் வந்துமருவி இந்திரிய ஸ்கலிதம் பண்ணிவிடும்; இந்திரிய ஸ்கலிதமானால் தவம் அழிந்துபோகும்.

அகஸ்தியர், பூரணதீக்ஷை.

கற்பந்தான் றின்பதற்கு மூன்றே முக்கால்
கடந்தபின்பு பத்தியங்கொள் கனலே ரூது
உற்பனமாங் கற்பத்தைச் சூரியனிற் கொள்ளு
உண்பதுவு முறங்குவது மொன்றே மார்க்கம்
நற்புடனே பூசைசெய்வார் கால மூன்றும்
நாளொன்றுக் கிருநேரம் காட்டம் பாரு
சொற்பமென்ற பெண்ணுசை விட்டா லுந்தான்
சுகமான சயனத்திற் பெண்தான் வந்தே.

வந்துதான் மருவிடவே விந்து வீழும்
மகத்தான தவமெல்லாம் அழிந்து போகும்
கொந்துதார் னழியாமல் நினைவாய்த் தூங்கு
குறியான புருவமையங் குறியைப் பாரு
வெந்துதான் போகுமடா மூலத் தீதான்
மேற்கொண்டால் மாயையெல்லாம் வெளியு மாகும்
உந்திதான் பசியாம விருக்க வென்றுல்
உறைப்பான வாகிகொண்டு அமிர்த முண்ணே.

மேற்கண்டபடி கற்பமுண்ணும் காலத்தில், மழை, அதிக நடை, வெயில், பனி, காற்று, வாடை, மனிதர்கூட்டம், மாயை, சோம்பல், அதிக தூக்கம், அதிகப்பேச்சு, அறுசுவை, குளிர்ந்த சலம் முதலியவைகளைத் தள்ளிவைக்கவேண்டும்.

ஞானமணிமாலை.

நீபெருக்கத் தின்றுக்கால் நித்திரையுங் கோபமதாம்
நீகவர்க்கத் தேகாம லேகிறுத்தும்—நீபெருக்க
வண்ணமு லுண்டு வுறங்கா திறையைமனக்
கண்ணுலே கண்டு களி.

வாசியோகம் செய்துவருங் காலத்தில் மும்மூல கற்பத்தை உபயோகித்து வரவேண்டும். கற்பத்தைச் சாப்பிடாமல் வாயு வைமட்டும் ஏற்றியிறக்கிக் கொண்டுவந்தால், சரீரத்தில் உஷ்ண மதிகரித்துச் சிலரோகங்கள் சம்பவிக்கும். அதனுல், இரேசக, பூரகஞ்செய்ய முடியாமற்போகும். வாசியும் வசப்படாமல் குதித்துவோடும் ஆதலால், நிலைத்தோறும் தவருமல் கற்பமுண்டுவர வேண்டும். இப்படிப் பதின்மூன்று வருடஞ் சாதனைபுரியவேண்டும்.

சுப்பிரமண்யர் ஞானம்.

கொள்ளடா மும்மூலங் கொள்ளா விட்டால்
குதிகின்ற காமமுந்தான் குறித்தே யோடும்
அள்ளடா அம்மூலங் கொண்டே ளுல்
அணுவளவுங் காமமுந்தான் அசையா தையா
மெள்ளடா பதின்மூன்று வருடங் கொள்ள
மேதினியிற் சஞ்சரித்து விரும்பி நில்லு
வள்ளடா வல்லவனு யோகம் பார்த்து
வாய்வான சுழல்தன்னில் வருந்தி நில்லே.

நில்லடா மும்மூலக் கொண்டு தானும்
நிலையான வாசியைத்தா னினைத்துப் போற்று
அல்லடா கற்பமுந்தான் கொள்ளா மற்றுண்
அறிவான வாசியைத்தான் ஏற்றி னுக்கால்
மெல்லடா தேகமுந்தான் பொத்துப் போகும்
மேன்மையுள்ள வாயுத்தான் குதித்து வோடும்
வல்லடா வல்லவனுக் கற்பங் கொண்டு
வாய்வான வாசியைத்தான் வாங்கு வாயே.

தீர்க்கமாய் மும்மூலந் தினைத்தோ றுந்தான்
நின்னுமல விடாதேஐயா நிடமாய்ச் சொன்னேன்
ஆர்க்குமடா அவனுயிரும் போகா தப்பா
அகண்டவெளிக் குள்ளிருந்து ஆடச் செய்வான்.

மும்மூல கற்பசாதனையின் மர்மத்தை வெளிப்படையாய்க் காட்டி எழுதலில்லையே எனச் சில பரிபக்குவர்கட்கு மனைசாஞ் சல்யமுண்டாகலாம்; அது என்னுடைய குற்றமேயன்று. எனெனில், கற்பசாதனையின் முழு அந்தரங்கத்தைக், குருமுகத்தாற் கேட்டுணர வேண்டுமென்றும், சாஸ்திரங்களில் வெட்டவெளியாய் எழுதக்கூடாதென்றும் ஆன்றோர்கள் மிகப்பயங்கரமுண்டாகும்படிப் பின்வருமாறு கூறியிருக்கின்றார்கள். அதையெல்லாம் பொருட்பண்ணுமல், பொதுநலத்தைக் கருதி வெட்ட வெளியாய் எழுத ஆரம்பித்தேன். அப்போது, என்னையறியாமல் நானெழுதிவந்த எழுதுகோல் (பேனா) நடுங்க ஆரம்பித்தது; யாதொரு காரணமுமில்லாமல் மனதிலும் ஓர்விதத் திகிலுண்டாயது. அதிலிருந்து, வெட்டவெளியாய் எழுதக்கூடாதென்று ஆன்றோர்கள் கூறியிருக்க, நாம் அதைமறுத்து எழுத ஆரம்பித்ததாலல்லவா? இச்சம்பவம் நிகழ்ந்ததென்று கருதி, அல்வாறு எழுதாமல் யானும் மர்மமாகவே எழுத ஆரம்பித்தேன். நான் அவ்வாறு எழுதாமல் நிறுத்தியதற்கு, பின்வருஞ் செய்யுட்களே போதிய சான்றாகும். அப்போது, சரி, சரியல்லவென நன்குவிளங்கும். மேற் மர்மங்களோ எப்படித்தான் தெரிந்துகொள்வதெனக் கேட்கில், குருமூர்த்தியை அடுத்துத் தொண்டுபுரிந்தால், அவர்கள் உடனேக் கவனித்து, இவன் பாத்திரவானா? அபாத்திரவானா? என யூகித்தறிந்து, அதன்பின்னர் அநுக்ரகம் பண்ணுவார்கள்.

தாயுமானவர்.

என்னேயுன்னே யின்னதென வெண்ணுமல் நிற்கும்நிலே
தன்னேயருளென்ற தருணத்தில்—அன்னேபெற்ற
பிள்ளேக்குஞ் சொல்லாத பெற்றிகண்டா யையனே
உள்ளத்தி னுள்ளே யுணர்.

பகவற்கீதை.

மற்றுனக்குச் சொல்லியவிம் மறைப்பொருள்மா தவமிலர்க்குங்
குற்றமறத் தெரிவருளுங் குருவழிபா டிலாதவர்க்குஞ்
செற்றமனச் சழக்கினர்க்கு மெனினினையாத் திறத்தினர்க்கும்
பற்றமறத் தெரிக்துரைக்கப் படாதென்றே யறிகண்டாய்.

முக்காண்ட திருமந்திரம்.

சோதி யான துரிசெலயச் சொல்லொணு
பேதி யான குரிசையைப் பேசொணு
ஆதிதான் சொன்ன அரும்பொருள் தன்னே
வீதியாய்ச் சொன்னல் விண்ணிடி வீழுமே.

விண்ணிடி வீழும் வெளியிட்ட பேர்க்குத்
தன்னடி தானுய்த் தனக்குச் சரியாய்க்
கண்ணடி கண்ணுய்க் கற்றுணர்ந் தோர்க்குப்
பொன்னடி மூலம் பொருள்சொல்ல லாமே.

சொல்லா ரணமாஞ் சுருதி முடிந்திடம்
எல்லாருங் காண எடுத்தே யுரைத்தவன்
பொல்லாத சென்மம் புகுந்து புலையனுய்
எல்லா நரகத்துக் கேகுவார் காணுமே.

சொல்லா ரணமாஞ் சுருதி முடிந்தவிடம்
எல்லார்க்குஞ் சொன்னு லெழுநரகம்—கல்லா
ஞனாக்கிச் சொன்னல் அவனே யிவனுகும்
பாழாக்கிப் போட்டகுரு பாழ்.

சட்டமுனிவர் கற்பவிதி.

காணப்பா யிதின்பிறகு தாறு பாட்டுக்
கைமுறையாய்த் தீட்சைபா டியதைப் பார்த்து
ஊணப்பா நிட்சையிதி சத்தி மார்க்கம்
உத்தமனே பூசையிதி சிவசத்தி மார்க்கம்
தோணப்பா வெட்டவெளி யாகச் சொன்னேன்
சொன்னதொரு யிருதாறு பாட்டும் பார்த்து
ஆணப்பா ஆணவத்தாற் சொன்னே னென்று
அரைக்கணத்தி லென்னையக்கே அழையென் ருரே.

அழைத்தாளன்னே மச்சமுனி கூட்டிப் போனர்
அப்பவல்லோ ஞனகாதி சித்த ரெல்லாம்
குழைத்தகுரு வலக்காதிற் சொல்லுத் தீட்சை
கொழுப்போடா பாடினது என்று கேட்டுத்
துழைத்தகுரு சித்தருக்கு நீரா வீரோ
சொற்பெரிய பூரணத்தைத் தள்ளி வீரோ
இழைத்தகுரு சித்தருக்கு நீரா வீரோ
இடும்போடா பாடினது எனச்சொன் ருரே.

சொன்னமொழி கேட்டயர்ந்து நிற்கும் போது
துடியான மூலகுரு இருநூறை வாங்கிப்
பன்னதல்ல பாடென்று கிழித்துப் போட்டார்.

உரோமரிஷி 100.

வாய்க்கொழுப்பாய்ப் பேசினுல் வருமோ வாதம்
வாதினைச் செலவழித்தால் வருமோ யோகம்
காயில்லாப் பழமாமோ வேதை மார்க்கம்
காலடக்க மில்லாட்டால் ஞான மாமோ
தாயில்லாப் பிள்ளையுண்டோ வுலக வாசந்
தழுவுகின்ற குறிபோலே சமாதி காணும்
பேயனுக்குச் சொன்னதிலு லொன்று மில்லை
பிடரிவழி மார்க்கத்தைப் பேசொண் ணுதே.

பேசினது முன்னுரைத்த ஐந்தும் புள்ளே
பேசவைத்தே னதிலுலே மறைத்தார் சித்தர்
காசினியிற் சட்டமுனி நீட்சைக் குள்ளே
கறுப்பில்லா மல்வெளியாய்க் காணச் சொன்னர்
மோசமென்று திருமூலர் கிழித்துப் போட்டார்
மூலகுரு வர்க்கமெல்லாம் மோசக் காரர்
பாசையினுற் பாடிவைத்தார் நூல்கள் தோறும்
பற்றிநின்று பார்த்தாலும் பனிரெண் டாண்டே.

ஆண்டுபன்னி ரண்டுக்கும் வேறே சித்தம்
ஆகாமற் சேகரித்துப் பலது லெல்லாம்
பூண்டிருந்து பார்த்தாக்காற் குருத்தா னுகிப்
புத்தியெனும் அறிவாலே தோன்றுந் தோன்றும்
நூன்றுவது சொர்க்கபதம் அடைந்தாப் போலே
சுருக்கமதி லுறுதோன்றுந் தோன்று மப்பா
மாண்டதனுற் பலனென்ன? ஞான மென்ன?
மரணமடைந் தாப்போலே மனிதர் வாழ்வே.

மனிதரெல்லாம் மரணமடைந் தார்க ளென்று
மனதிலுக்கி லயத்துறில் வழியாய்ச் சொன்னேன்
சனியனைப்போற் சித்தரெல்லாங் கூடிக் கொண்டு
சமாதிக்குள் மடக்கிவிட்டார் சட்டை நாதர்
கனிவுவந்து சொன்னதையுங் கிழித்தா ரையோ!
கன்ராவி! கன்ராவி! யென்ன சொல்வேன்

அரிதாமாய்ப் போகுதையோ! மனிதர் வாழ்க்கை
ஆனலும் புத்தியில்லே சண்டா ளர்க்கே.
சண்டாளா! பெரியோரை யடித்துக் காரு
சாஸ்திரத்தை வினையம்வைத்துத் தாக்கிப் பாரு
பெண்டாட்டி பிள்ளையுட னழுத்தைக் கட்டிப்
பிதற்றுகிறாப் போணவுயிர் கொடுப்பா ளோசொல்
நிண்டாட்டம் பண்ணுதே வுனக்கே புண்யம்
சேரடா வலையினுள்ளே சாரைப் பாம்பைக்
கண்டாக்காற் சந்திரனும் ஒடுக்க மாவான்
கவசமிடாச் சாதிலிங்கப் பற்ப மாச்சே.

அகஸ்தியர் பூரண நூற்றாம்.

உண்மையாம் இந்நூல்தான் பிட்டாத் தோஷம்
உலகத்தில் மானிடர்க ளுளறிப் போனூர்
தண்மையுள்ள விந்நூல்யார் கொடுக்கப் போறூர்
சாத்திரந்தான் மெத்தவண்டு சமுசயந் தீராது
வெண்மையாய்ச் சட்டைமுனி நிட்சை யிருநூறும்
விளம்பினூர் வெளியாமி தென்று மூலர்
அண்மையாய்க் கிழித்தாரே ஐயோ! ஐயோ!?
அல்லாம லின்னமொரு ஆகங் கேளே?

சிவஞானவள்ளல்.

யானென தெனுஞ்செ ருக்கை யிரித்தொளி யாயெ றிக்கும்
ஞானதே சிகர்க்குத் தன்னே நதிர்கொடுத் திறைஞ்சா கின்ற
ஆனமா னுக்கற் கின்ற அனுபவம் அறைய லாகும்
எனையோர்க் குரைப்பி னன்னேன் இருள்புலா நிரையத் தெய்தும்.

ஞானமணிமாலை.

கோன்கண்ட ஞானக் குருவருள்வா ராப்பொருளே
நான்கண்டே னென்று நவிலாதே?—எனென்றால்!
வெண்கலத்தி லேசை வெகுவாய் முழங்கும்பசும்
பொன்கலத்தி லேசைப் பொருள்.
மிக்க நிறியோர்க்கும் மெல்லியர்க்கும் வீணருக்கும்
சற்குருவி னுபதேசஞ் சாற்றரிது—மக்காபி
வாக்கா யெடுத்துரைத்தார் வான்பொருளைக் கண்டிறைஞ்சும்
சாக்காமற் செத்தவர்க்கே தான்.
ஆவென் றதின்பொருளே யார்க்கும் நவிலாதே?
ஊவதனுக் கப்பாலென் றேதிலிடு—தீயெவர்க்கும்.

மேற்சொல்லியபடி, குருநாதனிடத்தில் தொண்டுபுரிந்து வாங்கிய நிலையை, பத்துமாதம் வரையில் ஒருமை மனத்துடன் அநுஷ்டித்துவந்தால், *தசவாயுக்களும் வசப்படும். அவற்றில், பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பஞ்சபூதியங்களுண்டு. அவற்றிற்கு, மூறையே, வல்லூறு, ஆந்தை, காகம், கோழி, மயில் என்னும் பஞ்சபட்சிகள் தொழிற்பட்சிகளாகும். அப்பட்சிகளைக் கொண்டு தொழிற்செய்வதற்கு முறையே, அ, இ, உ, எ, ஒ என்னும் பஞ்சாட்சரங்கள் பொருந்தியதாகும். அவற்றால் ¶அட்டகர்மங்களும் செய்யலாம். அதன் முழுவிபரம் விரிவாகுமாதலால், அகஸ்தியர் பஞ்சபட்சி, உரோமர் விநாடிபஞ்சபட்சி, மச்சமுனிவர் பஞ்சபட்சி, போகர் பஞ்சபட்சி முதலிய சாஸ்திரங்களிற் சவிஸ்தாரமாய்க் காணலாம்.

பஞ்சபட்சிகளால், அடியிற்கண்டிருக்கிற செய்யுட்படிக்கும் சில தொழில்களைச் செய்யலாம்.

வன்னியில் நீரை வைக்கில் வருஞ்சுரம் மாறிப் போகும்
வன்னியிற் பூவை வைக்கில் வசிகர மிகவுண் டாகும்
வன்னியில் வாயை வைக்கில் வச்சிர சரீர மாகும்
வன்னியிற் காலை வைக்கில் மகாயோகஞ் சித்தி யாமே.

காலிலே நீயை வைக்கிற் கலந்திடும் விஷக்க ளென்ன
காலிலே நீரை வைக்கிற் கனமுக வசிய முண்டாம்
காலிலே பூவை வைக்கிற் கதித்ததம் பனமே யாகும்
காலிலா காய மாகிற் கடிவிடங் கொடிய தாமே.

வானிலே காலை வைக்கில் வலியரா வோடு மென்ன
வானிலே நீயை வைக்கில் வல்லினை பலவுண் டாகும்
வானிலே நீரை வைக்கில் மருவுமோ கனமுண் டாகும்
வானிலே பூவை வைக்கில் வசிகர மிகவுண் டாமே.

நீரிலே பூவை வைக்கில் நித்திய வசிய முண்டாம்
நீரிலே வாயை வைக்கில் நின்றவன் ஓடு வானே
நீரிலே காற்றை வைக்கில் நின்றவன் நிலையே நிற்கும்
நீரிலே நீயை வைக்கில் நெருங்கிய பிணிகள் போமே.

---

* தசவாயுக்கள்: இதன் விபரம் 12-வது அத்தியாயத்திற் பார்த்துணர்க.

¶ அட்டகர்மங்கள்:—வசியம், மோஹனம், தம்பனம், பேதனம், ஆகிருஷ்ணம்; உச்சாடனம், வித்துவேஷணம், மாரணம் என்பன.

பூமியில் வானை வைக்கிற் பொருந்திய விஷங்கள் தீரும்
பூமியிற் காலை வைக்கிற் பொருந்துதம் பனமே யாகும்
பூமியில் தீயை வைக்கிற் பொருந்துச்சா டனம தாகும்
பூமியில் நீரை வைக்கிற் புகழ்பெறு வயி மாமே.

இதில் அனேகவித அந்தரங்கங்களுண்டு. அவற்றைக் குரு மூர்த்தியிடத்தில் தொண்டுசெய்து, அவர்கள் மனதுவந்து சொன்னபின் கேட்டுணர்க.

சற்குருமூர்த்தியிடத்திலும், மாதர்களிடத்திலும் வலிந்து இன்பமடைய முடியாது. ஆதலால், குருமூர்த்தி மனமகிழ்ந்தே சொல்லவேண்டும்.

பிரபுலிங்கலீலை.

கோயிலின் மேலி யிருந்துயர் ஞானக் குறிகூறும்
தூயவ ராகிய வாரியர் தாமுஞ் சுடர்செம்பொற்
சேயிழை யாரும் வலிந்துறி வின்பு செயாரென்று
வாயிலி னுலகே வேனென மன்னன் மனத்தெண்ணி.

தசநாடிகள்.

பதினோராவது அத்தியாயம்.

இடைகலை, பின்கலை, சுழுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, குகு ஆக நாடிகள் பத்து.

இடைகலையானது, இடதுகாற் பெருவிரலிலிருந்தும், பின்கலையானது, வலதுகாற் பெருவிரலிலிருந்தும், சுழுமுனையானது, மூலாதாரத்திலிருந்தும் உதயமாகி, இடகலையும், பின்கலையும் சுழிமுனையோடு கலந்து, கண்டத்திற் கத்தரிக்கோல்போல் மாறி, துரியாதீதம் வரையிற்சென்று கபாலத்தை முட்டி, குதிரையின் முகங் கவிழ்ந்து கொண்டிருப்பதைப்போல், இரண்டு நாசிவழியில் இயங்கிக்கொண்டு நிற்பது.

சிகுவை:— மூலாதாரத்தில் உற்பத்தியாகி, அன்னபானாதிகளை விழுங்கும்படிச்செய்வது.

புருடன்:—மூலாதாரத்தி லுற்பத்தியாகி, வலது கண்ணளவில் நிற்பது.

காந்தாரி.—மூலாதாரத்தில் உற்பத்தியாகி, இடது கண்ணளவில் நிற்பது.

அத்தி:—மூலாதாரத்தில் உற்பத்தியாகி, வலது காதளவில் நிற்பது.

அலம்புடை:—மூலாதாரத்தில் உற்பத்தியாகி, இடது காதளவில் நிற்பது.

சங்கினி:—மூலாதாரத்தில் உற்பத்தியாகி, குறியளவில் நிற்பது.

குகு:—மூலாதாரத்தில் உற்பத்தியாகி, அபானத்தின் அளவில் நிற்பது.

மேற்சொல்லிய தசநாடிகளானது, சரீரத்தில் அன்னபானாதிகள் செல்லவும், ஓடவும், நடக்கவும், சுனியவும், நிமிரவும் உதவியாகி; சுப்பிக்கயிற்றைப்போலும், சூத்திரப்பாவை நடிப்பதற்கு நரம்புகள் இணைக்கப்பெற்றிருப்பதுபோலும் நமது சரீரத்தை இழுத்துப் பிடித்துக் கட்டி வைத்திருக்கின்றது.

ஞானவெட்டி.

இடகலையும் பின்கலையும் இரண்டுங் கூடி
இருகாலின் பெருவிரலின் மேலே நின்று
நடுவிலொரு சுத்தரிக்கோல் மாதிரியாகி
நாசிமுனை முட்டிநிற்கும் நயந்து பார்க்கச்
சிடமுடைய சழியின்முனை மூல நோக்கிச்
செகளவு மாதார மாறி நிற்கும்
அடைவான வெங்குவைத்தா னுவுக் குள்ளே
அன்னமுடன் தண்ணீரும் அமைத்த தாண்டே.

தசவாயுக்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன், எனத் தசவித வாயுக்கள்; இவையுடலில் நிற்பவை.

பிராணவாயு:—மூலாதாரத்தில் தோன்றி 12 அங்குலம் ஓடிக் கண்டமென்னும் இடத்தில் 4 அங்குலம் கழிந்துபோய், 8 அங் குலம் மீந்து தானுதித்தவிடத்தில் வந்துநிற்கும்.

அபானவாயு:—உந்திக்கமலத்தின்கீழ் குதத்தையும் குய்யத் தையும் பற்றிநின்று, மல, மூத்திரங்களைக் கழிக்கும்.

வியானன்:—சாப்பிட்ட அன்னபானாதிகளைப் பிரித்து, எழு பத்தீராயிரம் நாடிகட்கும் செலுத்திவைக்கும்.

உதானன்:—புசித்த ஆகாரங்களைச் சரணிக்கும்படி செய்து நிற்கும்.

சமானன்:—புசித்த அன்னபானாதிகளைச், சகல கருவிகளுக் கும், நியாயாநுகூலபோற் சமபாகமாகப்பிரித்து நிரப்பிவைக்கும்.

நாகன்:—விக்கல், முக்கல், விங்கல், திமிரல் முதலியவைகளை யுண்டாக்கும்.

கூர்மன்:—கண்களித்தல், கண்சிமிட்டல், சிரித்தல், புளகாங் கிதமுறல், கொட்டாவிவிடல், மயிர்சிலிர்த்தல் முதலியவைகளை யுண்டாக்கும்.

கிரிகரன்:—ஆயாசம், சோம்பல், தும்மல், இரங்கல் முதலிய வைகளையுண்டாக்கும்.

தேவதத்தன்:—ஓடல், உலாவல், இளைத்தல், வியர்த்தல் முத லியவைகளையுண்டாக்கும்.

தனஞ்சயன்:—உடலைவிட்டு உயிர்நீங்கிய பின்னும் தான்போ காமல், உடலை நீங்கும்படிச்செய்து, உச்சிவழியாய்க் கபாலத் தைப் பிளந்துகொண்டு செல்லும்.

ஞானவெட்டி.

பேரான பிராணன்பெரு மூலத் தன்னில்
பெலத்தவீரா நற்குலத்தில் மீள வாங்கி
சேரான கண்டமதி லோரெட் டாகி
நிலைபிசகா தாலுமது வெளியி லோடும்
சீரான அபானனுந்திக் கமலத் தின்கீழ்
நிரமாக மலசலத்தைக் கழித்து நிற்கும்
ஊரான வியானனுண்ட வன்னந் தண்ணீர்
எழுபத்தி ராயிரா டியிலுஞ் சென்றே.

நின்றிலங்கும் காடியது பிரித்து லவக்கும்
நிகழ்ந்திடுமு தானன்செரிப் பித்தே நிற்கும்
ஒன்றிலங்குஞ் சமானனுண்ட வன்னந் தண்ணீர்
ஒருவருக்கு மேறவொட்டா திருக்கு மாகில்
தன்றிலங்கும் காகனுமே விக்கல் கக்கல்
தணுமிகுத்த கர்மனிரு விழிநீர் பாய்ச்சல்
அன்றிவிழி சிமிட்டிவிக்குங் கிரகரன்முன்
ஆயாசஞ் சோம்பல்தும்ம லசதி யாமே.

சரவிலக்கணம்.

பதினேழாவது அத்தியாயம்.

வலது, இடது என்னும் உபயநாசிகளிலிருந்து இயங்கிக் கொண்டிருக்கும் சுவாசத்திற்கு சரம் என்று பெயர்.

சரம், கலி, வாசி, காடி, கால், மூச்சு, வாயு, சுவாசம், வளி முதலியன ஒருபொருட் பலபெயர்.

சரநூல் சாஸ்திரத்தில், இடதுநாசியில் இயங்குஞ் சுவாசத்தை சந்திரகலியெனவும், வலது நாசியில் இயங்குஞ் சுவாசத்தைச் சூரியகலியெனவும், இரண்டு நாசியிலுங்கலந்து நடக்கும் சுவாசத்திற்குச் சுழிமுனை யெனவும் கூறப்பட்டிருக்கின்றது; அவையாவன:—

சரநூல்.

பார்க்கிலிடை யிடமதுவே திங்க ளாகும்
பகலவனும் பின்கலையே வலம தாகும்
ஏற்கவுரை சுழிமுனைதா னடுவா மங்கி
இடையான சந்திரனே அமுத மாகும்.

இம்மூன்றிவ்வாறிருக்க,

விஞ்ஞானதீபம்.

வலங்கொண்ட இடகலையைப் பற்றி யேறி
வாகான சுழிதனிலே நின்று யானுல்
சலங்கொண்டு பொழிவதுபோ லுள்ளே மாதம். அறியும்

தாயாவி ஞாயிர்செவ்வாய் சனிவி யாழன்
தூலங்குபுதன் வெள்ளிதிங்கள் மதியா மென்றே
தாயகமாய்ச் செலுமையான் தனக்குச் சொன்னுர்
தப்பிதென்று வுணராமல் அவனுங் கேட்டான்

வாய்ஞான மல்லவிது யோக மார்க்கம்
வழுவாதே கலையதனை வசமாய் மாற்று
காயமதாய்ச் சிவன்மொழிபோற் கலையை மாற்றிக்
கலக்கினு லுனக்கலக்குங் கருத்தாய் நில்லே. எனவும்

ஞானமணிமாலை.

இடப்புற மியங்கும் போது இறையவ னெளியைக் காட்டுங்
கடற்பெறு வலது பாகங் கக்கிற ருலைக் காட்டும்.

எனவுங் கூறியிருத்தலால், ஞானசரதூலில், இடதுநாசியில் நடக்கும் சரம் சந்திரகலையெனவும், வலதுநாசியில் நடக்கும் சரம் சூரியகலையெனவும் கூறியிருப்பதை யோசிக்குமிடத்திற், சுருதி, யுத்தி, அநுபவம் இம்மூன்றிற்கும் வேறுபட்டிருக்கிறது. இவ் வாக்கியத்தைச் சரசாஸ்திரத்தில் அநுபவமும், பாண்டித்வமு முடையவர்கள் ஒப்புக்கொள்வார்களென்பதற் கையமில்லை.

ஞானவெட்டி.

கத்தரிக்கோல் மாறல் சனகசபை வீட்டினுள்ளே
வித்தாய் விளைத்ததுகாண் வித்து.

என்னுங் கருத்தின்படி, மூலாதாரத்திலுதித்த சுவாசம், கண்டத்திற் கத்தரிக்கோல்போன்று இடதுநாசியிலுள்ள சுவாசம் வலது நாசியிலும், வலது நாசியிலுள்ள சுவாசம் இடதுநாசியிலும் மாறி விட்டபடியால், சரதூலுக்கு விரோதமாகவே வலது நாசியில் நடக்கும் சுவாசம் சந்திரகலையாகவும், இடதுநாசியில் நடக்கும் சுவாசம் சூரியகலையாகவும் பெயர்பெறும்.

கலைகளுக்குப் பால், திணை, இராசி இவைகள் கூறுமிடத்து, சந்திரகலை, பெண்பால்; சூரியகலை, ஆண்பால்; கழிமுனை, அலியாகும். சந்திரன், சூரியன் இரண்டும் உயர்திணை; சுழிமுனை, அஃறிணை. இராசியில் சந்திரன், சராசி; சூரியன், திராசி; சுழிமுனை, உபயராசி. இவைகள் முறையே, சோம, சூரிய, அக்கினியெனப் பெயர்பெறும். ஒவ்வொரு நாடிகளுக்குள்ளும்: பிரிதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்னும் பூதியங்களுண்டு; அவை முறையே, மண், நீர், நெருப்பு, காற்று, வான் என்று பெயர்பெறும். அவை களை எப்படித் தெரிந்துகொள்வதெனில்,

மூக்கிலிருந்து வருஞ்சுவாசம் மூக்குத்தண்டைச் சார்ந்தோடினால், பிரிதிவியின் கூறு. கிழ்நோக்கி யோடினால், அப்புவின் கூறு. மேற்புறமாகப் பாய்ந்தோடினால், தேயுவின் கூறு. மூக்குத்தண்டிற்கு நேராகிய மற்றொரு புறத்தைச் சார்ந்தோடினால், வாயுவின் கூறு. நான்குபக்கமும் கலந்தோடினால், ஆகாயத்தின் கூறென்றறிக.

பிரிதிவி சரம் பொன்னிறம்; அப்பு வெண்மை; தேயு செம்மை; வாயு கறுமை; ஆகாயம் படிகம். அப்போது சரம் பார்ப்பவர் கண்டத்தில் எவ்விதவுணர்ச்சி தோன்றுமெனில், பிரிதிவிக்குக் கண்டந்தித்திக்கும்; அப்புவிற்குத் துவர்க்கும்; தேயுவிற்கு உவர்க்கும், அல்லது அழற்சியாயிருக்கும்; வாயுவிற்குப் புளிக்கும்; ஆகாயத்திற்குக் கசக்கும்.

சரத்தின் வடிவம் எவ்விதமாயிருக்குமெனில், பிரிதிவி நாற்கோணம்; அப்பு அட்டமிச்சந்திரன்; தேயு முக்கோணம்; வாயு அறுகோணம்; ஆகாயம் வட்டம். இவ்விதன்றிச், சரம் ஓடுகின்ற நிட்சியைக் கூறுமிடத்து:—

பிரிதிவி 12 அங்குலம் ஓடும்; அப்பு 16; தேயு 8; வாயு 4; ஆகாயம் 1 என்றறிக.

இவ்விதமான குணங்குறியுள்ள சுவாசத்தை, ஒவ்வொருநாளிலும் அருணோதயத்திற்கு ஐந்து நாழிகைக்குமுன், அதாவது காலை 4 மணிக்கே எழுந்திருந்து, சூரியோதயமாகிற வரையிற் பின்வரும் வாசர நிர்ணய அட்டவணையின்படி சரியாக நடந்து வருகிறதா! என்பதை யோகாப்பியாசிகள் எச்சரிக்கையுடன் கவனிக்கவேண்டும்.

வாசர நிர்ணயம்.

பதினெட்டாவது அத்தியாயம்.

திருமந்திரம்.

வெள்ளிவெண் மஞ்சள் விளங்கும் புதனிடம்
ஒள்ளிய மந்த னிரவிசெவ் வாய்வலம்
வள்ளிய பொன்னே வளரும் பிறையிடம்
தெள்ளிய தேய்பிறை தான்வல மாமே.

வெள்ளிவெண் டிங்கள் விளக்கும் புதன்மூன்றுஞ்
தள்ளி யிடத்தே தயங்குமே யாமாகில்
ஒள்ளிய காயத்துக் கூன மிலையென்று
வள்ளல் நமக்கு மறிந்துரைத் தானே.

ஔவை குறள்.

வெள்ளி புதனொடு திங்க ளிடமெனச்
தள்ளுமின் காலசரம்.

செவ்வாய் சனிஞா யிறவல மாகவே
கொள்ளிலிவ் வாறிடரு மில்.

வளர்பொன் னிடம்பிறைத் தேய்வு வலமாம்
வளர்பிறை யென்றே மதி.

வலத்திற் சனிக்கே யிராப்பகல் வாய
செலுத்தபே ராது செயல்.

மேற்கூறிய செய்யுட் கருத்தை இன்னுஞ் சுலபமாகத் தெரிந்துகொள்ள வேண்டுமாகில், அடியிற் காட்டியிருக்காநின்ற வார சர நிர்ணய அட்டவணையிற் பார்த்து நன்குணர்க.

வார சர நிர்ணய அட்டவணை.

வாரங்கள்.	காலங்கள்.	காடிகன்.	காசிகள்.
செவ், சனி, ஞாயி.	காலைமணி 4-முதல் 6-வரை	சந்திரன்.	வலது.
வெள், புத, திங்.	,, ,,	சூரியன்.	இடது.
வளர்பிறை; வியாழன்.	,, ,,	சந்திரன்.	வலது.
தேய்பிறை; வியாழன்.	,, ,,	சூரியன்.	இடது.
சனி.	இராப்பகல்.	சந்திரன்.	வலது.

மேற்காட்டிய அட்டவணையின்படி, சரம் நடக்காமல் மாறுதலாக நடத்தொடங்குவதில், காலை 4 மணிக்கே நித்திரையை விட்டெழுந்துட்கார்ந்து, மாறுதலாக நடக்கும் சரத்தை, 12-வது அத்தியாயத்திற் கூறியிருக்கும் விபரப்படி மாற்றிவிட்டு அப்பியாசஞ் செய்யவேண்டும்.

உரோமர்.

பண்ணுன தெரிசனைதான் வகையாய்ச் சேரு
பண்பாக வுதயத்தி லேத்து காழி
ரண்ணுகை ரண்டெழுத்தல் குலத்திற் றாக்கி
கயந்தனதீ வெகுவாக எடுத்துப் பாரு
வின்னேடு கடற்துலிடுஞ் சோதி யப்பா
விள்ளார்கள் மகத்தான பெரியோ ரையா
அண்ணலெலும் அரனுமைக்குச் காதல் சொன்னூர்
அக்குறியு மிக்குறியு மொக்கும் பாரே.

சரத்தை மாற்றும் வகை.

பதினேந்தாவது அத்தியாயம்.

வலது நாசியில் நடக்கும் சுவாசத்தை இடது நாசிக்கும், இடது நாசியில் நடக்கும் சுவாசத்தை வலதுநாசிக்கும் மாற்றி விடலாம். அஃதெப்படியெனில்,

வலது நாசியில் நடக்கும் சுவாசத்தை இடது நாசிக்கு மாற்றவேண்டுமானுல், வலப்புறமாக ஒருக்கணித்துச் சாய்ந்துட் கார்ந்து, வலது காலின்மேல் இடது காலைப் பெருவிரலோடு பெருவிரலும், முழந்தாளோடு முழந்தாளும், பொருந்தும்படியாக வைத்து; வலக்கரத்தைப் பூமியிலூன்றிக்கொண்டு, இடதுகாற் பெருவிரலின் பெரிய நகம்பைக் கண்ணுக்காலென்று சொல்லுமிடத்திற்குச் சமீபத்தில், இடக்கரத்தின் நடுவிரலினுற் சற்றுநேரம் அசைத்துவருடிக்கொண்டிருக்கின் இடது நாசிக்கு வந்துவிடும்.

இடது நாசியில் நடக்கும் சுவாசத்தை வலது நாசிக்கு மாற்றவேண்டுமானுல், இடப்புறமாக ஒருக்கணித்துச் சாய்ந்துட் கார்ந்து, முன்சொல்லியபடியே இடதுகாலின்மேல் வலதுகாலைப் பெருவிரலோடு பெருவிரலும், முழந்தாளோடு முழந்தாளும் பொருந்தும்படியாக வைத்து; இடக்கையைப் பூமியிலூன்றிக்கொண்டு, வலதுகாற் பெருவிரலின் பெரிய நகம்பைக் கண்ணுக்காலின் சமீபத்தில், வலக்கரத்தின் நடுவிரலினுற் சிறிதுநேரம் வருடிக்கொண்டிருக்கின் வலது நாசிக்கு வந்துவிடும்.

சரத்தை மாற்றும் வகை.

சுவானுபவ விளக்கம்.

வலதுநா சியிலோடுஞ் சுவாசந் தன்னை
மறுநாசி தனிற்செலுத்த மனமுண் டாஞல்
வலப்புறமா யொருக்கணித்துச் சாய்ந்துட் கார்ந்து
வலக்கான்மே லிடக்காலைப் பொருந்தச் சேர்த்து
வலக்கரத்தை நிலத்தூன்றி யிடது காலின்
மணிகாம்பை யிடக்கரத்தால் வருடி நோக்க
வலதுநா சியில்நடந்த சுவாச மப்போ
மறுநாசி தனிலியங்கும் வகையாப் பாரே.

இஃதன்றி, வலப்புறமாக ஒருக்கணித்துப் படுத்து வலக்கையைச் சிரசின்கீழ் வைத்துச் சயனித்திருந்தாலும், வலக்கரத்தைப் பூமியிலூன்றி வலது பக்கத்து மூதுகு, சுவர், அல்லது தூண் முதலியவைகளிற் படும்படி சாய்ந்துகொண்டிருந்தாலும் இடப்புறத்திற்குச் சுவாசம் மாறிவிடும். இங்ஙனமே இடப்புறத்திற்செய்ய, இடது நாசியிலோடிய சுவாசம் வலது நாசிக்கு வந்துவிடும்.

சுவாசமானது, ஒரு நாசியிலிருந்து மற்றொரு நாசிக்கு மாற வேண்டுமாகில், மேற்கூறிய மாதிரியன்றி மற்றொரு விதமுஞ்செய்யலாம்; அஃது சாமான்யர்கட்கு இயலாது. அஃதாவது:—

ஒரு சுவரின்மீது, சுமார் ஒருரூபாயகலமுள்ள சாக்குத்திலுத்தைத் தீட்டி, மனத்தை ஏனைய விடயங்களிற் புகவிடாமல் அந்தத் திலகத்தின்மீதே செலுத்திக்கொண்டிருக்க, அஃது ஒருரூபாயகலத்திலிருந்து முக்கால்ரூபாய் வடிவாகவும், சிலகாலில் அரை, கால், அரைக்கால் ரூபாய் வடிவாகவுந் தோன்றி முடிவிற் சூனியமாகிவிடும்.

அப்போது ஏந்த நாசியிலிருக்கும் சுவாசத்தை எந்தநாசிக்கு மாற்றவேண்டுமென்று நினைத்தாலும் அங்ஙனமே மாறிவிடும். அதற்கு, முன் சொன்னமாதிரி கை, கால் முதலிய அவயவங்களின் ஒத்தாசை தேவையில்லை. அந்தத் திலகம் உண்மையில் ஒருரூபாய் வடிவினதாயிருந்தும், அப்பியாசஞ் செய்தவர்களுடைய மனோசக்தியின் முதிர்ச்சியால் அஃது சூனியமாகிவிட்டது. அதுபோலவே, தனது ஏதார்த்த வடிவத்தைச் சிந்தித்துப் பாவனை முற்றிய அதுஷ்டானிகள், தன் அபிப்பிராயம்போல் நினைத்தமாத்

திரத்திலேயே ஒரு நாசியிலிருந்து மற்றொரு நாசிக்காவது, அல்லது, இடகலை, பின்கலையென்னும் உபயநாடிகளிற் சூரியம்பண்ணிச் சுழிமுனை நாடியின் சிறிய சஞ்சாரத்திலாவது சுவாசம் மாறிச் செல்லும்.

எதார்த்த வடிவம் இஃதென்பதற்குப் பிரமாணம்:—

நூல்வாசிட்டம்.

உன்னுருவை நீகானும் ஞானக் கண்ணில்
ஒன்றலா ஆசையெனுங் காச மூலம்
அன்னதுதிர்த் தளக்கமலத் துன்னே கொய்ய
அறிவுடைய வன்மனத்தர் லுன்னு லுன்னே
இன்னபடி யெனகோக்கி மயக்க மெல்லாம்
இறையுமற வொழித்தின்ப மெய்தி நீற்பாய்
பின்னவனே யெனமுன்னே னுரைத்தா னென்று
பெருந்தகைக்கு வசிட்டமுனி பேசி னானே.

கைவல்ய நவநீதம்.

உன்முகம் போற்கண் ணுடிக் குள்ளொரு முகக்கண் டாற்போற்
றின்மய வடிவின் சாயைத் தத்துப்போற் புத்தி தோன்றும்
றின்மனே விருத்தி யர்த்த நிழல்வழி யாய லாவும்
தன்மகன் மகனே யித்தைத் தானன்றே ஞான மென்பார்.

நடக்கும்போது துணியைப் பந்துபோற் சுருட்டியாவது அல்லது குடைமுதலிய வஸ்துக்களையாவது கமுக்கட்டில்வைத் தழுத்திக்கொண்டு நடந்தாலும், மற்றொரு பக்கத்து நாசிக்குச் சுவாசம் வந்துவிடும். இதையுத்தேசித்தே யோகாப்பியாசிகள், வாசிக்கோலென்னும் யோகதண்டத்தைச் சதா தமது கக்கத்தில் வைத்து, கருதி, அநுபவப்படி சரத்தை மாற்றிக்கொண்டிருக்கின்றார்கள். முற்கூறிய அட்டலக்ஷணையின் விபரப்படி வாரங்களிதோறுங் கண்ணுக் கருத்துமாயிருந்து சரத்தை நிதானித்து அப்பியாசித்து, சற்தேகமானவைகளைக் குருமூர்த்தியின் கருணையால் நிவர்த்தி செய்துவராநின்ற அநுபவிகள், காயசித்தியும், மனோல்லாசமும் பெறுவார்கள்.

பாலியாலந்தர்.

மடைவாயிற் பட்டபோல் நடைபார்த் திராமலே
மற்றென்ன கற்றறிவையோ.

சரத்தை மாற்றும் வகை.

துணங்குடியார்.

பன்னிரு கால்வெளி மானே—வெளி
பாயாம லுள்ளே மடக்கிடத் தானே
சென்னியி லூறுஞ்செந் தேனே—என்று
சிந்தனைவத் துக்கட்டித் தந்தரு ளித்தான் (எங்கள்)

கட்டுப் படாதச்ச மட்டங்—காலேச்
கட்ட வறியாரைக் காலினுல் வெட்டும்
வெட்டிய கால்களே லெட்டுமம்—என்று
வேகச் சுடனே விதித்தரு ளித்தான் (எங்கள்)

எட்டெட்டை யோரெட்டுக் கட்டும்—அந்த
எண்ணுன்கை யுமந்த வோரெட்டுக் கட்டும்
முட்டுமீ ரெட்டையுங் கட்டும்—என்று
முன்னுன்கைக் கட்டி முடித்தருளித்தான் (எங்கள்)

என்று கூறிவருவதாற் சகல சற்சேக விபரிதங்களையுங், குரு மூர்த்தியையடுத்து, அவருக்கு மனது வரும்படி நடந்து, அவராற் சொல்லக்கேட்டுணர்க.

யோசாப்பியாகிகள், தனக்குச்சென்ற ஆயுள்போக எஞ்சிய ஆயுள் எவ்வளவு இருக்கிறதென்று அறிந்துகொள்ள * அயனசரம் பார்ப்பதுண்டு. அஃது தையீ முதற்றேதி உத்தராயனகாலத்திலும், ஆடிமீ முதற்றேதி தட்சணாயன காலத்திலும் ஒருநாளுக்குமுன்னதாகவே ஒருவேளை அரைவயிறு அன்னமுண்டு, தத்துவங்களாகிய கருவிகரணங்களைப் பரிசுத்தமாக்கி, மூற்கூறிய காலவரையாகிய காலே 4 மணிக்கே எழுந்திருந்து சரத்தைக் கவனிப்பார்கள். அப்போது தையீ இடதுபக்கமும், ஆடிமீ வலதுபக்கமுமாகச் சரம் ஓடவேண்டும். அங்ஙனமின்றி மூணுக்கியங்குமாகில், அபாயக்குறி யென்றுணர்ந்து சதாப்பியாசஞ் செய்யத் தொடங்குவார்கள்.

உத்தராயன காலமாகிய தைமாதத்தில் அப்பியாசந்தொடங்கும் அநுஷ்டானிகள், இருவினையிற் சிக்கி யுழலமாட்டார்கள். தட்சணாயன காலமாகிய ஆடிமாதத்தில் அப்பியாசந் தொடங்கும் அநுஷ்டானிகள், அவதாரத்தைப் பொருந்துவார்கள்.

---

* அயனம் என்பது, ஆறுமாதங்கொண்ட கால அளவு.

ಭಗವದ್ಗೀತೆ.

ಅಂಗಿಯೊಳಿ ಪಕಲ್ವೆಂಮೆ ಯಾಂಗಾಲತ್ ತೇವಲ್ತಯಾ ಮಲೈಕ ಳೋಡು
ತಂಗಿಯಅ ತಿಂಗಳುಡ ಯುತ್ತರಾ ಯಣಞ್ಚಾರ್ವರ್ ಮಿತ್ತುಞ್ ಚಾರಾರ್
ಕಂಗುಲ್ಪುಕ ಳಅಪ್ಪೆನ್ನುಞ್ ಕಾಲತ್ತೇ ವಅಯಅಡಂತ್ತು ಪಿಱಕ್ಕುಞ್ ಕಂಡಾ
ಯೆಂಗುಮಱ ತಿಂಗಳುಡಅತ್ ತೆಟ್ಚಣು ಯನತ್ತಿಱಂತ ಯೋಗಿ ಯೆಂಬಾಂ.

ಸರ ಲಾಭ ನಷ್ಟಂ.

ಪದಿನಾಱವತು ಅತ್ತಿಯಾಯಂ.

ಇಪ್ಪಿರಪಞ್ಚತ್ತಿನ್ ಕಣ್ಣುಳ್ಳ ಸಕಲ ಸಿವರಾಕಿಂಟ್ಟುಂ. ಒರು ನಿಮಿಷತ್ತಿಱ್ಕುಪ್ ಪದಿನೆಂಱು (15) ಸುವಾಸಂಕಳ್ ವೀತಂ, ದಿನಮೊಂ ಱಿಱ್ಕು ಇರುಪತ್ತೋರಾಯಿರತ್ತು ಅಱುನೂಱು (21,600) ಸುವಾಸಂಕಳ್ ನಡಕ್ಕುಮೆಂಱು ಮುನ್ನಮೇ ಕೂಱಿಯಿರುಕ್ಕಿನ್ಱೋಂ. ಅನ್ತಚ್ ಚುವಾ ಸಂಕಳ್.

(1) ಸಾದಾರಣಮಾಕ ಇರುಕ್ಕುಂಬೋದು, 12 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ವೆಳಿಯಿಲ್ ವಂದು, 8 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್, 4 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟಮಾಗಿನ್ಱದು.

(2) ಪೇಸುಂಬೋದು 16 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ವೆಳಿಯಿಲ್ ವಂದು, 8 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್, 8 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟ ಮಾಗಿನ್ಱದು.

(3) ನಡಕ್ಕುಂಬೋದು 20 ಅಂಗುಲ್ ಸುವಾಸಂ ವೆಳಿಯಿಲ್ ವಂದು, 10 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್,10 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟ ಮಾಗಿನ್ಱದು.

(4) ಕಡಿನಮಾನ ವೇಲೈ ಚೆಯ್ಯುಂಬೋದು 24 ಅಂಗುಲ ಸುವಾ ಸಂ ವೆಳಿಯಿಲ್ವಂದು, 12 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್, 12 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟಮಾಗಿನ್ಱದು.

(5) ಸಂಡೈಯಿಲ್ 36 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ವೆಳಿಯಿಲ್ ವಂದು, 24 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್, 12 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟಮಾ ಗಿನ್ಱದು.

(6) ನಿತ್ತಿರೈಯಿಲ್ 48 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ವೆಳಿಯಿಲ್ ವಂದು, 30 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ಉಟ್ಚೆಲ್ವದಾಲ್, 18 ಅಂಗುಲ ಸುವಾಸಂ ನಷ್ಟಮಾ ಗಿನ್ಱದು.

(7) வேகமாய் ஓடும்போது 56 அங்குல சுவாசம் வெளியில் வந்து, 28 அங்குல சுவாசம் உட்செல்வதால், 28 அங்குல சுவாசம் கஷ்டமாகின்றது.

(8) ஸ்திரீ சையோகத்தில் 64 அங்குல சுவாசம் வெளியில் வந்து, 24 அங்குல சுவாசம் உட்செல்வதால், 40 அங்குல சுவாசம் கஷ்டமாகின்றது.

இவ்விதம் தினமொன்றிற்கு 7,200 சுவாசங்கள் செலவழிந்த போது, எஞ்சிய 14,400 சுவாசங்கள் உள்ளடங்கும்.

மெய்ஞ்ஞான சதகம்.

விதமாக வடலூர்குள அடைச்ச மூச்ச
விர்த்தியோடு குல்லிரமா யிருக்கும் போதே
இதமாக வீராறங் குலமே யோடும்
இருசான்கா மங்குலமே யேறு முள்ள
திதியாகப் பேசுகையிற் பதிலு ரேடும்
குடியாக விருசான்கு திடத்துன் னேறும்
கதிரடையி லிருபதுபோய்ப் பத்து மீளும்
கடும்வேலைக் கூசான்கில் மூசான் கேறும்.

முன்னேறுஞ் சண்டையிலே யாரு மேறி
மூவெட்டா மங்குலமே முறையிற் செல்லும்
கண்மூடிச் சயனமிடி லாநெட் டோடல்
கருதிவரு மையாறு சூதிப பாராய்
உன்னியுன்னி யோடுகையி லேம்பத் தாறு
ஒன்றக்குப் பாதியடா வுயர வேறும்
இன்மூலையான் சேர்க்கையிலே யெட்டெட் டோடி
யெண்மூன்று மங்குலமே யேறும் பாரே.

அன்பு.

பதினேழாவது அத்தியாயம்.

அன்பென்று சொல்லப்படுவது, பக்தி முதிர்ந்த ஆசையாகும். அது, தலையன்பு, இடையன்பு, கடையன்பு என மூவகைப் படும்.

தலையன்பு:—கண்ணப்ப நாயனுடைய அன்பையும், தன் பிராணநாயகன் உயிர் நீங்கினனென்று காதிற்கேட்டவுடனே, தன்னுயிரையும் இழக்கின்ற காயகியின் அன்பையும் தலைமையான பேரன்பு என்று சொல்லப்படும்.

இடையன்பு:—அரக்கும், மெழுகும் அனலிற்கண்டபோது சிறிது சிறிதாக மெல்லவருகுதல்போலத், தமக்கன்பாயுள்ள ஓர் வஸ்துவை நேரிற் காணுங் காலத்தில்மாத்திரம், மனமானது உருகிப் பரவசம் அடையும். அவ்வஸ்து பார்வையைவிட்டு நீங்கினால், அந்த அன்பும் அங்கனமே நீங்கிவிடும். அதையும், தன் நாயகன் மரித்தபின் உடன்கட்டை யேறுபவளுடைய நடுத்தரமான அன்பையுமே இடையன்பு என்னப்படும்.

கடையன்பு:—ஓர் ஆயுதத்தை நெடுநேரந் தீட்டத்தீட்டக் கூர்மையுண்டாவதுபோல், அன்பனும், அன்பிற்குரிய வஸ்துவும் நெடுங்காலம் பழகியபின்னரே அந்த அன்பு உதயமாகும். அஃது எவ்வளவுக் கெவ்வளவு பிரிவேற்படுகின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு அந்த அன்பும் நீங்கிவிடும். அதையும், நாயகனது பிராணன் பிரிந்தபின் சிலமாதம் வரையில் நினைப்புவந்த சமயத்தில் அவனை நினைந்து நினைந்து அழுதுகொண்டிருக்கின்ற காயகியின் மந்தரமான அன்பையுமே கடையன்பு என்று சொல்லப்படும்.

முதன்மையான தலையன்பு என்பதை இக்காலத்திற் காணுவது மிகவும் அருமை.

தாயுமானவர்.

காக மோடுகழு கலகை நாய்களிக்
கூற்று சோறிடு தருத்தியைக்
காலி ரண்டுவ வாசல் பெற்றுவளர்
காம வேண்டன சாலையை
மோக வாசைசமுறி யிட்ட பெட்டியைமு
மலமி குந்தொழுகு கேணியை
மொய்த்து வெய்கிருமி தத்து கும்பியை
முடங்க லார்கிடை சரக்கினை

மாக விந்த்ரதனு மின்னே யொத்திலக
வேத மோதிய குலாலனுர்
வினைய வெய்யதடி காரு ணயமன்
வந்த டிக்குமொரு மட்கலத்
தேக மானபொய்யை.

என்று ஆன்றோர்களால் இகழ்ந்துரைக்கப்பட்ட இம்மானிடசரீர மானது, பரிகத்தமடைந்து எல்லோர்களாலும் வியந்து பாராட்டத்தக்க அரும்பொருளாவது யாதினுலென்று ஆராய்ந்துணருமிடத்து, 'அன்பு' என்னும் அரும்பெருஞ் செல்வத்தினுலென்பது செவ்வனே விளங்குகின்றது.

ஆதரவில்லாத ஏழை எளியவர்களிடத்தில் எவ்விதப் பிரதிபிரயோசனத்தையுங் கருதாமல் மனமிரங்கி, அவர்கட்கு உணவு முதலியவைகள் கொடுத்து நாம் உபசரிக்கும்போது ஒருவகையான உள்ளக்கிளர்ச்சி நமதிதயத்தில் தோன்றக் காண்கின்றோம். அஃது, கல்வி, கேள்வி, சற்சங்கமுதலிய நல்லொழுக்கங்களால் உண்டாகும் ஓர் அருமையான அன்பென்னும் அறப்பொருள்.

நெல்மணியுடன் பிறந்த கருக்காயை விக்கின்மைபற்றி நெற்பதரென்று சொல்லுகின்றோம். அதுபோல், கடவுளிடத்தில் வைக்கவேண்டிய அன்பென்னும் வித்தில்லாத மனிதர்களை மனிதப்பதரென்று சொல்லப்படும்.

தலையன்பானது ஒருவருக்குத் திடீரெனவுண்டாவது அருமையானதுபற்றி, அவரவர் தாய், தந்தை, மனைவி, மக்கள், பந்து, மித்திரர்கள் முலமாய் இயற்கையிலேயே யுண்டாகும் அன்பை, இல்லறதர்மத்தின் வழியாகக் கடவுள் திருவடியைநாடி மெல்ல மெல்லச் செல்வதற்காகவும், அன்பென்னும் பயிரைப் பூரணமாய் வளர்ப்பதற்காகவுமே, நமது முன்னோர்கள் இன்றியமையாத இல்லற தர்மத்தை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இதுகாரணம் பற்றியே! ஔவைப் பிராட்டியாரும், "இல்லறமல்லது நல்லறமன்று" எனக் கூறியுள்ளார்.

சிங்கம், புலி, காடி முதலிய துஷ்டஜந்துக்களும், தன் தன் குட்டிகளிடத்தில் அன்புசெலுத்திப் பாலுணவுகொடுத்துக் காப்

பாற்றுவதைப்போல், நாமும் முதலில் நமது, தாய், தந்தை, மனைவி, மக்கள், விருந்தினர், சுற்றத்தார், நண்பர் மூலியமாய் அன்பென்னும்பயிர்முளைத்துத் தலைகாட்டும்படிச்செய்து, அதன் மேல் "எவ்வியாரிடத்திலும் ஆற்றச்சலம் பல கிராமங்களிலுள்ள வயல்கள்தோறும் பாய்ந்து, முடிவிற் சமுத்திரத்தைச் சேர்வது போல்," அவ்வன்பு முதலில், இனசனத்தார்மீதும் அதன்மேற் சகல வுயிர்கள்மீதும் பரவி, முடிவிற் கடவுள் திருவடியை நாடும்.

எலும்பில்லாத புழுவை வெய்யில் காய்ந்து கொல்லுவது போல், தருமதேவதையானது அன்பில்லாதவரைக் கோபித்துத் தண்டனைசெய்யும் என்னுங் கருத்தையடக்கிப் பொய்யாமொழிப்புலவர்,

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்.

என்றுதமது திருக்குறளில் திருவாய்மலர்ந்திருக்கின்றார். அன்பிலவரை, அல்லது அன்பிலவனை என்று சொல்லாமல், அன்பிலதனை என்று கூறியமையால், அன்பில்லாதவரை உயர்திணைப்பொருளாகக் கூறப்படாதென்று, அஃறிணைப்பொருளாக, அதுவதனை என்ற இழிவதோன்றக் கூறியுள்ளார்.

மூன்று லோகங்களிலும் பரீட்சிக்கமுடியாத அருமையான அன்பென்னும் வித்து, மனமென்னுங் கழனியில் முளைக்க ஆரம்பிக்கும்போது, சாந்தகுணமென்னும் தண்ணீர் விட்டுப்பாய்ச்சி, சுயப்பிரயோசனமென்னுங் கள் முளைகளைக், கல்வி, கேள்வியின் பயனுயிய நல்லொழுக்கமென்னும் கருவியாற் கிண்டியெறிந்து, மாயையென்னும் பல மிருகங்கள் அணுகிப் பயிரைத் தின்று விடாதபடி, வைராக்யமென்னுங் காவலேற்படுத்தி, அருளென்னுங் கதிர்வாங்கிப், பரிபாகப்படுத்திய ஞானானந்தமென்னும் கெல்மணியைச், சுக்கும, காரண சரீரமென்னும் களஞ்சியத்திற் போட்டு நிரப்பிவைக்க, ஒவ்வொருவரும் முயற்சிக்கவேண்டியது அத்தியாவசியம்.

சில பிராணிகளைச் சிலபாஷகர்கள் வருத்தும்போது அதைக் கண்டு ஆனந்தமடையும் கன்னெஞ்சகர்களைக், கை, கால் முதலிய

மனித அவயவம் இருப்பதைக்கொண்டு, அவர்களே இரண்டுகால் மனித மிருகமென்றே சொல்லவேண்டும்.

கலைமையான பேரன்பே! ஓர் வடிவமாகவந்த ஸ்ரீகண்ணப்ப நாயனர், சிகாளத்தி மலையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகாளத்தியப்பரைத் தரிசித்தபோது, அப்பெருமானின் திருநேத்திரங்களிலிருந்து இரத்தம் பீரிட்டோடுவதைக்கண்டு, "ஆட்டுகின்ற கயிறு அற்றபொழுது விழுந்துவிடுகின்ற காடகப் பாவையைப்போன்று" பதைபதைத்து, நெடுநேரம் உள்ளுயிர்த்தலின்றி இறந்தவர்போலக்கிடந்து, ஒருவாறு தெளிந்தெழுந்து, பன்முறை தமது கையினல் உதிரத்தைத் துடைத்தும் மாறுதைக்கண்டு, மீட்டும் விழுந்து புரண்டெழுந்து, தமது மூகமெல்லாம் உதிரஞ்சோரவும், மார்பு வீங்கவும், கைகளாலறைந்து கொண்டும், கலிவளந்து போகும் விதமாய்க் கற்களில் மோதிக்கொண்டும், எமது பெருமானுக்கு இத்தீங்கு விளைந்தது எனக்குப் பகைவர்களாகிய வேடுவர்களாலோ! அல்லது இம்மலையிற் சஞ்சரிக்கும் கொடிய மிருகங்களினலோ! தெரியவில்லை. அப்பகையைக் காண்பேனுயின் கொல்லாமல் விடுவேனே! என்று, நெடுந்தூரம் ஓடித்தேடியும் பகையைக் காணுமையால் மனம்வருந்தி, மீண்டும்வந்து தோத்திரஞ்செய்யலாயினர்.

சீகாளத்திப்புராணம்.

மலையிடை எனக்கு வாய்த்த மாகத மணியே! செம்பொன்
இலகொளிக் குன்றே! யெந்தா யெம்பிரா னின்கண் புண்ணீர்
கலுழ்தரற் கென்னே கொல்லோ! காரணந் திருவாய் சற்றும்
அலர்கிலை யென்கொ லென்றன் ஆவிசோர்க் தருகு சென்றன்.

கையினற் அடைத்தான் பல்லாற் காலுதல் தவிரா தாக
வையினேத் தழுவிக் கொண்டான் அவரினுன் நெடும்போ தெல்லாம்
பையென விடுத்துப் பின்பு பச்சிலே மருந்து தந்து
பெய்யினெய் திரு மென்று பெயர்த்தனன் மருந்து கொய்ய.

மேற்கூறிய விதமாகத் தோத்திரஞ்செய்து, கண்ணினது புண்ணுக்கு மருந்து பிழிந்தாற் சௌக்யமாகிவிடுமென்று அடவி முழுதுக்திரிந்து, கண்டயிலைகளே யெல்லாம் பிடுங்கி ஓடிவந்து பிழிந்தும் குருதி நிற்காமையைக்கண்டு ஆவிசோர்ந்து, இனி,

இதற்கு யானென் செய்வேன்! என்று கெடுகோரம் ஆலோசித்து, "ஊனுக்கு ஊனிடல்வேண்டும்" என்னும் பழமொழி ஞாபகத் திற்குவர, உடனே தன் கண்ணைத் தன் கையிலிருந்த அம்பினுல் தோண்டி, இறைவர் கண்ணிலே அப்பினர். உடனே இரத் தம் நின்றுவிட்டதைக்கண்டு அடங்காத ஆனந்தமென்னும் சந் தோஷசாகரத்தில் மூழ்கி, ஆனந்தநிர்த்தனம் ஆடினர், நான் செய்த பாக்கியமே! பாக்கியம்! கல்லவுபாயஞ் செய்தேன்! என்று வியந்தார்.

சீகாளத்திப் புராணம்.

ஒடினன் றிசைக ளெல்லாம் உடம்பெல்லாய் குலுங்க கக்கான்
பாடினன் வாயில் வந்த படியெல்லாங் கைகள் கொட்டி
யாடினன் துள்ளித் துள்ளி யாரவா ரித்தா னின்று
காடினன் செய்த செய்கை கன்றுகன் றென வியந்தான்.

அப்படிக் குதூகலம் அடைந்தகொண்டிருக்கும் வேளையில், இடக்கண்ணிலிருந்து இரத்தம் வடியக்கண்டு, "அக்கினி ரகசத் தில் விழுந்து நெடுங்காலந் துன்புற்று, அதனினின்றும் நீங்கிச் சுவர்க்க இன்பத்தை அடையுமொருவன் மீண்டும் அந்நரகத்தில் வீழ்த்தவிட்டாற்போல," திண்ணனர் மகிழ்ச்சிமாறிக் கங்குகரை யில்லாத துயர்க்கடலில் அழுந்தி எங்கி, ஒருவாறு தெளிந்து, "மருந்தைக் கண்டுகொண்டேன்! மருந்தைக் கண்டுகொண் டேன்!" அதாவது எனக்கு இன்னுமொரு கண்ணிருக்கிறது ஆகையால் இதற்காக அஞ்சமாட்டேன் எனத்துணிந்து, தன் கண்ணைத் தோண்டியபின் இறைவர்கண் இன்னிடத்திலிருக்கிற தென்று தெரியும்பொருட்டு, தன் ஒரு செருப்புக்காலைப் பெரு மான் கண்ணினருகே ஊன்றிக்கொண்டு, அம்பைத் தனது கண் ணிலே வைத்தார்.

திருபாசமுத்திராகிய பெருமான் அதைச் சகித்தற்கியலா தவராகி, கண்ணப்ப நிற்க! என்று மூன்றுமுறை வெகு துரித மாகச் சொல்லி அவர் கையைப் பிடித்துக்கொண்டார்.

சீகாளத்திப் புராணம்.

மறைமொழி பிறந்த தம்வாய் மலர்நிறந் தருட்பே ராழி
யிறைவர்கண் ணப்ப நிற்க! வெனமுக்கால் மொழிந்து கொண்டே

கதையணற் கங்கணத்த கையினற் பிடித்தார் செங்கை
யுறுகறைப் பொலம்பூ மாரி யும்பர்மண் புதையப் பெய்தார்.

மதுரையிற் கடைச்சங்கத்துத் தலைமைப் புலவராகிய நற்கீரதேவர் பாடியருளிய திருக்கண்ணப்பதேவர் திருமறத்துள்,

நில்லுகண்ணப்ப! நில்லுகண்ணப்ப!வென்
அன்புடைத்தோன்ற! நில்லுகண்ணப்ப!வென்
றின்னுரையதனெடு மெழிற்றிவலிங்கச்
தன்னிடைப்பிறந்த தடமலர்க்கையால்
அன்னவன்றன்கையம் பொடுமகப்படப்பிடித்தருளினன். எனவும்

ஸ்ரீ மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்துள்,

கண்ணப்ப னெப்பதோ ரன்பின்மை கண்டபின்
என்னப்ப னென்னெப்பி லென்னையுமாட் கொண்டருளி. அன்றியும்,

கண்ணப்ப னெப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லல்லதுமற்
றாரறியும் அன்பன் றது.

எனவும் வியந்து கூறியிருக்கின்றார்கள். கண்ணப்பனெக்குமோரன்பு என்று கூறவேண்டியதிருக்க, அவ்வித்தக்கூறுமற் "கண்ணப்பனெப்பதோரன்பு" என்று கூறியிருத்தற், கண்ணப்பர் வேறு அன்பு வேறு என்னும் விகற்பமின்றி, கண்ணப்பரே! அன்பு, அன்பே! கண்ணப்பர் என்று கன்று விளங்குகின்றது. இத்தகைய பேரன்பின் வடிவமாயவதரித்த மகானுபாவர்கட்கே கடவுள் திருவடி எளிதிற் கிடைக்குமல்லாது; விடயாதிகளில் இச்சைப்பட்டுழல்பவர்கட்கு யாது பிரயோசனமுண்டாகும்.

அன்பில்லாதவன் *மூதலேழுவள்ளல்களைப் போன்று எவ்வளவு பெரிய தியாகங்கொடுத்தாலும், அஃது பொருளுக்கு அழிவும் சரீரப் பிரயாசையுமேயன்றி உண்மையான தர்மமாகாது. அன்புள்ளவன் ஓரணுவளவு தர்மஞ்செய்யினும், அஃது தர்மங்கட கெல்லாம் முதன்மை பெற்றுப் புண்ணியத்தை வளர்க்கும். இது பற்றியே ஔவைப்பிராட்டியாரும்,

---

*மூதலேழுவள்ளல், இடையேழுவள்ளல், கடையேழுவள்ளல் என 21 வள்ளல்கள். மூதலேழுவள்ளல் குறிப்பறிந்து கொடுப்போர்; இடையேழுவள்ளல் கேட்டன கொடுப்போர்; கடையேழுவள்ளல் பலமுறையும் கேட்டமறுத்துக்கொடுப்போர்.

காணக்கண் கூசுதே கையெடுக்க காணுதே
மானெக்க வாய்திறக்க மாட்டாதே—வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி யெரியுதே! யையையோ!
அன்பில்லா ளிட்ட வழுது. எனக்கூறியுள்ளார்.

இல்லறம், துறவறம், தானம், தவம், கல்வி, கல்லாமுறவு, நோன்பு, வணக்கம் முதலியயாவும் அன்பில்லையேயானும், காட்டில் வீணாக முளைத்திருக்கும் விழுதுக்கு, முத்துலையேற்றமிட்டுத் தண்ணீர் இறைத்ததைப் போலாகும். அன்புடையவன் செய்த தீமையும் நன்மையாகும்; அன்பில்லாதவன் செய்த நன்மையுந் தீமையாகும்.

திருக்குறள்.

பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்த்த
மெய்ம்மை பயக்கு மெளின்.

ஒருவன்; தந்தை, தாய், தாரம், பிள்ளை, சுற்ற முதலிய யாவரும் வந்து கூடிக் கலைந்துபோகின்ற சந்தைக்கூட்டத்திற்கு நிகர்த்ததென்று எண்ணிச், சகல பற்றுக்களையும் நீக்கினாலும்; தோட்டம், துறவு, வீடு, வாசல், ஆடு, மாடு, பூமி முதலிய பொருட்சார்புகளையும், தேகாபிமான முதலிய இந்திரிய வாசனைகளையும் ஒருங்கே விட்டுவிட்டாலும், சர்வ கலைக்ஞானங்களையும் வாசித்து, அதனது முடிவாகிய எண்ணிறந்த வேதாந்த சாஸ்திரங்களையெல்லாம் கரைகலைப்பாடமாக மனனஞ்செய்திருந்தாலும், அதிலுள்ள நிட்பதுட்பங்களை ஐயந்திரிபறவுணர்ந்தாலும்,

விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனம்
நிடப்படு மோநின் னருளின்றியே.

என்று கூறிய பட்டினத்தடிகள் வாக்கியம்போல், விட்டு நீங்குவதற்கரிதான இந்த உலகவாசனையைப் பொய்யென்றறிந்து, சுட்டசட்டியைக் கைவிட்டுவிடுவதுபோல் ஒழித்தாலும், தத்துவஞானம் பெறுவதற்கேதுவாகிய சகியாச ஆச்சிரமத்தைப் பெற்றுக்கொண்டாலும், அந்தச் சகியாசத்தின் பெருமையைக்கண்டு பலபேர் வணக்கினாலும், மேற்சொல்லியவைகளாற் புகழ் மாத்திரம் எற்படுமேயன்றி, அவனுள்ளத்திற் பூரணமான அன்பு இல்லாதவரையில் அவனுக்கு ஒருபோதும் நன்மை பயக்காது.

அறிவாளந்த சித்தியார்.

விரித்தநல் வேத புராணங்க ளாகம மிக்கலே
தெரிந்து படித்துப் பொருள்செப்பித் தானிலே சேர்ந்துநில்லா
திருந்தசண் டாளரி னேற்றங் கழுதை யெழிற்குங்குமம்
பரிந்து சுமந்தம்பின் வஞ்சம்பன் னுத பயனெழிலே.

கனிந்த ஞானுசிரியரால் அதுக்கிரகிக்கப் பெற்ற நிலையில் நின்று, அன்பென்னும் பரவசத்தினுல் உடல்குழைந்து, உள்ளத்தில் இடையருது நெகிழ்ச்சியுண்டாகவும், உரோமஞ் சிலிர்க்கவும், மனமானது மிகுந்த கனலிக்கண்ட மெழுகு, அரக்கு இவை கூழ்போன்று அதிகமாகவுருகவும், இரண்டு நேத்திரங்களிலிருந்து மலையருவிபோல் தாரைதாரையாக ஆகந்தபாஷ்பம் சொரிந்துகொண்டிருக்கவும், சிரக்கம்பம் கரக்கம்பமுண்டாகிக், கன்றைப்பிரிந்த பசு; அல்லது பசுவைப்பிரிந்த கன்று கதறுவது போற் பேரோலமிட்டுத் தேம்பித் தேம்பியழுகவும், வாய்ச்சொற்கள் தடுமாறி, மெய்சோர்ந்து தன் வசமற்று, ஆகந்த நிர்த்தனஞ் செய்து, தனது எதார்த்த சொரூபத்தைத் தெரிசிப்பவர்களே பிரம்மசொரூபத்தில் இரண்டறக் கலப்பார்கள்.

திருவாசகம்.

ஆடு கின்றிலே கூத்துடை யாண்டிலுங் கன்பிலே யென்புருகிப்
பாடு கின்றிலே பதைப்பதுஞ் செய்கிலே பணிகிலே பாதமலர்
சூடு கின்றிலே சூட்டுகின் றதுமிலே துணையிலி பிணைகொஞ்சே
தேடு கின்றிலே தெருவுதோ றலறிலே செய்வதொன் றறியேனே.

திருவருட்பா.

நினைத்துநினைத் துணர்த்துணர்ந்து நெகிழ்த்துநெகிழ்த் தன்பே
நிறைந்துநிறைக் துற்றெழுங்கண் ணீரதனு லுடம்பு
நனைத்தநனைத் தருளமுதே! ஞானியியே! ஞான
வுடத்தரசே! என்னுரிமை நாயகனே! யென்று
வினைத்துவினைத் தேத்துதுதாம் வம்மினுல கியலீர்!
மரணமில்லாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாங் கண்மார்!
புனைத்துரையேன் பொய்புகலேன் சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருண மிதுவே.

தாயுமானசுவாமிகள்.

உடல்குழைய என்பெலாம் நெக்குருக விழிநீர்கள்
ஊற்றென வெதும்பியூற்ற
ஞகொர் தத்தினேக் கண்டனுகல் போலவே
யோருறவு முன்னியுன்னிப்
படபடென நெஞ்சம் பதைத்துண் ணடுக்குறப்
பாடியா டிக்குநித்துப்
பனிமதி முகத்திலே நிலவனைய புன்னகை
பரப்பியார்த் தார்த்தெழுத்து
மடலவிழு மலரனைய கைவிரித் துக்கடப்பி
வானே! யவானிலின்ப
மழையே! மழைத்தாரை வெள்ளமே! நீடுழி
வாழியென வாழ்த்தியேத்துக்
கடன்மடை திறந்தனைய அன்பான் புக்கெளியை
கன்னெஞ்ச னுக்கெளியையோ
கருதரிய சிற்சபையில் ஆகத்த நிர்த்தமிடு
கருணை கரக்கடவுளே.

ஆடுவதும் பாடுவதும் ஆனந்தமாக நின்னைத்
தேடுவதும் நின்னன்பர் செய்கை பராபரமே.

பட்டினத்தடிகள்.

காடே நிரிக்தென்ன காற்றே புசித்தென்ன கற்தைசுற்றி
ஓடே யெடுத்தென்ன வள்ளன்பி லாதவர்.

பிரபுலிங்கலீலை.

ஆசறு மனத்தெழும் அன்பை யன்றியே
பூசனை யவர்க்கெலன் புராரி சென்னிமேல்
வீசறு நிரையினு மிக்க தோசொலாய்
ஊசல்செய் மனமுடை யொருவ னுட்டுசீர்.

அன்பினுல் அன்பர்பெறற் கெளியனு மெனேச்சுஞொன் றறைந்து வந்து
வன்பினுற் பெறவேண்டி நின்றழிந்தா யிதுதகுமோ மாயை மாதே.

திருக்குறள்.

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூசல் தரும்.

புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு.

அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

திருமந்திரம்.

அன்பு சிவமு மிரண்டென்ப தறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தானே.

முத்துவியாபாரிகள், முத்துச்சலாபக் குளிக்குமிடத்திற்குப் போய்ச் சிப்பிகளை மொத்தமாய் வாங்கி ஒவ்வொன்றாக அறுத்துப்பார்ப்பார்கள். அதில், சுமார் நூறுயிரம் சிப்பிகளுக்குமேல் அறுத்தால்தான் அதிலிருந்து அகஸ்மாத்தாய் முத்துக் கிடைக்கும். அதுபோல், மனமானது மாயப்பிரகிருதியிற் சிக்கியிருக்கும் போது திடீரென்று அன்புண்டாவது அருமை. ஆனதுபற்றி, அங்ஙனம் பக்தியில்லாத வேளையிலும் அப்பா! அரசே! முத்தே! முதலே! கண்ணே! பொன்னே! யென்று தோத்திரம் பண்ண வேண்டும். அதனால், அரக்கானது உஷ்ணம் அதிகரிக்க, அதிகரிக்க உருகுவதைப்போல், தோத்திரம் பாடிக்கொண்டேயிருக்க மனமானது அறிவிற்கலந்து அன்போதயமாகும்படிச் செய்யும்.

தாயுமானவர்.

தன்பக் கடலிற் றுளைத்தெல்லாத் தீர்த்தமே
இன்பக் கடலி லிருமென்ன—அன்பிற்
கரைத்து கரைத்துருகிக் கண்ணருவி காட்ட
விரைத்துவரும் ஆனந்த மே.

கரைத்து கரைத்துருகிக் கண்ணீரா றாக
விரைத்தே யிருவிகற்ப மெய்த—சிரத்தாலும்
நின்னையே யெத்திக்க நீகொடுத்தாய் மோனநான்
என்னைமுழு துங்கொடுத்தே னே.

அல்லும் பகலும்பே ரன்புடனே தானிருந்தாற்
கல்லு முருகாதோ கன்னெஞ்சே—பொல்லாத
தப்புவழி யேனினைந்தாய் சத்ததமும் நீயிறைஞ்ச
வெய்ப்பிலே ஆனந்த மே.

மேற்கூறிய விதமாக இருக்கும் அன்பர்கட்குப் பெரும்பாலும் விடயவாழ்க்கை நீங்குதலென்னும் இன்பமாகிய தன்பமே சம்ப

விக்கும். அதைத் துன்பமென்றெண்ணுமல் இன்பமாகவே கருத வேண்டுமென்பது தீர்க்கதரிசிகளாகிய ரிஷிமார்கள் பட்டிருக்கிற மாதிரிகளையும், பெரிய புராணத்தில் 63 நாயன்மார்கள் பட்டிருக்கிற மாதிரிகளையும், அந்தாலேப் பார்த்தாவது, கேட்டாவது இருப்பவர்கட்கு நன்கு விளங்கும்.

தன் குழந்தையின்மீது பட்சமாயிருக்கின்ற தாய், தந்தையர்களிடத்திலேயே அக்குழந்தையானது, தன் குறைவு, நிறைவுகளை அந்தப்பையன் அடித்தான், இந்தப்பையன் வைதான், இன்னவஸ்துவை இன்னன் கொடுத்தான் என்றும், தன் வயிறு பசித்தால், பாச்சி, சோச்சி வேண்டுமென்றும் சொல்லிக்கொள்கிறது. அப்போது, "குழலினிது யாழினிதேன் றேதுவார் தத்தம் மழலைச் சொற் கேளாதவர்" என்னுங் கருத்துக்கிணங்க, அக்குழந்தையின் மழலைச்சொல்லுக்காக மகிழ்ந்து வேண்டியதைக் கொடுக்கிறார்கள். அங்ஙனங் கொடுக்கத் தாமதித்தால் அவர்களை அடிக்கவும், உதைக்கவும், வாயில் வந்தபடி நாயே! பேயே! கழுதையே! குரங்கே! என்று வையவுஞ் செய்கின்றது. அதானது, தன்மீது அன்பாயிருப்பவர்களிடத்திற் சொல்வதன்றி அன்பில்லாதவர்களிடத்தில் சமீபத்திலாவது நிற்குமா? நிற்காது. அதுபோல், கடவுளானவர் தன்மீது பூரணமான அன்பு செலுத்துபவர்களிடத்திலேயே (எதிர்காலத்தில் நன்மையைத் தருவதான) பல துன்பத்தைக் கொடுத்து அநுபவிக்கச் செய்கிறார்.

ஒருகாள் ஒரு ஸ்திரீ காளி விக்கிரகத்திற்கு முன்னே காலை நீட்டிக்கொண்டிருந்தாள். அதுவவளை யாதொன்றுஞ்செய்யாமல் தன்னைப் பூஜிக்கும் பூசாரிவிட்டிற்குப்போய் ஆடே! பயலே! ஒருஸ்திரீ வந்து அஞ்சாமல் என்முன்னே காலை நீட்டிக்கொண்டிருக்கிறாள்; காலை மடக்குவாள் மடக்குவாள் என்று வெகுநேரம் சகித்திருந்தேன்; அவள் இதுவரையிலும் மடக்கவேயில்லை; அதை என்னாற் சகிக்கமுடியவில்லை; அகையால் நீ! இப்போதேபோய் அவள் காலை மடக்கச்சொல்லுகையா? இல்லையா? நீங்ஙனஞ் செய்யாவிடில் உன்னைக் கொன்றவிடுவேன் என்றதாம். அதுபோலவே விக்கிரகத்தின் மீதிருக்கும் ஆபரணங்களோடு கிருடனல் யாதொன்றுஞ் செய்யாது. அன்பனவன் கிருடனல் அவனை

இலேசில் விடாது. ஏனென்றால் திருடனுக்குப் பாவமென்னும் மூட்டையைக் கட்டிவிடுகிறது. அன்பனுக்கு அந்த மூட்டையைக் கரைக்கிறது. ஆகையால் "குழந்தையும் தெய்வமும் கொண்டாடிய விடத்தில்" என்னும் பழமொழியானது மேற்கூறியவைகளை மெய்ப்பித்து நிற்கின்றதல்லவா?

தாயும், தந்தையும் தன் அருமை மக்களுடைய நன்மைக்காகவே அவர்களிடத்தில் தீர்ச்செய்கைகளைக் கண்டால் உடனே கண்டனஞ்செய்கிறார்கள். அப்போது, அக்குழந்தைக்கு அவர்கள் செய்வதுதமது நன்மைக்காகவென்றெண்ணப் போதிய சக்தியில்லாததனால், தமது அருமைத்தாய், தந்தையராகிய இருமுது குரவர்கள்மீதும் வெறுப்படைகின்றது. அதுபோல், சகல சீவராசிகட்கும், பரம கருணாநிதியும், அருட்டாயுமாகிய கடவுளானவர், தமது அருமை மக்களாகிய நம்மிடத்தில் ஏதாவது குற்றங்குறைகள் காணப்படின் அவைகளைத் தவிர்த்தற்பொருட்டுப், பற்பல துன்பமென்னுந் தண்டனையைப் புரிந்து, அவைகள் மீட்டுந் தொடராமல் நம்மை அனுபவித்துத் தீர்க்கும்படிச் செய்கின்றார். மழலைப்பிள்ளையை நிகர்த்த நாம், அதை உய்த்தறியாது [illegible], அடே! சண்டாளத் தெய்வமே? உனக்குத் [illegible] கண்ணில்லையா! காதில்லையா! என்று அறியாமையாற் பிதற்றுகின்றோம்.

85754

மனோவாயு

பதினெட்டாவதத்தியாயம்.

மனமானது விஷயாதிகளில் எவ்வளவு விரைவாகச் செல்லுகின்றதோ அவ்வளவுக்கு வாயுவும் சரீரத்திலிருந்து வெளியேறுகின்றது. மனம் எவ்வளவுக்கு அடங்கி நிற்கின்றதோ அவ்வளவுக்கு வாயுவும் அடங்கிநிற்கின்றது. மனமானது எல்லாருக்கும் அடங்காது. ஆதலால், வாயுவை நிறுத்தி, அதன்மூலமாய் மனத்தை நிறுத்த முயலவேண்டும். இயற்கையிலேயே மனோநிக்ரகமாயிருப்பவர்கள், வாயுவை இரேசக, பூரகஞ் செய்யவேண்டிய அவசியமேயில்லை.

வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் நீரிற் செல்கின்ற தருப்பானது, நீரோட்டம் நின்றவுடன் தானும் நின்றுவிடும். அதுபோற்,

பிராணவாயுவைப் பூரித்து நிறுத்திவிட்டால், மனமும் உடனே நின்றுவிடும்.

விரைந்தோடுகின்ற குதிரையை நிறுத்தவேண்டுமானால், குதிரையின் வாயிலிட்டிருக்கானின்ற கலினத்தை யிழுத்துப் பிடிப்பார்கள். அதுபோல், விடயாதிகளில் தாவுகின்ற மனக்குரங்கை, அப்படிக்கு ஓடாமல் நிறுத்தக் கருதினால், இயங்கிக்கொண்டிருக்கா நின்ற வாயுவைப் பூரிக்க, மனமும் நின்றுவிடும். ஆயினும், இடைகலை, பிங்கலை, சுழுமுன்னையென்னும் மூன்று நாடிகளையும், எற்றல், நிறுத்தல், இறக்கல் என்று முத்தொழிலையுஞ் செய்து அசைவற நிறுத்தித் தன் வசப்படுத்திக்கொண்டால், மனமும் வசப்படும்.

ஒருவனுக்கு ஆகாயத்தைப் பார்க்க இஷ்டமில்லாவிட்டால், தன் கண்களை மூடிக்கொள்ளவேண்டியதிருக்க, வல்திர முதலிய வைகளைக்கொண்டு ஏன் ஆகாயத்தை மறைக்க எத்தனிக்கவேண்டும்? வேண்டியதேயில்லை. அதுபோல், மனத்தை யடக்கிவிட்டால், மனோவாயு வடங்குவதுடன், பஞ்சேந்திரியங்களும் அடங்கிவிடும். அவ்விதமிருக்க, வாயுவைப் பூரிப்பதால் யாது பிரயோசனமென்னுந் திருஷ்டியடக்கி,

சதாலங்காரம்.

திருத்தி யெனுமப்டிக் கும்பித்து வாயுவைச் சற்றிமுறித்
தருத்தி யுடம்பை வருத்திலென் னுஞ்சிவ யோகமெனுங்
குருத்தை யறிந்து குகமார்முடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் மார்முத்தி கைகண்டதே.

ஏகிவிலோடுக்கம்.

உபதேசப் பித்தோ டுவமானப் பித்தோ
வீபரீத மோபழக்கோ வேறே—தபரிசீ
கண்மூடா வின்மூடத் தேடுக் கவசனேபோல்
என்மூடா யோசமீ தவென்.

நேவிகாலோத்திரம்.

வாயுவென மருவுகின்ற மனமடங்கும் வகைதடுப்பா
னியாவனவ னரிபிரம னிந்திரன்சண் முகன்குருவும்
யைபல தேவதைக ளியோகிதபோ தனனறிஞன்
ஆவினெல்லா முடையானும் அவன்வணங்கும் தணக்கிடையாய்.

பிரபுலிங்கலீலை.

இந்திய மோரோன் முவிட் டிடின்மற்றை யொன்று சாரும்
முந்திய மனம பிரிப்ப முற்றும்போ மணியப் பாம்பின்
ஐந்தலை களினு ளொன்றை யரிந்திடின் மற்றென் முலஞ்
சிந்திடு மிடற நிர்தாற் தீர்ந்திடு மொருங்கு மாதோ.

அகஸ்தியர்.

மனமது செம்மை யானுல் மந்திரஞ் செபிக்க வேண்டாம்
மனமது செம்மை யானுல் வாயுவை யுயர்த்த வேண்டாம்
மனமது செம்மை யானுல் வாயுவை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மை யானுல் மந்திரஞ் செம்மை யாமே.

இடைக்காடர்.

மனமென்னும் ஆடங்கில் தாண்டவக்கோனே—முத்தி
வாய்த்ததென்று நினையடா தாண்டவக்கோனே.

என்று பல சாஸ்திரங்களும் பேரோலமிடுகின்றது. மேற்கூறிய செய்யுட்களிற் சொன்ன கருத்துகள் எல்லாம் உண்மையே எனினும், மனமானது அடங்கினுலன்றே? சர்வமும் சித்தியாகும்; வாயுவும் அடங்கும்; பஞ்சேந்திரியங்களும் நசிக்கும். மனமடங்காவிட்டால் என்னசெய்கிறது? வாயுவைத்தானே அடக்கி, அதன்மூலமாய் மனத்தை நிறுத்த முயலவேண்டும்?

மனம் அடங்குவதென்றும் சாமான்யமா? மனமானது கிளிகள்தோறுந் தாவிக்கொண்டு சஞ்சரிக்கின்ற குரங்குக்குச் சமானமானதல்லவா? குரங்கு, தாவிக்கொண்டலைவதைப்போல், இந்த மனமும் ஓர் கண்ணிமைப்பொழுதிற்குள் காசி, ராமேஸ்வரம், இங்கிலாந்து, அமெரிக்கா, வானலோகம், பாதாளலோகம் முதலிய ஆயிரத்தெட்டு அண்டங்களிலும் புகுந்து விளையாடும். ஆதலால், வாயுவை நிறுத்தாமல் மனமே அடங்கிவிடுவதாயிருந்தால், பருத்தி புடவையாய்க் காய்த்ததுபோலாகும்.

ஒருவன் வாயுவை நிறுத்தாமல் மனத்தையே நிறுத்திவிடுவானேயானுல், அவன் ஸ்ரீகண்ணப்ப நாயனுர், ஸ்ரீமணிவாசகப் பெருமான், வடலூர்: ஸ்ரீஇராமலிங்கப் பெருமான் இவர்கள் போன்ற தலையன்பு வாய்ந்து, பிறவியிலேயே ஞானச்செல்வமுடைய மகானுகப் பிறந்திருக்கவேண்டும். அப்படியில்லாவிடில், வாயுவை நிறுத்தினுலன்றி மனம் ஒருபோதும் அடங்காது.

சில மனிதர்களைப் பார்த்து, நீசேன்கோவிலுக்கு சுவாமி தரிசனஞ்செய்ய வரவில்லை? என்று ஒருவர் கேட்டால், அதற்கவர்

கள் எல்லாம் மனந்தானே காரணம்; வீட்டிலிருந்தாலென்ன கோவிலுக்கு வந்தாலென்ன, நான் இங்கிருந்தே சுவாமியைத் தியானஞ்செய்து கொண்டிருக்கிறேன்; எல்லாம் ஒன்றுதானே என்று வெளிக்குமாத்திரம் வாய்ஞானம் பேசிவிட்டு, அந்தரங்கத்தில் காமபோனியாகிய மதனலீலா விநோதக்கடலில் மூழ்கிக் கொண்டிருப்பவர்களைப்போல், ஒருவன் எதார்த்தத்தில் தன் மனத்தை வசப்படுத்தாமல், கேட்பவர் திருப்தியடையும்படிக் குச் சொல்லிக்கொள்வதனால் யாது பிரயோசனமுண்டாகும். தான் பசியாயிருக்கும்போது, வேறொருவர் வந்து "சாப்பிட்டாய் விட்டதா?" என்று கேட்டால் சாப்பிட்டுவிட்டேனென்று சொல் வதால் தன் பசிப்பிணி தீருமா? சாப்பிட்டாலன்றே தீரும்.

தாயுமானவர்.

மனக்குரங்கைக், கட்டிவைத்தாலுங் காட்டும்பல்லே எனவும்,

உபநிடதம்.

பொன்போல விலங்குமனம் சஞ்சலத்தாற் குரங்காம் எனவும்,

தாயுமானசுவாமிகள்.

கன்ன மதக்கரியை வசமாய் நடத்தலாம்
காடிவெம் புலிவாயையுங்
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொள்ளலாங்
கட்செவி யெடுத்தாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேகித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணுமு லகத் துலாவலாம்
விண்ணவரை யேவல்கொளலாம்
சந்ததமு மினமையொ டிருக்கலா மற்றொரு
சரீரத்தி னும்புகுதலாம்
சலமே னடக்கலாங் கணன்மே லிருக்கலாந்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா விருக்கின்ற
நிறமரிது சத்தாகியென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே?
தேசோ மயானந்தமே?

எனவும் கூறியிருத்தலால் அனல்கண்ட அரக்கைப்போல் மனங் கசிந்து உருகாதவர்கள், இயமம், நியமமுதலிய அட்டாங்க யோகத்தைச் செய்தே மனத்தையடக்க முயலவேண்டும்.

மனம்.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

மனமானது சுத்தமனம், அசுத்தமனம் என இருவகை. காம, குரோத, லோப, மோக, மத, மாச்சரியமென்னுஞ் சட்கர்மங்களில், சங்கற்பமென்னும் விருப்பமுள்ள மனம் அசுத்தமனம்; அவைகளில் வெறுப்படைந்து பிரகாசியாநிற்பது சுத்தமனம்.

இந்நிலவுலகிற் காணப்படாநின்ற அநித்தியமான சகல வஸ்துக்களையும் அடையும்படிச் செய்து தாழ்த்தவல்லதும்; அவைகளில் வெறுப்புற்று நீங்கி ஆத்மஞானத்தைப் பெறச்செய்து உயர்த்தவல்லதும் இந்த மனமே! மனத்தினாற் செய்யப்பெற்ற தொழிலே தொழிலாகும்; மனத்தினால் விடுபட்டதே விடுபட்டதாகும். மனோசாஞ்சல்யத்தை விட்டு நீங்கியவர்களே! உத்தமமான ஆத்மஞான நிஷ்டையையுடையவர்கள். மனமானது நசித்தால் சனன மரணமென்னும் பெரிய கானகம் நாசமாகும். மனமயக்கமென்னும் வித்தின் மூலமாய், மாயாமலமென்னும் கொடிய விஷவிருட்சம், பற்பல துன்பமென்னும் கிளைகளுடன் செழித்தோங்கிவளரும்.

இச்சிக்கப்படாகின்ற சகல வஸ்துக்களையும் விரும்பாமல் நீக்கினவர்களே! மனத்தைச் செயித்தவர்கள். ஏனெனில், தனியாசை, யோனியாசை என்னும் இரண்டனுள், யோனியாசையைச் சிலகாலம் வரையில் நீத்திருக்கினும் இருக்கலாம்; தனியாசையையோ! அங்ஙனம் நீத்திருப்பது மிகவும் அருமை. ஏதாவது ஒரு மருந்து சாப்பிடும்போது உப்பில்லாப்பத்தியமிருக்கால், அப்போது தனியின்பேரிலிருக்கின்ற இச்சையை இவ்வளவென்று வரையறுத்துச்சொல்ல எவராலும் இயலாது; அதை, அங்ஙனம் பத்தியமிருந்தோர் தெற்றென வுணர்வார்கள். வைராக்ய ஞானம் பெற்றவர்கள், மானிடத்தோற் சட்டையைப் போர்த்த விலங்கினத்துக்கு நிகர்த்திருப்பார்கள். மகான்களாற் போதிக்கப்பெறும் நல்லுபதேசத்தினாலும், சுருதி முடிவாகிய மஹாவாக்யார்த்தத்தினாலும், பழக்கமென்னும் ஆத்மாநுசந்தானஞ்செய்து, ஏனென்

னும் சங்கற்பம் தணைந்த நெஞ்சத்தால் நிகரற்ற மெய்ஞ்ஞான சுகம் உதயமாகும். நான்! என்னுடையது! என்னும் அகங்கார மமகாரங்களைத் தொலைக்காதவரையில், உண்மையான ஞானோதயமாகாது, ஞானோதயமாகாவிட்டாற் பிரபஞ்சசந்தோன்றும்; அப்போது பிரம்மந்தோன்றாது. காங்கென்னுங் காற்றடிபோற் சுழலாநின்ற மனமானது நசித்தாலன்றி அகந்தை நீங்காது. நான் கொடுப்பேன்! நீர் கொடுப்பீர்! என்னுங் கருத்துள்ளவர் முத்தியை விரும்புவதானது, இருளைத் துணையாகக்கொண்டு சூரியனைப் பார்க்க விரும்பியதுபோலாகும்.

திருக்குறள்.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானுளோர்க்
குயர்ந்த வுலகம் புகும்.

சிவஞானதீபம்.

விரும்புற்ற தவம்வீரஞ் சீல மெல்லாம்
மேல்விழைவென் றறிச்தெவையும் விமலன் கூத்தென்
றிரும்புற்ற மனமழலின் மெழுகா யென்று
மியான்செய்தேன் பிறர்செய்தார் எனுங்கோள் நீக்கி
யரும்புற்றவ் வெண்ணுதியா னென்னும் பாசத்
தவாமருஞ்ம் புறப்பற்றே டகப்பற் றூன
பெரும்பற்றை யகன்றருளைப் பெறுவோர் ஞானம்
பெறும்பற்றப் புலியூரைப் பிரியார் தாமே.

விரிந்த மனமுடையவர்களைப், பிறவியென்னுங்கொடிய சர்ப்பம் தரத்திற் தரத்தில் கடிக்கும். சுருங்கிய மனமுடையவர்களைப், பிறவியென்னும் சர்ப்பம் தீண்டாதபடி, அருளென்னும் சுருளனும், கருடனும் பாதுகாத்து நிற்கும்.

வஸ்திரத்திலுள்ள அழுக்கை, மலிவம் பொருந்திய உவர்மண் என்னும் அழுக்கினால் நீக்குவதுபோலவும், இரும்பை அரமென்னும் இரும்பினாலேரோவிச் சுத்தப்படுத்துவது போலவும்; சன்மார்க்கவழியில் விகமுயற்சி செய்யாநின்ற சுத்தமான மனத்தினால் அசுத்தம்பொருந்திய மனத்தைத் திருத்தவேண்டும். மனத்தைக் கொண்டே மனத்தைக் கெடுத்து அறிவின் வடிவத்தையடையச் செய்யின், பேரானந்த அருளாழியானது "கடன்மடை திறந்தனைய

அன்பரன்புக் கேளியை" என்று பகர்வதுபோற், கங்குகரையின்றிப் பரிபூரணமாய்ப் பெருகிக், கற்பனையற்ற மோட்ச கைவல்யத்திற் செலுத்திவைக்கும். அப்போது, பிரம்மசைதன்ய வாழ்வென்னும் நிரதிசயானந்தமுண்டாகும்.

கைவல்ய நவநீதம்.

இம்பரி னஞ்சை கஞ்ச லிரும்பினை யிரும்பா லெய்யும்
அம்பினை அம்பாற் பற்றும் அழுக்கினை யழுக்கால் மாய்ப்பர்.

பிரபுலிங்கலீலை.

மனத்தை யடக்க மனந்துணை யாகும்
பினைத்துணை பின்றது பெற்றன னுயிற்
றனிச்சிவ மேயொரு தானென வாழ்வன்
நினைத்து மறந்தும் நிலத்தழ லானே.

இப்பிரபஞ்சத்தவர்களால், இனிமை, இனிமையென்று கருதி அநுபவிக்காநின்ற விடய வாழ்க்கைகளிலாவும் எட்டிக்கனிபோற் கசப்பாக எப்போது தோன்றுகின்றதோ, அப்போதுதான் மனம் நசித்ததென்று அறியவேண்டும். திரண்ட மேகக்கூட்டங்களைத்தும் சண்டமாருதக் காற்றினற் சிதறியோடிச் சூனியமாகி விடுவதுபோற், கற்பனா நாசத்தால் மனமானது நசிக்கும். நிறைவு, குறைவு, பெரிது, சிறிது நீங்கிய சமபாவனையினால், ஆநந்தத்தைத் தரும் பிரம்மபதமானது சதா நித்தியமானதாகும். வெப்பமானது அக்கினியிலின்றும் நீங்காதிருப்பதுபோல், தாழ்வைத்தரா நின்ற சஞ்சலமானது மனத்தைவிட்டு நீங்குவது மஹா துர்லபம். சஞ்சலத்தினற் சலிக்கின்ற மனமே உலகமென்று சொல்லப்படும்.

பத்திரகிரியார்.

செஞ்சலத்தி னற்றிரண்ட சென்னமோட் சம்பெறவே
சஞ்சலத்தை விட்டென் சரணடைவ தெக்காலம்.

நித்தியமான பிரம்மத்திற்கும், அநித்தியமான பிரபஞ்சத்திற்கும் நடுவிலிருந்துகொண்டு சலிப்பைத்தந்து நிற்பதே மனமாகும். இத்தகைய மனமானது அறிவின் தீட்சண்யத்தினற் சிற்சொரூபத்தையும், அறியாமையென்னும் அந்தகாரத்தினற் பிரபஞ்சத்தையும் அடைகின்றது.

தாயுமானவர்.

இமையளவு போதையொரு கற்பகா லம்பண்ணும்
இவ்வுலகம் எவ்வுலகமோ
என்றெண்ணம் வருவிக்கும் மாதர்சிற் றின்பமோ
என்னின்மக மேருவாக்கிச்
சமையெடுமி னென்றதான் சும்மாடு மாயைமைச்
சுமையாளு மாக்கினாளுர்
துர்ப்புத்தி பண்ணியுன சற்புத்தி யாவையுஞ்
சூறையிட் டிந்த்ரசாலம்
அமையவொரு கூத்துஞ் சமைத்தாடுமனமாயை
அம்மம்ம வெல்லலெளிதோ?
அருள்பெற்ற பேர்க்கெலா மொளிபெற்று கிற்குமீ
தருளோ! வுலாதுமருளோ!

மனமானது சதா எந்தப்பொருளைப்பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றதோ? அந்தப்பொருள் சித்திக்கும். ஒரு கடிகாரத்தைப் பலகாலங்களையிலும் விடாமல் அதையே பார்த்துக்கொண்டுவந்தால், கடிகாரத்தைப் பாராமலே மணியிவ்வளவென்று சொல்வதற்கு வசமைபுண்டாகும். அதனால், மனம் அந்தக் கடிகாரத்தின் அம்சத்தைப் பொருந்தியிருக்கிறது. எந்தப் பொருளையும் மேன்மையாகப் பாவித்தால் மேன்மையையும், கேவலமாகப் பாவித்தாற் கேவலத்தையுந் தருகின்றது. எப்படியெனில், பரம துஷ்டனுகிய ஒருவனை நாம் நல்ல சாதுவாகப் பாவித்தால், அவன் நம்மளவிற் சாதுவாகவேயிருப்பான். நல்ல சாதுவையும் துஷ்டனுகப் பாவித்தால், அவன் நமக்குமட்டும் பிரபல துஷ்டனுகவேயிருப்பான். அதுபோல், ஓர் கேவலமான வஸ்துவையும் கடவுளா (சர்வம் பிரம்ம மயமா) கப் பாவித்தால், அது கடவுள் தன்மையைப் பெற்றுச் சகலவரப்பிரசாதங்களையும் கொடுக்கின்றது. அந்நினைவு தருதாவிட்டால், அவர்களை விட்டு விலகிவிடுகின்றது.

கைவல்ய நவநீதம்.

மனைவி லங்கா மைத்தனே கற்பக மாக்கனல் புனல்மூன்றும்
தனைய டைந்தவர் வறுமையுஞ் செருமுந் தாகமுந் தவிர்த்தாளும் [யான்
அனைய வீசனும் அடைந்தவர்க் கருள்செய்வான் அகன்றவர்க் கருள்செய்
இனைய குற்றங்க ளெவர்குற்ற மாகுமென் றெண்ணினீ யறிவாயே.

எவனெவன் எதை எப்படி முற்றிலும் பாவிக்கிறானே? அது அப்படியே முற்றுப்பெற்று நிற்கின்றது. ஆகையால், சகலத்திற்கும் மனமே காரணம். இதைப்பற்றி ஹிந்துஸ்தான் பாஷையில் ஒரு பழமொழி வழங்குவதுண்டு. அதாவது "கெய்ஸாநிய்யத் அய்ஸா பரக்கத்" என்பதுதான்; அதன் தாற்பரியம், "எண்ணம் எப்படியோ அப்படியே வாழ்வு" என்பதுவே.

தாயுமானவர்.

சந்ததமும் வேதமொழி யாதொன்று பற்றினது
தான்வந்து முற்றுமெனலால்
சகமீ திருந்தாலு மரணமுண் டென்பது
சதாநிட்டர் நினைவதில்லே
சிந்தையறி யார்க்கிது போதிப்ப தல்லவே
செப்பினும் வெகுதர்க்கமாம்
நிவ்யகுண மார்க்கண்டர் சுகாதி முனிவோர்கள்
நித்தாந்த நித்யரலரோ?

ஒருநாள் இரண்டு சிநேகிதர்கள் ஒரு நகரத்திற்குட் பிரவேசித்தார்கள். அவர்களில் ஒருவன் ஒரு தாசிவீட்டிற்குள் நுழைந்தான்; மற்றொருவன் ஒரு பஜனைமடத்திற்குள் நுழைந்தான். பஜனைமடத்திற்குள் நுழைந்தவன், தனது நண்பன் தாசிவீட்டிற்குச் சென்றதையும், தாசியுடன் அநுபவிக்கும் நிற்றின்ப சுகத்தையும் நினைந்து வாயூறிக்கொண்டிருந்தான். தாசிவீட்டிற்குள் நுழைந்தவன் அவளுடன் சுகிக்கும்போதே, தனது நண்பன் பஜனைமடத்திற்குள் நுழைந்ததையும், அவன் பகவத் நாமத்தைக் கேட்டு ஆனந்திப்பதையும் சிந்தித்துக்கொண்டிருந்தான். அதனால், தாசியைப் புணர்ந்தவன் பஜனைமடத்திற்குச் சென்றபலனையும்; பஜனைமடத்திலிருந்தவன் தாசியைப் புணர்ந்த பலனையும் அடைந்தார்கள். ஆகையால், சரீரம் எங்கேயிருந்தாலும் மனமானது துறவடைந்திருக்கவேண்டுமேயன்றி, மனத்துறவைப் பெறுமல் மலைக்குகை, மனிதசஞ்சாரமின்றிச் சிங்கம், புலி, கரடிகள் வசிக்கும் வனமுதலான விடங்களிற் சரீரத்தைக் கொண்டுபோய், வைப்பதில் அணுவளவும் பிரயோசனமில்லை. ஆனதுபற்றி, மாயப்பிரபஞ்சியிற் சிக்கி வருந்தாநின்ற மனத்தை, ஆத்மஞான வழியிற் செல்லும்படி பழக்கவேண்டும்.

சிவவாக்கியர்.

மனத்தகத் தழுக்கருத மௌனஞான யோகென்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கரூர்.

ஒரு ஸ்திரீயின் பக்கத்தில் அவள் நாயகனும், அவள் மைத்துனும் படுத்திருப்பதில், அவள் ஸ்தனபாரத்தை குமாரனுனவன் அவளுடன் பிடிக்க, அதிலிருந்து இனியபால் சுரக்கின்றது. நாயகன் ஆசையுடன் பிடிக்க, அவள் தேகமெங்கும் புளகித்து விரக வேதனை அதிகரிக்கின்றது. அவ்விரண்டிற்கும் மனமே காரணமாயிருக்கது. அஃதெப்படியெனில்:—நாயகனுடைய மனோசக்தியானது அவளுடைய மனோசக்தியைத் தூண்டினதினுல், விரக வேதனையுண்டாயது. மகனுடைய மனோசக்தியானது அவளுடைய மனோசக்தியைத் தூண்டி இனிய பாலை வருவித்தது.

ஐந்துபேர்கள் சேர்ந்து தூக்கவேண்டிய பாரமான சுமையை, ஒவ்வொருவனுகத் தூக்கிப்பார்த்தால் தூக்கமுடியுமா? முடியாது. ஐந்துபேர்களும் சேர்ந்து தூக்கினுல் இலகுவாய்த் தூக்கிவிடலாமல்லவா? அதுபோல், பஞ்சேந்திரியங்களை ஒருவழிப்படுத்தி, அதனுல் பிரம்மஞானமென்னும் அரியபெரிய கிரியையை அடையவேண்டுமேயன்றி, இந்திரியங்களைப் பற்பலவழியில் அலையவிட்டு, ஞானத்தையடைய முயற்சித்தால் ஒருபோதும் கைவல்யமாகாது.

இடைக்காடர்.

காய்போற் பொறிகளை காலு லிதம்விட்டோர்
பேயரென் றூதுகுழல்—கோனே
பேயரென் றூதுகுழல்.

கொல்லனுனவன், வாள், கத்தி, மண்வெட்டி முதலிய கருவிகளை, இன்னதொழிலுக்குஎன்று குறிக்காமற் பொதுவாக நாம் கொடுக்கும் கூலிக்காகவே செய்துகொடுக்கிறன். அக்கருவிகளை ஒருவன் கையிலெடுத்துக்கொண்டு ஒரு மிராசுதாரின் அபிப்பிராயப்படி, மரம்வெட்டுதல், நெற்கதிரறுத்தல், புல்லறுத்தல், மண்வெட்டுதல்முதலிய தொழில்களைச் சரிவரச் செய்தால், அதனுல் தருக்தகூலியும்; மிராசுதாருடைய விசுவாசத்தையும் பெறுகிறன். அங்ஙனஞ்செய்யாமல் அந்த வாள், கத்தி, மண்வெட்டி

முதலிய கருவிகளைக்கொண்டு ஒரு மனிதனை வெட்டிவிட்டானுல், பலபேர்களுடைய நிந்தனையும், அடியும், உதையும் பெறுவதுடன், மரணதண்டனையையும் அடைகிறான். மேற்கூறிய மேன்மையையும், தாழ்வையும் அடையச்செய்தது மனத்தின் தொழிலேயன்றி, வாள் முதலிய கருவிகளின் குற்றமேயன்று, அதுபோல், மனமானது பொதுஸ்தானத்திலிருக்கின்றது; அதை உபயோகிக்குமாறினிலிருந்து, சுத்தமனமென்றும், அசுத்தமனமென்றும் பெயர் தாங்கி நிற்கின்றது.

மனத்தை அடக்கிவிட்டேன் என்று வாய்ஞானம் பேசுகிறவர்கள், ஒருயுவதிப்பெண்ணின்; அதாவது பதினுறுவயது வாலிப்க் கன்னிகையின் திரண்ட ஸ்தனபாரம் கச்சைவிட்டு விலகித் திறந்திருக்கக் கண்டால், அதை மறுபடியும் பாராமல்; அல்லது தமது கண்களை மூடிக்கொள்ளுவாவது வன்மையுடையவர்களாயிருப்பார்களா? அங்ஙனமிருக்க எண்ணினுல், "பித்தம்பிடித்த மனத்தை யோடுக்கவும்" என்று குணங்குடியார் கூறிய தேவாமிர்த வாக்கியம்போன்று, அந்த மனத்துடன் எவ்வளவுநேரம் போராடவேண்டும்? என்பது ஒவ்வொரு விவேகிகட்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரிந்த விஷயமே. அப்படிக் கொஞ்சங்கொஞ்சமாக அசுத்தமான மனத்தையடக்கிப் பரிசுத்தமான மனதாக்கிவிட்டாலும், "என் மனம் பரிசுத்தமாகி விட்டது?" என்று உறுதியாகச்சொல்லவே முடியாது. எனெனில், ஒரு வாலிப ஸ்திரீயானவள் வலிந்து ஒருவனைப்புணர எண்ணி அவனுக்குச் சமிக்ஞை பண்ணிவிட்டால், உடனே தன் வசமற்று அவள் வசமாகிவிடுவானை யன்றி, எவ்வளவு வைராக்யசாலியாலும் அதைத் தவிர்ப்பது மஹா அருமை. விஸ்வாமித்திரர், பட்டினத்தடிகள் முதலிய பெரிய மஹரிஷிகளின் இதயப்பொக்கிஷத்தையெல்லாம் மடந்தையர்கள் ரூபலாவண்யம் கொள்ளை கொண்டு விட்டதென்றுல், கேவலம் மற்றவர்களைச் சொல்வானேன்.

தனிப்பாடற்றிரட்டு.

கடந்தா னொருகன்னி மாராச கேசரி காட்டிற்கொக்கைக்
குடந்தா னனைய வொயிலா யதுகண்டு கொற்றவனுக்

தொடர்ந்தார் சர்யாசென் யோகம்வீட் டார்சுத்த சைவரெல்லாம்
மடந்தா னடைத்துச் சிவபூசை யுங்கட்டி வைத்தனரே.

ஆகாயத்தினிடமிருந்து உற்பத்தியாகும் சண்டமாருதத் தைப்போன்று, மனத்தினின்று உதயமாகிற ஆசாபாசங்களைத் தவிர்த்துவிட்டேன்; இனி மோட்சவீட்டைத் திறப்பதற்குத் திறவுகோலைத் தான் காணுமென்று பிதற்றுகிறவர்கள், எங்கேயும் ஒருபைசா கீழே கிடக்கக்கண்டால் அதையெடுக்காமல் கல், ஓடு முதலியவைகளைப்போலவே எண்ணி வழியே சென்றுவிடுவார்களா? அல்லது, கனவிலாவது அப்படிக் கீழே கிடக்கக்கண்டால் அதை எடுக்கிறதுபோற் கனவு காணமாட்டார்களா? அங்ஙனம் செய்யாமலிருப்பார்களேயானால், அவர்கள், ஆசையையும், மனத்தையும் செயித்தவர்கள்தான். ஆனால், நிராசையுடையவர்கள் ஒருவருமே இல்லையென்று நாம் சொல்லவில்லை; இருப்பது அருமையென்றே சொல்லுகின்றோம். அத்தகைய மஹாநுபாவர்களிருந்தார்க ளென்பதற்கும், பின்வருஞ் செய்யுட்களும், அதைப் பாடியவருடைய சரித்திரமுமே போதிய சான்றாகும்.

திருவருட்பா.

செறிவதின் மனத்தேன் காலே யாசை செய்திலே னிச்சா னன்றி
அறிவதில் லாத வெற்பரு வத்தம் அடுத்தவர் கொடுத்தா சவர்மேல்
எறிவது மேட்டி லெறிச்சது மெனக்கு விருக்கின்ற கியதிச் சதுவே
பிறிவதில்லாதின்னருட்பெரும்பொருளைப் பெற்றனன்பேசவதென்னே.

பணத்திலே சிறிதும் ஆசையொன் றிலாதான்
படைத்தவப் பணங்களைப் பலகால்
இணத்திலே யெறிந்தேன் குளத்திலு மெறிந்தேன்
கேணியி லெறிந்தன னென்சாய்
குணத்திலே நீதான் கொடுக்கின்ற பொருளை
எறிகலேன் கொடுக்கின்றேன் பிறர்க்கே
கணத்திலே யெல்லாக் காட்டுகின் றருளைக்
கண்டன னினிச்சொல்ல தென்னே.

மனமென்னும் பரிசுத்தமான முத்தை, அறிவென்னும் கருவியால் தயரிட்டு, அநுபவமென்னும் நூலிற் கோர்த்து மாலையா

கத் தரித்துக்கொள்ளல் வேண்டும். அங்ஙனம் கோர்க்காவிடில், அந்த மனோநித்திலம் பிரயோசனமற்றதாகும்.

மனத்தினும் சங்கற்ப விகற்பங்கள் முழுவதையும் கைவிடுவதே பிரம்ம சைதன்யத்தை வசப்படுத்தியதாகும். மரத்தினும் செய்த உருவைக் கட்டையென்றறியாதபோது கள்வன் தோன்றுவதுபோல், சர்வம் பிரம்மமயமென்றறிந்து தெளிவடையாத போது பிரபஞ்சந்தோன்றும்.

சதாலந்த சாகரமாகிய பேரின்பக்கடலில் முழ்கி நீக்கமிலையற்றிருக்கும் மஹான்களுடைய மனமானது, சர்வசக்திகளையுடையதாயும், பரிபூரணமாயுமிருக்கும். அழிவில்லாத பிரம்மபதமென்பதும் அதுவே. பிரம்மபதமாகிய அதனிடத்தில் இல்லாதவைகள் ஒன்றுமேயில்லை. வித்துக்குளிற் சிறியதாகிய ஆலம்விதையிலிருந்து அந்த மரந்தோன்றி, இரத, கஜ, துரக, பதாதியென்னும் சதுரங்கசேனைகளுடன் மன்னுதிமன்னர்கள் தங்கியிளைப்பாறும்படி நிழலைத் தருவதுபோலவும், ஆகாயத்தில் சூனியசக்தியும், நீரில் திரவசக்தியும், இரும்பு முதலிய உலோகங்களில் கடினசக்தியும், காற்றில் சலனசக்தியும், நெருப்பில் உஷ்ணசக்தியும் அமைந்திருப்பதுபோலவும் மனமானது மிகச்சிறியதும், மிகப்பெரியதும், ஆயிரத்தெட்டு அண்டங்களைக் கைகொடிப்பொழுதிற்குட் சுற்றவல்லதும், சர்வசக்திகளையுடையதுமாயிருக்கின்றது.

ஆற்றங்கரையின் அருகில் நின்ற மரம் வேரற்று விழுந்து நீரில் ஒடும்போது, வேறொரு உயிர்மரத்தினுல் தடையுண்டு நின்றுற்போல, சஞ்சரிக்காநின்ற மனத்தை அறிவினுல் தடைப்படுத்தி, நல்வழியில் நிற்கும்படி முயற்சிக்கவேண்டும்.

பிறவியென்னுந் துக்கசாகரத்தில், ஆசையென்னும் பெரிய வாயையும்; கூரிய பற்களையுமுடைய முதலியானது பற்றியிழுக்க, மரணமென்னும் சுழலிற் சிக்கி வருந்துகின்றோமே! எனத் தனக்குத்தானே ஆத்மவிசாரமுண்டானுல், அப்போதுதான் பரிசுத்தமானமனமென்னுங் கப்பல் கிடைக்கப்பெற்று மோட்சமென்னுங் கரையைச் சேரலாம்.

சதாகாலமும் மாயாரூபமாகிய பிரபஞ்சத்தையே நினைந்து கொண்டிருந்த இந்த மனமானது, அதைத் தவிர்த்துவிட்டு அழிவற்ற ஆத்மஞான நெறிக்கு முயற்சிப்பதென்றால், அது சாமான்யமல்ல. அதற்கும், முழுமுதற்கடவுள் திருவருட்சகாயமிருந்தாலன்றி ஒருபோதும் இயலாது.

தாயுமான சுவாமிகள்.

அவனன்றி யோரணுவு மசையா தெனும்பெரிய
வாப்தர்மொழி யொன்றுகண்டால்
அறிவாவ தேதகில வறியாமை யேதினவை
யறிந்தார்க ளறியார்களார்
மௌனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம்
வாயாய்ப் பிதற்றுமவரார
மனதெனவு மொருமாயை யெக்கே யிருந்துவரும்
வன்மையொ டிரக்கமெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தலிய மெல்விடம்
பூதபே தங்களெவிடம்
பொய்மெயித மதிதமேல் வருன்மை நிலையொடு
பொறைபொரு மையுமெவ்விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
யாதுமுனே யன்றியுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை நின்றபொருளே.

பொய்யா குலகம் நிலையல்ல கானற் புனலெனவே
மெய்யா வறிந்தென்ன என்னு னிதனே விடப்படுமோ.

பட்டினத்துப்பிள்ளை.

ஏன்செய லாவ தியாதொன்று மில்லை யினித்தெய்வமே
உன்செய லென்று வுணரப்பெற்றேன்.
விடப்படு மோவிப் பிரபஞ்ச வாழ்க்கையை விட்டுமனம்
திடப்படு மோநின் னருளின்றியே.

திருவருட்பா.

நினைப்பித்தா னித்தா னிமலாவென் றென்னுள்
நினைப்பித்தா லியானும் நினைப்பேன்—நினைப்பின்
மறப்பித்தா லியானும் மறப்பேன்மற் றுன்னை
பிறப்பித்தா லென்னுலென் பேச.

அங்ஙனமின்றி நான் மனத்தையடக்கிவிட்டேன்; ஆசையை விட்டுவிட்டேன் என்று கானென்னும் ஆணவத்தினால் உபந்நியாசஞ் செய்வதானது, வெளியைத் திரட்டி விழுங்கிவிட்டேனென்று சொன்னதுபோலாகும். ஆனால், இக்காலத்தில் அமெரிக்கர்கள், இந்தியர்கள் முதலிய எல்லோர்களும் சாமான்யமாய் மனோவசியம் (ஹிப்னடிஸம்) செய்து, பற்பலவிதமான சித்துகளைச் செய்யவில்லையா? சிற்சில வியாதிகளைக் கபாலலட்சண (மெஸ்மரிஸ) வித்தையால் மாற்றிவிடவில்லையா? எனக் கேட்கப்படுமாயின்: அந்த அப்பியாசிகள் நாமரூபமுள்ள பாவனைகளைப் புரிந்து "நீர்மேற்குமிழி" போன்றதும் பிள்ளை விளையாட்டைப் போன்றதுமாகிய சில அநித்தியக் கிருத்தியங்களைச் செய்ய வன்மையடைந்திருப்பார்களேயன்றி, மஹாநுபாவர்களைப்போல் நாமரூபமற்ற தனது எதார்த்தவடிவ பாவனையைப் புரிந்து நித்தியத்தை அடைய வன்மையுடையவர்களாகார்.

"வினை விதைத்தவன் வினையை அறுப்பான், தினை விதைத்தவன் தினையை அறுப்பான்" என்னு முதுமொழிபோல், காமியமனத்துடன் "காணப்பெற்றவையெல்லாம் அழியப்பெற்றவை" என்னும் அநித்தியப் பொருளைச் சிந்தித்து அதில் மனவலிமைபெற்றவன், அந்த அநித்தியத்தையே அடைவான். நிட்காமிய மனத்துடன் நித்தியத்தைச் சிந்தித்தவன் ஞானனந்த முதிர்ச்சியால் நித்தியத்தையே அடைவான். "ஆற்றைக் கடந்துபோக எண்ணினால், ஆனைவாலைப் பிடித்தாற் கரையேறலாமா? ஆட்டுவாலைப் பிடித்தாற் கரையேறலாமா?"

மக்கா, மதீனா, காசி, இராமேஸ்வரம், லண்டன், அமெரிக்கா என்று ஒரு விமானடிக்குட் சொல்லிவிடலாமேயன்றி, அவ்விடங்களுக்குச் செல்வதானால் அதிக பொருட்செலவும், பலகாட்களும் செல்லும்; அதிகப் பிரயாசையுமுண்டாகும். அதுபோல், மனத்தையடக்கிவிடலாம்; ஆசையை வெறுத்துவிடலாம்; இது பிரமாதமல்லவென்று வாய் வீணாய்ச் சொல்லிக்கொள்ளலாமேயன்றி, அங்ஙனஞ்செய்வது அருமையிலும் அருமை.

திருக்குறள்.

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

ஈணறு தோண்டுவதற்கு முன்னே அவ்விடத்தில் நமது கட் புலனுக்குத் தோன்றுத ஆகாயம், ஈணறு தோண்டியபின் தோன் றுகிறது. அதுபோல், மனமாயையால் நமக்குத் தெரியப்படா திருக்க கடவுள், ஆசிரியரனுக்கிரகத்தால், மனமானது அறிவிற் கலந்து அறிவு ரூபமாகிக் கடவுளைக் காண்பிக்கும்.

களங்கரகிதமான ஆகாயத்தில் மேகங்கள் உண்டாவதற்கும் மேகமில்லாமற் போவதற்கும் வாயுவே காரணமாகவிருக்கின்றது. அதுபோல், மனிதர்கட்கு ஆசையுண்டாவதற்கும் நிராசையாய் மோக்ஷமடைவதற்கும் மனமே காரணமாகவிருக்கின்றது.

நித்திரைசெய்வது சுகமாகவிருக்கிறதென்று சொல்வது, பஞ்சேந்திரியங்களின் வழியே நிகழ்ந்துழலாநின்ற மனம் இல்லா தகினுலல்லவா? ஆதலால், மனம் உலகவியாபாரங்களில் வியாபித் துச் சஞ்சரிக்கின்ற *சாக்கிராவஸ்தையிற் சுகமுண்டென்பது நிஞ் சிற்றேணுமில்லை.

ஒருவன் ஐஸ்வரியங்களை அடைவதற்கும், இன்பத்தைப் பெறுவதற்கும், ஆளிறக்க சாஸ்திரங்களை வாசித்து அதன் பய னையுணர்ந்து கல்விமானுவதற்கும், பிரத்தன்மைக்கும், கீர்த்திக் கும், ஞானமடைவதற்கும் துணையாகவிருப்பது இந்த மனமே?

ஒருவன் மனமானது கடவுள் திருவடியை யடையுமாகில், அவன் முன்செய்த பாவங்கள் தூறுகோடிக்கு மேற்பட்டிருப்பி னும், நெருப்புப்பட்ட பஞ்சுபோலாகிபோல் ஒருகண நேரத்தில் ஒழிந்துபோகும். ஒருவனைக் கெடுப்பதும், கெட்டவனை அக் கெடுதியினின்று அப்புறப்படுத்துவதும் இந்த மனந்தானென்று ணர்ந்து, அறிவிற் சிறந்த முமூட்சுக்கள் மனத்தை உலகவிடயங் களிற் புகாமல் தடுத்துவிடுவார்கள்.

சிவவாக்கியர்.

அஞ்சுமூன்று மெட்டுடா யஞ்சியான மந்திரம்
நெஞ்சிலே நினைத்துகொண்டு தூறுசெய்பிப்பிரேல்
பஞ்சமான பாதகங்க ளூறுகோடி செய்யினும்
பஞ்சுபோற் பறக்குமென்று நான்மறைகள் பன்னுமே.

---

* சாக்ரோவஸ்தை—இது சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என ஐந்தவஸ்தைகள்.

ஓர் மேட்டு வயலுக்குத் தண்ணீர் பாய்ச்சவேண்டுமானால், பல வாய்க்கால்களிலும், ஜலத்தைப் போகவொட்டாமல் தடுத்து அப்பாய்ச்சுவார்கள். அதுபோல், மனுவாக்குக் காயங்களுக்கு ஆதிதமாகிய பிரம்மத்தில் மனத்தை நிறுத்தவேண்டுமானால், பிரபஞ்ச விகாரமாகிய பல வாய்க்கால்களிலும் மனமென்னும் நீரைப் போகவிடாமல் தடுத்து, பிரம்மமென்னும் மேட்டுவயலுக்குச் செலுத்தவேண்டும்.

திருவருட்பா.

உடம்புவரு வகையறியீ ருயிர்வகையை யறியீர்
உடல்பருக்க வுண்டுநித முறக்குதற்கே யறிவீர்
மடம்புகுபேய் மனத்தாலே மயங்குகின்றீர் மனத்தை
வசப்படுத்தீர் வசப்படுத்தும் வழிதுறைகற் றறியீர்
இடம்பெறுபொய் வாழ்க்கையிலே இன்பதுன்ப மடுத்தே
எண்ணியெண்ணி யிளைக்கின்றீர் எழையுல கீரே
நடம்புரியென் றனித்தந்தை வருகின்ற தருணம்
நண்ணியது நண்ணுமினே புண்ணியஞ்சார் வீரே.

சமுத்திர ஜலத்தையெல்லாம் பருகினாலும் பருகலாம், மகாமேருவை அடியோடு பிடுங்கினாலும் பிடுங்கலாம், வெப்பம்பொருந்திய அக்கினியை விழுங்கினாலும் விழுங்கலாம், சிங்கம், புலி, கரடிமுதலிய துஷ்டமிருகங்களையும் சாத்தமுள்ள பிராணியாகப் பழக்கிவிடலாம், இந்த மனத்தை மட்டிலும் அடக்குவதரிது. உலக விடயங்களெல்லாம் உண்டாவதற்கு மனமே காரணம். இந்த மனமே! நமக்குச் சத்துருவும், மித்துருவுமாக இருக்கின்றது. ஆகையால், மனோநிக்ரகமானலன்றி மீடேறுவதரிது.

சிவகாருண்யம்.

இருபதாவது அத்தியாயம்.

சிவகாருண்யமென்பது புலாலைத் தின்னுமலிருப்பது மட்டுமல்ல; ஆடு, மாடு, கோழி, எறும்பீறுகளுள்ள சகல சீவன்களையும் தன்னுயிரைப்போல் வாஞ்சவத்தில் எண்ணி, அவ்வுயிர்களை வருத்தாமலிருப்பதே சிவகாருண்யமாகும். சிலர், மாமிசாதிகளைத் தின்னுமலிருப்பதே சிவகாருண்யமெனக் கருதி, சிலசமயங்களில்

ஆடு, மாடுகள் தன்னுடைய பயிர், கொடி, செடிகளையும், இதர பொருட்களையுங் தின்னக்கண்டால், அவைகளைத் தூரத்திவிடாமலும், இராச ஆக்ஞைப்படி வாடியிற் கொண்டுபோய் அடைகாமலும், கோபாவேசத்துடன் தன் கையிலிருக்த மண்வெட்டியோ? அரிவாளோ? தடிக்கம்போ? மற்றெதுவிருந்தாலும் அதைக்கொண்டு அம்மிருகத்தின் உயிர்நீங்கும் விதமாய் கையப்புடைக்கின்றார்கள். இத்தன்மையுடையவர்கள், மாமிசத்தைச் சாப்பிடாமல் தமது முன்னோர்கள் கொண்டிருந்த வழக்கத்தைக் கைக்கொண்டு, அந்த மாமிசத்தின் சுவை இவ்வாறிருக்குமென அறியாமலிருக்கிறார்களேயன்றி, உண்மையில் மாமிசத்தைப் புசிக்கக்கூடாதென்று எண்ணி நீக்கியவர்களல்ல.

சீவகாருண்யமுள்ள பெரியோர்கள், மன்னுயிரால் தன்னுயிர்க்குத் துன்பம் நேர்ந்தகாலத்திலும் மன்னுயிரைக் கொல்லக் கருதமாட்டார்கள்.

திருக்குறள்.

நிறப்பீலஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

கறுத்தின்னு செய்தவக் கண்ணும் மறுத்தின்னு
செய்யாமை மாசற்றார் கோள்.

செய்யாமற் செற்றார்க்கும் இன்னுத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.

தன்னுயிர்க் கென்னுமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னு செயல்.

பிரபுலிங்கலீலை.

தன்னைக் கொல்லினுந் தான்பிறி தொன்றினைக் கோறல்
பன்னித் பாவமென் றறைகுவர் சற்குணர் பழையோர்.

ஆகையால் சகல வுயிர்கள்மீதும் கருணைபாலிப்பவ னெவனே? அவனே! அத்தனனென்னும் வாக்கியத்திற்கு இலக்கானவன். இதை விட்டுவிட்டுப், பார்ப்பார்களே அத்தனர்கள் மற்றவர்கள் அத்தனரல்லவென்று கருதுவது சரியாகுமா?

திருக்குறள்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.

வம்சபரம்பரையாக ஆடு கோழிகளைத் தின்று வருபவர்களில் ஒருவன் கல்வி, கேள்வி, சாதுசங்கச்சார்பு முதலிய நல்லொழுக்கத்தால் பிராணிகள்மீது கிருபை வைப்பானேயானால், அவன் எந்தச் சாதியாயிருந்தாலும் அவனே சிவகாருண்யமுடைய மஹானுவான். மாமிசம் புசிக்குமொருவன், பரம்பரையாகத் தமது முன்னோர்கள் புசித்துவந்த வழக்கத்தை அநுசரிக்கிறானேயன்றி, அவனுல் அந்த வழக்கம் ஏற்படவில்லை. அதை அவன் நீக்கவேணுமென்று கருதினாலும், அவன் இனசனத்தார்கள் அங்ஙனம் நடக்கவிடாமற், கல்யாண முதலியவற்றின் பந்திபோசனங்களில் மாமிசபட்சணம் செய்யும்படி நிர்ப்பந்திக்கின்றார்கள். அப்படி நடந்துகொள்ளாவிட்டால், அது பலபேர் கேள்விகட்கு இடங்கொடுக்கும். அதற்கு வழிசொல்லியே தீரவேண்டும். சரியான முகாந்தரஞ் சொல்லாவிட்டால், ஜாதியை விட்டு விலக்குவதற் காரம்பிப்பார்கள். என்னசெய்வான் பாவம்! குடும்பத்திலிருக்கிறவரையிற் குலாசாரப்படி நடந்தானே தீரவேண்டியிருக்கிறது. புலால் புசிக்காத சில ஏனைய மதஸ்தர்கள் முஹம்மதிய மதத்திலும் அம்மதத்தினரிடத்திலும் சிவகாருண்யமில்லையென இகழவாரம்பிக்கிறார்கள். அஃதென்ன ஞாயம்?

திருக்குறள்.

தேரான் தெளிவும் தெளிந்தான்க ணையுறலும்
தீரா விடும்பை தரும்.

முஹம்மதிய மதத்திலுள்ள உண்மைகளை அம்மதத்தின் மேலான நூல்களை வாசித்தறியாமலும், வாசித்துத் தெளிந்தவர்களைக் கேட்டறியாமலும், சிற்சில மனிதர்கள் பேருக்குமாத்திரம் முஹம்மதியரென்று சொல்லி, சட்டை, குல்லாய்களை அணிந்துகொண்டு மதுபானம், பிறர்மனை நயத்தல், அபினி, கஞ்சா முதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகித்தல், இதுபோன்ற பல கொடிய செய்கைகளைச் செய்துகொண்டு படுகேடாய்த் திரிவ

தைக்கண்ட அன்னிய மதஸ்தர்கள், இதுதான் முஹம்மதிய மதத்தின் ஒழுங்கென்று கருதி இகழ்வது கூடவே கூடாது. முஹம்மதிய சமயத்திற் கொடிய பாதகமாகிய கொலை, களவு, கள், காமம், பொய், பொருமை, வெகுளல் முதலிய சர்வ அநீதி களையும் நீக்கும்படிச் சொல்லப்பட்டிருப்பதுபோல், எந்தச் சமய நூற்களிலும் அவ்வளவு தெளிவாய்ச் சொல்லவில்லை யென்றே சொல்லலாம். முஹம்மதிய மதத்தில் சிவகாருண்யத்தைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்ற தென்பதையும் சொல்லப்படவில்லையென்பதையும் பின்வரும் சரித்திரத்தாலறியலாம்.

முற்காலத்தில் அறபிதேசத்தில் செய்கு சிபுலி றகுமத்துல்லா என்றொரு மகானிருந்தார். அவர் வெகுகாலம் தவம்புரிந்து சூக்கும, காரண சரீரத்தை யடைந்தபின் "ஆனுலுமிக்க வுடலோடிருப்ப தருவருப்பே" என்னுங் கருத்தையுணர்ந்து இந்தத் தூலசரீரத்தை நீக்கக் கருதிச் சமாதியடைந்துவிட்டார். பின் பொருகாலத்தில் ஓர் அசுகாபி என்பவர் கனவில் தோன்றினார்; அப்போதந்த அசுகாபி பெரியவரை நோக்கி, தாங்கள் கடவுள் சமுகத்தை நாடிச்சென்றீர்களே? அவர் சமுகத்தில் என்ன சம்பாஷணைகள் நடந்தது, அதனை அடியேனுக்குத் தயைபுரிந்து திருவாய்மலர்ந்தருள வேண்டுமென மன்றுடிக்கேட்டார். உடனே பெரியவர் பின்வருமாறு சொன்னார்:—

கேளும் அசுஹாபியே? கடவுளானவர் என்னைக் கூப்பிட்டு, நீர்செய்த பாவங்களையெல்லாம் நான் பொறுத்தாட் கொண்டேன்; ஆனுல், என்ன காரணத்திற்காகப் பொறுத்தேனென்பதை அறிந்துசொல்லும் என்றார். அப்போது நான் செய்த (ஆமல்) தவத்திற்காகப் பொறுத்திருப்பிரென்றேன். அதற்கவர் நகைத்து அதற்கு மல்லவென்றார். புண்ணியங்கள (ஹஜ்ஜு) யாத்திரைக்காகவா என்றேன். அதற்கு மல்லவென்றார். அப்படியானுல், நான் பலதேயங்கட்குஞ் சென்று சற்குருவைத்தேடி மெய்க்கல்விகளைக் கற்றுக்கொண்டதற்காகவா? அல்லது பல நாள் வருந்தி விரதம் (நோன்பு) அநுஷ்டித்ததற்காகவா? அல்லது தானதர்மஞ் செய்ததற்காகவா? என்று கேட்டேன். அதற்கு மல்லவென்றார். ஆனுல் வேறெந்தக் காரணத்திற்காக எனது

பாவங்களைப் பொறுத்தாட்கொண்டீர், அதைத் தேவரீரே சொல்லல்வேண்டுமென்றேன். அப்போது கடவுளானவர் சொல்கிறார்:—

நீர் ஓர்நாள் பகுதாதப் (Bogdod) பட்டினத்தின் கடைவீதி வழியாய் நடந்துகொண்டிருக்கும்போது; ஓர் பூனைக்குட்டியானது குளிர்தாங்காமல் உடல்சுருங்கி வருந்தி, ஓர் சுவற்றோரத்தில் ஒதுங்குவதைக்கண்டு மனமிரங்கி, அப்பூனைக்குட்டியை மார்போடணைத்து உமது கைச்சட்டைக்குள்ளே வைத்தீர்; அதனாலும் அதற்குக்குளிர்நீங்காததைபுணர்ந்து வைக்கோல்முதலிய உஷ்ணமான படுக்கையில் படுக்கவைத்து அதன் நடுக்கத்தை நீக்கிவைத்தீர், அந்தச் சிவகாருண்யத்தின் பலனுக்காகவே உமது தவறுகளை மன்னித்தேனென்றார். இவ்விதங்ஙனமிருக்க, முஹம்மதிய சமய சம்பந்தமான தமிழ் நூல்களில் பிரதமமான பொன்னரிய மாலையென்னும் ஓசியத்தில்,

தாங்கு சந்தாக்குத் தாங்கினாலும் தனியே யிரவெல்லாம் வணங்கினாலும்
வாங்கு சொல்லுமுன் ஒலுச்செய்தாலும் வருவி சுவர்க்கந்தான் புகுவதில்லை

எனவும் "இரக்கமில்லாதவனுக்கு சுவர்க்கமில்லை" எனவும் பிரசித்தமாகக் கூறுகின்றது. ஆதலால், எந்த வாக்கியத்திலும் விசேடார்த்தமிருந்தால் அதை ஒப்புக்கொள்ள வேண்டுமேயன்றி பேரைக்கேட்ட மாத்திரத்திலேயே வெறுத்து இகழ்ந்துவிடக் கூடாது. இதனாலேயே ஞானவாசிட்டத்தில் "ஊகமூல தேற் சிறுவ ருரையுங் கொள்க" எனக்கூறியுள்ளது.

திருக்குறள்.

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

அறநெறிச்சாரம்.

காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண்
ஆய்த லறிவுடையோர் கண்ணதே—காய்வதன்கண்
உற்ற குணந்தோன்று தாகும் உவப்பதன்கண்
குற்றமுந் தோன்றுங் கெடும்.

ஆகையாற் சர்வசமயத்தினரும் கொல்லாமைகளை அவசியம் நீக்கவேவேண்டும் என்பது கருத்து.

து ற வு.

இருபத்தோராவது அத்தியாயம்.

துறவு என்று சொல்லப்படுவது, மனைவி, மக்கள், வீடு வாசல், ஆடு, மாடுகளைத் துறந்து வனத்திற் போயிருந்து மறுபடியும் எதாவது ஒர் பிரபஞ்சக் கருமத்தைச் சிந்தித்துக்கொண்டிருப்பதல்ல. வனத்திலிருந்தாலும், ஜனங்கள் நெருங்கிய நகரங்களிலிருந்தாலும் சரியே, எவ்விதப்பற்றும் எக்கருமமும் இல்லாது இருப்பதுதான் துறவு.

சிவவாக்கியர்.

மனத்தகத் தழுக்கறுத மௌனஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மௌனஞான யோகிகள்
முனைத்தடத் திருப்பினும் பிறப்பறுத் திருப்பரே.

இதைவிட்டு நான் துறந்துவிட்டேன் என்று வாய்ஞானம் பேசிப் பேய் ஓட்டுகிறேன்? பிள்ளைவரம் கொடுக்கிறேன்? நோய் தீர்க்கிறேன் எனப் பிரஸ்தாபித்து அநேகருப்பமாக இருப்பவர்கள், இரும்பு விலங்கை வேண்டாமென்று பொன் விலங்கைத் தன்கையிற் போட்டுக்கொண்டது போலாகும்.

சிவஞானவள்ளல்.

தாயரையும் தத்தையையும் தற்சார்ந்த கேளிரையும்
மாயு மயல்காட்டும் மனைவியையும்—சியென்று
சொற்பனம்போற் கண்டெட்டாத் தூரம்போ யோகநிலை
நிற்பவனே ஞானியென நேர்.

காயசம் பந்த மனைவிதாய் தத்தை கான்முளை யென்னுமிவ் வுவரை
ழாயசம் பந்த மெனத்துறந் தொழிந்தோன் மாகிலம் பரவுமெய்ஞ் ஞானி
தேயசம் பந்தத் தவரொடு மருவிச் செனித்தவர் நகரிடை மருவான்
ணாயசம் பந்தத் தவரொடு மருவித் துறவியர் யவரெல்லாந் துறப்பான்.

குடும்பத்தை யென்னுட் குலைப்பேனே பொல்லா
விடும்பையினை யெஞ்ஞான்றீர் வேனே—குடும்பையினிற்
பட்பதந்தாற் போலேயான் பொய்யுடல்விட் டேகுவனே
துட்பசில னுனவே னே.

ஒழிவொடுக்கம்.

கன்னனைப்போற் றன்னை யறிவனே காக்கையுடன்
மன்னு குயில்போன வாறுபோ—லன்னியமாய்ப்
பேசாது போன துறவி பிறப்பதுப்பார்க்
காசாலு மென்றே யறி.

ஒருநாள் ஒருவீட்டில் அழுகைச்சத்தம் கேட்டது, அப்போது வெளியிற் சென்றுவந்த தெய்வசிகாமணி முதலியார் என்பவர் தன் மனைவியாகிய ஞானம்பாளை நோக்கி, அஃதென்ன தொனியென்று வினவினர்.

ஞானம்பாள்:—குமாரசாமி பிள்ளை நானாயதினத்திற் காயா சம்பூண்டு சந்நியாசம் பெற்றுக்கொள்ளப் போகிறாராம், அதற்காக அவர் தந்தைதாய் முதலிய உறவினர்கள் அவர் பிரியும் தன்மைக் காற்றாமல் வருந்தி, "உம்மைப்பிரிந்து நாங்கள் எப்படி உயிரோடு வாழ்வோம்" என்று அழுகிறார்கள் என்றாள்.

தெய்வசிகாமணி முதலியார்:—(தலையைச்சிறிது அசைத்துக் கொண்டு) குமாரசாமி பிள்ளை துறவறமா அடையப்போகிறார்? அடைவார்! அடைவார்! என்று ஏளனமாகச் சொன்னார்.

ஞானு:—என்ன அப்படிச் சொல்லுகிறீர்கள்? அவர் என்ன துறவியாகமாட்டாரா?

தெய்வ:—அவர் ஒருபோதும் துறவடையமாட்டார், இது உண்மை.

ஞானு:—நீங்கள் என்ன முகாந்தரத்தைக்கொண்டு அவர் துறவடையமாட்டார் என்றீர்கள்? துறவடைபவர் எப்படியிருப்பார்?

தெய்வ:—துறவடைபவர் எப்படியிருப்பார் என்பதை நீதெரிந்துகொள்ள விரும்புகிறாயா? ஆனால் உனக்கு நான் நிதரிசனமாகக் காண்பிக்கிறேன். என்று கூறித் (தன்மேற் போட்டிருந்த அங்கவஸ்திரத்தை எடுத்துக் கையில்வைத்துக்கொண்டு, தனது நாயகியாகிய ஞானம்பாளை நோக்கி) இங்கே பார்? துறவடைபவன் இந்த வஸ்திரத்தைக் கழிப்பான்; அதை இப்படித்தான் கௌபீனம் கட்டுவான்; இப்படித்தான் முன்பின் யோசியாமல் ஓடு

வான் என்று ஓரே ஒட்டமாக ஓடிவிட்டார். ஓடிப்போன நாயகன் வருவார்வருவாரென்று ஞானம்பாளுக்குப் பார்த்தகண்ணும் பூத்துவிட்டதுபோலாயிற்று அவர் திரும்பி வரவேயில்லை. இப்படிப் பல நாள்களாயின; நாட்கள் சேர்ந்து மாதமாயின; மாதங்கள் சேர்ந்து வருடமாயின; அவர் வரவேயில்லை. துறந்துபோகும் பாவனை இத்தன்மைத்தெனச் செய்துகாண்பித்ததெய்வசிகாமணி முதலியார் உண்மையிலேயே துறவியாகிவிட்டார். இஃதன்றோ? துறவிலட்சணம்.

சிவஞானவள்ளல்.

தந்தைதாய் முதலியர் தமரைக் காண்குறில்
வெந்துயர் விளைதலால் விருப்பு மேவலால்
அந்தகன் னிலமகள் நைம்பதி யோசனை
மைந்தனே நீபர தேயம் வைகுவாய்.

மனம்பி றந்த வுடலைச் சமப்பதற்
கேன்பி றந்தமென் றெண்ணி யறிஞர்கள்
தான்பி றந்த விடத்தைத் தணந்துபோய்
வான்பி றந்த வனத்தில் வசிப்பரே.

துறவடைய நினைத்த அந்த நேரத்திலேயே சகல பற்றையும் விட்டுத் துறந்துபோகாதவன் மறுபடியும் துறவடைவான் என்று கருதுவது மலடியும் பிள்ளைபெறுவாள் என்று எண்ணியிருப்பதை நிகர்க்கும்.

அகஸ்தியர் மதிவேண்பா.

சொல்லாமல் நீங்கத் துணிந்தவர்க்கே யல்லாது
பொல்லாத மாய்கைவிட்டுப் போகாதே—சல்லாப
லீலையிலே தான்மயங்கி நின்றவுயிர் கெட்டுவிடும்
வாலையவன் சொன்னன் மதி.

ஒழிவிலொடுக்கம்.

நித்திரைசெய் வீட்டி னெருப்பும் பெரும்படையு
மூற்றிப் புறப்பட்டார் மூற்றத்தே—பித்தரைப்போல்
நில்லென்று சொன்னலு நிற்பரோ! வப்படிகாண்
இல்லறத்தை நீத்தா ரியல்பு.

கட்டு செலித்தவிட்ட கன்னைப்போற் கங்குலிற்பேய்
வெட்டு களத்தின் வெருவினர்போல்—முட்டத்
தொடர்ந்த படைபிழைத்துத் தோன்றப்பே வார்போ
லடங்கத் துறந்தேகு வார்.

சிலர், தான் துறவடையப் போவதாகவும், ஆனால் இத்தனை காட்களாகத் தன்னை கப்பிக்கொண்டிருந்த தந்தை, தாய், மனைவி, மக்கள் முதலிய குடும்பத்தினரை இதுசமயத்திற் கை விட்டுவிட்டால் அவர்கள் பரிதபிப்பார்களென்றும், என்மகன் இப்போது குழந்தையாயிருக்கிறன் அவனுக்குப் பருவகாலம் வரும்வரையிற் பாதுகாத்து அதன்பின் ஓர் பெண்ணைத்தேடிக் கல்யாணமுடித்து விட்டால் அவனைப்பற்றிய கவலை எனக்குக் கிடையவே கிடையாதென்றும், அப்படிச் செய்யாவிட்டால் ஆதரவின்றி வருந்துவானென்றும் சொல்லிக்கொள்கிறார்கள். சிலர் என் பெண்சாதி சிறுவயதுடையவள் என்னைக் காணவிட்டால் அதே வியாகுலமாய் ஏங்கி இறந்துபோவாள், என்னை நீங்கிய சோகத்திற்கு ஓர் குழந்தையிருந்தால் அதுமுகத்தைப் பார்த்துக்கொண்டே காலங் கழித்து விடுவாள், ஆதலால் எனக்கு ஓர் குழந்தை பிறந்தவுடன் சந்நியாசம்பெற்று விடவேண்டுமென்றும், சிலர் என்னுடைய வம்சவிர்த்தியின் பொருட்டு ஓர் குழந்தை பிறந்தவுடன் துறவியாகிவிட வேண்டுமென்றும், சிலர் துறவியாகிவிட்டால் என் மனைவி வேறுவழியின்றி மயங்குவாள் அதற்காக அவள் சிவனும் சத்திற்கு ஏதாவது மார்க்கம்பண்ணிவிட்டு அப்புறம் துறவியாக வெளியேறிவிட்டால் வியாகுலமே கிடையாதென்றும் வாசாலமாகச் சொல்லிக்கொள்கிறார்கள்.

பிரபுலிங்கலீலை.

ஆசை யறுதல் வீட்டின்பம் சேரே யடையக் காரணமாம்
ஆசை யறுதலதில்லைப் பலது வனைத்து மாய்ந்திடினும்
ஆசை யறுவோன் வெனுதல் திண்ண மெனகன் றறிந்திருந்தும்
ஆசை யுறுத்லென்கொண்டோ அய்தோ மனித ரறியேமே.

சகல பற்றுக்களையும் பற்றறவிட்டதே துறவு. அங்ஙனமிருக்கக், "குளிக்கப்போனவன் தன்மேல் சேற்றைப் பூசிக்கொண்டு திரும்பினன்" என்பதுபோல் பந்தபாசங்களைவிட்டு நீங்கவேண்டுமென்னும் எண்ணமுள்ளவன் பெண்சாதிக்குச் சிவனும்சத்திற்கு நிலமும், உடுத்துவதற்குப் புடவையும், இரவிக்கையும், வம்சவிர்த்திக்குக் குழந்தையும், குழந்தைக்குக் கல்யாணமும் தயாரித்து வைத்துவிட்டுப் போகவேண்டுமென்று எதற்காக எண்ணுகிறன்;

இப்படி எண்ணமுள்ளவன் எக்காலத்திலாவது துறவியாவானு? ஏனெனில், அவனுக்கு மேன்மேலும் ஆசை வளர்ந்துகொண்டே யிருப்பதால் "நெருப்பு மிஞ்சினுல் தண்ணீரைக்கொல்லும் தண் ணீர் மிஞ்சினுல் நெருப்பைக் கொல்லும்" என்பதுபோல் மனவி மக்கள்மீதுண்டான பற்றுக்களை விடாதபோது அறிவானதுகெ டும். அறிவு மேலிட்டபோது ஆசையானது கெடும். ஆகையால், தேகாபிமானமுதலிய எல்லாப் பற்றுக்களையும் அறவே விட்டுவிடு வது துறவாகும். அங்ஙனம் தான்தேடிய பொருள், பூமி, ஆடு, மாடு, பெண்டு பிள்ளையாதிகளைக் கைவிட எண்ணினுல் சாமான் யத்தில் இந்தமனம் இணங்குமா? இணங்குவது மஹா அருமை. கைவிடுவதென்றுல் தூக்கிக்கொண்டுபோய்க் குளம்குட்டைகளிற் போட்டு விடுவதல்ல. என்னுடையதென்னும் பற்றில்லாமல் தாம ரைத் தண்ணீர்போல் ஒட்டியும் ஒட்டாமலிருப்பதுவே.

நீதிவெண்பா.

இன்னல் தரும்பொருளை யீட்டுதலுந் துன்பமே
பின்னதனைப் பேணுதலுந் துன்பமே—அன்ன
தழித்தலுந் துன்பமே அந்தோ! பிறர்பா
லிழத்தலுந் துன்பமே யாம்.

திருக்கடைக்காப்பு.

செல்வ கெடுமாடஞ் சென்ற சேணுங்கிச்
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேயச்
செல்வன் கழலேத்துஞ் செல்வம் செல்வமே.

சிவதருமோத்திரம்.

மண்ணினுந் தனத்தினும் மனைக்கு வாய்த்தகற்
பெண்ணினு மகலினும் பெரிய பேரினும்
துண்ணென விழைவினைத் துறந்த தூயரே
விண்ணினு மின்புடன் விளங்கி மேவுவார்.

மஹாராஜா துதி.

பொருளுண் டாகிற் காப்பதனற் பொருத்தும் துன்பம் அரசாகின்
ஒருதம் மிருத்த வரசரா தூதர் துன்பு மொருகுடைக்கீழ்
நிருப ஞெடு கோய்மாண ரேரு முன்னும் பயத்தானும்
வருவ தெனையோ மறுமையினி லென்றம் வாடித் துன்புறமே.

மனைவி, மக்களென்று உயிரைவிடுகின்றோம், ஓர் காரணத்திற் காகத் தகப்பனென்றும், பிள்ளையென்றும் ஏற்பட்டதே யன்றித், தகப்பனுக்குப் பிள்ளை பிறந்ததுபோல் பிள்ளைக்குத் தகப்பனை வன் எத்தனையோ தடவை பிறந்திருக்கின்றனென்ற சருதிக ளெல்லாம் முழங்கிக் கொண்டிருக்கின்றது.

பாதம்.

வந்துபிற வாதமனை யில்லைமுலை மாறித்
தந்துபரி யாமலொழி தாயர்களு மில்லை.

பிரபுலிங்கலீலை.

வினைப்ப யன்கொள வேண்டு மோரிடத்
தினைப்பொ ருத்துறச் சம்பந்த மாத்திரத்
தெனக்கி னிரிவர் என்றபி மானமொன்
றனைப்பொ ருத்தி யழிவ றிகிலார்.

தனைய ராகியுத் தத்தைதா யாகியும்
உனையு ருத வுயிரிலே யாதலால்
இனையர் கேளி னினைய ரயலென
நினையு நன்மனிர் நெட்டிலே வேலனும்.

மனைவி, மக்கள் முதலிய குடும்பத்தினரை நான் காப்பாற்று கிறேன் என்கிற ஆனவமுள்ளவரையில் அவனுக்கு ஞானோதய மாகாது. ஒரு எளிய குடும்பஸ்தன் காலஞ்சென்று சிறிய குழந்தைகளை யும், வேறு துணையின்றி நோயால் மெலிந்த தன் மனைவியையும் விட்டுவிட்டுத் திடீரென விஷபேதி (காலரா) கண்டு இறந்துபோகி றான், அப்போது அந்தக் குழந்தைகளும், அவன் மனைவியும் வயிறு வளர்க்கிறார்களா? பட்டினியாய்க் கிடந்து செத்துப்போ கின்றார்களா? அல்லது இறந்துபோனவன் மறுபடியும் உயிர்த் தெழுந்து வந்து அவர்களைக் காப்பாற்றுகிறானா? அவனுக்குயிர் நீங்கியபின் இவர்களைப் பற்றிய கவலையுண்டா? இதற்குமுன் மனைவி மக்களைவிட்டு நீங்கியவர்களுக்குச் சூக்ஷமமான புத்தியில் லையா? இதுபோன்ற வாக்கியங்களை ஆராய்ந்துணர்ந்தாவது சர்வ சராசரங்களையும் பரிபாலனஞ் செய்யத்தகுந்த அருட்டசயாகிய கடவுள் என்பவர் ஒருவரிருக்கிறார், அவரே சகலத்தையும் உண் டாக்கிக் காத்தளிக்க வல்லவர் என்று துணிவுகொள்ள வேண் டாமா?

வேதாந்த பாஸ்கரன்.

வரலாக்கியதகம்.

கவிலி னிம்மண் மக்களுக் கொருதுணை நாமல நிலையென்றே
சவலை யுற்றரன் முன்மறச் சபதினைக் காலனுர் கொடுபோயிற்
குவல யத்தடைந் திவரைநா டொறும்புரந் திடுவையோ குறிக்குங்காற்
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர் தாணுமோர் துணையாமே.

கெடுவ தாம்பொருள் செல்வமே பல்வகைக் கிலேசமற் றதுதன்னை
விடுவ தேசுக மெனவுமோர்ந் திலேமுனம் விடுத்தவர்க் குனைப்போலும்
நெடிய யூகம தில்லையோ சொல்லுநி நெஞ்சமே யினிப்பற்றற
றடைது மேலர னருளையே பொருளென அருஞ்செல்வ மதுதானே.

சிவானந்தபோதம்.

அவரெல்லா மிருக்கவிப்போ துன்னை யேமன்
அழைத்துவிடி லியாதுசெய்வா யழகு நெஞ்சே
இவர்களுக்குப் பிழைக்கும்வகை திரும்பி வந்தே
எதுவாய் முடிப்பதுண்டோ எண்ணிப் பாரு
தவறிநீ கடம்விட்டுப் போகும் போது
தான்கூட மாண்டாரோ பிழைப்பில் லாமல்
அவரவர்க்குச் சென்றுணையென் றெண்ணி டாமல்
ஐயத்தா லிப்படியே யலைவற் றுயே.

ஔவை.

இட்டமுட னென்றலெயி லின்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானே—முட்டமுட்ப்
பஞ்சமே யானலும் பார மவன்றலையில்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

உப்பை.

அந்தி முதலெறும்பீ றுனையி ரத்தனைக்குஞ்
சித்த மகிழ்த்தளிக்குந் தேகென்—முற்றவே
கற்பித்தான் போனதனை காக்கக் கடனிலையோ
அற்பனே வன்ன யரன்.

அதிகமான்.

கருப்பைக்குண் முட்டைக்குங் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானே வோகெடுவா யன்னுய்கேள்
வாட்ட முனக்கேன் மகிழ்.

திருவள்ளுவர்.

எவ்வுயிருங் காக்கவொரு சனுண்டோ வில்லையோ
அவ்வுயிரில் யாஞெருவ னல்லவோ—வவ்வி
யருகுவது கொண்டிங் கலைவதே னன்னே
வருகுவது தானே வரும்.

ஒருவன், ஒரு குடும்பத்தை யாதொரு குறைவுமின்றி அன்புடன் பரிபாலனம்செய்து வருகிறுனென்றும், அவனே அக்குடும்பத்தா ரெல்லாம் நேத்திரத்தைப்போல் எண்ணிப்போற்றிப்புகழ்ந்து வரு கிறார்களென்றும் நாம் தீர்மானித்துக் கொள்வோம்; அவன் பல நாள் வியாதியால் பீடிக்கப்பட்டு வருந்தினுல், அக்குடும்பத்தார் எல்லாம் இராப்பகலாய்க் கண்விழித்து ஊழியம்செய்து வருந்தி, என்றைக்கப்பா தொலைந்துபோவான்; நாம் அனுப்பின்றிச் சௌக் கியமாய் என்றைக்குத் தூங்குவோமோ, ஆ! கடவுளே? அவனு டைய வியாதியைச் சௌக்கியப்படுத்தி அல்லது, இயமனுக் காவது ஆளாக்கிவிடு? இஃது இரண்டிலொன்றைச் செய்யாமற் புண்படுத்துகிறுயே? எனத் தனிமையிற் புலம்புவார்கள்.

நாவார வேண்டும் விதஞ்சொல்லு வாருண்டு நான்பிரித்தாற்
சாவேனென் றேயிருந் தொக்கவண் பார்.

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கிற் கிலக்காயுள்ள மனிஷியும் சஞ்சிப்படைந்து விடுகிறுள். "கடந்துள்ளோர்களும் கடப்பரோ மக்கண்மேற் காதல்" என்னும் அருமைமக்களும் வெறுப்படை கிறார்கள். விதிவசத்தால் அவனுக்கு உயிர் நீங்கிவிட்டாற் சுற் றத்தார்கள் இன்றைக்குப் பிரேதமெடுக்க நேரமில்லை நாளைதினம் தான் எடுக்கவேண்டும் என்று நிச்சயிக்கப் பெற்றுவிட்டாலோ அருமையாயுள்ள மனிஷியும், மக்களும் பிரேதத்தருகில் இராக் காலத்தில் (பகற்காலத்திலும்) தனித்திருக்கவாவது பிரேதத் தைப் பார்க்கவாவது மிகவும் அஞ்சுகிறார்கள். பார்த்தவர்கள், இவனுக்கென்ன கல்மனமா? என்பார்களே என நினைந்து சிலர் பிரேதம் எடுக்கும்போது காக்கையைப்போல் "கா கூ"வென்று

பேரோலமிடுகிறார்கள். * மயான வைராக்யமென்னும் பழமொழியை உலகம் மறந்துவிடாதபடி நிரூபிப்புண்டாக்குபவரைப்போலும், "பணிதுறந்து சடலியடைந்து மானிடவாழ்வென வாழ்வென கொந்து" என்னும் பட்டினத்தடிகள் வாக்கியத்தை மறவாத விசுவாசிகள்போலும், ஈமக்கிரியைகள் நடக்கும்போது இந்தப் பிரபஞ்ச வாழ்க்கையானது, நீரிற்குமிழிபோலத் தோன்றி உடனே அழியப்பட்டது; இவ்வாழ்க்கையால் யாதொரு பிரயோசனமுமில்லை; இதையுணர்ந்தே பொய்யாமொழிப் புலவரும்,

ஒருவன் ஞாலமொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.

உறங்குவது போலும் சாக்கா டுறக்கி
விழிப்பது போலும் பிறப்பு.

---

* மயான வைராக்கியம், பிரசவ வைராக்கியம், புராணவைராக்கியம் என மூப்பாற்று:—

மயானவைராக்கியம்:—ஒருவன் இறந்துவிட்டால் அதைக்கண்ட மற்றொருவன்பிரேதம் எடுக்கிறவரையிலும், என்ன மனிதர் வாழ்க்கை, அநித்தியமான வாழ்வு, கழுதை வாழ்வைத் தள்ளு எனச்சிறிதுநேரம் பயித்தியம் கொண்டவன்போற் புலம்பிச் சிறிது நேரத்திற்கெல்லாம் ஆட்டைப்பார்த்தியா, மாட்டைப் பார்த்தியா என்று சொல்லுவது.

பிரசவவைராக்கியம்:—ஒரு ஸ்திரீ பிரசவவேதனைப்படும்போது நமது நாயகனென்னும் சண்டாளனுல்லவா? இவ்வருத்தமடைகின்றோம்; இனி, அத்தப் பாவிமுகத்தை ஒருபோதும் பார்க்கவேகூடாது எனத் தனக்குள் வெறுப்படைந்து, பிரசவவேதனை நீங்கியவுடன் (தன் மாமியாளை நோக்கி) அத்தே! உன்கன் மகன் சாப்பிட்டார்களா, இல்லையா? கவனித்துப் பாருங்கள் எனக்கூறுதல்.

புராண வைராக்கியம்:—புராணப்பிரசங்கத்திற் சொல்லப்படும் புண்ணியசரிதங்களைக் கேட்குந்தோறும், அத்தாயனுர் அப்படிப் பரமபதமடைந்தார், இந்த ஆழ்வார் இப்படி வைகுந்தமடைந்தார், ஆகையால் நாமும் இனிக் கடவுளை வழிபட்டுய்யவேண்டும். என்று சிறிதுநேரம் பேதைப் பெண்கள் மெய்க்கும்படிப் பிதற்றிவிட்டு வீட்டுக்குப் போனவுடன் அவனுக்குப் பதினுயிரம்ரூபாய் ஆஸ்தி இருக்கின்றதே, இவனுக்குப்பத்துவேலி நிலமுண்டாகிவிட்டதே எனப் பொறுமைப்பட்டு, கணேசா! அவனைக் கெடுத்துவிட்டால் உனக்கு கான்கு சிதறுதேங்காய் உடைக்கிறேன் என்று வழிப்பின்னோயரைப் பிரார்த்திப்பது.

குடும்பை தளித்தொழியப் புட்பநாத் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.

என்று தமது திருக்குறளிற் கூறியிருக்கின்றனர் எனச் சிறிதுநே ரம் வாய்ஞானம் பேசிக்கொண்டிருந்துவிட்டு, சுமக்கடன் முடிந் ததோ? இல்லியோ? ஸ்நானம்பண்ணியவுடன்,

திருக்குறள்.

ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.

என்பதற் கிணங்க வீட்டிற்குச்சென்று (பெண்சாதியை நோக்கி) ஆட்டைப் பிடித்துக் கட்டினியா? மாட்டைபிடித்துக் கட்டினியா? இப்படித்தானு கூட்டாமற் பெருக்காமல் வீடுகிடக்கிறது. கல்ல குடும்பம்பண்ணி வாழ்ந்தே? சீ! நீ கெட்டாயே என்று தாறுமா றாய் வைதுவிட்டு, (காரியக்காரனைப் பார்த்து) சம்பா வயலுக்குத் தண்ணீர் பாய்த்துவிட்டதா? குறுவைகெல் அறுவடையாகிறதா? அதையெல்லாம் கவனமாய்ப் பார்த்துவா, நாராயணக் கோனுன் பணம் கொடுத்தானு? பணம் கொடுக்காவிட்டால் வட்டிமுதல் கூடியது ரூபாய் 159-14-6 ஆகின்றது; நாளைத்திறந்த கோர்ட் டில் தாட்சண்யமில்லாமற் பிரியாது பண்ணிவிடு; அவன் தாட் சண்யம்நமக்கு இருக்தாலென்ன இல்லாவிட்டாலென்ன, கோர்ட் செலவுக்கு இதோ பணமிருக்கிறது எடுத்துக்கொள் என்று, இது போன்ற அநேக சம்பாஷணைகள் செய்து, உலகவியாபாரமென் னும் சேற்றிற் சிக்கிக்கொண்டு, இறந்தவனுக்குக் கருமாதிமுத லிய கிரியைகளைக்கூடச் சரிவரச்செய்யாமற், செலவைச் சுருக் கிச் சில கருமங்களைச் செய்தும் செய்யாமலும் இருந்துவிடுகிறர் கள். அதுவுமன்றி ஆத்மார்த்தமாயிருந்து இறந்துபோனவனு டைய ஆவியானது திரும்ப வீட்டிற்கு வந்தால் எதாவது நம்மை இம்சிக்குமோ எனப்பயந்து,

தேசம் பொருள்கள்தேடிச் செற்றபின் சுடுகாடு
திரும்பி வருவாயென்று சுற்றத்தார் தன்வீடு
வாசலிற் சாணிச்சட்டி விளக்குமார் கொள்ளியோடு
வைப்பார் இதையறிந்து மாயூரம் தன்னைநாடு.

என்னும் ஆன்றோர் வாக்கியப்படி அவன் இறந்த வீட்டுவாயலில் விளக்குமாறு, சாணிச்சட்டி, கொள்ளியோடு, செருப்பு முதலிய

வைகளை வைக்கின்றார்கள். இறந்தவனுடைய ஆவி திரும்ப வீட்டிற்கு வருமென்றும், அங்ஙனம் வந்தால் வழியில் தாமதமேற்பட்டுப் பொழுது விடிந்துவிடவேண்டுமென்றும் எண்ணி, வழியில் நெற்பொரி, எள் முதலானவைகளைத் தெளித்துவைக்கிறார்கள்; அதனால், அந்த ஆவியானது எள்முதலியவைகளைத் தாண்டிக்கொண்டு வாதென்பது அவர்கள் கருத்து. இதையெல்லாம் நிதரிசனமாக ஒருவன் பார்த்தபின்னுவது இப்படித்தானே நமக்கும் நடக்கும் என்றுணர்ந்து பற்றறத் துறக்கவேண்டாமா?

சுவாங்குடியார்.

உற்றார் விற்றூறை யார்சூழ்ந் திருந்தென்ன
ஊருடன் ஜனங்களெல் லாரும் பணிந்தென்ன
பெற்றாரும் பெண்டிரும் பிள்ளை யிருந்தென்ன
பேணும் பெருஞ்செல்வ மனைவித் தாவென்ன
கத்தன் பிரிந்திடிற் செத்த சவமாச்சு
காணுது காணுது கண்டதெல் லாம்போச்சு
எத்தனை பேர்நின்று கூக்குர லிட்டாலும்
எட்டாமற் போய்விடும் கட்டையல் லோவித்தச் (சூத்திரப்பாவை)

இடைத்தற் கரிதாகிய இந்தச் சரீரத்திற்கு ஓர் நெற்பிலிக் கருவாட்டிற் குண்டான யோக்கியதைகூடவில்லை. எனெனில், கேடு கெட்ட கருவாட்டுப் பொடியாயிருந்தாலும் அதைப் புசிப்பவர்கள் விலைகொடுத்து வாங்கிப் பூனை, எலி முதலானவைகள் தின்று விடாதபடி பானை, பேழைகளிற் பத்திரப்படுத்தி வைப்பார்கள்; வேண்டியபோது அதைச்சமைத்து மிகப்பிரியமாயும் சாப்பிடுவார்கள். நெற்பிலிக் கருவாட்டிற்குண்டான யோக்கியதையைச் சந்தைக்கடையிற் பார்த்தவர்க்கே நன்குவிளங்கும். அஃதப்படியிருக்க, இந்த அருமையான மானிடசரீரத்தைப் பருத்திப்பொதியப்போலவும் பூரணகெற்பஸ்திரீ வயிற்றைப்போலவும் கல்லசோறு கறிகளால் வயிற்றை நிரப்பிப் பஞ்சணை முதலியவைகளால் மிருதுவாகப் போஷித்து வளர்க்கின்றார்கள்,

சுவாங்குடியார்.

கோத்திரனான காயபொய்க் கூடு ஒருவருக்குஞ்
சாற்றுக்காகா நாற்றக்கரு வாடு சொறிமலமும்
மூத்திரமும் ஊற்றிவைத்த வோடு இடுமடையர்

போற்றுவதற் கேற்றசண்டி மாடு உயிர்விடுக்கும்
கூற்றுவன்கை யாயுதத்திற் கீடு எத்தெத்தத்திக்கிற்
பார்த்தாலும் பீற்றலுள்ள வீடு சமைத்தெடுத்த
சோற்றுற் குவித்துவைத்த மேடு. எனவும்

பட்டினத்துப்பிள்ளை.

ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சோறர் எனவும்

ஔவையார்.

எல்லாப் படியாலும் எண்ணினு லிவ்வுடம்பு
பொல்லாப் புழுமலிகோய் புன்குரம்பை.

எனவும் இகழ்ந்துரைக்கப்பட்ட இச்சரீரம் உயிர் நீங்கியபின், சவத்தைப் போட்டுவிட்டுச் சாப்பிடக்கூடாதென்று சுற்றத்தார் அருவருக்கத்தக்கதாயும், ஆலயங்களிற் பூசை வைவேத்திய முதலானவைகள் நடக்கக் கூடாததாயும், மனிதனென்னும் பேர் மறைந்து பிணமென்னும் பேர்தாங்கிச் சிதலை, மண், கெருப்பு முதலியவைகளுக்கு இரையாகிவிடுவதை ஆராய்ந்தாவது துறவடைய வேண்டாமா?

பட்டினத்துப்பிள்ளை.

மூடிசார்ந்த மன்னரும் மற்றுமுள் ளோரு மூடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணுவ துங்கண்டு பின்னுமிக்கப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னி னம்பலவர்
அடிசார்ந்து காமுய்ய வேண்டுமென் றேயறி வாரில்லையே.

சிலமனிதர்கள் தாய், தந்தை, மனைவி, மக்கள் முதலியவர்களுடன் சண்டையிட்டு அதனால் சன்னியாசம்பெற விரும்புவார்கள். சிலர் குடும்பபாரத்தை நிர்வகிக்கச்சக்தியும் அதற்குவேண்டிய பொருளும் தனக்கில்லாததினாலும், சிலர் கடன்கொடுத்த வசூல் மோசஞ்செய்வதற்காகவும், சிலர் இராச ஆக்கினையிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், சிலர் புகழுக்காகவும், சிலர் சரீரத்தை வருத்தாமல் வீடுகள்தோறும் அண்ணமிலக்கரோகரா! கோவிந்தா! கோவிந்தா!! என்று ஓலமிட்டு உபாதானம் வாங்கி வயிறு

வளர்ப்பதற்காகவும், சிலர் குடும்பத்திலிருக்கும்போது தான்செய்த கொடிய பாதகங்கள் நீங்கும்பொருட்டு ஸ்தலயாத்திரை செய்வதற்காகவும் சன்னியாசங் கொள்வார்கள். சிலர் சுவலேயே அலேயாயுள்ள சம்சார சாகரத்திலுழன்று பார்த்ததனலும், ஆத்ம விசாரத்தை யுண்டாக்கும் வேதாந்த சாஸ்திரங்களே நன்குணர்ந்ததனலும், சாதுசங்கப் பழக்கத்தினலும், பல கேள்விகளினலும் உலகவாழ்வு பிரயோசனமற்றதென உண்மையாகவே தெரிந்து வெறுப்படைந்து, சகல பற்றுக்களேயுந் தவிர்த்து நித்தியானந்தமாகிய மோட்சசுகத்தினே மேலிட்டுச் சன்னியாசக் கோலங் கொண்டு சற்குருவைத் தேடியலேவார்கள். மேற் சொல்லிவந்தவர்களிற் கடைசியாகச் சொல்லப்பட்டவரே ஆத்மஞானத்தை அடைவதற்கு யோக்கியதையுள்ளவர்.

தணிகைமணி வ. சுப்பிரமணிய முதலியார், பி.ஏ., பி.எல்.

தணிகைமணியார், தீர்த்தவம்.

செட்டு செய்யவேண்டிய தில்லே — பரதேசிகள்
சட்டி யெடுப்பதவர் தொல்லே — பிச்சைக்கஞ்சிக்குத்
திட்ட முடன்வேணுமோ கல்லே — யுறங்குதற்குக்
குட்டிச் சுவர்களிலுண் டெல்லே — யீடுமக்குப்
பட்டினத்திலெவரு மில்லே — அறிவுகெட்ட
மட்டி யறியாளிந்தச் சொல்லே.

ஞானமதியுள்ளாள்.

தன்னுளிக் குள்ளே சிவனெ மானதைத்
தானுட மாட்டாமல் மானிடக் கூட்டங்கள்
சன்னுசி யென்று கிரிசுற்றிக் கோயிலில்
தானுடிப் பாடித் தவஞ்செய்வோன் பேயன் (நானடா)

சந்நியாசமென்றும் சிலர் காவிவஸ்திரங்களையும், உருத்திராக்கங்களையும் கட்டிக்கொண்டு விபூதியை உத்தூளனமாய்ப் பூசிக் கையில் ஜெபமாலையைத் தாங்கி வாயை முணுமுணுத்துக் கொண்டு திரிவதென்று எண்ணிக்கொள்கிறார்கள். சந்நியாசமென்பது, சம் - நியாசம், என்னும் வடசொற்பொருள். சம் - எல்லாம்; நியாசம் - விடுதல். ஆகையால், சந்நியாசமென்னும் பதத்திற்கு பற்றறத்துறத்தல் என்பது பொருள். சந்நியாசம் பெறுவது மகாகஷ்டம். ஒருவன் சந்நியாசியாகிவிட்டால் அவ

னுக்கு இவ்வுலகத்திலுள்ள பொருள் யாதொன்றிலும் ஆசையிருக்கக்கூடாது அற்ப ஆகாரமே புசிக்கவேண்டும். கோபம் லவலே சமுமில்லாமல் சாந்தசொரூபியா யிருக்கவேண்டும். பசி, தாகம் முதலியவைகளைப் பொறுக்கவேண்டும், பலநாள் வரையில் ஒரு ஊரிலேயே வசிக்கக்கூடாது. மனித சஞ்சாரமும், திரேகாபிமானமும் கூடாது. அப்படியிருக்க அநேகம்பேர்கள்,

எண்ணித் துணிவது கருமம் துணிந்தபின்
என்னுவோ மென்ப திழுக்கு.

என்னுங் கருத்தை யுணராமலும், சந்நியாசம்கொள்ளும் ஆரம்பத்தில் அந்த ஆச்சிரமத்தின் விதிவிலக்குகளை அறியாமலும், சந்தோஷமாய்ப் புகுந்துவிட்டுப், பிறகு வீட்டையும், வாயிலையும், மனைவி, மக்கள் முதலியவர்களையும் நினைந்து நினைந்து துக்கப்படுவார்கள். அப்போது அவர்கள் கதி என்னவாகும்? இல்லற தருமத்தையும் செய்யாமல் துறவறத்தையும் பொருந்தாமல் இரண்டாட்டில் ஊட்டிய குட்டியைப்போற் பரிதபிப்பார்களல்லவா?

திருக்குறள்.

தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

பற்றற்ற கண்ணே பிறப்பதுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.

ஒருகாலத்தில் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் சண்டையுண்டானதில் மிருகங்களுக்கு வெற்றியாயிற்று. அப்போது வௌவால் மிருகங்களிடத்திற்குப் போய், நான் தங்களைப்போலவே குட்டிபோட்டுப் பால்கொடுக்கிறேன்; எனக்கும் வாயிற் பற்களிருக்கிறது; ஆகையால் நானும் தங்களைச் சேர்ந்தவனே என்று கூடிக்கொண்டது. பின்பொருகாலத்தில் பட்சிகளுக்கு வெற்றியாயிற்று. அப்போது பட்சிகளிடத்திற் போய், நான் தங்களைப்போலவே பறக்கிறேன்; ஆகையால் நான் தங்களைச் சேர்ந்தவனே என்று கூடிக்கொண்டது. மற்றொரு காலத்தில் மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் சமாதானமுண்டாயிற்று. அப்போது, வௌவாலை அவைகள் சேர்த்துக்கொள்ளவில்லை. அதனாலேயே இப்போது வௌவால் மரங்களில் தொங்கிக்கொண்டிருக்

கின்றது. ஆகையாற் சமயோசிதம்போல் இல்லறத்தையும், துற வறத்தையும் பொருந்தியிருப்பவர்கள் முடிவில் வருந்துவார்கள்.

ஒருநாள் ஒருஅரசன் விட்டிற்கு ஒருதுறவி வந்தார். அவர் வரவைக்கண்ட அரசன் தனது ஆசனத்தை விட்டெழுந்து எதிர் சென்று வந்தனை வழிபாடுசெய்து பால்பழ முதலியவைகளைக் கொண்டுவந்து வைத்து அவைகளைப் புசிக்கும்படி பிரார்த்தித் தான். பெரியவர் அதைப் புசிக்குமுன்னரே அரசனை நோக்கி, உனக்குப் புத்திரபாக்கிய மிருக்கின்றனவா? என்றார். அதற்கு அரசன், சுவாமிகளுடைய திருபாதகமலத்தினுல் ஏழு புத்திரிகளிருக்கிறார்கள் என்றான். அவர்களுக்குக் கல்யாணமாகிவிட்டதா என்றார் பெரியவர், ஏழுபேர்களும் புஷ்பவதியாகியிருக்கின்றார் கள் ஆனல்இன்னும் விவாகமாகவில்லை என்றான்அரசன். உடனே பெரியவர் கோபாவேசத்துடன் எழுந்து, அடே! பாவி! புஷ்ப வதியான பெண்ணைப் பாணிக்கிரகணஞ் செய்துகொடுக்காமல் விட்டில் வைத்திருப்பது முறையல்லவே! உன்விட்டிற் சலபானம் பண்ணுவதும் மஹா பாபமாச்சே! என்று சொல்லிக்கொண்டே வெளியிற்போகப் புறப்பட்டார். உடனே அரசன் பெரியவரைப் பன்முறை வணங்கிச் சுவாமி! இன்றையத்தினமே விவாகத்திற் குண்டான ஏற்பாடுகளைச்செய்து வெகு துரிதத்திற் காரியத்தை முடித்துவிடுகிறேன்; தேவரீர் இங்கேயே இருந்தருளல்வேண்டும் என்று விண்ணப்பித்து நின்றான். அதற்குப் பெரியவர் உன் புத் திரிகளை மணம்செய்வித்த பின்னரே யாம்வந்து நினது மனோ பிஷ்டத்தை நிறைவேற்றுவோம் அதற்காக வருந்தாதே என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே நிடீரென மறைந்துவிட்டார்.

பெரியவர் மறைந்துபோனதைக் குறித்து அரசன், மந்திரி பிரதானி முதலியவர்களுடன் ஆலோசித்துக், கடவுளே இந்தவடி வத்துடன்வந்து நம்மைப்பாலமென்னுஞ் சமுத்திரத்தில் விழாத படி மோட்சமென்னுங் கரையேற்ற வந்தனரேயன்றிச் சாமான்ய சந்நியாசியல்ல என்று நிதானித்து அத்தானி மண்டபத்தை விட்டெழுந்துபோய் நித்திய கர்மங்களை முடித்துக்கொண்டு அந் தப்புறத்திற்குச் சென்றான். அங்கு அடிசிலுண்டு பள்ளியறைக் குச்சென்று அம்சதூளிகாமஞ்சத்திற் சயனிக்கப்போகும்போது

தனது இராணியுடன் பெரியவர் வந்ததுமுதல் மறைந்தது வரையில் ஆதியோடந்தமாகக் கூறி நாளையத்தினமே விவாகத்தை முடித்துவிட வேண்டுமென்றும், ஆனால் நமது புத்திரிகளை மஹாராசாக்களுக்குக் கொடுப்பதிலும் தாதிகளாகிய அடியார்களுக்குக் கொடுப்பதே மேன்மையென்றும், அரசர்கட்குக் கொடுப்பதானால் நாட்செல்லுமென்றும் பல திருட்டாந்த காட்டாந்தங்களைத் தெளிவாய் எடுத்துச்சொல்லி இராணியினுடைய அபிப்பிராயத்தைக் கேட்டான். அதற்கு இராணியானவள் "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்னும் நீதிவாக்கியத்தை யுணர்ந்தவளாதலால் (நாயகனுடைய திருவாக்குக் கெதிர்வாக்கின்றித்) தேவரீருடைய விருப்பம் எப்படியோ அப்படியே நடக்கச்சித்தமாயிருக்கின்றேன் என்றாள். அப்படியானால் நாளையத்தினமே நமது நகரத்தின் புறங்களில் வசிக்கும் எந்தத் தாதிகளையாவது இணங்கும்படிச் செய்து விவாகத்தை முடித்துவிடுவோம் என்று தீர்மானித்துச் சயனித்துக்கொண்டார்கள்.

அவர்கள் அவ்வாறு பேசிக்கொண்டிருந்ததை அன்றிரவு அரண்மனையிற் கன்னமிட்டுத் திருடவந்த கள்வர்களிலொருவன் செவிசாய்த்துக் கேட்டுக்கொண்டிருந்தான்.. அவன் தன்னுடன் வந்த திருடர்கட்கெல்லாம் சொன்னதாவது:—அரசன் விழித்துக்கொண்டிருக்கின்றான்; இன்று நமது காரியம் பலிக்காது; நமது பிராணனைத் தப்பித்துக்கொள்வதே தகுதியென்று கூறி அவரவர்களிடத்திற்குச் சென்றுவிடும்படி சொல்லிவிட்டுத் தான் மாத்திரம் ஓர் சந்நியாசியைப்போல் வேடந்தரித்து ஊர்க்குப் புறத்தில் அமர்ந்திருந்தான். இஃதிங்ஙனமிருக்கப் பொழுது புலர்வதற்குமுன்னமே அரசன் துயிலெழுந்து மந்திரியைத் தருவித்து மந்திரி! இன்றுநமது புத்திரிகளுக்கு எந்தவிதத்திலும் விவாகம் முடியவேண்டும்; அதற்குத் தாதிகளையே மணமகனைக் குறித்திருப்பதால் அதற்கிணங்கும் தாதிகளைத் தெரிந்துவாவெனக்கட்டளையிட்டான். அங்ஙனமே மந்திரிசென்று ஒவ்வொரு தாதிகளிடத்திலுங் கேட்டுப்பார்த்தான்; ஒருவரும் இணங்குவேயில்லை. இறுதியில் திருடனுக்குப் போலிச்சந்நியாசியிடத்தில் வந்து

கேட்டான்; அவன் வெகுகடூரமாக உள்ளிடத்திற் சொல்ல முடியாது அரசனே வரச்சொல் என்றான்; அங்ஙனமே மந்திரிசென்று அரசனுக்கறிவித்தான். உடனே அரசன் தந்தச்சிவிகை கொண்டு போய்த் தரிசித்து பிரதட்சணம் வந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து சுவாமி! அடியேனுடைய புத்திரனை விவாகஞ்செய்தருளல் வேண்டுமெனப் பிரார்த்தித்தான். உடனே போலிச்சந்நியாசி தக்கப்பல்லக்கிற் பிரயாணமாகிப் பாதிவழியில் வந்து கொண்டிருக்கும்போதே பின்வருமாறு யோசிக்கலானான்.

கொடிய பஞ்சமாபாதகங்களையெல்லாம் மூட்டை மூட்டையாகக் கட்டிவைத்திருக்கும் பக்காத்திருடனாகிய நாம் இந்தப் போலிச் சந்நியாச வேடத்தைத் தரித்துக்கொண்டதற்கே மன்னாதிமன்னர்களெல்லாம் வணங்காநின்ற முடிவேந்தன் ஏமனது காலில் விழுந்து வணங்குவானென்றால் உண்மையான சந்நியாசியாக இருப்போமேயானால் எவ்வளவோ மகத்துவமிருக்கும்போலிருக்கிறதே? ஆ! இந்தத் துறவிவேடத்திற்கு இவ்வளவு பெருமையா? இத்தகைய மாட்சிமைதங்கிய துறவாச்சிரமத்தைத் தான் அவசியம் பெறவேண்டுமென்று கருதிப் பல்லக்கை விட்டுக் குதித்தோடிப்போய் மஹரிஷிகளை யடுத்துப் பணிபுரிந்து உண்மையான துறவியாகிவிட்டார்.

ஆகையால், உண்மையான துறவிகளுக்குள்ள பதவியும், கீர்த்தியும், புகழும் எந்தச் சக்ரவர்த்திகளாகிய மகுடாதிபதிகளுக்கும் கிடையாது. துறவிகளுக்குச் சமானமாக எவரையும் ஒப்பிட்டுச் சொல்லவே முடியாது.

திருக்குறள்.

துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத
இறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சகல லிடங்களிலும் சகல சிவராசிகளிலும் துறவிகளுக்கு மேலானவர்களில்லவேயில்லை. இதையுணர்ந்தே பட்டினத்தடிகள் தனது திரண்டசெல்வங்களையும், பத்திரகிரியார் தமது ராஜ்ஜியத்தையும் பொருட்பண்ணாமல் வெளியேறி மெய்ஞ்ஞானச் செல்வர்களானார்கள்.

தாயுமானவர்.

ஒட்டுடன்பற் றின்றி யுலகைத் துறந்தசெல்வப்
பட்டினத்தார் பத்திரிகி பண்புணர்வ தெக்காலோ.

தனிந்தபுயார்.

மீசையுளாண் பிள்ளைக்கு மாவர்களோ முகத்தில்மயிர்
விரித்தோ ரெல்லாம்
மீசையுளாண் பிள்ளைக்கு மெலனெவன்காண் குணங்குடிபால்
விரைந்து கொண்டோன்
மீசையுளாண் பிள்ளைக்கு மாகாதா னெனவக்காவான்
விசையோ டென்போல்
மீசையுளாண் பிள்ளைக்கு மென்கூட மூலிலிட்டு
வெளிவா ராளே.

கண்டனம், ராகம் அடாணா தாளம் சாப்பு.

பல்லவி.

மீசையுள் ளாண்பிள்ளைக் கெங்கூட
வெளியினில் வாருங்கள் காணும்

அநுபல்லவி.

காசி நிரம்பவு மயிர்தான் இரண்டுகால்
நடுவினு மொருகூடை மயிர்தான் ரோசங்
கெடுவார்க ளென்கடை மயிர்தான் குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

சரணம்.

படிக்கும் படிக்கப் படிக்கா லோபிகள்மோட்சப்
பதமற்றுப் போனலும் போகட்டும் அவர்
முடிக்கு முடிதரித்து முடிய முடியவாழ்ந்து
முடிந்து முடிபோனலும் போகட்டும் இன்னும்
குடிக்கக் கஞ்சியும்மற்றக் குண்டிக்குத் துணியற்றுக்
குருடாய்ப் போனலும் போகட்டும் என்னே
அடித்தாலும் எறும்பெல்லாம் ஒடித்தாலும் அவர்க்கஞ்சேன்

அடித்தா லடித்துக்கொண்டு போகட்டும்—அக்கக்
கெடுவார்க ளென்கடை மயிர்தான்—குணங்
குடிகொண்டா லென்னுயிர்க் குயிர்தான் (மீசையுள்)

மெத்தச் துணிபோர்க்க மெத்தமெத் தச்குளிருஞ்
சற்றுதுணி போர்த்துவரச் சற்றுகுளிர்—இற்றதுணி

யில்லேச் குளிருமில்லே யில்லேயிது தானுளமே
செல்லக் குணக்குடியார் சீர்.

தாதரங்கிதை.

நடுங்கும்வெங் குடும்ப வனத்துழல் வோர்க்கு நதியெனும் ஞானீ ரன்றி
இடும்பைதீர்ப் பதுவே நிலைநிரு விகற்பத் தேகமா யிலகுமெய்ஞ் ஞானி
குடம்பைநீத் தேகும் புள்ளெனச் சூழ்ந்த கொடுஞ்சகம் வேறதாய் கிற்பன்
தொடங்கும்வல் வினேயெல் வகையிவர்க்கெய்தும் துன்னுமோ துன்னிருள்
[சுடரை.

அவிரோதவுத்தியார்.

குடும்ப பாரந் தலேக்கொண் டவர்க்கல்லல்
விடும்பரி சின்மையா லுய்திபற
மெய்த்துற வெங்ஙனு முய்திபற

எல்லோர்க்குங் காலன் துறவுக ளீயாமுன்
கல்லோர் துறப்பாரென் றுய்திபற
ரன்றறி வார்களென் றுய்திபற



வி ந் து செ ய ம்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

விந்துசெயம் என்று சொல்வது ஆண்மக்கட்குப் பிரதான மான சுக்கிலம் என்பதை மாதர்களிடத்தில் அதிகச் செலவுசெய் யாமற் காப்பாற்றுவதுதான். ஒருவன் விந்தைச் செலவுசெய்து விட்டால் அவனுக்குள்ள சரீரவலிமையும், தேசசும் குன்றிவிடும்; சோம்பலும், தூக்கமும் உண்டாகும்; அதனுல் தவமுயற்சியும் ஏனேயமுயற்சியும் அலலமாய்ப்போகும். கோபம், கடினவேலே முதலியவைகட்கெல்லாம் சொற்பமாகச் செலவாகாநின்ற பிராண வாயுவானது, ஸ்திரீ சங்கமத்தில் அறுபத்துநாலு சுவாசமிறங்கி இருபத்துநாலு சுவாசமே உட்செல்லுகின்றது. அதனுல் எத் தொழிலாலும் செலவாகாத பிராணவாயுவானது ஸ்திரீகளது சாஸலீலாவிநோதத்திலேயே காற்பது சுவாசங்கள்சென்று கஷ்ட மாகின்றது. மதனலீலையாற் சுக்கிலத்தை இழந்தபின் எவ்வளவு ஆயாசமும், மேகக்சூடும் உண்டாகுமென்பதை ஒவ்வொரு இல் லறவாசிகளும் தக்கம் அநுபவத்தில் நன்குணர்வார்கள். போகத்

நிற்குப்பின் உண்டாகும் அயர்ச்சியால் பிணம்போற் பிரக்ஞை யற்று நித்திரைசெய்யவும்,

சிவவாக்கியர்.

வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவன் ஈத்திலுல்
விடிவுலே அவனையின்னும் வெட்டவேணு மென்பனே.

என்பதற்கிணங்கத் தான் அப்படி நித்திரை செய்யும்போது தன் மனைவியை மற்றொருவன் அபகரித்துக்கொண்டாலும், வீட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளையிட்டாலும் தெரியாதிருக்கச் செய்வது இந்திரியத்தை இழுத்தலினலல்லவா? மாதர்களிடத்தில் அதிக சம்போகம் செய்வதின் காரணத்தினுலேயே மேகம், சூலை, குஷ்டம் முதலிய சர்வரோகங்களும் சம்பவிக்கின்றதென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அவ்வளவு கொடிய ரோகங்களைத் தரும் கடிதடஸ்தானமோ, "எருவாய்க் கிருவிரன் மேல் ஏறுண் டிருக்குங் கருவாய்" என்று ஆன்றோர்களால் இகழ்ந்துரைக்கப்பட்ட துர்க்கந்தமுடைய குருதியூற்றுக் கூவத்தைச் சதா சிந்தித்து "விட்டிற்பூச்சியானது தீபத்தில் வந்து விழுந்து மாள்வதுபோல்" முன்பின்யோசிக்காத என்போன்ற சில இளைஞர்கள் பரமசுகமென்று கருதி, "மாதத் திரண்டுவிசை மாதரைப் புல்குவது" என்னும் கருத்தை யுணராமலும், திருடர்களைப்போல் இராக்காலம் எப்போது வருமென்று எதிர்பார்த்து மருவி அதனுற் பற்பல பிணிகள் சம்பவிக்க அதன்பின் கல்ல வைத்தியர்களைத் தேடிப்போய் அவர்களுக்குப் பாதகாணிக்கை வைக்கின்றார்கள். சரீரத்தில் வியாதி சம்பவித்து மெலிந்திருக்கும்போதாவது கலவியைச் சிறிது மறந்திருப்பார்களோ! என்னமோ! தெரியவில்லை. வைத்தியரிடத்தில் மருந்துசாப்பிடும்போது வைத்தியர் சொல்லும் 'நிர்ப்பந்தத்திற்காகப் பல்லைக்கடித்துக்கொண்டு அதுவும் சிற்சிலபேர்களே யிருப்பார்கள்போல் தெரிகிறது; சரீரத்தில் கொஞ்சம் இரத்தம் ஊறிவிட்டாற் "பழைய குப்பானே குப்பான்" என்கிற மாதிரிதான்.

பட்டினத்துப்பிள்ளை.

மூப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவும் மோகத்திலே
செப்போ திளமுலே யாருடன் சேரவும் சென்றிடும்
அப்போது கண்கலக் கப்பட வம்மமைத் தாயையனே
எப்போது காணவல் லேன்றிருக் காளத்தி யீச்சரனே.

நாறுங் குருதிச் சலதாரை சோற்புரை காடொறுஞ்சி
யூறு மலக்குழி காமத் துவாரம் ஒளித்திடும்புண்
தேறுந் தசைப்பினைப் பந்தாங் கத்துன தெற்றின்பம்விட்
டேறும் பதந்தரு வாய்திருக் காளத்தி யீச்சரனே.

தனித்தடியார்.

பெண்ணு லகமெல்லாம் பிணக்காடு தானெயோ!
மண்ணுய் மடிவதென்ன மாயம் சங்கிள்வரனே.

என்று கூறியுள்ளார். ஆனல், மாதர்களால் ஆடவர்கள் கெட்டுப் போகிறார்களென்பது மேற்கூறிய செய்யுளின் கருத்தாயினும்; ஆடவர்களாலேயே மாதர்கள் கெட்டுப் போகிறார்களென்பது எனது சித்தாந்தம். ஏனெனில், பெண்களுக்குக் காம இச்சை அதிகமாக எற்பட்டிருப்பினும் அதை வெளிக்குக் காட்டிக்கொள் வதுமில்லை; அநேகமாய்த் தானே வலிய விரும்புகிறதுமில்லை. சில ஆண்மக்களோ அவ்வாறின்றி விடக்கிருக்குமிடத்தை யறிந்த ஞமலி சுழன்று திரிவதைப்போல், வீலமகளிர்கள் இருக்குமிடத் தையே சதா உருகி நினைத்துகொண்டும், பெண் ஞமலியானது கள், கள் என்று உறுமிக் குலைக்கக் குலைக்க ஆண் ஞமலியானது அதைச்சகித்துக்கொண்டு மெல்லமெல்ல அதனிடம்நெருங்குவது போல் அவர்கள் பிணங்கிக்கொண்டால் காலைப்பிடிப்பதும், அவர் கள் காலால் உதைத்தாலும் நீ உதைக்க நான் என்னபுண்ணியஞ் செய்தேனே! என்று புகழ்வதும், அவள் எவ்வளவு கடூரமான கெட்டவார்த்தைகளைச் சொல்லி, வெட்கமற்ற நாயே! கழுதை யே! குரங்கே! என்று திட்டினலும் அத்தனையும் அமுதவாக் கென்று மகிழ்ந்து கெஞ்சி எனக்கு நீதான் உயிர்ப்பிச்சைக் கொடு த்தருளவேண்டும்? என்று மன்றாடிப் பல்லை இளிப்பதுமாயிருக்கி றார்கள்.

திருப்புகழ்.

(1) கோமள வெற்பினை யொத்தத னத்தியர்
காமனை யொப்பவர் சித்தமு ருக்கியர்
கோவையி தழ்க்கணி சித்தமும் விற்பவர் மயில்காடை
சோகில கட்புற வொத்திடு புட்குர
லாசரணி யப்புன்வ சைக்குரல் கற்றியர்
கோலவி ழிக்கவட் டிட்டமு ரட்டியர் விரகாலே

ஆமம லர்ப்பளி மெத்தைய டுப்பவ
ராரையு மெத்திம னேக்குள ழைப்பவர்
சோலைவ னக்கிளி யொத்தமொ ழிச்சியர் தெறிகூடா

தாகெ கிழ்த்தரை சுற்றிய டுப்பவர்
காசப நிக்கம நித்துழ யக்கியர்
தோதக வித்தைப டித்துக டிப்பல குறவாமோ.

(2) ஒருவரைத் தனிமனைச் சயனமெத் தையினில்வைத்
தொருவரைத் தமதலைக் கடையினிற் சுழலவிட்
டொருவரைப் பரபரப் பொடுதெருத் திரியவிட் டினிதாக

ஒருவரைத் தமதணைக் கருகுறப் புணரவிட்
டொருவரைப் பரவசப் படவுடற் றழுவலுற்
றுயிர்பிழைப் பதுதழுத் தளவுமுப் பசமெனச் செயுமானுர்

தருமயற் ப்ரமைதனிற் றவறெறிக் கயலெனச்
சரியையிற் கிரியையிற் றவமுமற் றெனதுகைத்
தனமவத் தினிலிறைத் தெவருமுற் றிகழ்வுறத் திரிவேனைச்

சகலதர்க் குணமறச் சகலசற் குணமுறத்
தரணியிற் புகழ்பெறக் கருணையுற் றனதுபொற்
சரணமெப் பொழுதுஞட் பொடுநினைத் திடவருட் டருளாயே.

ஐயறிவுடைய காய், கரி, ஆடு, மாடுமுதலிய விலங்கினக் களுக்காவது இன்னின்ன காலங்களிலேயே புணர்ச்சி செய்வதென்று ஓர் வரம்பேற்பட்டிருக்கின்றது; பெண்விலங்கு கெற்பமாயிருந்தால் ஆண்விலங்கு மோப்பத்தாலறிந்து நீங்கிவிடுகின்றது. "ஆறு குளங்களுக்கு கரையேற்பட்டிருந்தும் சமுத்திரத்திற்குக் கரையில்லாததுபோல்" ஆறறிவுடைய மானிடர்கட்கோ வரன் முறையும் காலநிர்ணயமும் கிடையாது. "எப்போது மோகவலி எப்போதுமோ கவலி" என்ற ஆன்றோர் வாக்கியப்படி மாதர்கள் பூரணகெற்பவதியாயிருக்கும் காலத்திலும், மாதாந்தகாலத்திலுங் கூடச் சிலர் கலவியை விரும்புகிறார்கள். இவற்றைப் பிறரிடத்திற் சொல்ல வெட்கமாயிருப்பினும் "மனதை யொழித்தொரு வஞ்சகமில்லை" என்பதுபோல் அவரவர்க்குத் தனக்குந் தானே தெரியாமற்போகாது. இச்சம்பவங்கள் பெண்களிடத்திற் காணப்படாமல் ஆடவர்களிடத்திலேயே மிகவும் காணப்படுவதாலும் அரிசியில்லை, பருப்பில்லை, உப்பில்லை, மிளகாயில்லை என்று மனைவி

சொன்னதுடன் * ஊழியக்காரனிலும் கேவலமாய்த் தொண்டு செய்வதாலும், மாதர்கட்கு ஆடவர்கள் அடிமையேயன்றி ஆடவர்கட்கு மாதர்கள் அடிமையென்று கருதுவது எவ்வளவு மதியீனம். இதுகாரணம் பற்றியே குணங்குடியார் "மானுடி மாவ மடமையைப் போக்கவும், மாதர்க் கடிமைப் படாதென்னைக் காக்கவும்" எனத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார்.

சிவஞானவள்ளல்.

மங்கையர்தம் யோனிமிசை வைத்திருக்கும் ஆசையினைப்
பங்குசெய்து தூறில்ஒரு பங்கெடுத்துக்—கங்கையணி
வேணியரன் பாதார விந்தத்தில் வைத்தக்கால்
காணலாம் காணுக் கதி.

அகஸ்தியர் ஞானம்.

விந்துவீட்டுப் போகாதே விந்தைக் கட்டு
விதரணையா யதோமுகத்தி லிருந்து பாரு
விந்தைவிட்டால் யோகெட்டுச் சலனம் விந்து
விடாமலே வேதாந்தக் கயிற்றுற் கட்டே.

அகஸ்தியர் ஏமதத்துவம்.

வினம்புவோஞ் சுத்தமே நன்றுய்க் கேளு
விந்தொழிய வேதாந்தம் வேறென் றில்லை
விளம்பக்கேள் விந்தைவிட்டால் சொந்து போவாய்
விந்தவறும் மறியதனுல் நோய்தா னுச்சு.

வைராக்கியசதகம்.

பெறுவ தென்னேகொல் சுக்கிலங் கழித்தலாற் பெருத்தவ வலிகுன்றும்
உறுவ தவ்வன வோபினே நீவிரும் புடற்குமா னியதுண்டால்
அறிவி யாமறி யாஞ்தோய்க் துடற்றின வதைச்சக மெனநின்றுய்
செறிது நெஞ்சமே நமதுசிற் சுகமினிச் சிவனேயா தரிப்பாயே.

---

* ஊழியக்காரனிலுங் கேவலமென்றதானது ஊழியக்காரன் எசமான் கொடுக்கும் சம்பளத்திற்கே ஊழியஞ்செய்கிறன், ஆடவர்களோ! தனது பொருளையுஞ் செலவழித்துப் புழுக்கைவேலையுஞ் செய்கிறார்கள்.

விவேகசிந்தாமணி.

அன்னையை யனைய தோழி அறத்தினை வளர்க்கு மாதே
உன்னையோ ருண்மை கேட்பேன் உரைதெளிக் துரைத்தல் வேண்டும்
என்னையே புணரு வோர்கள் எனக்குமோ ரின்ப நல்கிப்
பொன்னையுங் கொடுத்துப் பாதப் போதினில் வீழ்வ தேனோ.

உருவத்திற் பெரிய யானைமுதலிய விலங்குகளும், உருவத்தில் அதனிலும் சிறிய சிங்க கர்ச்சனையைக் கேட்டமாத்திரத்தில் தன்வலி குன்றித் தன்னைத் தப்பித்துக்கொள்ள எத்தனிக்கும். எவற்றிற்கும் அஞ்சாத நெஞ்சமுடையவரும் சர்ப்பத்தைக் கண்டவுடன் பயம் சென்னித்து வெருண்டு ஓடிப்போவார்கள். அதுபோல், மனோபலமடைந்த தவவலிமையுடையவர்களும் தூற்பகவைப்போன்ற மருங்குலார் சிங்கத்தையும், படர்ந்த கடிதட்டத்தார் சர்ப்பத்தையும் நிகர்த்த மடமாதர்களது மொழிக்கு மொழி நித்திக்கும் இனியவஞ்சகமான வார்த்தைகளைக் காதிற் கேட்கும்போதே அஞ்சித் தன்னைத் தப்பித்துக்கொள்ள முயலவேண்டும். அங்ஙனமின்றிப் "பாம்பொடு பழகேல்" என்னும் ஔவைப் பிராட்டியார் திருவாக்கியத்தை மறந்து ஒருவன் சர்ப்பத்துடன் பழகினால் ஒருசமயமின்றி ஒருசமயம் அச் சர்ப்பத்தாற் கடியுண்டு விஷமேறிப் பிராணனை இழக்கநேரிடும். அதுபோல், ஸ்திரீகளாகிய பெண்ணாருடன் பழகும் அப்பியாசிகள் ஒருசமய மில்லாவிட்டாலும் ஒரு சமயத்தில் அந்தப்பெண் பாம்பினற் கடியுண்டு தவமென்னும் உயிரை இழப்பது நிச்சயம்; எனெனில் காமத்தைச் செயிப்பது எவர்க்கும் அரிது.

நாயுமாளவர்.

கற்கண்டா லோடுகின்ற காக்கைபோற் பொய்ம்மாயச்
சொற்கண்டா லோடும்அன்பர் தோய்வறிவ தென்னனோ.

விவேகசிந்தாமணி.

உணங்கி யொருகால் முடமாகி யொருகண் ணின்றிச் செவியிழந்து
வணங்கு நெடுவா லறுப்புண்டு மன்னு முதுகில் வயிரூட்டி
அணங்கு கலிய மூப்பெய்தி யகல்வா யோடு கழுத்தேற்றிச்
சுணங்கன் முடுவல் பின்சென்றால் யாரைக் காமன் நுயர்செய்யான்.

காமமே குலத்தினையு கலத்தினையுங் கெடுக்கவந்த கனங்க ளாகும்
காமமே தரித்திரங்க ளனேகத்தினையும் புகட்டிவைக்குங் கடாரா மாகும்
காமமே புரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாட மாகும்
காமமே யனேவரையும் பகையாக்கிக் கழுத்தறுக்குங் கத்தி தானே.

சிவஞானவள்ளல்.

காமத்தால் இந்திரன் கலக்க மெய்தினன்
காமத்தால் இராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் சிகரன் வலிய ற்றனன்
காமத்தால் இறந்தவர் கணக்கி லார்களே.

திருமந்திரம்.

யோகிய ஞானிய முத்தம சித்தனும்
யோகிய ஞான புராதர னுவோனு
மோக முறினு முரையலீர் தண்போனு
மாகிய லிந்து வழியாத வண்ணலே.

பிரபுலிங்கலீலை.

பாவமும் பழியு கல்லும் பல்வகைப் புகழ தங்கள்
யாவையு மழிக்கு மெய்த மன்பழு மதனு லெய்தும்
சோவுகன் மரபுஞ் செய்யும் சோன்புகல் லொழுக்கு மேன்மை
சாவுமெண் ணுறும விற்குச் தயங்குபுன் காம மென்பார்.

காமத்தால் உடனே கிடைக்கும் சிற்றின்பமானது இரண்டு பைசாவுக்கு ஒருசேர் கத்தரிக்காய் வாங்கி மூன்று பைசாவுக்கு விற்கும் சிறிய வியாபாரத்தை நிகர்க்கும். மெய்ஞ்ஞான வைராக்கியங்கொண்டு ஊனுறக்கமின்றிப் பலகால் முயன்று செய்யும் தவமானது, ஓர் வித்வான் நெடுநாள் ஒருசாஸ்திரத்தை எழுதி அரங்கேற்றி அதனும் பெருந்தொகையும், புகழும்பெற்று வாழ்வதை நிகர்க்கும். சிற்றின்ப சுகத்தினால் வெட்டை, மேகம் முதலிய வியாதிகள் சம்பவிக்கும்; மெய்ஞ்ஞானமாகிய பேரின்ப சுகத்தினால் எவராலும் நீக்குவதற்கரிதாகிய ஜனனமரண மென்னும் பிறவிப்பிணி நீங்கி நித்யானந்த வாழ்வுண்டாகும்.

திருமந்திரம்.

பார்க்கின்ற மாதரைப் பாரா தகன்றுபோய்
தூர்க்கின்ற வுள்ளம் உருக வனல்மூட்டிப்
பார்க்கின்ற கண்ணுசை பாழ்பட்ட மூவத்தை
சேர்க்கின்ற யோகி சிவயோகி தானே.

கள், சாராயம் முதலிய மதுபானங்களை நினைத்தாலும், கண்டாலும், தொட்டாலும், மிதமிஞ்சிப் பருகாவிட்டாலும், போதை யுண்டாகாது. ஸ்திரீகளது காமமானதோ அப்படியில்லை; சாஸ்திரங்களில் வர்ணிக்கும்போதும், பிறர் வர்ணித்துச் சொல்லும் போதும், முன்கண்ட மாதர்களை நினைக்கும்போதும், அழகிய மாதர்களைக் காணும்போதும், அவர்கள் பரிசமுண்டாகும்போதும் அளவிறந்த காமவெறியுண்டாகும். கள் முதலிய மதுபா

ணங்களைச் சாப்பிட்டாற் கொஞ்சநேரத்தில் வெறி நீங்கிவிடும்; காமத்தினால் வந்த வெறியோ? அப்படி நீங்காது.

திருக்குறள்.

உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

திருவிளையாடல்.

கள்ளுண்டல் காம மென்ப கருத்தறை போக்குச் செய்வ
தெள்ளுண்ட காமம் போல வெண்ணினிற் காணிற் கேட்கிற்
றள்ளுண்ட விடத்தி னஞ்சத் தலைக்கொண்டா லென்ன வாங்கே
யுள்ளுண்ட வுணர்வு போக்கா தண்டபோ தழிக்குங் கள்ளுண்.

காமமே கொலைகட் கெல்லாம் காரணங் கண்ணே டாத
காமமே களவுக் கெல்லாங் காரணங் கூற்ற மஞ்சும்
காமமே கள்ளுண் டற்குங் காண மாத ரூலே
காமமே நரக பூமி காணியாக் கொடுப்ப தென்னுன்.

ஒருவன் சிற்றின்பத்தைச் சிறிதும் கைவிடாமற் பேரின்பத்தையும் அடைய விரும்புவது எத்தன்மையாகுமெனில், பஞ்சு மூட்டையைத் தலையிற்சுமந்து செல்லும் ஓர் பிரயாணி, ஆற்றிலிறங்கித் தண்ணீர் நிலைக்காமல் தத்தளிக்கும்போது தண்ணீரால் நனைந்த பஞ்சுமூட்டையைச் சிறிடாமல் தன்னுயிரைத்தப்பிக்க முயற்சிப்பதுபோலாகும்.

நமக்கெதிர்த்த வீட்டிற் கல்யாணம் நடக்கும்போது நமக்கு மனோற்சாகமும், அவ்வீட்டில் ஒருவர் இறந்துவிட்டால் நமக்கும் இப்படித்தானே என்கிற மயான வைராக்கியமாகிய விசனமும் உண்டாகும். அதுபோல், மகான்களாகிய சாதுசங்கப் பழக்கத்தினால் ஆத்மஞானமும், ஸ்திரீகளாகிய மாதுசங்கப் பழக்கத்தினால் வெட்டை முதலிய ரோகங்களும் சம்பவிக்கும்.

காக்கைக்குப் பகற்காலத்திலேயே கண் நன்றாய்த் தெரியும்; அதன் பகையாகிய கூகைக்கு இராக்காலத்திலேயே தெளிவாய்க் கண் தெரியும். அதுபோல், நல்லோர்களுக்கு மகான்களது வரவும், அவர்களுக்கு ஊழியம்செய்வதும் விருப்பமாக இருக்கும். தியோர்களுக்கு அதிக ரூபலாவண்யம் மிகுந்த மாதர்களது வரவும், அவர்களுக்குக் குற்றேவல் செய்வதும் இஷ்டமாக இருக்கும்.

பள்ளிக்கூடத்திற் கல்விகற்கும் சிறு மாணவர்களிற் சிலர் பள்ளிக்கூடத்திற்கு வராமல் விளையாடிக்கொண்டிருந்தால், அதை உபாத்தியாயர் அறிந்து அப்பையன்களைப் பிடித்துக்கொண்டு வரும்படிச்செய்து உன்னுலே காள் கெட்டேன்! என்னுலே நீ கெட்டாய்! என்று சொல்லித் தோப்புக்கரணம் போடும்படிச் செய்வார். அதுபோல், ஆடவரும் மகளிரும் முத்தியடைய வேண்டிய வழிகளிருக்க, ஆண் பிள்ளைகளாற் பெண் பிள்ளைகளும், பெண்பிள்ளைகளால் ஆண்பிள்ளைகளும் கலவிப் பிரியராகிக் கெட்டுப்போகின்றார்கள்,

ஒருவன் பெண்போகத்தை மட்டிலும் நிறுத்திவிட்டு யோக ஞானத்தை அநுஷ்டிக்காமல் தனக்கு ஏகாந்தமயம் ஆகும், ஆகும் என நினைத்துகொண்டிருப்பது எத்தன்மையர்குமெனில்; தனது நிலத்தை உழுவமட்டிலும் போட்டுப் பயிரிடாமல் வரிதேயிருந்து கொண்டு கெல் முதலிய தானியங்கள் தனக்கு விளையும், விளையும் என்று எண்ணிக் கொண்டிருந்ததுபோலாகும்.

தேள், பூரான், செய்யான் முதலிய ஜந்துக்களாற் கடியுண்டு விஷங்கள் ஏற்படினும், அவைதிரிய மந்திரங்களாலும், ஔடதங்களாலும் நிவர்த்தியாகிவிடும். கல்லபாம்பு, விரியன் முதலிய கொடிய சர்ப்பங்களாற் கடியுண்டு விஷங்கள் ஏற்பட்டால் அவை மணிமந்திர ஔடதங்களாலும் ஒருசமயம் நீங்குவது அருமை. அதுபோல், மண், பொன் முதலிய ஆசையில் ஒருவன் மயங்கினலும், அவை சில சமயங்களில் கல்வி, கேள்விகளால் நீங்கிவிடும்; பெண்ணுசையில் மூழ்கியவனுக்கோ எத்தச் சாஸ்திரங்களைப்போதித்தாலும் அந்த மாயை நீங்குவது மிக்க அருமை. ஆகாயத்தில் மேகம் உண்டாவதற்கு வாயுவே காரணமாயிருப்பதுபோல், சகல ஆசைகளும் உண்டாவதற்கு ஸ்திரீகளே காரணபூதமாயிருக்கின்றார்கள். இவ்வுலகத்தில் ஸ்திரீகளுக்காகவே கட்டில், மெத்தை, வட்டில், செம்புகளைத் தயாரிக்கிறார்களேயன்றி கட்டில், மெத்தை, விடுவாசல்களுக்காக ஸ்திரீகளைத் தயாரிப்பதில்லை. ஒருவன், ஒருபெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்பி அதற்கு முதற்காரணமான மாங்கல்யத்தைச் செய்வானேயல்லாமல், தாலி என்னும் மாங்கல்யத்திற்காக ஒருபெண்ணைத் தேடி

யலையமாட்டான். ஆகையாற், சகல ஆசைகளும் உண்டாவதற்குக்காரணமான மாதசங்கத்தை நீங்கிச் சகல ஆசைகளையுந்தவிர்த்த சாதுசங்கத்தை யடையவேண்டும்.

நாயுமானவர்.

தெட்டிலே வலியமட மாதர்வாய் வெட்டிலே
சிற்றிடையிலே நடையிலே
சேலொத்த விழியிலே பாலொத்த மொழியிலே
செயிறை நுதற்கேற்றிலே
பொட்டிலே யவர்கட்டு பட்டிலே பூணகர்தப்
பொடியிலே யடியிலேமேற்
பூரித்த முலையிலே நிற்கின்ற நிலையிலே
புந்திதனை தழையவிட்டு
நெட்டிலே யலையாம லறிவிலே பொறையிலே
நின்னடியர் கூட்டத்திலே
நிலைபெற்ற அன்பிலே மலைவற்ற மெய்ஞ்ஞான
ஞேயத்திலே யுனிருதான்
மட்டிலே மனதுசெல நின்தருளு மருள்வையோ
வளமருவு தேவையரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்காத லிப்பெண்ணுமையே.

வாலைத்தம்மீ.

மாதாவாய் வந்து அமிர்தந்தந் தான்மனை
யாட்டியாய் வந்து சுகங்கொடுத் தான்
ஆதர வாகிய தங்கையா னுன்றமக்
காசைக் கொழுந்தியும் மாமியா னுன்.

என்ற ஆன்றோர் வாக்கியத்தால் நம்மையீன்று பாலூட்டி வளர்த்த மாதாவும், மனைவியும், தங்கை முதலிய ஏனையமகளிர்களும், ஒரே சத்தியினுடைய அம்சமென்றும், அதனால் பெற்ற தாயும், பெண்சாதியும் ஒன்றென்பது நன்றாய் விளங்குகின்றது.

பராசத்தியின்து அம்சமாகிய நமது தாயானவள் நம்மைப் பெற்று நமது உடலும், உயிரும் நிலைக்கும்படி மாயாவேசத்தால் தன்னிடத்திலுண்டாகும் அமிர்தமாகிய பாலைப், பயோதரத்தின் வழியாக நமக்கு 16 வருடத் தவணைக்குக் கடன்கொடுக்கிறாள். நமக்கு 16 வயது வந்தவுடன் தவணை முடிந்துவிட்டதென்று

சத்தியானவள், தான் முன்கொடுத்த பாற்கடன் தொகையை வசூலிக்க எண்ணி, மன்மதனென்னும் சேவகன் மூலமாய் நமக்குப் பல தடவைகளிலும் அறிவிக்கிறாள். சிறிதுகாலஞ் சென்ற பின் இப்போது நமது கடனைக் கொடுப்பதற்கு வட்டிமுதல் தொகையுடன் தயாராக இருப்பானென்றுணர்ந்து ஓரேதடவையிற் கடன்காரன் மனம் வருந்தும்படித் தொகையை வசூலிக்கப் படாதென்றெண்ணி, சர்வாடவர்ப் பிரதியாயுள்ள தமது பிரதிநிதியை, நாமேதேடி எதிர்சென்று அழைத்துவந்து, வேதியர்களால் ஆசீர்வதிக்கும்படி செய்து, நாமே வலித்து கடனைப்பெற்றுக்கொள்ளும்படி பன்முறை கெஞ்சிச் சொல்லும்படியாக, நமக்கு மனவியென்னும் பெயருடன் அனுப்பிவைக்கின்றாள்.

சத்தியினது பிரதிநிதியாகிய நமது மனவியானவள் உலக வாழ்க்கையை அடையவிரும்பும் நமது சரீரமாகிய முதலை நன்றாயுணர்ந்து நாம் ஓரேமுறையில் இவளிடத்தில் விற்றென்னும் கடன் தொகையைப்பெற எண்ணுவோமானால் இவன் சரீரமென்னும் முதல் அழிந்துபோவதுடன், நமது முழுத்தொகையும் வசூலாகாது. ஆதலால், இவளிடத்திற் சிலகாலமிருந்தாவது நமது எசமாட்டி கொடுத்த பாற்கடனை வசூலிப்போமென்று கருதித் "தோலிருக்கச் சுளையை விழுங்கினதுபோல்" நமது சரீரமாகிய முதலை, மனமென்னும் வளிகளைக்கொண்டு உலகவிவகாரமென்னும் வியாபாரத்தை நடத்திச் சரீரமென்னும் முதலினுண்டாகும் இந்திரியமென்னும் இலாபத்தை அப்போதைக்கப்போது வசூற்பண்ணிக் கொண்டிருக்கின்றாள்.

இந்த அந்தரங்கத்தையறிந்து ஞானேல்லரியத்தில் பேராசைபிடித்த சில பக்காப்பேர்வழிகள் என்னசெய்கிறார்களென்றால் சத்தியானவள் முன் நாம் அறியாப்பருவத்தில் நாம் கேட்குமுன்னம் தாமே வலித்துகொடுத்த பாற்கடன் தொகையை இப்போது "வலியக் கூப்பிட்டுக் கள்ளூற்றி, மயிரைப் பிடித்துக்கொண்டு காசு கேட்பதுபோல்" கேட்க ஆரம்பிக்கிறாள்; நமது கையிலுள்ள பொருளைக் கொடுத்துவிட்டு எவ்வாறு ஜீவிக்கப்போகிறோம்; கொடுக்காவிட்டால் நம்மைப் பலவிதமான தொந்தரவுகள் செய்வாள்; ஆகையால், இவள் ஆளுகைக்குட்பட்ட நாடு, நகரங்க

னைக்கடந்து, சந்தியாசமென்னுங் காட்டுக்கு ஓடிப்போய் வீடு வோம் என்று பலகாள் சமயம் எப்போது நேரிடுமென்பதைக், காலங் கருதி யிருப்பர் கலங்காது ஞாலங் கருதுபவர் என்னுந் திருக் குறள் வரக்கியப்படி யெதிர்பார்த்துச் சமயம் நேர்ந்தவுடன் துறவுபூண்டு வனத்திற்கு ஓடிப்போகின்றார்கள்.

அதையுணர்ந்த சத்தியென்னும் இராணியானவள் சினங் கொண்டெழுந்து, "கடன்காரப் பயலுக்கு அவ்வளவு தைரியமா?" வென்று ஆக்ரமித்து உடனே மன்மதனுக்கு அறிவிக்க, அந்த மன்மதன் துரவியாகிய கடன்காரனிருக்குமிடத்தைத் தேடிக் கண்டுபிடித்துக் கடன் தொகையைக் கேட்க, பிரதிவாதி சரி யான பதில் சொல்லாமல் ஜால்சாப்புச் சொல்வதை யறிந்து பல விதத் தந்திர மந்திர வுபாயங்கள் செய்தும் பலிக்காமல் தனது ஏசமாட்டியிடம் தெரிவிக்கிறான். அதன்பின் சத்தியானவள் ஸ்திரீகள் மூலமாய்ச் சையோகமென்னும் வாரண்டை யனுப்பி வைக்கிறாள், அதற்குந் தப்பித்துக்கொள்ளச் சத்தியானவள் தான் அனுப்பிய வாரண்டுகளுக்கெல்லாம் பிரதிவாதியாகிய துரவி ஒழிந்துக்கொள்வதை யுணர்ந்து தானே நேரிற்சென்று கனவில் இந்திரிய ஸ்கலித பரிசோதனையென்னும் பிடிவாரண்டு பிறப்பிக் கிறாள். அப்போது, பிரதிவாதி 'இனிமேல் தப்பித்துக்கொள்ள முடியாதென்றெண்ணித் தனது முதலாளியாகிய பெருமாட்டி யிடம் சாஷ்டாங்க தண்டஞ்சமர்ப்பித்துக் கைகட்டி நின்று காணப்பட்டதெல்லாந் தனது அம்சமாகவுடைய பெருமாட் டியே! சர்வசிவாசகனேயுங் காத்திரட்சிக்கும் லோகமாதாவே! இப்பிரபஞ்சந்திற்கு முதற்காரணமாயுள்ள பிரணவ கொழுபியே, ஏகசக்ரவர்த்தினியாகிய ஸ்வரியே! அடியேனுக்கு நீ கொடுத்த பாற்கடனை மன்னித்திரட்சிக்கத்தான் வேண்டும், அங்ஙனம் மன் னிப்புச் செய்வையாகில் உனது அழியாத திருபாதிக்கு யாதே னுங் குறைவு ஏற்படுமா? என் மன்னித்தாயென நின்னைக் கேட்ப வருமுண்டா?

உற்றநோய் நீக்கி யுருவமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.

என்னுங் கருத்துப்படி பற்பலவாறு தோத்திரம்பண்ணிக் கெஞ்சிக்கேட்டு மன்றாடுகிறான். அவன் கெஞ்சுந் தன்மைக்கும், அவனுடைய நிடச்சித்தத்துக்கும் இரக்கமும், வியப்புமடைந்து தான் கொடுத்தவுடனே மன்னித்து அவனைத் தனக்கு உண்மையான ஊழியனாக இருக்கும்படி ஆக்ஞாபித்து அவனுடைய உண்மையை முற்றிலுஞ் சோதித்து அருளாகிய பெரும்பொருளை மேன்மேலுங் கொடுத்து மெய்ஞ்ஞானச் செல்வவாழ்வனுக்கி விடுகிறான். ஆதலால், சிலகாலம் எமன் விட்டதாகிய ஸ்திரீகளுடன் அவர்கள் மாயவலைக்குட் சிக்கியிருந்தாலும் 30, 40 வயதுக்குமேலாவது சகலபற்றுக்களையும் "சட்டிசுட்டது கைவிட்டது" என்பதுபோல் நீக்கி ஆத்மவிசாரத்தில் அழுந்தித் தனது எதார்த்த சொரூபத்தைப் பாவனையாகவும், பாவனாதீதமாகவும் அநுஷ்டிக்க வேண்டுமேயன்றி எப்போதும் உயிர் நீங்குகிறவரையில் மூத்திரக் கேணியே சதமென்று மூன்றுவேளையும், (கூடுமானால்) அதற்கிடையிலும் பருத்நிப் பொதியைப்போல் வயிறுநிறம்பப் புசித்து விட்டுப் பகற்காலத்திலும் கீறுபூறென்று குறட்டை விட்டுத் தூங்கவும், கடிதடத்தடாகத்தில் ஸ்நானம்பண்ணவும், அளவுக்கு மிஞ்சிப் புசித்து ஏமஞ்சாமக்களிலும் விரைந்து ஓடிப்போய் வயல், வாய்க்கால்களில் மலங்களைப் பிதுக்கவும், பிராணன் பிரியும்போது வருந்தவுங்கூடாது.

சிவஞானவள்ளல்.

வரிக்கய லனைய கண்ணார் மாலைத் தடத்த பின்னர்
விருத்தனுக் கால மேனும் விரத்தனு யாவு நீத்தே
இருக்குமர் கிலம் கன்றேர் யோசனை யெய்தப் பெற்றால்
திருக்கண்மூன் றுடைய பெம்மான் சேவடி சேர்தல் திண்ணம்.

சூத்திர ராசி யாகத் தொழுகுலத் தவரீ முச
மூத்திரக் குழியி சாழ்த்து மூழ்கிய பின்ன ரேனுங்
காத்திரத் தால்சே ரின்பங் கடையென விகழ்ந்து மூன்று
நேத்திரத் தானை நோக்கி நெடுவனம் புகுதல் வேண்டும்.

பத்திரகிரியார்.

வம்படிக்கும் மாதருடன் வாழ்ந்திரு மண்ணுளி
யம்பழமும் ஒடும்போ லாவதினி யெக்காலம்.

பட்டினத்துப்பிள்ளை.

எத்தனைபேர் கட்டகுழி எத்தனைபேர் சொட்டமுலை
எத்தனைபேர் பற்றி யிழுத்தவிதழ்—நித்தநித்தம்
பொய்யடா பேசும் புலியின்மட மாதரைவிட்
டுய்யடா வுய்யடா வுய்.

தவங்குடியார்.

இராகம் பந்துவராளி. தாளம் சாப்பு.

பல்லவி.

பெண்கொண்ட பேர்பட்ட பாட்டையுங் கேட்டையும்
பேசுவமோ நெஞ்சமே

அநுபல்லவி.

சங்கையும் போக்கிச் சதிமான மாகச்
சகசண்டி யாக்குவித் திடுவாள் வெகு
பங்கப் படுத்திவிட் டிடுவாள் அத்த
மங்கைய ராசைவைத் தையையோ வையத்திற் (பெண்)

சரணங்கள்.

தங்க ளகையு முகப்பணிச் சேலையுந்
தாவென வேகுரங் காட்டுவாள் என்றன்
செங்கை வளையுந் தலைக்கெண்ணெய் சீப்புஞ்
சிறப்பொடு தாவென மாட்டுவாள் வன்னக்
கொங்கைக் கிசைத்த ரவிக்கையுங் கோலப்
பணியுங் கொடுவென மூட்டுவாள் அடே
வெங்கம் பயல்நீ யெனுமக்க ளேவென்று
வீட்டில் வராதேயென் றோட்டுவாள் வெகு
பங்கப் பழிப்பினில் காட்டுவாள் அத்த
மங்கைய ராசைவைத் தையையோ வையத்திற் (பெண்)

நாடிக் குருவடி தேடி நடக்கின்ற
நற்செய லேக்கசப் பாக்குவாள் எங்கும்
ஓடித் திரிந்தே யலைத்து பணங்கள்
ஒருக்காலே தேடென்று தாக்குவாள் அவன்
தேடும் பொருள்தன்னைக் காணி லுமக்கெதிர்
தேசத்தி லாரென்ற தாக்குவாள் இன்னும்
ஆடென்றும் மாடென்றும் வீடென்றுந் தேடென்றும்
ஆண்டவ னேமறப் பாக்குவாள் பின்பு
ஈடொன் றிலாதினை வாக்குவாள் அந்தக்
கேடிக ளாசைவைத் தையையோ வையத்திற் (பெண்)

சத்துவாதி முக்குணம்.

இருபத்துழன்றவதத்தியாயம்.

மனிதர்கட்கு இயற்கையாயுள்ள மூன்குணம் மூன்றவகைப் படும். அவை சத்துவகுணம், இராசதகுணம், தாமதகுணம் என்பன.

இந்த மூக்குணங்களிற் சத்துவகுணம் மேலிட்டிருக்கும்பொழுது எஞ்சிய இராசத, தாமதகுணங்கள் மறைந்திருக்கும். இராசதகுணம் மேலிட்டபொழுது சத்துவ, தாமத குணங்கள் கரந்திருக்கும். தாமதகுணம் மேலிட்ட பொழுது சத்துவ இராசத குணங்கள் கரந்திருக்கும்.

நன்மையான சத்துவகுணம் மேலானபோது ஞானம், இருபை, தவம், பொறுமை, சத்தியம், மேன்மை, மௌனம், பஞ்சேந்திரியம் அடங்குதல் முதலான மேன்மைகள் உண்டாகும்.

பகவற்கீதை.

ஈன மற்ற துறவற மில்லறம்
ஞானம் பற்றொடு கல்வினை தீவினை
யான தஞ்சவ தஞ்சத் தகாதெனத்
தான நித்தது சாத்விக புத்தியே.

இராசதகுணம் மேலானபொழுது, வீரம், தருமம், தானம், கல்வி, கேள்வி, உலகியாபாரத்தில் மனம்செல்லுதல், சரீரத்தை ஆராய்தல் இவைகள் உதயமாகும்.

பகவற்கீதை.

தருமம் பாவர் தனக்குச் செய்யத்தகுல்
கருமஞ் செய்யத் தகாத கருமங்கள்
அருமை யாலறி யாத வறிவோர்
இருமை யாய இராசத புத்தியே.

தாமதகுணம் மேலானபோது அதிகவுணவு, நெடுந்தூக்கம், சோம்பல், நீதிவழுவுதல், ஒழுக்கமின்மை, வஞ்சகம், மதி, கோபம், கொலை, களவு, கள், காமம், பொய், கலகப்பிரியம் முதலான குணங்களுண்டாகும்.

பகவற்கீதை.

மணமொ ருக்கலும் வான்கலே தல்களோத்
தனமொ ருக்கோடு கற்றலுர் தக்கவ
ரினம ழித்தலு மின்றியுண் டாக்கிய
தினம்வி டுக்கிலார் தாமதஞ் சேர்ந்தனர்.

பாவ மாகத் தருமத்தைப் பார்க்கலு
மாவ தாமென் றடாததை நோக்கலுக்
கிமை செய்கின்ற சித்தினை நிங்கிலே
போவ தாமது தாமத புத்தியே.

சத்துவகுணமானது, ஆசையாகிய களங்கமில்லாததினால் நிர்மலமான பளிங்குபோன்ற வெண்ணிறமுடையது; இராசதகுணம் செங்நிறமுடையது; தாமதகுணம் கருமைநிறமுடையது.

மனமானது சத்வாம்ச வடிவு. அப்படி இருந்தும் இராசத, தாமத குணங்கள் கலந்து மனதினுடைய சத்வாம்சத்தைக் கெடுக்கின்றது. சன்மார்க்க நடையை விடாதிருந்தால், எஞ்சிய இரண்டு குணங்களும் நசித்துப்போகும். அங்ஙனம் நசித்தபின் பேதமாய்க் காணப்படும் சர்வ கிரியைகளும் உடனே நசிக்கும். அவை நசித்தபின், களங்கரகிதமான ஆகாயம் எப்படியோ அப்படியே மனம் பரிசுத்தமாகிப் பிரம்மத்தை நோக்கி, நிர்விகற்ப சமாதியிற் சலனமின்றி அசையாது நிற்கும்.

இந்தச் சத்துவ, இராசத, தாமத குணங்கள் ஒவ்வொன்றிற்கும், மும்மூன்று குணங்கள் உண்டு. அவை விரிக்கிற்பெருகும் என்று நிறுத்தப்பட்டது.

கைவல்யநவநீதம்.

கருதுமனே குணமூன்று மூன்றி லொன்று
கலித்தெழுந்தால் மற்றிரண்டுங் காந்து நிற்கும்
தருமமிகு சத்துவமே லான போது
சன்மார்க்க மானதெய்வ சம்பத் துண்டாம்
மருவுமிரா சதமாகி லுலக நேச
வகுதனையாஞ் சாத்திரவா தனையு மாகும்
அருமக்னே தாமதமே லான போதி
லசுரசம்பத் துண்டாகும் அறிந்து கொள்ளே.

ஆத்மஞான நிஷ்டை.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

ஏகாந்தமான விடத்தில் புலித்தோல், மான்தோல், சித்திரா சனம் என்னும் இரத்தினக்கம்பளம், வெண்மையாகிய வஸ்திரம்

இவைகளில் ஒன்றைப் பூமியின்மேல் விரித்து, முன் ஆசனபேதத்திற் கூறியிருக்கும் விபரப்படி, பதுமாசனம் என்னும் அங்காசனத்திலிருந்து, சின்முத்திரையிட்டு தலை, கழுத்து, இடை, கண் ஆகிய நான்கையும் ஸ்தம்பத்தைப்போல் அசையாமல் நிறுத்தி மனதைச் சத்துவகுணத்திற் பொருத்தி, பசுமரத்தாணியைப் போற் பிறழாமல் நிறுத்தி, சாம்பவி என்னும் சிதாகாசத்தில் இரண்டு கண்களையும் இமைகொட்டாமல் நோக்கிச் சாதனம் புரிந்து தூங்காமல் தூங்கவேண்டும்.

கந்தாலங்காரம்.

ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பா மானத்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பும் மூர்ச்சிப்போ தளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்புசெய் யாரென்செய் வார்யம தூதருக்கே.

தாயுமானசுவாமிகள்.

தூங்கிவிழித் தென்னபலன் தூங்காமற் தூங்கிற்கும்
பாங்குகண்டா லன்றே பலன்காண்பேன் பைங்கிளியே.

தூங்காமற் தூங்கிச் சுகப்பெருமா னின்னிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலைபெறவுங் காண்பேனே.

அவிரோதவுந்தியார்.

ஆங்கறி யாமையுஞ் சாரா தறிவோடுந்
தூங்குவாய் காளமென் றுந்தீபற
சோன்றும் பாம்பொரு ஞந்தீபற.

பட்டினத்துப்பிள்ளை.

எனந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைத்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சித்தஞ்சூழ்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குன்ற
அனந்தலி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே.

பத்திரகிரியார்.

ஆங்கா ரமுமடக்கி யைம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் தூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்.

மோகவைதப்பாணி.

ஆங்குணரா மையுமுணர்வு மாயினகோ லறவிருந்து
தூங்கினர்காண் சுகமடைவார்.

கடவுளந்தாதி.

கண்டுகொண் டானந்தக் கூத்தாட்டை நேசக் கருணையினற்
கொண்டுகின் முன்பா வீதியி லேகுரு பாதமென்ற
தொண்டுசெய் தந்தத் திருவாடு மூசலிற் றூங்கிக்கொண்டாற்
பண்டுமுன் சோதிப் பழம்பொருள் தோன்றும் பணிந்தவர்க்கே.

நிஷ்டாபரர்கள் புருவமத்தியாகிய சிதாகாயத்திற் பொருந்தி இரண்டு நேத்திரங்களையும் மேல்நோக்கிய பார்வையுடன் கண்களை இமைக்காமற் சொக்கிநின்று உதயமாகாநின்ற கருத்தை அகத்தினிடத்தே யடக்கிச் சஞ்சரிக்கும் மனத்தின் ஒட்டத்தைத் தொலைத்துச் சாதனஞ்செய்ய வேண்டுமென்பதற்குப் பின்வருஞ்செய்யுட்கள் சான்று பகர்ந்துநிற்கின்றது.

பிரமகம்மது அவுலியா ஆனந்தக்களிப்பு.

உச்சிக்கு மேலே பிழக்கு—ரம்ம
ரூருக்கு மேலே பெருவெளி தன்னிற்
பச்சைப் புரூவத்து மேயும்—அதைப்
பாங்குடன் மெல்லப் பழக்கிப் பிடித்துக்
கச்சைக் கயிற்றாலே கட்டிக்—கலி
மாவுடன் தேனைக் கலந்து புகட்டி
அச்சமில் லாக்கூட்டி லடைத்து—ரம்மை
யாரும் நகுமானைக் கண்டுகொண் டேனே (தின்தின்)

ஔவைதுதி.

இமையாத நாட்டத் திருந்துணர் வாருக்
கமையாத வானந்த மாம்.

சௌந்தரியந்தாதி.

உமையே மூலத் துறைந்தபொரு ளுணர்ந்தே சுழியின் முனைநிறுத்து
இமையோ ரறிய வரிதாகு மென்தா யுனது பதங்கருதி
நிமையா நாட்டத் துடன்காவே நீட்டி முடக்கி நிலைபுகுந்து
தமையே யுணருந் தரமருளுந் தாயே யமலன் தனிவாழ்வே.

கைவல்யநவநீதம்.

அசத்தி லெம்மட்டுண் டம்மட்டும் பாமுக மாகினு யம்மட்டும்
நிசத்தி லுள்ளிழிப் பார்வையா லிப்படி நிரந்தரப் பழக்கத்தால்
வசத்தி லுன்மன தின்றுமின் மாத்திர வடிவமா கிடில்மைந்தா
கசத்த தேகத்தி லிருக்கினும் ஆனந்தக் கடல்வடி வாவாயே.

கடவுளந்தாதி.

சுழிமுனை வட்டச் சுழுமுனை யுச்சித் துவாரத்திலே
வழிபய மென்று மலேப்பர்க் னோமடைக் கொக்கதுபோல்
தெளிவுறு பார்வை யசையாது சித்தடி நோக்கிநின்று
விழியிமை யாதொளி பார்த்து டுறுவ வெளிப்படுமே.

சௌந்தரியலகரி.

இணைவிழி யிமையா காட்டத் தெய்திய தலரத் தோன்றும்
பணைகெடும் புவன மிச்சப் பார்வைசற் றிமைக்கு மாயின்
றுணையிழந் தழிவ தென்னித் துணிந்தின் கருணை யென்றுற்
கணையினுங் கொடிய தென்னைக் கடவதோ கடவுண் மாதே.

மேற்கூறிய செய்புட் கருத்துப்படி சாம்பவியென்னும் முத்திரையைப் பொருந்தி சித்திரத்தில் சித்திரிக்கப்பெற்ற நிவாததீபம்போல் மனத்தை அசைவற நிறுத்தினால் அனுகத சக்கரத்தில் மணி, சமுத்திரம், மேகம், மந்தளம், பேரிகை, வீணை, நிலம்பு, சங்கு, வண்டு, கைத்தாளம் ஆகிய இவைகளின் இனிய தொனியைப்போல் பத்துவிதப் பிரணவநாதங்கள் கேட்கும்.

அகஸ்தியமுனிவர்.

வையஞ் சலமங்கி கால்வான் பலவயிர் வான்முடியோ
டெய்யும் பரமுதற் சார்வதெல் லாமெம்பி ரான்முருகா
தெய்யன கின்றுகின் றாட்டெம் போதைத் திருவிளையாட்
டையகின் னங்கம தென்னங்க மாய்நின்ற வானந்தமே.

ஞானிகள் நிலைமை.

கர்தமுத லேம்புலனே யடக்கி காப்பன்
கருத்தமைத்துச் சாம்பவிசோக் கதனே மேவிச்
சிந்தையுறத் தான்சரிக்கு மிடங்கள் தன்னிற்
செறிந்திடையா திருந்தினையி னிட்டை கூட
வந்தெழும்பு மணிசலதி லெம்பு சங்கு
வண்டிசையாங் குழல்பேரி முழக்கங் காண
இத்தலைசி வயோகத் திருப்பான் ஞானி
இனியவர்க்குப் பிறவியுமுண் டென்ன லாமோ.

கடவுளந்தாதி.

அன்பருக் கன்பு தரும்பரஞ் சோதியை யுத்தமத்தோ
டென்புரு கக்கலந் துள்ளே புருகி யிரவுபகல்
தம்புரு வீணை சமமண் டலத்தொனி தாளத்தித்தி
மின்பெரு குங்கொலுச் சிங்காரங் கண்டிரு மெய்மகிழ்ச்சே.

ஆத்மஞான நிஷ்டை.

லெம்பொலி யப்புற மிப்பாற் லெம்பொலி தேவர்சபை
யலம்பொலி யோசை யதுவெரு ராத மதற்குமப்பால்
வலம்புரி சற்றிய வாசனு முச்சி வழிதெரிச்தாற்
புலம்பொலி யாடலும் பாடலு மாகிய பூரணமே.

இவ்விதமான சுகானுபவமும், எக்காலத்திலுங் கேட்டிராத தசவித நாதநிதங்கள் முழங்கிய பேரின்ப நிஷ்டையை பிரம்ம நிஷ்டாபரர்கள் செய்து, அவர்களிடத்துண்டாகும் மகாத்தியத்தைப் பிரபஞ்சத்தவர்கள் கண்டு ஆனந்தமடைந்து, அவர்கட்கு வேண்டிய தொண்டுகள் புரிந்து கைகூப்பி நின்று புகழப்படுவதையும், ஒவ்வொருவரும் பலர் வாயிலாய்ச் செவிகுளிரக் கேட்டும், கண் குளிரப் பலகால் பார்த்திருந்தும், காமும் அவ்வாறு மகான்களியடுத்துத் தொண்டுபுரிந்து ஆத்மலாபத்தை யடையவேண்டுமெனச் சிறிதேனுஞ் சிந்திக்காமற் பிரபஞ்சத்தையே நித்தியமாகப் பல பெயர்கள் கருதியிருப்பதும், சிலர்க்கு ஞானநெறி கிடைக்கப்பெற்றிருந்தும் கிடைக்காதவர்போல் வீண்காலங்கழித்து சோம்பேறிகளா யிருப்பதும் என்ன அறியாமையோ! தெரியவில்லை.

திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி.

கிடைத்தபொருள் காத்திருக்கக் கிடைத்திலவென் றயர்வார்போற்
படைத்தனை தருள்பெற்றும் பெற்றிலன்போற் பரிவற்றேன்.

திருவாசகம்.

செய்ய தறியாச் சிறியாயேன் செம்பொற் பாத மலர்காணப்
பொய்யர் பெறும்பே றத்தனையும் பெறுதற் குரியேன் பொய்யிலா
மெய்யர் வெறியார் மலர்ப்பாத மேவக் கண்டுக் கேட்டிருந்தும்
பொய்ய னேனே னுண்டுதிங்கி லிருப்ப தானேன் போரேறே.

நித்தியமான சாதன சதுட்டயத்தைப் பெற்ற முமூட்சுக்களான பரிபாகங்கள் கனிந்த ஞானசிரியரிடத்திற் பொருந்தி அவரால் ஆத்மசொரூப நிலையில்நின்று சாதிக்கப்பெற்று வந்தாலும், அவர்கள் எவ்வளவு பக்குவமானாலும், அளவுக்குமிஞ்சி உட்கொள்ளும் அன்னபானாதிகளால் வியாதி, மயக்கம், சோம்பல், தூக்கம் முதலியவைகளுண்டாகும். ஆதலால்,

திருக்குறள்.

அற்ற வளவறிந் துண்க வளவுடம்பு
பெற்ற வெடிதுய்க்கு மாறு.

மின்னும் குறையினும் கோய்செய்யும் நூலோர்
வன்முதலா வெண்ணிய மூன்று.

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

என்னுங் கருத்துக்கிணங்கத் தானுண்ட போஜனம் ஜீரணித்த தையறிந்து அரைவயிறு போஜனமும், கால்வயிறு சலமுமாகத் தினமொன்றுக்கு ஒருவேளை உச்சிப்போதில் அருந்தவேண்டியது. வேறெங்கே சஞ்சரித்தாலும், எங்கேயிருந்தாலும், ஆசை மேவிட்டு மாதர்களிடத்தில் வாழ்ந்தாலும், உண்மையாகிய சின்முத் திரைக்கடலில் மூழ்கிக்கொண்டிருப்பார்கள்.

பட்டினத்துப்பிள்ளை.

காடே யிடைமரு திசர்க்கு மெய்யன்பர் காரியர்பால்
வீடே யிருப்பினும் மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே.

இவ்வத்தியாயத்தின் பிரதமத்திற் சொல்லிய பலவித ஆதனங்களும், இதரவிஷயங்களும் முதிராத அப்பியாசிகளுக்குரியதே யன்றி முதிர்ச்சியடைந்த ஆத்மஞானிகளுக்கு அத்தியாவசிய மானதன்று. தூங்காமல் தூங்குதலென்னும் சுகாதீத நிஷ்டையி லிருக்கும்போது சமீபத்தில் ஒருவன் மணியை அடித்தாலும், அதுபோன்ற பற்பல பெருந்தொனி யுண்டாகச் செய்தாலும் அவைகளெல்லாம் உண்மையான நிஷ்டையிற் கேட்காது. அங்ஙனங்கேட்கின் அஃது அநிஷ்டையென்றுரைவேண்டும் அவ்விதத் தொனிகள் கேட்காதிருக்க வேண்டுமென்று கருதி அறை முதலியவைகளுக்குள் இருப்பதென்று கருதக்கூடாது. எவ்விதவெட்டவெளியிலிருந்தாலும், எவ்வளவு ஜனசமூகத்திலிருந்தாலும் அவர்களுடைய சம்பாஷணைகளையும், கடையுடைபாவனைகளையும் கிரஹிக்காமல்,

பட்டினத்துப்பிள்ளை.

எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப் பட்டாலும்
முத்தர் மணிமிருக்கு மோனத்தே—வித்தகமாய்க்
காதிவீணே யாடியிரு கைவீசி வந்தாலுங்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்.

என்பதுபோல், தனது உண்மை வடிவத்தில் ஐக்கியமாகித் தனது பிரக்ஞை யற்றிருக்கவேண்டும். அவ்விதமிருந்ததுதான் நிஷ்டை

யினது இலட்சணமேயன்றிப் பதுமாசன முதலிய பற்பல ஆசனங்களிட்டுக் கண்களை மூடிக்கொண்டும் அயலில் சம்பாஷணைகள்போன்ற சத்தங்களைக்கேட்டுக்கொண்டு மிருப்பதினல் அஃது நிஷ்டையாகாது. எவ்வளவுநேரம் மனோலயமாகி யிருந்தோ அவ்வளவு நேரமே நிஷ்டைபுரிந்ததாகும். மாணவர்கள் ஞானகிரியரிடத்தில் உபதேசங்கேட்டு அதனை அநுஷ்டிக்கும்போது மனமடங்கி ஏகாக்ர சித்தமாயிருக்கின்றதா என்பதையே அவசியங் கவனிக்கவேண்டும். தன்வசமற்று நின்றவிடமே இராப்பகலற்ற விடமாகும்; அஃது சாமானியமானதல்ல.

கந்தாலங்காரம்.

அராப்புனை வேணியன் சேயருள் வேண்டும் அவிழ்ந்த அன்பர்
ஞராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங் கொடிய ஐவர்
பாராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டுமென்றுல்
இராப்பக லற்ற விடத்தே யிருக்கை யெளிதல்லவே.

இரவுபகலற்ற விடத்தையே போக்கும், வரவும், இறப்பும், பிறப்பும், இன்பமும், துன்பமும் என்று சொல்லாநின்ற இருவினைகள் தணந்த நிரதிசயானந்த பதவியென்றும், அவ்விடத்தைப் பொருந்தி நிற்பதனுலேயே பஞ்சேந்திரிய முதலிய கருவிகரணங்களும், ஆகம, புராண இதிகாசமுதலான சாஸ்திரவாசனைகளும், ஞானத்தை அடைவதற்கு உபகரணமாகிய சரியை, கிரியை, யோகமென்னும் படிகளும், எண்ண பிரபஞ்சக்கருமங்களும் நாசமாகும். வாசாமகோசரமாகிய இரவுபகலற்ற ஸ்தலத்தில் நிர்விகற்ப சமாதிபுரிவதற்கும், மனோலயமாவதற்கும், சற்குருமூர்த்தியானவர் கிருபாலோக்கம் பாலித்து அதுக்ரஞ் செய்யப்பட்ட பிரணவோபதேசமே அருட்டுணையாகும். அத்தப் பிரணவம் (கலிமா) என்னும் நாட்சர மஹாமந்திரத்திற்கே ஒருமொழி, ஒருசொல், ஒரெழுத்து, ஏகாட்சரம் எனப்பற்பல மர்மமான நாமங்களுடன் அறிஞர்களால் கலிலப்பட்டுச் சருதிகளெல்லாம் முழங்கிக்கொண்டிருக்கின்றன.

தாயுமானவர்.

ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மந்த
வொருமொழியே மலமொழிக்கு மொழிக்குமென மொழிந்த

குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்.

தாயுமானவர்.

அல்லாகூ வென்ற அகண்டித கண்டமாய்
கல்லா யிருக்குது காணும்—ஒரு
சோல்லாலே யிப்படித் தோணும்—வெகு
உல்லாச மாலாயி லாக (இல்லல்லாகூ)

திருமந்திரம்.

ஓமென்னும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமென்னும் ஓங்காரத் துள்ளே யுபதேசம்
ஓமென்னும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமென்னும் ஓங்காரம் ஒன்முத்தி சித்தியே.

நட்டாலூபதி.

ஒருமொழி யாலே சுருதியா கமநூ லுயர்புரா ணமுமெலாம் ஒழியும்
ஒருமொழி யாலே சரிதைசற் கிரியா யோகபா வனையெலாம் ஒழியும்
ஒருமொழி யாலே அண்டபூ தங்க ளொடுங்கிடுத் தன்னிலே தோன்றும்
ஒருமொழி சும்மா விருத்தலா மதனுல் ஒப்பிலாச் சிவபத மடைவார்.

இவ்வுலகத்திற் காணப்பெறும் மாயாமயக்கங்களோ மஹா வலிமையையும்; அதிசயானந்தத்தையு முடையது. அத்தகைய காட்சிகளைக் கட்புலன் வழியாய்ப் பார்த்தானந்திக்கும் இந்த மனமானது அவைகளை யெறெடுத்துக் கிஞ்சித்தேனும் பார்க்காமல் அடங்கி இரவுபகலற்ற விடத்திற் சும்மாவிருப்பதென்றல் ஒப் பற்ற பிரணவ ஞானோபதேச சதாநடனசாலையில் எத்தகைய காட்சியும் எவ்வளவு பேரானந்தமும் மிருந்திருக்கவேண்டும். இவ் வுலகத்தில் எப்போதேனும், எவ்விடங்களிலேனும் பார்த்த தும்,பார்ப்பதும், பார்க்கப்போவதுமாகிய அற்புதக் தீபக்காட்சி (Bioscope) முதலான சகல ஆனந்தக் காட்சிகளுக்கும் எத்தனை யோ பல்லாயிரமடங்கு உன்னதமானதா யிருப்பதினலன்றே இம்மனமானது அவ்விடத்தில் அடங்கிச் சலனமற்றுநிற்கின்றது; அங்ஙனமின்றேல் ஒரு கண்ணிமைப்பொழுதாவது சும்மாவிருக் குமா? ஆதலால் "பிரணவம்" என்னும் மந்திரமானது சாமானிய மானதல்ல; அஃது எட்டில் எழுதலும் வாயினுற் சொல்லலுங் கூடிய தரத்ததன்று; ஆனதுபற்றியே;

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்பம் இறையாத தீர்த்தம் இனிமுடிந்து
கட்டாத விக்கம் கருதாத நெஞ்சம் கருத்தி னுள்ளே
முட்டாத பூசையன் றேருகு ராதன் மொழிந்ததுவே.

எனப் பட்டினத்தடிகள் திருவாய்மலர்ந்துள்ளார் என்பதைச் சில ஆசிரியர்கள் ஆய்ந்தோய்ந்து பாராமல் ஓர் பிரதிப் பிரயோசனத்தைக் கருதித் தமது மாணவர்கட்கு அம்மந்திரத்தைச் செப்பேட்டில் "ஓம்" என்றும் இஃதே பஞ்சாட்சரமென "நமசிவய, சிவயநம, வசியவசி வசி, சி" என்றும் அறுகோணத்தைக் கீறி அதில் "சரஹணபவ" என்றடைத்து இதே சடாட்சரமென்றும்,

சிதம்பர சக்கரந் தானறி வாரிற்சி மையி லுள்ள பெரியோர்கள்
சிதம்பர சக்கர மென்ற லதற்குன் செய்வத்தை யல்லோ காணவேணும்.

என்னும் வாலீக்கும்மியின் வாக்கியத்தைக் கவனிக்காமலும் சிதம்பரசக்கரம் நாற்பத்துமூக்கோண முதலானவைகளை வரைந்துகொடுத்து மூலமந்திரத்தைத் தினமொன்றிற்குப் பதினாயிரம் உருச்செபித்து முடிக்கும்படி உபதேசிக்கின்றார்கள். அவ்வாசிரியாகள் சொல்வதை என்போன்ற பேதைமாணவர்கள் கேட்டுச் செபித்து எவ்விதப் பிரயோசனத்தையும் பெறுமல் சரீரத்தில் உஷ்ணம் அதிகரித்து இருந்தின்ற குரங்கைப்போல் விழிக்கிறார்கள். என்ன பரிதாபம்!

ஒருமொழியாகிய "ஓம்" என் னும் பிரணவ மந்திரத்தின் சக்தியினாலேயே மனமானது பதைப்பற்றுச் சும்மாவிருக்கும் என்பது "ஒருமொழி சும்மா விருத்தலாம்" என்பதனால் இனிது விளங்குகின்றதுடன் "சும்மாவிருத்தலென்பது" வாயை மூடிக் கொண்டிருப்ப தல்லவென்றும், இரவு பகலற்றவிடத்திற் பிரணவ ஞானோபதேசத்தினைச் சொல்லி யிருப்பதென்றும் புலப்படுகிறது.

தணிகாசலம்.

சொற்கடந் தார்க்க ஞானம் தன்னிற்
சும்மா விருக்குஞ் சுகமதே மோனம்
எட்டை யாயினும் பானம் தன்னே
எடுத்துண் டிருப்பதற் கிச்சித்தே யாகும் (இராச்சத்)

கந்தானுபூதி.

செம்மான் மகளைத் திருவுக் திருடன்
பெம்மான் முருகன் பிறவா னிறவான்
சும்மா விருசொல் லறவென் றறுமே
அம்மா பொரு ளொன்று மறிந்திலனே.

தாயுமானசுவாமிகள்.

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதி யெல்லாம்
அம்மா விரத்தரஞ் சொல்லவுங் கேட்டும் அறிவின்றியே
பெம்மான் மவுனி மொழியைத் தப்பியென் பேதமையால்
வெம்மாய்க் காட்டி லலைத்தேனைத் தோ!வென் விதிவசமே.

சும்மா விருக்கச் சுகமுதய மாகுமே
இம்மாயா யோகமினி யேனடா—தம்மறிவின்
சுட்டாலே யாகுமோ! சொல்லவேண் டாங்கன்ம
நிட்டா? நிறுபின்னாய் நீ.

சும்மா விருப்பதுவே சுட்டற்ற பூரணமென்
றெம்மா லறிதற் கெளிதோ பராபரமே.

ஒழிவிலொடுக்கம்.

சும்மா விருக்கவைத்த குத்திரமாஞ் சாத்திரத்தை
விம்மாக் கதறுவதும் வேலைக்ளும்—தம்மறிவால்
நீட்டிப் பிடித்திருக்கும் நிட்டைகளும் ஞானிகள்முன்
காட்டும் பரியாச கம்.

ஞானசுகாதீத வெண்பா.

உன்னுதே யோடாதே யுன்றியொரு மந்திரத்தைப்
பன்னுதே சாத்திரங்கள் பாடாதே—என்னுளே
அப்பாலு மொப்புவமை யற்றசுகா தீதத்தில்
எப்போதுஞ் சும்மா விரு.

ஞான விவசாயம்.

இருபத்தைந்தாலது அத்தியாயம்.

கோடரி முதலிய ஆயுதங்களால் வெட்டி வெட்டி எறிந்தாலும், மென்மேலும் பசிய தளிர்விட்டுச் சூழ்ந்து வளரும்படியான நீங்காத ஆசாபாசமென்னும் வனத்தில் ஒங்கிவளர்ந்த கல்வினை, தீவினையென்னும்பெரிய விருட்சங்களையெல்லாம் அடியோடு நிர்மூ

லமாக வெட்டியெறிந்து, கோபமென்னும் கொடிய பரட்டு முட்கள் செறிந்த செடிகளை (மறுபடியும் தளிர்க்காமல்) வேரறப் பிடுங்கி, அந்தக் காட்டில் மனிதர் சஞ்சரிப்பதையறிந்து வாலை முறுக்கிக்கொண்டு ஆக்கிரமத்துடன் பாயும்படியான கொடிய வேங்கைப்புலிகளை வேட்டையாடித் துண்டுதுண்டாய் விழும்படிவெட்டிக்கொன்று, மானம், அபிமானம், இன்பம், துன்பம், இராகத்துவேஷம் என்று சொல்லாநின்ற முட்பன்றி, கரடிக்கூட்டங்களை ஒன்றுபோன திசை ஒன்றறியாதபடி துரத்தியடித்து, மாயையென்னும் பெரிய மலைப்பாம்பை விவேகமென்னும் ஈட்டியினால் குத்திக் கண்டங்கண்டமாய்த் துணித்து, ஆசையென்னும் பாம்புப்புதர்களை விசாரமென்னும் மண்வெட்டியால் வெட்டிச் சமநிலமாக்கி, எக்களிப்பென்னும் பல விருட்சங்களையும், மூள்மரங்களையும் ஒருங்கே சேர்த்துத் தவமென்னும் நெருப்பை மூட்டிப் பரவெளியாகிய வாயுவைச் சம்பந்தப்படுத்திக் கொளுத்திப் பஸ்மீகரமாக்கி, அகந்தைக் குணமென்னுங் கற்பாறையைச் சுழிமுனையென்னும் உருக்கு உளியினால் வெட்டிப் பிளந்து, அவைகளை இடைகலை, பிங்கலையென்னும் வண்டியிலேற்றி, அக்நியோர்நிய மென்னுந் தோல்வடக் கயிற்றைப் பிடித்துத் துஷ்டத்தனமென்னுமூடர்களைக் கொண்டிழுக்கச்செய்து, அம்மூடர்கள் வேலைசெய்யச் சோம்பற்பட்டால் வைராக்யமென்னும் பிரம்பால் வேலைசெய்யும்படி அடித்து வண்டியிலேற்றிய பாறைக்கல்லை,

பட்டினத்துப்பிள்ளை.

பூணும் பணிக்கல்ல பொன்னுக்குத் தானல்ல பூமிதனைக்
காணும் படிக்கல்ல மங்கையர்க் கல்லாற் காட்சிக்கல்ல
சேணுங் கடந்த சிவனடிக் கல்லவென் சிக்கைகெட்டுச்
சாணும் வளர்க்க அடியேன் படுத்துயர் சற்றல்லவே. எனவும்,

ஔவை.

ஒருகா லுணவை யொழியென்ரு லொழியாய்
இருகாலைக் கேலென்ரு லேலாய்—ஒருநாளும்
என்னே வறியா இடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்தலறி தூ.

எனவும் வெறுத்துக் கூறும்படியான பசியென்னும் நித்தத்தளித் திரத்தையுடைய வயிறென்னும் தீராத ஆழமான குழியிற் போட்டு நிரப்பியபின் மனுவாக்குக் காயங்களுக் கெட்டாததும்,

தணிகைமணியார்.

ஞானம் வினைவேற்றும் கல்லசமு சாரிகட்கு
மோன மழையூற்றும் முனிலோகத் தில்வரனே.

என்று புகழ்ந்துரைக்கப்பெற்ற மகத்துவமுடையதுமாகிய பிரணவமந்திரமென்னும் சூல்கொண்ட சப்தமேகங்கள் ஆட்டதிக்குகளிலுஞ் சூழ்ந்து கவிந்துகொண்டு ஓயாமல் ஞானனந்தமென்னு மழையை வருஷிக்க, உடனே மனமென்னும் பூமியைச் சுத்தப் படுத்தி, நான்கு வேதங்களேயும், நான்கு வரப்புகளாக்கித் துறவறமென்னும் கிடைவைத்து, வேதங்களினது முடிவாகிய அறிவென்னுஞ் சூத்திரக் கலப்பையில் இன்ப, துன்பமென்னும் இரண்டு மாட்டையும் பூட்டி, சோதி சொரூபமாகிய மெய்ஞ்ஞானமென்னும் பண்ணையால் இதயமென்னும் மேழியைப் பிடித்துக் குண்டலிசத்தியாகிய சுழிமுனைத் தாற்றுக்கோலைக் கையில் தாங்கி இடைதரிசில்லாமல் ஏன்றுக உழவுசெய்து, சாதிபேதமென்னும் அழற்றை ஒன்றுபடக் கலக்கி, கட்டு என்று சொல்லப்படும். மண் கட்டிகளே மிதித்து, மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறுதாரங்களாகிய நன் செயிற் பரம்படித்து, மூன்று லோகங்களாலும் இத்தன்மைத் தென மதிக்கமுடியாத சந்திரகலே, சூரியகலேயாகிய இருநாடிகளுள் நடுநாடியாகிய சுழிமுனைச் சமாதியென்னும் மெய்ஞ்ஞான விதையை, "புரட்டாதி பாதிசம் பாருவையும்" என்ற குருபாத தாசர் வாக்கியத்தின்படியும்,

முப்பதாம் ஆண்டளவில் மூன்றற் றொருபொருளைத்
தப்பாமல் தங்கப் படாஞ்சிற்—செப்புக்
கலேயளவே யாகுமாங் காரிகையார் தங்கள்
முலேயளவே யாகுமா மூப்பு.

என்னும் ஔவைப் பிராட்டியார் கூறியபடியும் 16 வயது முதல் 30 வயதுக்குள் பருவகாலந்தவறுமல் மேற்படி விதையைத் தெளித்து, பக்தி, வைராக்யமென்னும் மடையைத்திறந்து தண்ணீர்பாய்ச்சிப் பயிர்வளர்ந்து வருங்காலத்தில் 96 தத்துவங்களென்னும் கோரை, புல், பூண்டு முதலிய களேகளேச் சுத்தமாகப்

பிடுங்கி அப்புறப்படுத்தி, ஸ்திரீகளென்னும் ஆடு, மாடுகள் ஞான மென்னும் பயிரைத் தின்றுவிடாமற் சாதுசங்கமென்னுங் காவ லேற்படுத்தி,

"ஊரு தாரமுஞ் தொல்லேயடி அதற்
கப்பால் யாதொன்று மில்லேயடி."

என்பதுபோல ஆதாரங்களினது முடிவாகிய தெரிசனமென்னும் கதிர்பரிக்து பாளேப்பருவங் கடந்தபின், சகஸ்திரதளத்தின் மேற் பட்டிருக்கும் பிரம்மாந்திர முத்தியாகிய நெற்கதிர் மணிமுற்றிய பின் அறுவடைசெய்து, அத்துவிதமென்னுங் களஞ்சியத்திற் சேர்த்து, நித்தியாநந்தமென்னும் வாழ்க்கையைப் பெறுவதுவே ஞானவிவசாயமென்று சொல்வது.

தாயுமானசுவாமிகள்.

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகக் காரமென்னும்
கல்லேப் பிளந்தெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறலையறு காதவண்ணம்
சோராத நின்றுவினே போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினேவின் படிக்குநீ முன்னின்று காண்பதே
நின்னருட் பாரமென்றும்
ஆராரு மறியாத சுதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபக் ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
ஆனந்த மானபரமே.

பெண் ஞானம்.

இருபத்தாறவது அத்தியாயம்.

மோட்சமடைய விருப்பமுள்ளவர்களில் ஆண், பெண் என் கின்ற வித்தியாசமில்லே. ஆனால், ஆடவர்கள் எதேச்சையாய்

எங்கும்போகவும், எவ்விடத்திலுங் தங்கவும், யாரிடத்திலுஞ் சந்தேகமின்றிச் சிகேகிக்கவும், சம்பாஷிக்கவும் கூடும். ஸ்திரீகளோ! அவ்வாறின்றி விவாகம் புரிவதற்குமுன் தாய்தந்தையர்களுடைய ஆக்கினைக்குள்ளும், விவாகம் முடிந்தபின் காயகனுடைய ஆக்கினைக்குள்ளும் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய திருப்பதால் தன்னிஷ்டம்போல் எங்கும்போகவும், வரவு முடியாமலிருக்கின்றது. இதைத்தவிர, ஞானம் அடைவதற்கு வேறு பேதாபேதங் கிடையாது. ஆனல் குடும்பத்திற்கும், ஊரார் பழிச்சொற்களால் தூற்றுவதற்கும் பயப்படுகின்ற ஸ்திரீகளுக்கே மேற்சொல்லிய நிர்ப்பந்தங்களுண்டு; உண்மையில் ஞானகிரியரைத்தேடி இந்த சென்மத்திலேயே மோட்சம் அடைந்துவிடவேண்டும் என்றெண்ணி இத்தலசுவாழ்வு முழுவதும் மாயாரூபம், தாய், தந்தைமுதலிய சர்வபந்துனிர்களும் மாயசம்பந்தமென்று வெறுத்து வெளியேறும் மகளிர்களுக்கு அந்த நிர்ப்பந்தமில்லை. மானபிமானம் என்னும் குப்பையைத் தலையில் வாரிப்போட்டுக்கொள்ளாதவர்களே யார், யார் எப்படிச் சொன்னல்தானென்ன? பூரண சந்திரனைப்பார்த்து நாயானது இராமுழுவதும் "சள்,சள்" என்று குலைத்துக் கொண்டிருந்தாலும், நாய்க்கு வாய் வலிக்குமேயன்றிச் சந்திரனுக்கு ஏதாவது கெடுதியுண்டா? ஒருபோதுமில்லை. இந்த உலகத்தார்களோ! சாமான்யத்தில் ஒருவனை ஈடேறவிடமாட்டார்கள். ஏனென்றல், மாயாசத்தியானவள் அவர்கள் காதைப்பிடித்து முறுக்கிப் பிறரை நல்வழிக்குப்போகாமல் தடுக்கும்படி சொல்லச் சொல்கிறுள். அதனல் அப்படிச் சொல்கிறூர்களேயன்றி, பாவம்! அவர்களது சுயேச்சையாய்ச் சொல்ல வரவில்லை. இதற்கோர் திருட்டாந்தமுண்டு அஃது பின்வருமாறு:—

இந்தூலாசிரியனுகிய யான் ஹிஜிரி 1304வது றஜபுமீ 23உ இங்கிலீஷ் 1887வது ஏப்ரல்மீ 18உக்குச் சரியான கலியுகாதி 4988-ல் சர்வசித்துவது சித்திரைமீ 7உ சோமவாரம் பகல் நாழிகை 16 விநாடி 16 (மணி 12–30) க்கு பிறந்தேன். சென்மநட்சத்திரம் சதயம்; சென்மலக்கினம் கடகம்; சென்னகாலத்தில் இராகு மஹாதிசையில் குருபுத்தியில் இருப்பு, வருடம் 1, மாதம் 5, நாள் 23, நாழிகை 22, விநாடி 31.

இந்நூலாசிரியரின் செனனக்குறிப்பு.



எனக்கு வயது 23 நடந்துகொண்டிருக்கும்போது சில மனிதர்கள் வெகு ஆத்திரமுடையவர்கள்போல் என்னிடம் வந்து உமக்குச் சுமார் 20 வயதுக்கு மேற்பட்டிருக்கலாமே? இனிமேலுங் கல்யாண முடிக்காமலிருக்கலாமா? தாய், தகப்பன் எத்தனை நாளைக்குத்தான் சமைத்துப் போடுவார்கள்? அவர்களுக்கும் காட்டுப்பெண்ணை (மருமகளை)ப்பார்க்க ஆசையிருக்காதா? நீர் செய்வது சரியல்ல? என்ன சொல்லுகிறீர்? என்று கேட்டார்கள். அப்போது நான், நீங்கள் சொல்வது ஞாயந்தான்; எனக்கும் விருப்பம் இல்லாமற் போய்விடவில்லை; ஆனால் 200 ரூபாய் எங்கேயாவது பார்த்து வாங்கிக் கொடுப்பீர்களேயானால் நீங்கள் சொன்னபடி நடந்துகொள்கிறேன் என்று பதில் சொன்னேன். அவர்கள் நாளைபதினம் வந்து முடிவுசொல்கிறேன் என்று சொல்லிப்போனவர்கள் மறுபடி நானிருக்கிற திசையை நாடிக் கனவிற் கூட வரவில்லை; என்னைக் கண்டாலும் சாடையாய் வேறொரு வழியாய்ப் போய்விடுவார்கள். கப்பலில் பெண்வருகிறது யார், யாருக்குத் தேவையென்று கேட்டால் எனக்கு ஒன்று, என் அப்பனுக்கு ஒன்று என்பார்கள். பெண் 1-க்கு ரூ. 100 கிரையம் என்றால் நான் சின்னப்பிள்ளை, எங்கப்பன் கிழவன் என்று சொல்லி

விடுவார்கள். ஆதலால், எல்லோருக்கும் திருப்தியாய் நடந்து கொள்ள முடியவே முடியாது. இதைப்பற்றி; "எல்லாரோடும் இணங்க முயலுதல்" என்று ஒரு சிறிய கதையுண்டு: அதன் சுருக்கம் பின்வருமாறு:—

ஒரு கிழவனும், அவன் மகனும் தங்கள் குதிரை யொன்றை விற்கவிரும்பிச் சந்தைக்கடைக்கு ஓட்டிக்கொண்டு போனார்கள். அதைப் பார்த்த ஓர் பாட்டைசாரி "இந்தக் கிழவனுக்குப் பைத்தியமா! இந்தச் சிறுகுழந்தையைக் கால்கடுக்க நடத்திக்கொண்டு குதிரையை விருதாவில் ஓட்டிக்கொண்டு போகிறானே!" என்றான்.

அதைக்கேட்ட கிழவன் தன் மகனைக் குதிரைமேலேற்றித் தான் அதன் பக்கத்தில் நடந்து சென்றான். மற்றொரு வழிப் போக்கன் இவர்களைப் பார்த்து மதிகெட்ட பையா! இவ்வளவு விருத்தாப்பியமான உன்தகப்பனை நடத்துவர நீ குதிரைமேலேறிப் போகிறாயா? பேஷ்! நன்றாயிருக்கிறது! என்றான்.

அதைக்கேட்ட கிழவன் சிறுவனை இறக்கிவிட்டுத் தான்மாத்திரம் குதிரைமேலேறிச் சென்றான். அதைக்கண்ட வேறொருவன் "ஹா! ஹா!! மஹாகேர்த்தி! இரக்கமென்பது கிஞ்சித்துமில்லாத இக்கிழவனைப் பார்த்தீர்களா? குதிரைமேல் தான் சுகமாயிருந்துகொண்டு இக்குழந்தையை நடத்திக்கொண்டு போகிறானே!" என்று பிரலாபித்தான்; அதைக்கேட்ட பிதா தன்மகனையும் பின்னால் ஏற்றிக்கொண்டு போனான்.

சிறிதுதூரம் போய்க்கொண்டிருக்கும்போது மற்றொருமனிதன்கண்டு ஐயோபாவம்! இந்த அநியாயம் எங்கேனுமுண்டா? ஒரு சிறு குதிரைமேல் உலக்கைத் தடியன்போல் இரண்டுபேர் ஏறிக்கொண்டு செல்கிறார்களே? இவர்களை அது சுமப்பதிலும் அதை இவர்கள் சுமப்பதே தகுதியானது என்றான்.

இவ்வார்த்தையைக் கேட்டுக் கிழவனும், மகனும் வெட்கமுற்றுக் கீழேயிறங்கிக் குதிரையின் கால்களைக் கட்டிக் குறுக்கே ஒரு பலுவான தடியை நுழைத்து இருவரும் முன்னும் பின்னுமாகத் தோளின்மேல் தூக்கிக்கொண்டு வழியில் இருந்த ஒரு மரப்பாலத்தின்மீது சென்றார்கள்.

அது கத்தக்கோரணியாய் இருந்ததினால் ஜனங்கள் கும்பல் கூடிக் கைகொட்டிக் கேலிபண்ணிச் சிரித்துப் பின்தொடர்ந்தார்கள். அதனால் குதிரை வெருண்டு கால்களையுதைத்துக் கயிற்றை யறுத்து ஆற்றில்விழுந்து முழுகிப்போயிற்று. கிழவன் வயிறு எரிந்து ஐயோ! "உலகம் பலவிதம்" என்பதை மறந்து எல்லாருக்கும் திருப்தியாய் நடக்க என்னுலியன்றவரை யெல்லாஞ்செய்தும் கடைசியில் ஒருவருக்கும் திருப்தியாய் நடக்க முடியவில்லையே! என் குதிரையையும் இழந்தேனே! என்று புலம்பிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பிப்போனன். ஆதலால் உலகத்தார்கள் ஒருவரை மூன்றேவிடாமல் கோமுட்டிமாதிரி கெடுக்க ஆரம்பிப்பார்கள். இதனையுணர்ந்து யார், யார் எதைச் சொன்னபோதிலும்,

குணகாடிக் குற்றமு நாடி யவற்றுள்
மிகைகாடி மிக்க கொளல்.

என்னும் பொய்யாமொழிப் புலவர் உத்தரவேதக் கருத்தையும், ஆரேனக்கென்ன போதித்து மென்னவென் அறிவினை மயக்கவசமோ, என்னும் நாயுமானவர் கருத்தையும் நன்குணர்ந்து அவர்கள் சொல்வதில் உசிதமானவைகளை ஒப்புக்கொண்டு அநுசிதமான வைகளைத் தவிர்த்து மயங்காதிருக்கவேண்டும்.

பெண்கள், ஞானம் அடையலாம் என்பதற்குப் பல திருஷ்டாந்தங்களிருக்கின்றன; அவையாவன: — பிரபுலிங்க லீலையில் அக்கமாதேவி துறவு கதியென்றே ஓர் படலமுமிருக்கின்றது; அந்த அக்கமாதேவியென்னும் பெண்மணி, தன்னை நாயகியாக்க விரும்பிய கௌசிகராசனை வாக்குபண்ணிய சோற்றைப்போல் அருவருத்து நீக்கிவிட்டுத் தானணிந்திருந்த உயர்ந்த ஆடையையும், இரத்தினங்கள், பொன்னாபரணங்களையும் ஒழித்து, கெடிய கூந்தலையவிழ்த்துத் தன் சரீரமுழுதும் மறையும்படி விரித்துத் தொங்கவிட்டு, பைத்தியம்போல் திகம்பரியாய்ச் செல்லும் போது, தாயும், தகப்பனையும் வந்து மகளை யுனக்கு நோகிடாதெடுத்து யாது? எங்களைவிட்டு எங்கே போகின்றாய்? என வருந்தியழுகும்போது அவர்களை நோக்கிச் சொல்கிறாள்; என்னை உங்கள் புதல்வியென்று மனமயங்கி வருந்துதல் தகாது; நான் என்னையறிதற்பொருட்டு மெய்ஞ்ஞானத்தை உணர்த்தும் சற்குருநாத

னைத் தேடிச்செல்கின்றேன் என்று சொல்லி, அவர்களைக் கண் னைடுத்துப் பார்க்காமல் அயலார்போல் நீங்கி, வெயிலின் வெப் பம்பொருமல் நிழலிலிருப்பிச் செல்வார்போல், அல்லமதேவரை ஈகாங்களிலும், மலைகளிலும், வனங்களிலும் தேடியலைத்து, முடி வில் கல்யாணபுரியிலிருப்பதாகக் கேள்வியுற்றுச்சென்று வசவண் ணர் மடத்தில் அல்லமதேவரைக்கண்டு நெருப்பிலிட்ட அரக்கை ப்போலும், மெழுகைப்போலும், மனமானது நெகிழ்ந்துருக, சொற்கள் தடுமாற, உரோமஞ்சிலிர்க்க, கண்களிலிருந்து தாரை தாரையாய் ஆனந்தபாஷ்பஞ் சொரியநின்று கைகூப்பி வணங்கி, சுவாமி! பிறவிப் பிணிக்கு அஞ்சித் தேவரீரது திருவடியை நாடி யடைந்தேன், அடியாள்மீது கிருபாலோக்கம் பாலித்து அருள் செய்யவேணுமென்று தேம்பித் தேம்பியழுது சொல்லி நின்றாள். அதுகண்ட அல்லமதேவர், இவளைப்போல் அதிதீவிர பக்குவ மடைந்தவர்கள் ஒருவருமேயில்லை; இப்படிப்பக்குவப்பட்டசீடர் கள் கிடைப்பது அரிதென்று தம் திருவுளத்திலெண்ணி அவளை நோக்கி நீ ஐம்பூதங்களல்லை? ஐம்பொறிகளல்லை? புத்தியுமல்லை? சோதிசொரூபமாகிய பிரமம் நீயேயாவாய்? மேலும், காண்பவ னென்றும், காணுங்கருவியாகிய அறிவென்றும், காட்சிப்பொரு ளென்றும் வெவ்வேறு பேதங்களிருக்குமானால் அந்த நிலையா னது, உலகமேயன்றி முத்திநிலையல்ல என்று சுட்டுணர்த்தி அது, இது என்னும் சுட்டொழிந்த மெய்ந்நிலையை அதுக்கிரகம் பண்ணினார்.

பிரபுலிங்கலீலை.

பூத நீயலை பொறிகளு மலையலை புத்தி
எது நீயலை யிவற்றினை மயக்கியா னென்னும்
போத நீயலை யென்றிவை யனைத்தையும் போக்கிச்
சோதி யாகிய பிரம்மமே நீயெனச் சொல்லி.

ஞேய ஞானஞா தருவெ[illegible]றகு
மாய வேறு முத்தியன் றதுசக மாமென்
றேயு மாறித வதுவெனுஞ் சுட்டிலா வியல்பை
மாயை மாறிய தேவிபா லருளினன் வள்ளல்.

அதுவுமன்றி மேற்படி பிரபுலிங்கலீலையில் அசகண்ணனென் பவர் உயிர்நீங்கியதாகவெண்ணி வருந்திய முத்தாயி அம்மைக்கு

அல்லமதேவர் அவள் மனச்சாஞ்சல்யத்தை நீக்கி அவளெதிர் பாராத தத்துவஞானத்தையும் அவளுக் குபதேசித்திருக்கிறார். அதன் முழுவிபரங்களை இங்கு எழுதினால் புத்தகம் விரிவாகிவிடு மென்று சுருக்கமாக எழுதலானேன். அன்றியும், திருவள்ளுவ ர்யனுடை தமக்கையாராகிய ஔவைப்பிராட்டியாரும் மெய்ஞ் ஞானச்செல்வி என்பதற்கு அவ்வம்மையார் திருவாய்மலர்ந்தரு ளிய "ஔவை குறள்" என்னும் மெய்ஞ்ஞானநூலே போதிய சான்றாகும். மேலும், பிரம்மசொரூப கைவல்ய முத்திபெற்ற குணங்குடி மஸ்தான் சாஹிபு ஔலியுல்லா அவர்கள், பெண்களுக் கும் ஞானமுண்டென்பதைப் பின்வருங் கீர்த்தனையால் வெகு தெளிவாய்த் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றார்கள்.

கீர்த்தனம்.

இராகம் சௌராஷ்டிரம் தானம் சாப்பு.

பல்லவி.

தாய்மார்க ளேபாவி சொல்வதைத் தான்சற்றுச்
தன்னாமற் கேட்டுக்கொன்வீர்

அநுபல்லவி.

பூமா தேவியாணை யாக சரகத்திற்
போகாம லும்பாது காக்கும் தியில்
லேகாம லுங்கையைத் தாக்கும் பாவி
ஆகாம லுமுகம் பார்க்கும் (தாய்)

சரணங்கள்.

பொன்னுசை காட்டிப் புருட ருமையொரு
புண்யமுஞ் செய்யாமற் கெடுப்பார் பின்பு
சொர்ணத்தை வாரி யிரைப்பார் கடைசியில்
தோட்டி கையிலுமை விடுப்பார் உங்கட்
கென்னத்தைச் சொன்னுலுந் தெரியவில் லையினி
ஏதுப தேசத்தைப் படிப்பேன் ஐயோ
தன்னுலே தான்கெட்டால் அண்ணுவி யென்செய்வான்
தண்ணீரைக் கண்ணினுல் வடிப்பன் அவன்
சொன்னதைக் கேட்கிற்கை பிடிப்பன் உமக்கு
முன்னே குணங்குடி கொடுப்பன் (தாய்)

பெண்ணுலே கெட்டோமென் றுங்களைத் திட்டாத
பேரை யுலகத்திற் கண்டிலேன் எந்தன்
கண்ணுலே யுங்களுக் கொத்தாசை சொல்லிக்
கருத்தி லுவப்பாரைக் கண்டிலேன் காலும்
மண்ணுன ஆசை மயக்கக்கொண் டேபாவ
மண்ணே வாயிற்போட்டுக் கொள்கிறீர் இன்னும்
கண்ணருஞ் சொர்க்கப் பதத்தையும் விட்டு
காகக் கனல்மூட்டிக் கொள்கிறீர் அதை
எண்ணுமற் ருன்விட்டு நீக்கினுல் உமக்
கண்ணல் குணங்குடி வாய்க்குமே (தாய்)

புதுப்பானை தண்ணீரும் கரிப்பானை யாக்குவார்
பொன்னை மேனியும் போக்குவார் சோதி
மதிபோ லிவர்முகம் வரவோடு போலாக
வாலேப் பழுவத்தைப் போக்குவார் இன்னும்
முதுகிற் கூனுமாக்கித் தோலுங்கை கொடுத்துக்கள்
மூர்க்கமெல் லாம்அதப் போக்குவார் இவள்
கதிகெட்ட பிழகாரி யென்று புறந்தள்ளினையிற்
கடத்திவைத் தூரையும் போக்குவார் அந்தச்
சதிகேடு ருறவைத்தான் நீக்கினுல் பர
கதிதருங் குணங்குடி வாய்க்குமே (தாய்)

தாங்காத மையலுந் தருகுவார் பின்பும்மைத்
தனரும் கரையெருமை யாக்குவார் தூங்கித்
தூங்கி விழுந்தொத்த லாக ரம்பென்புத்
தோலுந் துருத்தியு மாக்குவார் முகம்
வீங்கித் தலோடுங்கைகாலு முடங்கி
வேடிக்கை யாங்கிழவி யாக்குவார் மூச்சை
வாங்கிக் கொக்குச்சொக்கென் றிருமி யிருமிக்கொண்டு
வலிக்குங் கிடையிணமு மாக்குவார் அந்தத்
தீங்கர்க ளுறவைத்தான் நீக்கினுல் அருள்
ஓங்குங் குணங்குடி வாய்க்குமே. (தாய்)

ஆறுதாரமென்று வழங்கிவரும் சப்த சக்காங்களில் முதற்சக்கரமாகிய

மூ ல ா தா ர ம்.

இருபத்தேழாவது அத்தியாயம்.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனுகதம், விசுத்தி, ஆக்கினை எனு ஆறு ஆதாரங்களாகும்.

மூலாதாரம்:—இஃது மலத்துவாரத்திற்கும், நீர்த்தாரையாகிய குய்யத்திற்கும் மத்தியில் குண்டலிவட்டமும், அவ்வட்டத்திற்குள் மூக்கோணசக்கர வடிவமும், கோணத்தின் நடுவில் ஓங்கார வட்டமும், அவ்வட்டத்திற்குள் மகாமந்திரமும்; ஏகாட்சர மூமாகிய ஓம் என்னும் பிரணவ அட்சரமும், ஓங்காரவட்டத்தைச் சுற்றிலும் நான்கு புட்பவிதழ்களும் விளங்கும். ஓங்கார அட்சரத்திற்குட் பிரகாசிக்கும் அகார அட்சரத்தில் மாணிக்கவண்ணமுடைய கணேசர் கொலுவீற்றிருப்பார். மூக்கோணத்தின் முதற் கோணத்தில் பிரகாசிக்கும் உகார அட்சரத்தில் மரகதவண்ணமுள்ள வல்லபைசத்தி அமர்ந்திருப்பாள். கோணத்தின் மூன்றாயிற் குண்டலிசத்தியானவள் வாழைப்பூவைப்போல் முகத்தைத் தலைகீழாக வைத்துப் பெண்சர்ப்பத்துக்கு நிகராகச் சீற்றத்துடன் தன்னுடலைச் சுருட்டிக்கொண்டு சுத்தஸ்வரமும், கோடிசூரியப்பிரகாசமும் தோற்றும்படி ஐந்து அவஸ்தையில் மேலவஸ்தை என்னும் துரியாதீதத்திற்கு முதற்காரணமாகிய சுழிமுனையோடு பொருந்திநிற்பாள். கதவிப்பூ வடிவமாய்த் தலைகீழாகத் தொங்குவதில் எட்டிதழ்களுண்டு. ஒவ்வோரிதழுக்கும் ஒவ்வொரு சத்தியாக அட்டசத்திகளும் பிரகாசிப்பார்கள்.

யோகிகள் இரேசக, பூரக, கும்பகஞ்செய்து மூலாதாரத்தைத்தெரிசித்து சுத்தசுரரைக்கண்டு 'யோகத்தை நிலைக்க எத்தனிக்கும்போது சுத்தசுரரைத் தெரிசிக்கவிடாமல் எட்டுச்சத்திகளும் எட்டு மலர்களால் வழியை மூடிக்கொள்வார்கள். அப்போது வல்லது தியானம் செய்து "வங்" என்னும் மந்திரத்தோடு கும்பித்தால் எட்டுவாசலையும் திறந்துவிடுவார்கள்.

போதம்.

(1) காணீவே மூலமது அண்டம் போலக்
காரணமாய்த் திரிகோண மாக நிற்கும்
பூணவே மூன்றின்மேல் வலைய மாகும்
புறம்பாக இதழுதான் நாலு மாகும்
நாணவே கமலத்தட் சரத்தைக் கேளு
நலமான வயகமசி ரீ யாகும்
மூணவே முக்கோணத் தொளிவோங் காரம்
முயற்சியா யதற்குள்ளே அகார மாமே.

(2) அகாரத்தின் மேலாகக் கணேசன் நிற்பார்
ஆகியொரு கோணத்தில் உகாரம் நிற்கும்
உகாரத்தில் வல்லபையாள் சத்தி நிற்பாள்
ஒடுங்கியதோர் மூனையொன்றிற் கதலிப் பூவாய்
புகாரமாம் முகங்கீழ்குண் டலியாஞ் சத்தி
பெண்பாம்பு போற்சுருட்டிச் சிறிக் கொண்டு
சுகாரமாய்ச் சுழிமூனையோ டுருவி நிற்பான்
துரியாதி தம்மென்ற அவத்தை தானே.

(3) ஒங்கியே மாணிக்கத் தொளிபோல் தோன்றும்
உத்தமனே மூலத்தி னுண்மை காணும்
தேங்கியே வல்லபையாஞ் சத்தி தானும்
சிறந்திருந்தாள் பச்சைநிற மாகத் தானே.

(4) பச்சைநிறம் வல்லபையைப் பணிந்து போற்று
பாங்கான ஆறுக்கும் பருவஞ் சொல்வான்
மெச்சையாய் மூலமது சித்தி யானால்
மூவுலகுஞ் சஞ்சரித்துத் திரிய லாமே.

நாளவெட்டி.

(1) பதியிருந்து வினையாடும் மூல வீடு
பத்திதருஞ் சித்திதரும் பரம வீடு
துதிபாவம் காற்சதுர மேலு நின்று
துலக்குமெழிற் கணபதிவல் லபையைப் போற்றி.

(2) திருவிருந்து கனலிலெழுந் தாடும் வீடு
சிறக்தசத்தி வல்லபைதன் கணவ னான
மருவிருந்து கொஞ்சிதழோர் நாவில் மேவி
மகிழ்ந்தமத கரியினிரு தாளைப் போற்றி.

(3) தந்திரமாய் முக்கோணம் தன்னில் நின்ற
தக்கிமுகன் சமலபதங் காப்புத் தானே.

திருமந்திரம்.

எருவிடு வாசற் கிருவிரல் மேலே
கருவிடும் வாசற் கிருவிரற் கீழே
உருவிடு சோதியை யுள்வெல் லார்க்குக்
கருவிடுஞ் சோதி கலக்துநின் முனே.

சுவாதிட்டானம்.

167

இருபத்தேட்டாவது அத்தியாயம்.

சுவாதிட்டானம்:—இஃது மூலாதாரத்திற்கு நான்கங்குலப் பிரமாணத்துக்குமேல் இலிங்கத்திற்கும், நாபிக்கும் நடுவில் இருக்கின்றது. இதைக் குய்யஸ்தான மென்பாருமுளர். இஃது நாற்சதுரமிடும், விட்டின் மத்தியில் ஆறிதழ்களையுடைய புஷ்பவட்டமும், அதன் நடுவில் நகார அட்சரமும் உடையது. அந்த நகார அட்சரத்தின் மத்தியில் பொன் நிறத்தையுடைய பிரமதேவரும், சரஸ்வதிதேவியும் கொலுவிற்றிருப்பார்கள். இது பிரதிஷ்டையின் கண், இங்கு தீபப் பிரகாசந் தோன்றும்.

போகர்.

துதிசெய்து மூலத்தைத் தாண்டி யப்பால்
துடியான வொருகாலங் குலமே தாண்டப்
பதிசெய்த பிரமனுட வீடு மாகும்
பகர்ந்தசுவா திட்டான மென்றும் பேரு
அதிசெய்த நாலுவட்டம் வகாயஞ் சுத்தல்
ஆறிதழ்தான் அட்சரத்தை அறியக் கேளே.

நாகவேட்டி.

கதிரொத்த வீடந்தனிலே யிலகுஞ் சோதி
கனகாத்ன மிலகுதிரு மண்ட பத்தில்
மதியொத்து நின்றிலகுஞ் சுவாதிட் டானம்
வளர்ந்தவிசு ழிருமூன்று மங்கு லத்தில்
திகழொத்த பிரமன்சாஸ் வதியின் பாதம்
நினைந்துருகித் தாளிணையைப் போற்றி செய்து
உதிரத்திற் சுக்கிலந்தான் வந்த வாறு
ஒழுத்தாம் நாதவிச்சா யமைத்த வாறே.

நிருமந்திரம்.

காவுக்கு நாயகி நன்மணி பூணரம்
பூவுக்கு நாயகி பொன்முடி யாடையாம்
பாவுக்கு நாயகி பாலொத்த வண்ணத்தாள்
ஆவுக்கு நாயகி அங்கமர்ந் தாளே.

மணிபூரகம்.

ஒருபந்தொன்பதாவது அத்தியாயம்.

மணிபூரகம்:—இது சுவாதிட்டானத்திற்கு ஆறங்குலப் பிரமாணத்தின்மேல் காபி, அல்லது உந்தியென்று சொல்லப்படுமிடம். இது கோழிமுட்டையைப் போன்ற வடிவமாய் 1008 நரம்பு, நாடிகள் சூழப்பெற்று, நாடிகட்கெல்லாம் மூலாதாரமாயுள்ளது; இது அப்புவின் கூறுடையது; எட்டுநாட் பிறைபோன்ற வடிவமுடையது. இதன் நடுவிலே 10 இதழ்களையுடைய ஒரு கமலம் வட்டவடிவாயிருக்கும். அந்த மலரின் மத்தியில் மகார அட்சரமும், அந்த அட்சரத்தின் மத்தியில் மரகதவர்ணமுள்ள மகாவிஷ்ணுவும், மகாலட்சுமியும் கொலுவிருப்பார்கள். இதில் மின்னல்போன்ற பிரகாசக்தோன்றும்.

ஞானவெட்டி.

சொல்லரிது மந்திரத்துக் கெட்டா மீடு
சோதிமணி பூரகத்தி லமர்ந்த மூர்த்தி
வெல்லரிது நாபியின் கமலத் துள்ளே
விரைந்தலரு மீரைக்து பத்து மேலும்
வல்லபமாய் நின்றிலங்கு மாலின் தேவி
வளர்க்தசபைத் திருமாலே வணங்கிப் போற்றித்
தொல்லுலகி லுள்ளபெரி யோர்கள் பாதத்
துதித்திந்நூல் விளம்புகிறே னுண்டே கேளீர்.

போகர்.

மாலினுட வீடதுதான றுவி ரன்மேல்
மாசற்ற பிறைபோலே கோட்டை யாகும்
பாலினுட் வலையம்போற் பத்தி தழ்தான்
பத்திதழி னட்சரத்தின் பயனைக் கேளு
தாலினுட சனகமகா முனியின் தாயார்
தயங்காத சரஸ்வதியார் தன்மை யாகும்
ஆலினுட மனதடுவிற் பூத மப்பு
அதின்பீசம் வங்கென்று அறிய லாமே.

அநாகதம்.

டிப்பதாவது அத்தியாயம்.

அநாகதம்:—இஃது மணிபூரகமாகிய உந்தி ஸ்தானத்துக்கு 8 அங்குலப் பிரமாணத்துக்குமேல் இருதயஸ்தானத்தில் மூன்

கோண வடிவமுடையது. அந்த முக்கோணத்தின் மத்தியில் 12 இதழ்களையுடைய ஓர் கமலம் வட்டமாக இருக்கும். அப்புஷ்பத்தின் நடுவிற் சிகார அட்சரம்தோன்றும். அவ்வட்சரத்தில் ஊருத்திரக் கடவுளும், பார்வதியும் கொலு வீற்றிருப்பார்கள். அவ்விடத்தில் மின்மினிபோன்ற பிரகாசம் தோன்றும். இது தேயுவின் கூறு.

ஞானவெட்டி.

வட்டமிட்ட சதுஷ்கோண பாதின் மேலும்
வளர்த்தவித ழீராறு மங்கு லத்தில்
திட்டமிட்ட வாகாதத்தில் வீற்றி ருக்க
சிறந்தருளும் ருத்திரன்ருத் திரியைப் போற்றி
வெட்டவெளி வேதமறை கான்கு மோதும்
வேதமெல்லாம் திருநீறு யான வாறும்
அட்டதிசை யறிந்துணர்ந்த பெரியோர் பாதம்
ஐம்பத்தோ ரட்சரமுங் காப்புத் தானே.

போகர்.

அறிவுக்கு மேலேயெட் டங்கு லத்துக்
கப்பால காக்ஷத்தின் வீட்டைக் கேளு
முறிவுக்கு முக்கோண மாகி நிற்கும்
முதிர்வகோயம் பன்னிரண்டு இதழு மாகும்.

வி சு த் தி.

நூப்பத்தோராவது அத்தியாயம்.

விசுத்தி:—இது ஆகாசதத்துக்கு 12 அங்குலப் பிரமாணத்துக்குமேல் கண்டமென்னும் ஸ்தானத்தில் அறுகோண வடிவமாக இருக்கும். அக்கோணத்தின் நடுவில் பதினறிதழ்களையுடைய ஓர் புஷ்பவட்டமும், அதன் மத்தியில் வகார அட்சரமும் பிரகாசிக்கும். அந்த அட்சரத்தின் மத்தியில் மேகவர்ணத்துடன் மகேஸ்வரனும், மகேஸ்வரியும் கொலு வீற்றிருப்பார்கள். இது வாயுவின்கூறு, அங்கு சூரியப்பிரகாசந் தோன்றும்.

ஞானவெட்டி.

ஆறுகொண்ட அம்பலத்தில் நின்ற சோதி
யம்பரமாச் தற்பரத்தை யேறி நித்தம்
வீறுகொண்ட அறுகோண வீட்டின் மேலும்
வினக்குமிதழ் பதினறு மேவ பீடம்

பேறுபெற்ற மகேசன்மகேஸ் பரிபு மக்கே
பேணியவ நிருவர்பதச் கமலம் போற்றிப்
பாரிலுள்ள வேதமறி யாமல் நின்ற
பழம்பொருளைப் பாடுகிறே னுண்டே சேனே.

போகர்.

ஏறவே பன்னிரண்டக் குலமே தாண்டி
ஏற்றமாம் விசுத்தியென்ற தலமு மாகும்
மாறவே அறுகோண வியம் ஒன்ற
மகத்துவமாம் பதினறு இதழு மாகும்.

ஆக்ஞை.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

ஆக்ஞை:—இது விசுத்தி ஸ்தானத்துக்குப் பதினறங்குலப் பிரமாணத்துக்கு மேல் நெற்றி ஸ்தானத்தில் புருவமத்தியில் இரண்டிதழ்களையுடைய ஓர் கமல புஷ்பமிருக்கும். அப்புஷ்பத்தின் நடுவில் பகார அட்சரமும், அவ்வட்சரத்தின் மத்தியில் சதாசிவமும், மனோன்மணியும் கொலுவீற்றிருப்பார்கள். இது ஆகாயத்தில் கூறு. அங்கும் சூரியப்பிரகாசமே தோன்றும்.

நாளவெட்டி.

காலவட்ட மாலவட்ட மாகி நின்ற
கதிர்மனையிற் கருதிமனை யாடுஞ் சோதி
நீலவட்டங் கொண்டெழுத்து கலையெண் ணுன்கும்
நின்றிலகும் ஆக்கினையி லிதழி ரண்டு
ஞாலமறி லாதியத்த ரூப மான
சற்கமல மாயிரத்தெட் டிதழின் மேலும்
ஆலவிட முண்டசதா சிவனைப் போற்றி
அம்பிகையின் கமலபதம் அர்ச்சித் தேனே.

போகர்.

மேலேறி யிரண்டுபுரு வத்தி னூடே
மிகையான அண்டம்போல் நிற்கு மப்பா
வாலேறி வட்டமாம் வீடு போலே
வலையமொன்று இரண்டிதழ்தான் ராஜீ யாகும்
ஆளேறி அங்கெலுமட் சரத்தி னூடே
ஆகாச பூதமாம் பூத பீசம்
ஆலேறி மனோன்மணி சதாசி வன்முன்
அவத்தைதான் சாக்கிரத்தின் வீடு மாமே.

பிரபுலிங்கலீலை.

இரண்டோ டிரண்டு மூவிரண்டை யிரண்டா நிரண்டு மீமிசையெண்
ணிரண்டோ டிரண்டு கொண்டிருந்த இதழ்ப்பங் கயங்கள் கடந்தபோய்
இருந்த குளத்தின் மேலோரா யிரத்தோட் டமல கமலமிசை
யிருந்த சோதி தனைக்கண்டெம் எண்ண முடிப்பே மெனவெழுந்த.

திருமந்திரம்.

நாலு மிருமூன்று மீரைந்து மீராறுங்
கோலிமேல் நின்ற குறிகள் பதிலுறை
மூலங்கண் டாங்கே முடிந்து முதலிரண்டுக்
காலங்கண் டானடி காணலு மாமே.

பிரம்மரந்திரம்.

முப்பத்தழ்றாவது அத்தியாயம்.

பிரம்மரந்திரம்:—இது ஆக்ஞேல்காரத்திற்கு மட்டங்குலத்
துக்குமேல் சகஸ்ரதளமாகிய ஆயிரமென்றும், ஆயிரத்தெட்டே
ன்றும் சொல்லப்பட்ட இதழ்களையுடைய ஓர் கமலபுஷ்பமிருக்
கின்றது. அதன்மிசை, நாதவிந்துக்களும் ஐங்கோண வடிவத்
துடன் ஓரிதழ்க்கமலவடிவமாக இருக்கின்றது. அதையே பாகா
யமென்றும், பிரம்மரந்ரமென்றுஞ் சொல்லப்படும். நிறம் படிக
வர்ணம்.

போகர்.

நானன மேனுன்மணியைத் தாண்டி யப்பால்
தனித்ததோ ரொட்டுவிரல் மேலே கேளு
கோனன குருபதர்தான் கூட்டிப் பாரு
குறிப்பான இதழோரா யிரத்தெட் டாகும்
ஆனன நடுமையம் ஐங்கோ ணத்தான்
அகாரமாம் மகாரமொடு வகார மாகும்
சானன நாதமொடு விந்து அஞ்சும்
சுலமுள்ளவங் கோணத்தில் நிற்கும் பாரே.

ஞானசித்தர்.

விந்து இருந்த வீடதனிலே குரு
சந்தி யிருந்தார் சொலுவாகிச்
சித்தை தெளிந்து மகாரம்மைத் தாலத்தச்
சீமானைக் காணலாம் ஞானப்பெண்ணே.

மூலாதாரத்திற்கு (இதழ்கிய) அட்சரம் 4, சுவாதிட்டானத்திற்கு அட்சரம் 6, மணிபூரகத்திற்கு அட்சரம் 10, அநாகதத்திற்கு அட்சரம் 12, விசுத்திக்கு அட்சரம் 16, ஆக்ஞைக்கு அட்சரம் 2, சகஸ்ரதள புஷ்பகமலத்துக்கு மேற்பட்டிருக்கும் விந்துஸ்தானத்திற்கு அட்சரம் 1, ஆக அட்சரம் 51. இவ்விப்படியிருக்கச் சில சாஸ்திரங்களில் 51 அட்சரத்தைப் பூர்த்தியாக நிரூபிக்கும்பொருட்டோ! அல்லது எழுதச் சோம்பேறித்தனப்பட்டோ! ஆக்ஞையில் மூன்று அட்சரம் என்றும் ஆக 51 அட்சரம் என்றும் கணக்கிட்டு எழுதியிருக்கின்றதெவ்வாறு பொருந்தும்.

ஞானவெட்டி.

முத்திதரு மூலத்தி லட்சரமே நாலு
முதலான சுவாதிட்டான மெழுத்தா றுகும்
பத்திதரும் பூரகத்தி லெழுத்தோ பத்து
பிரிக்கான அநாகதத்தி லெழுத்தி ராறுஞ்
சித்திரமாம் விசுத்திதனி லெழுத்தி ரெட்டாம்
சிறந்தவாக் கினையிலெழுத் திரண்டு மாகும்
சத்தியெனு மம்பரத்தி லெழுத்தொன் றுச்ச
சார்வாமம் பத்தோரட் சரங்கா ணுண்டே.

திருமந்திரம்.

ஆறந்த மூக்கடி யாகு முடம்பினிற்
கூறிய வாதார மற்றவை குறிக்கொண்மின்
ஆறிய அக்கர மைம்பதின் மேலே
யூறிய வாதாரத் தோரெழுத் தாமே.

நான்கும், ஆறும், பத்தும், பன்னிரண்டும், பதினாறும், இரண்டும், ஒன்றுமாகிய இந்த இலக்கத்தை முறையேகொண்டிருக்கிற இதழ்களையுடைய மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்கிற ஆறுதார கமலங்களிலும், அதற்கு மேற்பட்டிருக்கிற விந்துஸ்தானத்திலும், ஆக ஏழு சக்கரங்களிலும் கமக்குள் காலொன்றுக்கு இரேசக, பூரகமாக இயங்கிக்கொண்டிருப்பது இருபத்தோராயிரத்து அறுநூறு (21,600) சுவாசங்களெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அவை பின்வருமாறு:—

மூலாதாரத்தில் காலை 6-மணி முதல் 6-40 வரையில் ஒரு நிமி ஷத்திற்குப் பதினைந்து சுவாசங்களாக 600 சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

சுவாதிட்டானத்தில் காலை மணி 6-40 முதல் பகல் மணி 1-20 வரையில் ஆறுயிரம் சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

மணிபூரகத்தில் பகல் மணி 1-20 முதல் இரவு மணி 8 வரையில் ஆறுயிரம (6000) சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

அநாகதத்தில் இரவு மணி 8 முதல் மணி 2-40 வரையில் ஆறுயிரம் (6000) சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

விசுத்தியில் இரவு மணி 2-40 முதல் 3-46 வரையில் ஆயிரம் (1000) சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

ஆக்ஞையில் இரவு மணி 3-46 முதல் 4-53 வரையில் ஆயிரம் (1000) சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன்;

சகஸ்ரதளத்தில் இரவு மணி 4-53 முதல் காலை 6-மணிவரையில் ஆயிரம் (1000) சுவாசங்கள் நடக்கும். அது நிறைந்தவுடன் பழையபடி மூலாதாரத்திற் பிரவேசிக்கும்.

சுவரில் மாட்டியிருக்கும் பெரிய கடிகாரத்திற் பெண்டுலமானது ஆடிக்கொண்டிருக்க முள்ளானது மணியைக் காட்டுவது போல் இந்தச் சுவாசமானது நிமிஷத்திற்கு 15 சுவாசங்களாக ஒருநாள் 24-மணி நேரத்திற்குள் 21,600 சுவாசங்களும் நமதுசரீரத்திற்குள் நடந்து நம்முடைய ஆயுள் அளவைக் காட்டுகின்றது.

சுவானுபவ விளக்கம்.

அறையக்கே ளிருபத்தோ ராயி ரத்து
அறுநூறு சுவாசமதாக் கின்மொன் றுக்குத்
துறையான மூலமதற் காறு தாது
சுவாதிட்டா னம்மணிபூ ரகத்தி னோடு
முறையான வநாகதமா மிம்மூன் றிற்கும்
மூவிரண்டா யிரமூச்சு நடக்கும் மைந்தா
மறையான விசுத்திமுதற் பிரம்ம சந்திரம்
வரையினிலா யிரமென்று வகையாய்க் காணே.

இந்த சுவாசங்கள் சந்தியினது பங்குமுன்றும், சிவசக்தி னது பங்கு இரண்டுமாக நடக்கும். அதாவது, நிமிஷம் ஒன்றுக் குப் பதினாறு சுவாசங்கள் நடப்பதில் சக்தியின் பங்குக்கு ஒன் பது சுவாசங்களும், சிவத்தின் பங்குக்கு ஆறு சுவாசங்களுமாக நடைபெறும். இதனாலேயே உலகத்தில், "அஞ்சுக்கிரண்டு பழுதி ல்லே" என்னும் பழமொழி வழங்கிவருகின்றது. இதனுண்மை பஞ்சபட்சி சாஸ்திரங்களை நன்குணர்ந்தவர்க்கே இனிது விளங் கும். ஆனால் இவ்விதம் யோகிகட்குச் சுவாசம் நடைபெறுது.

தாயுமானவர்.

பாயுமீ ராறுகலே பாயாது பக்குவம்
பண்ணிவைப் பத்சமாதி
பழவினை யிறக்கவுஞ் சூழுமூன நிறக்கவும்
பழகிவரு வதுசமாதி.

மேற்கூறிவந்த சகஸ்ரதள புஷ்பத்தின் நடுவில் பிரகாசித் துக்கொண்டிருக்கிற குண்டலிசக்தியாகிய கமலசக்தியினுடைய இரண்டு பாதகமலங்களிலும் உள்ளிருந்து ஊறிப் புறப்படும் மது யமுதமானது உண்ணுக்கினது வழியே (நாவின் நுனியைச் செலுத்திப் பருகுகால்) உடலிலே பரந்து எழுபத்தீராயிரம் நாடி களையும்நிரப்ப, அதன்பின்பு கும்பித்தவாயுவை இரேசிப்பதினால் மீண்டும் அவ்விடங்களை விட்டுக் கீழிறங்கித் தான் முன்னிருந்த மூலாதாரத்திலே பிரகாசம் பொருந்திய சர்ப்பம்போல் உடலை வளைத்து யோகநித்திரை செய்யும் சக்தியை தரிசித்துத் தவயோ கிகள் மகிழ்தலுண்டு ஆனந்த பரவசமடைவார்கள்.

தாயுமானவர்பாடல்.

பூரணி புராதரி சமஸ்தே சதர்தரி
புராந்தகி திரியம்பகி யெழிற்
புங்கவி வினஸ்குவெ சங்கரி சகஸ்ரதள
புஷ்பமிசை வீற்றிருக்கும்
காரணி மனோந்ம காயகி குணோந்த
காதாந்த சத்தியென்றுன்
நாமமெ யுச்சரித் திடுமடியர் சாமமே
தானுச்ச ரிக்கவசமோ.

வேதாந்த பாஸ்கரன் முதற்பாகம்
சம்பூரணம்.

சேந்தமிழ்ச் செல்வர்காள்!

சமீபத்தில் "வேதாந்த பாஸ்கரன்" என்னும் இந்த அருமையான நூலை சுமார் 168 பக்கங்களுக்குள் முடித்துவிடலாமென்று நினைத்து அதற்கு வேண்டிய காகிதங்களே இப்போதுள்ள காகிதக் கொடும்பஞ்சத்தின் காரணத்தினால் ஒன்றுக்கு ஆறையங்கு அதிக விலைகொடுத்து வாங்கி அச்சிட்டு வரும்போது உத்தேசித்த அளவுக்குமேல் சுமார் 256 பக்கங்கள் வரையிலும் விரிவாகி விடுமென்பதினாலும், பதிப்பித்துவந்த மாதிரிக்காகிதம் கிடைக்காததினாலும், வேறு காகிதங்களே உபயோகித்தால் விகாரமும், அதிக விலையும் ஆகிவிடுமென்ற எண்ணத்தினாலும், 168 பக்கங்கள் வரையிற் பூர்த்திசெய்து எஞ்சிய அத்தியாயங்களே "வேதாந்த பாஸ்கரன் இரண்டாம்பாகம்" என்று நாமகரணமிட்டு அச்சிடப்போவதாலும், இந்த முதற்பாகத்திற் காணப்படாத அநேக அரியபெரிய விஷயங்கள் இரண்டாம் பாகத்திலேயே நிறைந்திருப்பதனாலும், அபிமானிகள் முதற்பாகத்தை வாங்கி வாசித்து ஆனந்தித்ததுபோல் இரண்டாம்பாகத்தையும், இதனடியிற் குறிப்பிக்கப்பட்ட மற்ற எழுவிதப் புத்தகங்களையும் மதபேதமின்றி "எப்போதுள் யார்யார்வாய்க் கேட்டினும் அப்போதுள் மெய்ப்பொருள் காண்ப தறிவு" என்னும் ஆன்றோர் வாக்கியத்தைச் சிரமேற் கொண்டு வாங்கி வாசித்து ஆனந்தமடையப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீ-ஸ்ரீ கருணையானந்தர் அவர்களால் இயற்றப்பெற்ற அடியிற் கண்ட எல்லாப் புத்தகங்களும் வேண்டியவர்கள் அடியிற்கண்ட எம்மிடத்தில் மேலும் வி. பி. போஸ்ட் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம்.

1.	வேதாந்த பாஸ்கரன் முதற்பாகம்	1	0	0
	மேற்படி இலேஸ் கடிதம்	1	8	0
2.	வேதாந்த பாஸ்கரன் இரண்டாம்பாகம்	0	8	0
	மேற்படி இலேஸ்கடிதம்	0	12	0
3.	சமாசஞானம்	0	12	0
4.	முஹம்மதுகபிசரித்திரம் முதற்பாகம்	0	12	0
5.	இஸ்லாமுமார்க்கம்			
6.	ஆத்மஞானம்	0	4	0
7.	மனம்	0	3	0
8.	பிராணயாமயோகம்	0	3	0
9.	அன்பு	0	2	0

85754

விலாசம்:—S. V. S. அண்ணுமலை வுயித்தியர்,
ஷண்முகவிலாச ஔஷதசாலை,
விஜயபுரம் போஸ்ட், திருவாரூர்,
தஞ்சாவூர் ஜில்லா.

சாந்தி வசனம்.

இத்தொடரில், பிரம்ம வித்தியா மகாசபையைச் சேர்ந்த உயர்ந்த அனுபவிகளாற் கூறப்பட்டுள்ள அரிய ஆங்கில நூல்களை செந்தமிழில் தகுந்தவர்களால் மொழிபெயர்த்து மாசுமொரு புஸ்தகமாக பிரசுரம் செய்து வருகிறோம். இதனும் இடைக்கும் சகல வருமானமும் இல்லூர் தர்மக் கல்விச்சாலைக்கே உபயோக மாகிறது.

பேப்பரின் விலை மிகவதிகமாயிருக்கிறபடியினால் இந்த 2-ம் ஆண்டு முதல் பத்திரிகையின் வருஷாந்தர சந்தாவை ரூ. 1–8–0 லிருந்து ரூ. 2—0—0 ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

வருஷசந்தா தபால் சார்ஜுள்பட இந்தியாவுக்கு ரூபா 2—0—0
மற்ற வெளிநாடுகளுக்கு ரூபா 2—8—0
தனி நம்பர் (தபால் சார்ஜ் பிரத்தியேகம்) 0—3—0

இதுவரையில் வெளியான புஸ்தகங்கள்:—

Vol. I.

No. 1. கர்மபால போதம்.
No. 2. ஆத்மார்த்த ஒழுக்கப்பயிற்சி, இரஹஸ்தாச்சரமம்.
No. 3. பக்தியின் மகிமை.
(இம்மூன்றும் சிலவாகிவிட்டன.)
No. 4, 5, 6 'அவன் பெயரால்' (2 புஸ்தகம்) 0—6—0
No. 7 to 10 கல்வி சுற்பித்தல் ஈசுவரகைங்கரியம் 0—8—0
No. 11, 12 'எனது பிரதிக்ஞை' முதல்பாகம் 0—4—0

Vol. II.

No. 1, 2 'எனது பிரதிக்ஞை' இரண்டாம் பாகம் 0—6—0

ஸ்ரீமான் ஜினராஜதாஸர் அவர்களுடைய உருவப்படம் அணா 1.

தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விளம்பர விதம்.

	ரூ.	அ.	பை.
[illegible] மாதத்திற்கு	3	0	0
அரைப்பக்கத்திற்கு ,,	2	0	0
கால்பக்கத்திற்கு ,,	1	8	0

ஒரு வருடத்திற்கு மேற்பட்டதம் செய்துகொள்ளுகிறவர்களுக்கு மொத்தத் தொகையில் 100-க்கு 12½-விதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுத்தொகையும் முன்பணமாய் அனுப்பவேண்டும்.

சாந்தி வசனம் ஆபீஸ்,
திரும்பச்சூர், போளம் போஸ்ட், தஞ்சாவூர் ஜில்லா.